# தமிழில் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள்

மணவை முஸ்தபா

# தமிழில் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள்

ஆசிரியர் :

மணவை முஸ்தபா

விலை ரூ. 35/-

மீரா பப்ளிகேஷன்

AE-103, அண்ணா நகர்,

சென்னை - 600 040.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the book | : | Tamilil Islamia ilakkia Vadivankal (New forms of Islamic Tamil Literature) |
| Author | : | Manavai Mustafa |
| Language | : | Tamil |
| Firs tEdition | : | 1986 |
| Re-Edition | : | 1995 |
| Paper used | : | 16 kg White cream wove |
| Printing points used | : | 10 points |
| Size of the book | : | Crown octovo |
| No. of Pages | : | 208 |
| Price | : | Rs. 35/- |
| No. of Copies Printed | : | 1000 copies |
| Printer | : | Meeraa Press<br>AE 103, Anna Nagar,<br>Madras - 600 040. |
| Binding | : | Paper back |
| Publishing place | : | Manavai Publication<br>AE 103, Anna Nagar.<br>Madras-600 040. |

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | என்னுரை | 4 |
| 2. | முகவுரை<br>டாக்டர் எம்.எம். உவைஸ் | 10 |
| 3. | அணிந்துரை<br>சிலம்புச் செல்வர்<br>டாக்டர் ம.பொ. சிவஞானம் | 13 |
| 4 | மசலா | 22 |
| 5 | கிஸ்ஸா | 61 |
| 6. | நாமா | 78 |
| 7. | முனாஜாத்து | 96 |
| 8. | படைப்போர் | 112 |
| 9. | நொண்டி நாடகம் | 169 |
| 10. | திருமண வாழ்த்து | 183 |
| 11. | அரபுத் தமிழ் | 194 |
| 12. | புதிய தமிழ் இலக்கிய வடிவ நூல்கள் | 205 |

# என்னுரை

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் தமிழக முஸ்லிம் தமிழ்ப் புலவர்களின் பங்களிப்பு மிகப் பெரியதாக இருந்தும், காலவோட்டத்தில் அவர்தம் தமிழ்ப் பணி மக்களின் கவனத்திலிருந்து ஒதுங்க நேரிட்டதை காலப் போக்கின் விளைவு என்றே கூறவேண்டும்.

இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்களின் அரிய தமிழ்ப் பணியை, இலக்கிய வளர்ச்சிக்கு அவர்கள் வழங்கிய அரும் பெரும் படைப்புகளை, மீண்டும் மக்களின் கவனத்துக்குக் கொண்டுவந்து, அவற்றின் மீது ஈடுபாடு ஏற்படச்செய்ய வேண்டும் என்ற உணர்வு என்னுள் இளமை தொட்டே முளைவிட்டு வளர்ந்து வந்தபோதிலும் அவ்வுணர்வுக்கு ஒரு அழுத்தமும் வேகமும் விறுவிறுப்பும் ஏற்பட்டது 1964-ம் ஆண்டிலேதான்.

அவ்வாண்டின் தொடக்கத்தில் ஒரு நாள் மாலை பன்னூலாசிரியர் எம்.ஆர்.எம் அப்துற்-றஹீம் அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தபோது, சிலப்பதிகார இலக்கியத்தில் நான் கண்டுணர்ந்த சில புதிய ஆய்வுகளை ஆர்வத்துடன் கூறினேன் அவற்றைப் பாராட்டிய கையோடு தனது ஏக்க உணர்வையும் என்னிடம் வெளியிட்டார். ''சிலப்பதிகாரத்தை ஆராய ஆயிரக்கணக்கானோர் இருக்கிறார்கள். ஆனால் நம் முன்னோர்கள் எழுதிக் குவித்துச் சென்றுள்ள இஸ்லாமிய இலக்கியங்களை எடுத்துச் சொல்லவோ ஆராயவோ அதிகம் பேர் இல்லை. உங்களைப் போன்ற ஆர்வலர்களாவது இப்பணியில் ஈடுபட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும். காலத்தின் இன்றியமையாத் தேவையான ஒரு நற்செயலைச் செய்து முடித்த பெருமையும் மகிழ்வும் உங்களுக்கு ஏற்படுமே!''

எனத் தன் ஆதங்கத்தையும் எதிர்ப்பார்ப்பையும் கவலை தோய்நத குரலில் ஏக்கத்தோடு கூறியபோது என் உள்ளத தில் ஒருவித சிலிர்ப்பு ஏற்படலே செய்தது அவரதுகவலை மிகவும் நியாயமானதாகப்பட்டது அன்று முதல் என் உணர்வும் சிந்தனையும் அவர் கருத்து வழிச் செல்லத தலைப்பட்டது.

அதே ஆண்டில், சென்னை எஸ்பிளேனடு ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்றத்தில் நடைபெற்ற இலக்கியக் கூட்டமொன் றில் பேசி முடித்து அமர்ந்தேன். என் அருகில் அமர்ந்து கொண்டிருந்த திரு. கொத்தமங்கலம சுப்பு அவர்களிடம அவரது நண்பர் ஒருவர் சற்று தாழ்ந்த குரலில் ''என்ன! சாயபு இவ்வளவு நல்லாத் தமிழ் பேசராறே!'' என்று வியந்து கூறிப் பாராட்டி பேசினார். என்னைப் பொறுத்த வரை அது பாராட்டுரையாக என மனதுக்குப்படவில்லை இதயத்தில் விழுந்த குத்துபோல் இருந்தது. ஒரு தமிழ் நாட்டு முஸ்லிம் தமிழில் தவறின்றிப் பேசுவது வியப்பான தொரு நிகழ்ச்சியாக நினைக்க நேரிடுகிறதென்றால், நம் மைத் தமிழ்மொழிக்கு அன்னியமானவர்களாகக் கருதும் மனப்போக்கு வளர்ந்துள்ளதே அதற்குக் காரணம் என எண்ணி வருந்தினேன். தமிழ்மொழி, இலக்கிய, இலக்கண வளர்ச்சிக்குத் தமிழ் முஸ்லிம்கள் ஆற்றியுள்ள அரும்பணி களை முஸ்லிம் அல்லாதவர்கள் மததியில், அவர்கள் உள் ளம் ஏற்கும் வகையில் எடுத்து சொல்வதன் மூலமே இந்தத் தவறான கண்ணோட்டததைப் போக்கவும் மாற்றவும் முடியும் என்ற உணர்வு என்னுள் அழுத்தமாக நிலை கொள்ளத் தொடங்கியது.

அச்சமயத்தில் நான் ஒய்.எம் சி.ஏ. பட்டிமன்ற ஆட்சிக் குழு உறுப்பினராக இருநததால், 'இஸ்லாமியப் புலவர் திருநாள்' என ஒரு நாளைக் கொணடாடுமாறு கேட்டுக் கொண்டேன். ஆட்சிக் குழு உறுப்பினர்களும் செயலாளர் திரு கெ. பக்தவத்சலம் அவர்களும் இந்த யோசனையை உடனே ஏற்று, ஆண்டுதோறும் 'இஸ்லாமியப் புலவர்

திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்வாறு 1965முதல்19,5வரை பததாண்டு காலம் கொண்டாடினர் ஒவ்வொரு முறையும் விழாப் பொறுப்பை நானே ஏற்று விழாஏற்பாடுகளையெல்லாம் செய்துகொடுத்து ந்தேன் ஒவ்வொரு ஆண்டும் மூன்று அல்லது நான்கு முஸ்லிம் தமிழ்ப் புலவர்களைபற்றி ஆராயும் சிறு கருததரங்கு போன்றே விழாக்கள் நடந்து வந்தன. பேச்சாளர்கள் முஸ்லிம்களும்-முஸ்லிமல்லாதவர்களும் சம அளவில் பங் கேற்றுச் சிறப்பித்து வந்தனர். இவ்வாறு பத்து ஆண்டு களில் சுமார 38 முஸ்லிம் தமிழ்ப் புலவர்களின் வாழ்க்கை யும் அவர்தம் இலக்கியப் படைப்புகளும் முறையாகத் தக்க புலமையாளர்களைக் கொண்டு ஆயப்பட்டன.

இஸ்லாமியப் புலவர்களையும் அவர்தம் படைப்புகளை யும் பரவலாக ஆய்வதைவிட குறிப்பிட்ட ஒரு முஸ்லிம் புலவரின் படைப்பை எடுத்துக்கொண்டு பல்வேறு சமயப் புலமையாளர்களும் ஆய்ந்தால் சிறப்பாக இருக்குமே என்று கருதி, 1975ஆம் ஆண்டில் புதுக் கல்லூரியில் 'சீறாப் புராணம்' கருத்தரங்கை நடத்தினேன். இக்கருத் தரங்கில் தமிழகத்தின் புகழ்ப்பெற்ற புலமையாளர்களான மயிலை சீனி வேங்கடசாமி, டாக்டர் சிலம்பொலி சு. செல்லப்பனார், டாக்டர் கிருஷ்ணா சஞ்சீவி டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், டாக்டர் க.ப. அறவாணன், டாக்டர் எம்.எம். உவைஸ், மௌலவி எம். அப்துல் வஹ்ஹாப், கவி கா.மு. ஷெரீப் முதலாக பதினெட்டுப் பேர் பங்கேற்று வெவ்வேறு தனித்தலைப்புகளில் சீறாப் புராணத்தைத் திறம்பட ஆய்வு செய்தனர். அவ்வாய்வு தொகுப்பு நூலாக 'சிந்தைக்கினிய சீறா' என்ற பெயரில் வெளிவந்தது. அந்நூல் பின்னர், இலங்கைப் பல்கலைக் கழகததில் பாட நூலாகும பெருமை பெறறது.

இவ்வாறு, பல இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கருத் தரங்குகளை நடத்திய பின், ஒரு குறிப்பிட்ட இஸ்லாமிய துறைத் தொடர்பான முயற்சியாக 'தமிழில் இஸ்லாமிய

மெய்ஞ்ஞான இலக்கியங்கள்' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கை நடத்தியபோது வேறொரு புதுச் சிந்தனை என்னைப் பலமாக ஆட்கொண்டது.

பிற சமயப் புலவர்களெல்லாம் வழிவழியாகத் தமிழில் வழங்கி வரும் இலக்கிய வடிவங்களில் மட்டுமே தமிழ் இலக்கியப் படைப்புகளை உருவாக்கித் தந்து சென்றுள்ளனர். ஆனால், முஸ்லிம் தமிழ்ப் புலவர்களோ வழக்கமான எல்லாவித இலக்கிய வடிவங்களிலும் இலக்கியம் படைத்த தோடு அமையாது, மசலா, கிஸ்ஸா, நாமா, முனாஜாத்து போன்ற பெர்சிய. அராபிய மொழி இலக்கிய வடிவங்களோடு தமிழுக்கென்றே படைப்போர், நொண்டி நாடகம், திருமண வாழ்த்து எனப் புத்தம் புதிய இலக்கிய வடிவங்களையும் படைத்தளித்துச் சென்றுள்ளனர் என்ற செய்தி இன்றைய இளந்தலைமுறைக்கு மட்டுமல்ல, பிற சமயப் புலமையாளர்களுக்கும் ஒரு புதுச் செய்தியாக இருந்தது. எனவே, 1983ஆம் ஆண்டில் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் வ.அய். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் 'தமிழில் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள் என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கை நடத்தினேன் மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் தமிழண்ணல், டாக்டர் விஜய வேணுகோபால் டாக்டர் அஜ்மல்கான் போன்ற பேராசிரியர்கள் கலந்து கொண்டபோதிலும் எதிர் பார்த்த அளவுக்கு விஷய கனமுள்ள கருத்தரங்காக அஃது அமையவில்லை. ஓரிருவரைத் தவிர மற்றவர்கள் ஆய்வுக் கட்டுரை எழுதாமலே வந்துகலந்துகொண்டனர். காரணம், அவர்கட்குப் போதிய அளவு நூல்களோ அது தொடர்பான செய்திகளோ கிடைக்காததுதான். எனவே, எல்லோரும் பொதுவாக இஸ்லாமிய இலக்கியங்களைப் பற்றியே பேச வேண்டியதாயிற்று.

என்னைப் பொறுத்தவரையில், இந்தக் கருத்தரங்கு ஒரு முக்கியமான விஷயத்தைத் பளிச்செனக் கோடிட்டுக்காட்டி

யது. இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வடிவங்களில் அமைந்த இலக்கியங்களைப் பற்றிய குறிப்புகளும் செய்திகளும் ஆங்காங்கே ஒரு சிலரால் குறிப்பிடப்பட்டு வந்துள்ள போதிலும், அவைகளைப் பற்றிய முழுத் தகவல்களைத் தெரிவிக்கவல்ல ஆதார நூல் (Source book) ஏதும் இல்லாதது பெருங் குறையாகப் பட்டது.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய இஸ்லாமியச் சிற்றிலக்கியக் கருத்தரங்குக்கு நான் தலைமைவகித்த போது, 'தமிழில் உருவாக்கப்பட்டுள்ள இஸ்லாமிய இலக்கிய வடிவங்களைப் பற்றி ஆய்வு அடிப்படையில் ஆதார நூல்கள் எழுதப்பட வேண்டும் என்றும் இக்குறையை நிறைவு செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டியது காலத்தின் இன்றியமையாத் தேவை' எனவும் குறிப்பிட்டேன். அதே கூட்டத்தில் என் வேண்டுகோளுக்குப் பதில் அளிக்கும் வகையில் அந் நிறுவன இயக்குநர் டாக்டர் ச.வே.சு. அவர்கள் இஸ்லாமிய இலக்கியப் பணியில் ஆர்வத்தோடு ஈடுபட்டு வரும் நீங்களே ஏன் அந்தப் பணியை மேற்கொண்டு செம்மையாகச் செய்து முடிக்கக் கூடாது?' என வினாவடிவில் வேண்டுகோள் விடுத்தார். இவ்வேண்டுகோள் ஒரு வகையில் எனக்குப் புதுவேகத்தை ஊட்டவே செய்தது. அன்று முதல் என்னை இப்பணியில் ஈடுபடுத்த முனைந்தேன். கிடைத்த இலக்கிய வடிவத் தமிழ் நூல்களைப் படித்து குறிப்புகளைச் சேகரித்து ஆய்ந்துவந்தேன்

இந்நிலையில் 11-6-'85 அன்று வானொலியில் 'தமிழில் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள்' என்ற தலைப்பில் ஒரு மணிநேரம் 'இலக்கியப் பேருரை' ஆற்றுமாறு நண்பர் திரு. சோமாஸ்கந்த மூர்த்தி அழைப்பு விடுத்தார். இவ்வுரையை செவியுற்ற முன்னாள் சட்டப்பேரவைச் செயலாளர் சட்டத் தமிழறிஞர் திரு. மா. சண்முக சுப்பிரமணியம் அவர்கள் ஓர் பாராட்டுக் கடிதத்தை வானொலிக்கு எழுதியிருந்தார். இதேபோல் பல அன்பர்கள் பாராட்டி வானொலிக்கு எழுதியிருந்தனர். பின்பு, திரு. மா சண்முக சுப்பிரமணியம் அவர்கள் என்னைச் சந்தித்து, தமிழுலகுக்

குத் தெரியாதிருக்கும் பல புதிய தகவல்கள் இலக்கியப் பேருரையில் இடம்பெற்றிருந்ததாகவும், இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் ஆக்க வழியில் ஆற்றியிருக்கும் தமிழ்ப் பணி ஆதாரபூர்வமாக உலகுக்கு எடுத்துக் கூறவேண்டு வது அவசியம் என்றும், இவ்வுரையை விரித்து நூலாக வெளியிடவேண்டும் என்றும் அன்புரிமையோடு வேண்டிக் கொண்டார். என்னைச் சந்திக்க நேர்ந்த இலக்கிய அன் பர்கள் பலரும் இதே வேண்டுகோளை விடுத்து வந்தனர். நானும் அதே வேகத்தில் இந்நூலை எழுதிமுடிக்க முனைந் தேன். வானொலி இலக்கிய பேருரை விரிவாகி நூலுருப் பெற்றது.

நூல் முழுமை பெற்றவுடன் டாக்டர் எம்.எம் உவைஸ் அவர்களின் பார்வைக்கு அனுப்பினேன். என் இலக்கியப் பயணத்தைப் பொறுத்தவரை எப்போதுமே பேரன்பும் பேராதரவும் காட்டி வரும் டாக்டர் உவைஸ் அவர்கள் அன்புடன் முன்னுரை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

அதேபோன்று எத்தனையோ பணிகளுக்கிடையே இந் நூலைப் படித்து, அதில் தோய்ந்து, அதன் மூலம் தான் பெற்ற உணர்வுகளை அணிந்துரையாக எழுதித் தந்தார் தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சி மேல்மட்டக் குழுத் தலை வராக இருந்த சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவ ஞானம் அவர்கள். அவர்கள் என் மீது கொண்டுள்ள அன் பும் நம்பிக்கையும் என்னையே வியக்கச் செய்வனவாகும்.

இத்தகைய இலக்கியப் பணிக்கு நேரடியாகவும் மறை முகமாகவும் ஆற்றுப்படுத்தி வந்த பன்னூலாசிரியர் எம்.ஆர் .எம். அப்துற்-றஹீம், டாக்டர் எம்.எம். உவைஸ் சிறாச் செல்வர் சிலம்பொலி டாக்டர் சு. செல்லப்பனார் ஆகியோர்களை நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

எனது முதற்பதிப்பு நூலை ஆதரித்த தமிழ் மக்கள் இம்மறுபதிப்பையும் ஆதரிப்பார்கள் என நம்புகிறேன்.

அன்பன்
**மணவை முஸ்தபா**

# முகவுரை

தமிழ் என்றால் இனிமை. தமிழ்மொழி இனியமொழி. தமிழின் இனிமை எல்லோரையும் கவர்ந்தது. அதன்பால் ஈடுபடத் தூண்டியது. அந்த இனிமையைப் பாடி மகிழ்ந்தனர் பலர்; துய்த்துப் பயன் பெற்றனர் பலர்; ஆய்ந்து போற்றினர் பலர்; வியந்து பாராட்டினர் பலர்; நயந்து சுவைத்தனர் பலா; கனிந்து உருகினர் பலர்; நினைந்து பூரித்தனர் பலர்; உணர்ந்து சாற்றினர் பலர்.

சைவ சமயத்தினரும் வைணவ மதத்தினரும் புத்த தர்மத்தினரும் சமண நெறியினரும் கிருத்துவ வேதத்தினரும இஸ்லாம் மார்க்கத்தினரும் தத்தமதென உரிமை கொண்டாடும் அளவுக்குப் பொதுமையைத் தன்னிடத்தே கொண்டிருக்கினறது இனிய தமிழ்மொழி. எல்லா சமயத்தினரும் அந்தப் பொதுமையான இனிமையில் புதுமையை புகுத்தியுள்ளனர். எல்லா மததத்தினரும் தத்தமக்கேயுரிய கருத்துக்களை உட்செருகியுள்ளனர். எல்லாத் தர்மத்தினரும் தத்தமது கோட்பாடுகளை இடம்பெறச் செய்துள்ளனர். எல்லா நெறியினரும் தத்தம் தத்துவங்களை அமைத்துச் சென்றடைந்துள்ளனர். எல்லா வேதத்தினரும் தத்தம் சிறப்புக் கொள்கைகளை வேரூன்றச் செய்துள்ளனர். எல்லா மார்க்கத்தினரும் புதுப்புது இலக்கிய வடிவங்களை புகுத்தி இனிய தமிழ் மொழியை வளம் பெறச் செய்துள்ளனர். புது மெருகூட்டியுள்ளனர்.

அத்தகைய ஒரு சிறப்பு அம்சத்தையே இந்நூலாசிரியர் இங்கு விளக்கியுள்ளார். தமிழ்மொழியை வளம்பெறச் செய்வதற்குப் பல புது வகையான இலக்கிய வடிவங்களை இங்கு அறிமுகம் செய்துள்ளனர். தமிழ்ப் புலவர்கள் தமிழ் யாப்பு முறைக்கு அமையவே முஸ்லிம்களால் தமிழில் அறிமுகம் செய்யப்பட்ட இலக்கிய வடிவங்கள் அமைந்துள்ள போதிலும் அவ்விலக்கிய வடிவஙகளின் பெயர்களும் அவற்றின் பொருளடக்கமும் முஸ்லிம் மக்களின் தனிப் பெருமையைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கின்றன.

முஸ்லிம்களால் தமிழில் அறிமுகம் செய்யப்பட்ட இலக்கிய வடிவங்களை இனங்காட்ட வந்த இந்நூலாசிரியர் அவற்றை இரண்டு பெரும் பகுதிகளாகப் பிரித்துள்ளார்கள். இஸ்லாமியப் பெயர்களால் அழைக்கப்படும் இலக்கிய வடிவங்களை ஒரு பகுதியிலும் தமிழ்ப் பெயர்களால் சுட்டப்படும் இலக்கிய வடிவங்களை ஒரு பகுதியிலும் அமைத்துக் கொண்டுள்ளார் இந்நூலாசியர் 'கலைமாமணி' மணவை முஸ்தபா அவர்கள். இஸ்லாமியப் பெயர்களால் அழைக்கப்படும் இலக்கிய வடிவங்கள் மூன்று அரபுப் பெயர்களையும் ஒன்று பாரசீகப் பெயரையும் கொண்டிப்பதைக் காணலாம். முனாஜாத்து (இறைவனிடம் இறைஞ்சுதல்),மஸ் அலா (வினா விடை),கிஸ்ஸா (கதை சொலலுதல்) என்பன அரபுப் பெயர்களைக கொண்டு தமிழில் வழங்கும் இலக்கிய வடிவங்களாகும். நாமா (சரிதை) என்பது பாரசீகச் சொல்லால் அழைக்கப்படும் தமிழ் இலக்கிய வடிவமாகும். தமிழ்ப் பெயர்களைக் கொண்டுசுட்டப்படுமமுஸ்லிம்களால் புகுத்தப்பட்டதமிழ் இலக்கிய வடிவங்கள் படைப்போர், நொண்டி நாடகம், திருமண வாழ்த்து என்பவையாகும். தமிழ் மொழிகளால் அழைக்கப்படும் இலக்கிய வடிவங்களையும் இந்நூலாசிரியர் இங்கே நுணுக்கமாக விவரித்துள்ளார். உரிய இடங்களில் தேவைக்கேற்ப மேற்கோள்களையும் காட்டிச் செல்கின்றனர்.

அரபுத் தமிழை எட்டாவது பிரிவாகக் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர் ஆரம்ப.கால முஸ்லிம் மக்கள் சமயச்சூழல்களுக்கேற்ப தமிழ் மொழியை அரபு எழுத்துக்களில் எழுதும் பணியை மேற்கொண்டனர். அல்குர்ஆன் ஓதத தெரிந்த முஸ்லிம்கள் அந்த அல்குர்ஆன் மொழியான அரபு மொழியில் எழுதப்பட்ட எதையும் வாசிக்க முற்பட்னர். அத்தகைய நூல்களைப் போற்றிப் பாதுகாத்தனர். அங்ஙனம் அரபுத் தமிழ் மரபு தமிழில் புகுத்தப்பட்டமையாலேயே தமிழ் இலக்கியத்தில் அரபுச் சொற்கள் திசைச் சொற்களாக அமையும் பேற்றைப் பெற்றன. அதன் பயனாகவே இனாம், மதில்,

வக்கீல், வக்காலதது போன்ற அரபுச சொற்கள் தமிழ்ச் சொற்களாகவே மதிக்கப்படும் அளவுக்குத் தமிழ் மொழியுடன் கலந்துவிட்டன எனலாம்.

இவற்றையெல்லாம் இந்நூலாசிரியர் இந்நூலில் நன்கு திறம்பட விளக்கியுள்ளார். கலைமாமணி மணவை முஸ்தபா அவர்கள் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என்றால் அது தமது உயிருக்கு நேர் என்னும் கொள்கையைக் கடைப்பிடிப்பவர். இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் வளர அயராது உழைப்பதோடு இஸ்லாமியத் தமிழ் இலக்கியத துறையில் சிறந்து விளஙகுவோரை உரிய முறையில் கௌரவிக்கவும் மணவை முஸ்தபா அவர்கள் தயங்குவதில்லை.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கருத்தரங்குகள் நடத்தி, அத்தகைய கருத்தரங்குகளில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளை நூலுருவில் கொண்டு வந்துள்ளார். இது ஓர் அரிய சாதனையாகும். இஸ்லாமியத தமிழ் இலககிய நூல்கள் பற்றிச் சொற்பொழிவுகளை நடத்தி அந்தச் சொற பொழிகளையும் நூலுருப் பெறச் செய்துள்ளார்.இயற்றப் பட்ட காலத்திலிருந்து உரை இல்லாமல் இருநத காசீம புலவர் திருப்புகழுக்கு உரை கண்டு அதனை வெளியிட்டார். இவ்வாறு எந்த எந்தத் துறைகளில் இஸ்லாமியத தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பணிபுரிய முடியுமோ அந்த அந்தத் துறைகளிலெல்லாப், தம்மால் இயன்ற அளவு தொண்டாற்றி வெற்றி கண்டவர் மணவை முஸ்தபா அவர்கள்.

கலைமாமணி மணவை முஸ்தபா அவர்களின் பணி போற்றிப் பாராட்டப்பட வேண்டியது மட்டுமன்று; பின் பற்றப்பட வேண்டிய ஒன்றாகும். வாழ்க அவர்தம் பணி.

**டாக்டர் எம். எம் உவைஸ்**
இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சித்
துறைத் தலைவர்,
மதுரை காமராசர் பல்கலைக்
கழகம், மதுரை.

# அணிந்துரை

தமிழ் மொழியிலே உலகிலுள்ள சமயங்கள் அனைத்தையும் சார்ந்த இலக்கியங்கள் குவிந்திருக்கக் காண்கிறோம் அந்த வகையிலே. இந்தியாவுக்கு வந்த இஸ்லாமிய சமயமும் தமிழ் இலக்கியக் களஞ்சியத்திற்குக் காணிக்கை கொடுத்திருக்கிறது.

கலைமாமணி மணவை முஸ்தபா அவர்கள் இஸ்லாமிய சமயம் தந்த இலக்கியங்களைப் பற்றி ஆய்வு நடத்தி, ''தமிழில் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள்'' என்னும் நூலை உருவாக்கி, தமிழ் இலக்கியக் களஞ்சியத்தில் சேர்த்துள்ளார்.

இஸ்லாமிய இலக்கியங்களை ஆராயும் இந்த நூலே தரத்திலும் திறத்திலும் ஒரு தனி இலக்கியமாக விளங்குவதைப் பார்க்க முடிகிறது.

சமய ரீதியான ஆராய்ச்சி என்பது மிகவும் எச்சரிக்கையோடு தொட வேண்டிய விஷயமாகும். ஆம்; ரோசா மலரைத் தொடுவது போன்று தொடவேண்டும். ஆனால், தமிழ்மொழி அனைத்துச் சமயத்தினருக்கும் சொந்தம் என்ற உண்மையை உள்ளத்தில் பதிய வைத்துக் கொண்டு ஆய்வோர் பீடு நடை போட முடியும்.

திரு. மணவை முஸ்தபா அவர்கள் இந்த நூலை மிகவும் நல்ல முறையில் படைத்திருக்கிறார். தன் மதத்திடம் அழுத்தமான பற்றுடையோர்தான், அம்மதத்தைச்சேர்ந்த இலக்கியங்களை நுணுகி ஆராயத் தகுதி பெற முடியும். திரு, மணவை முஸ்தபா அத்தகைய தகுதி தனக்கு உண்டு என்பதை இந்நூலில் பக்கத்திற்குப் பக்கம் நமக்கு உணர்த்தியிருக்கிறார்.

ஆசிரியர் முஸ்தபாவின் உள்ளத்தை நான் நன்கறிவேன். அவர் இஸ்லாமிய இலக்கியங்களில் ஆய்ந்து தோய்ந்து, அவற்றின் வடிவங்களை நமக்குக் காட்ட இந்நூலின் மூலம் முயன்றிருக்கிறார்.

இஸ்லாமிய இலக்கியங்களை வரலாற்றுக் கண்கொண்டும் ஆய்ந்திருக்கிறார் இஸ்லாத்தின் வருகைக்கு முன்னும் பின்னும் தமிழில் தோன்றிய பிற சமய இலககியங்களையும் இஸ்லாமிய இலக்கியங்களோடு ஒப்பு நோக்கிக் காட்டுமிடத்து, அவரது உள்ளத்தின் நடுநிலைமை மகிழ்ச்சியைத் தருகிறது.

> ''பதினாறாம் நூற்றாண்டளவில் ஆதரிப்பாரற்ற தமிழ்ப் புலவர்களின் வாழ்க்கைப் போக்கும, சிந்தனையோட்டமும் தடம் புரண்டு தடுமாறும் நிலைக்கு ஆளாயிற்று. சிந்தனைத் திறத்தோடும் கற்பனை வளத்தோடும் சிறந்த கருத்துகளை உள்ளடக்கி 'இப்பாடலை இயற்றிருக்கிறேன். பரிசு கொடு' என மிடுக்கோடும் பெருமிதத்தோடும் கேட்கும் நிலைபோய், எதைப் பாடினால் பரிசு கிடைக்குமோ அதைப் பாடிப் பரிசில் பெற்று வயிறு வளர்க்கும் நிலைக்குப் புலவருலகம் ஆட்பட்டு, தரம தாழ்ந்துவந்த இடரான காலகட்டத்தில் எழுத்தாணி ஏந்தி இலக்கியம் படைக்க முனைந்தார்கள் இஸ்லாமிய தமிழ்ப் புலவர்கள்.''
> (பக். 18)

என்கிறார், திரு. மணவை முஸ்தபா.

அவர் வருணிப்பது போன்று பதினாறாம் நூற்றாண்டிலே புலவருலகம் பரிதாப நிலையில இருந்தது உண்மைதான். சங்ககாலப் புலவர்கள் பாதையிலேயும் அவர்கள் நடைபோட விலலை; இடைக்கால, அகச்சமயப் புலவர்கள் வகுத்த தெய்வ நெறிப் பாதையிலேயும் நடை போடவில்லை. இநத இரண்டு வகையிலும் நடைபோட்டபுலவர்கள் ஒரு சிலர் உண்டென்றாலும், அவர்களை மட்டுமே கொண்டு தமிழர் மனநிறைவு அடைவதற்கில்லை. ஆனால் இந்த இழிநிலைக்கு தமிழ்ப்புலவருலகம் வந்ததற்கான காரணததை சமயக் கண்கொண்டு மொழி வரலாற்றை ஆராய்ந்து முடிவு காண முடியாது. இந்திய-தமிழக அரசியல் வரலாற்றை ஆராய்ந்துதான் முடிவு காணவேண்டும்

ஆனால், திரு மணவை முஸ்தபா அதிலே புகாதது நாம் புரிந்துகொள்ளக் கூடியதுதான்.

இலக்கிய ஆய்விலிருந்து பிறழ்ந்து அரசியல் பாதைக்குச் செல்லாமல், சமய நிலையில் காலூன்றி நின்று எடுத்துக் கொண்ட பொருளிலே கருத்தைச் செலுத்திருக்கிறார்

இந்த நூல் முழுவதையும் படித்து முடித்தாலே இஸ்லாமியப் புலவர்களின் தமிழ்ப் பணியும் சமயப் பணியும் ஒருவாறு நமக்குப் புலப்பட்டு விடும்.

இஸ்லாமானது உலகந்தழுவிய மதமாயினும், மதவழிப்பட்ட கலாசாரத்திலே இஸ்லாமியத் தமிழருக்கு வேத மொழி என்று ஒன்று உண்டாயினும், தமிழ் மொழிக்குரிய இலக்கண இலக்கிய மரபுகளைக் கடைபிடித்து தங்கள் சமய நூல்களைப் படைத்திருககிறார்கள் என்பதனை இந்நூலாசிரியர் மிகவும் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

இஸ்லாமிய தமிழ் இலக்கியங்கள் என்று நினைக்கும் போது, மிகுதியும் அரபுச்சொற்கள் கலந்த மணிப்பிரவாளமாகத்தான் இருக்கும் என்ற ஐயம் சிலருக்கோ பலருக்கோ தோன்றத்தான் செய்யும். ஆனால் அந்த ஐயம் பொய்யானது என்பதனைப் புலப்படுத்த இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் படைத்த இலக்கியங்களிலிருந்து ஏராளமான செய்யுட்களை எடுத்துக்காட்டியிருக்கிறார் நூலாசிரியர்.

இந்த நூல் நல்ல தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இஸ்லாமிய இலக்கியம் பற்றியதாயினும, பொருளைப் புரிந்து கொள்ள முடியாதபடி, பிற மொழிச் சொற்கள் அதிக அளவில் கலந்திருக்கவில்லை.

தமிழ் மொழியில் ஆதிவரலாறு இஸ்லாத்தின் வருகைக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதாகும்.அகத்தியம் தொல்காப்பியம் ஆகிய இலக்கணங்களும் பத்துப்பாட்டு-எட்டுத்தொகை ஆகிய சங்ககாலத் தொகை நூற்களும், இடைக்காலத்தில் தோன்றிய ஐம்பெருங்காப்பியங்களும்

இஸ்லாம் போதிக்கும் அறநெறிகளுக்கு முரண்பட்டவை யல்ல என்பதனை இந்நூலை மட்டும் படித்தாலே இஸ்லாமியரல்லாதாரும் அறிந்துகொள்ள முடியும்.

இத்தகைய அரிய நூலை இயற்றி, இஸ்லாத்துக்கும் தமிழுக்கும் உள்ள உறவை உறுதிப்படுத்தும் தொண்டில் ஈடுபட்ட என் அரிய நண்பர் மணவை முஸ்தபா அவர்களைப் பாராட்டுகிறேன்.

தமிழ் மக்கள் - எந்த சமயத்தினராயினும்-இந்நூலை வாங்கிப் படித்து, இஸ்லாமியரின் தமிழ்த் தொண்டை அறிந்துகொள்ள வேண்டும் என்பது என் விருப்பம். அதற்கு உதவிபுரிந்த திரு. மணவை முஸ்தபா அவர்களைப் பாராட்டுகிறேன்.

ம. பொ. சிவஞானம்

## காணிக்கை

**தமிழ்ப் பணிக்கு என்னை ஆளாக்கிய என் அருமைப் பெற்றோர் பி.த. மீராசா ராவுத்தர்-சையதம்மாள் நினைவுக்கு இந்நூலைக் காணிக்கையாக்குகிறேன்.**

## தமிழன் மாண்பு

தமிழனின் தனிச் சிறப்புகளுள் ஒன்று, தன் சிந்தனை யோட்டத்தைக் குறுகிய வட்டத்திற்குள் முடக்கிக்கொள்ள விழையாததோடு அஃதை உலகளாவிய முறையில் பரந்த சிந்தனையாகக் கொண்டிருப்பதாகும் உலகையே தன் ஊராகவும் உலக மக்களையெல்லாம் தம் உறவினர்களாக வும் கருதி "யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனக் கொண் டாடி மகிழும் தமிழன், நாடு, மொழி, இன, நிற சமய வேற்றுமைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு உலக மக்களை இதயத்தோடு இணைத்து உறவு பாராட்டி மகிழும்பெற்றி யினனாவான். தமிழனின் இத்தனித்துவ மிக்கக் குணச் சிறப்பை நாமக்கல் கவிஞர்,

"தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு"

எனக் கூறி மகிழ்ந்தார். "யார் என்பதை பாராமல் என்ன என்பதில் மட்டும் கருத்தைச் செலுத்துவது' தான் தமிழ னின் தனிப்பெரும் குணவியல்பாகும்.

வியாபாரத்திற்கென கடல் கடந்து வந்த வணிகப் பெருமக்கள் தமிழகச் கடற்கரைப் பகுதிகளில் நீரோடு நீர் கலந்தாற்போல் தமிழ் மக்களோடு ஒன்றிணைந்து பழகி வாழும் தன்மையை,

'கலம் தருதிருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்'

எனச் சிலப்பதிகாரம் புகழ்ந்துரைப்பதன் மூலம் நாடு, மொழி, இன, சமய, நிற பேதமுள்ள அந்நிய மக்களிடம் எவ்வித வேறுபாடுமின்றி தமிழ் மக்கள் பழகிய பான் மையை அறிந்தின்புறுகிறோம்.

வணிகத்திற்காக மட்டுமா அந்நியர் இந்நாடு வந்தனர். சமயப் பரப்புதலுக்காகவும் வெளிநாட்டார் தமிழகம் புகுந்தனர். வடக்கேயிருந்து வைதீக சமண, பௌத்த சமயங்கள் வந்தன. மேற்குத் திக்கிலிருந்து கடல் கடந்து கிருத்துவமும் இஸ்லாமும் இன்பத் தமிழகம் ஏகின. இன்னும் தமிழர்க்கு அன்னியமான எத்தனையெத்தனையோ தத்துவக் கருத்துக்கள் தமிழக மக்களை வந்தடைத்தன. அவற்றையெல்லாம் முகம் சுளிக்காது வரவேற்று, கேட்டறிந்து மகிழ்ந்தவன் தமிழன்

''எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு''

என்ற உயரிய கொள்கைக்கேற்ப கேட்டறிந்தவற்றுள் ஏற்பன ஏற்று விடுவன விட்டுப் பெருமை கொண்டது தமிழினம்

தமிழகம் வந்த சமயத்தினர் அனைவரும் தங்கள் சமய கருத்துக்களை தமிழ்மொழி வாயிலாக, இலக்கிய வடிவில் மக்களிடையே எடுத்துச் சொன்னார்கள். இதன்மூலம் இச் சமயங்கள் தமிழை வளர்த்தன; தமிழால் வளர்ந்தன.

''நாயன்மார் நாவமுதும் நம்மாழ்வார் பாசுரமும்
மேயபுகழ் மேகலையும் மேப்பாடு சிந்தாமணியும்
மாமுனி கேம்பாவணியும் மாண்புறு சீறாவும்''

உருவாகி தமிழ் இலக்கியத் துறையைச் செழிக்கச் செய்தன என்பது வரலாறு.

தமிழகம் வந்த பிற சமயங்களுள் காலத்தால் பிற்பட்டது இஸ்லாமிய நெறியாகும். நபிகள் நாயகம் முஹம்மது நபி (சல்) அவர்களின் பிறப்புக்கு முன்பிருந்தே அரபு நாட்டு வணிகர்கள் மேலைக்கடல் வழியே தமிழகம் வந்து தமிழ் மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். அக்காலத்திலேயே தமிழை அரபு எழுத்தில் எழுதி

வழங்கும் வழக்கால் கால் கொள்ளலாயிற்று எனலாம். அதன் பின்னர் இஸ்லாமிய நெறி அண்ணல் நபிகள் நாயகம் வாயிலாக இஸ்லாமிய இறையடியார்கள் மார்க்க ஞானச் செல்வர்கள் மூலமாக, உலகெங்கும் பரவியது போன்றே தமிழகத்திலும பரவத் தொடங்கிற்று. இஸ்லாமிய நெறி வயப்பட்ட தமிழறிஞர்கள் தாங்கள் உணர்ந்து தெளிந்த உண்மைகளை தமிழறிந்த மக்களிடையே எடுத்துரைக்க தமிழ் மொழியை நேரிடையாகக் கையாள முனைநதனர். இம்முனைப்பு தமிழ் மொழி வளர்ச்சிக்கும் தமிழர் வாழ்வியல் உயர்வுக்கும் மாபெரும உந்து சக்தியாக அமைந்ததெனலாம்.

காலத்தால் பிற்பட்டதாக இஸ்லாமிய நெறி தமிழகம் வந்தபோதிலும், அதன் தமிழ்ப் பணியைப் பொறுத்த வரை மற்ற சமயத்தவர் தமிழ்த்தொண்டிற்குச் சற்றும் சளைக்காத இன்னும் சொல்லப் போனால் பிற சமயத் தமிழ்ப் புலவர்களையும் விஞ்சும் வகையில் ஆழமாகவும் அழுத்தமாகவும் தமிழ்த் தொண்டாற்றியிருப்பவர்கள் முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் என்பது தமிழ் வரலாறு உணர்த்தும் உண்மையாகும்.

குறிப்பாக, பதினாறாம் நூற்றாண்டளவில் ஆதரிப்பாரற்ற தமிழ்ப் புலவர்களின் வாழ்க்கைப் போக்கும். சிந்தனையோட டமும் தடம் புரண்டு தடுமாறும் நிலைக்கு ஆளாயிற்று. சிந்தனைத் திறத்தோடும் கற்பனை வளத்தோடும் சிறந்த கருத்துக்களை உள்ளடக்கி 'இப்பாடலை இயற்றியிருக்கிறேன். பரிசு கொடு' என மிடுக்கோடும் பெருமிதத்தோடும் கேட்கும் நிலை போய் எதைப் பாடினால் பரிசு கிடைக்குமோ அதைப் பாடிப் பரிசில் பெற்று வயிறு வளர்க்கும் நிலைக்குப் புலவர் உலகம் ஆட்பட்டு, தரம் தாழ்ந்து வந்த, இடரான கால கட்டத்தில் எழுதகோல் தாணி ஏந்தி இலக்கியம் படைக்க முனைந்தார்கள் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள்.

மாறும் இயல்பு கொண்ட மனித வாழ்க்கைக்கு மாறாத உண்மைகளைக் கூறலல்ல இலக்கியங்களை உருவாக்குவதற்கு மாறாக, மேலோட்டமான வெறும் உணர்ச்சிகளை உள்ளடக்கிய வெற்றிலக்கியங்கள் மட்டுமே இக்கால கட்டத்தில் வெளிவந்தன அறிவுக்கு விருந்தூட்டுவதற்கு மாறாக வெறும் உணர்ச்சிகளுக்கு மட்டுமே இவ்விலக்கியப் படைப்புகள் இரையாக அமைந்தன. 'கூளப்ப நாயக்கள் காதல்' போன்ற காமச் சுவை நனி சொட்டச் சொட்ட கவிதைகள் புனையப்பட்ட கால கடடத்தில். கருத்தைவிட-ஆழமான சிந்தனைகளைவிட, காமச் சுவையே இலக்கியப் படைப்பின் மையம் என்ற உணர்வில் சிக்கிக் கிடந்த சூழ்நிலையில், பாலுணர்வற்ற ஒழுக்க இலக்கியங்கள் ஏதேனும் உருவாகாதா எனத் தமிழகம் ஏங்கிய காலத்தில் பாலுணர்வற்ற ஒழுக்க அடிப்படையிலான பேரிலக்கியங்களை நூற்றுக்கணக்கில் எழுதிக் குவிந்தனர் முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள். தடம் புரண்டு போன தமிழ் இலக்கியத் துறையை மீண்டும் நேர் வழிக்கு இட்டுச் சென்று, வளர்த்து, வளப்படுத்திய பெருமை அவர்கட்குண்டு இதற்குப் பெரும் அனுசரணையாக அமைந்தது இஸ்லாமிய நெறி. பாலுணர்வைப் பாட இஸ்லாத்தில் நேரடியான அனுமதியில்லை. இதனால், பாலுணர்வை மையமாகக் கொண்டு பாடாது. வாழ்வியல் உயர்நெறிகளைப் போற்றும் இலக்கியங்களாகவே, இஸ்லாமிய இலக்கியங்கள் மலர்ந்து மணம் வீசின.

## இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள்

தமிழ் மொழியில் சங்க காலம் தொட்டு வழிமுறையாக வழங்கிவந்த இலக்கிய வகைகள் அனைத்திலும் இஸ்லாமிய இலக்கியங்களை எழுதிக் குவித்தனர் தமிழ் முஸ்லிம் பெருமக்கள். இன்னும் சொல்லப்போனால், பதினாறாம் நூற்றாண்டில் வழக்கில் இருந்ததாகக் கூறப்படும்

தொண்ணூற்றாறு வகை பிரபந்த வகைகளிலும் தங்கள் கை வண்ணத்தைக் காட்டியுள்ளனர் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் இவர்கள் தொடாத துறையில்லை. எடுக்காத இஸ்லாமியப் பொருளில்லை என்று கூறுமளவுக்கு தமிழுக் குரிய எல்லா வகையான இலக்கிய வடிவங்களிலும் பாடல் களைப் புனைந்து தமிழும் இஸ்லாமும் தழைக்கத் தந் துதவினர்.

அதுவரை வழக்கில் இருந்த வடிவங்களில் இலக்கியம் படைத்ததோடு புதிய புதிய இலக்கிய வடிவங்களையும் கொண்டு வந்து சேர்த்த பெருமை இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்களுக்கு உண்டுஇவ்வாறு இவர்கள் தமிழுக்கென்றே சில வடிவங்களை உருவாக்கினர் அரபி, பெர்சிய மொழி களிலிருந்தும் கொண்டு வந்து சேர்த்தனர். இவ்விலக்கிய வடிவங்கள் ஒன்று, இரண்டல்ல, எட்டு வகைகள். தமிழுக் குப் புதிய பொலிவும் வலுவும் வனப்பும் ஊட்டவல்லன வாகும் இவ்விலக்கிய வகைகள். அவையாவன :

1. மசலா
2. கிஸ்ஸா
3. நாமா
4. முனாஜாத்து
5. படைப்போர்
6. நொண்டி நாடகம்
7. திருமண வாழ்த்து
8. அரபுத் தமிழ்

என எட்டாகும்.

இவற்றுள் மசலா, கிஸ்ஸா, முனாஜாத்து ஆகிய மூன்று இலக்கிய வகைகள் அரபி மொழியினின்றும் தமி ழுக்கு வந்து சேர்ந்த இலக்கிய வடிவங்களாகும். ‘நாமா’ என்ற இலக்கியப் பிரிவு பாரசீக மொழியினின்றும் தமிழ்

இலக்கியத் துறையை வந்தடைந்தது. படைப்போர், நொண்டி நாடகம், திருமண வாழ்த்து, தமிழ் முதலிய பிரபந்த வகைகள் தமிழுக்கென்றே தமிழ் முஸ்லிம்களால் உருவாக்கப்பட்டவைகளாகும்.

## மசலா இலக்கியங்கள்

மசலா' என்பது அரபிச் சொல்லான 'மஸ்அலா' என்பதிலிருந்து மருவி வழங்கும் சொல்லாகும். 'மஸ்அலா' என்ற அரபுச் சொல் 'தேடுதல்', 'வினவுதல்', 'வினா' என்ற பொருள்களில் வழங்கப்படுகிறது. இச்சொல் 'ஸீஆல்' (கேள்வி) எனும் அரபுச் சொல்லினடியாய் பிறந்ததாகும். இதற்குப் 'பிரச்சினை' எனும் பொருளும் உண்டு. இஸ்லாமிய மார்க்கம் பற்றிய நிறையறிவு பெற்றவரிடம் ஒருவர் சென்று இஸ்லாமிய நெறி பற்றி மேலும் தெரிந்துகொள்ள தெளிவுபெற வினாவெழுப்பி, உரிய விடைகளைப் பெற்று ஐயந்தீர்த்துக் கொள்வதை 'மஸ் அலா' கேட்டறிதல் எனக் கூறப்படுகிறது. எனவே கேள்வியை உள்ளடக்கியதான மசலா இலக்கியங்கள் பெரும்பாலும் கேள்வி-பதில்' வடிவிலேயே தமிழில் இலக்கியங்களாக வடிக்கப்பட்டுள்ளன. இவ்வகை இலக்கியங்கள் தமிழில் மூன்று உள்ளன முஸ்லிம் தமிழ்ப் புலவர்களால் உருவாக்கப்பட்ட இம்மூன்று இலக்கியங்களாவன; 1. ஆயிர மசலா 2. நூறு மசலா 3. வெள்ளாட்டி மசலா ஆகியவையாகும்.

இம்மூன்று இலக்கியங்களில் அளவில் பெரியது ஆயிர மசலா ஆகும் அதோடு, இவ்விலக்கியம் காலத்தாலும் மிகவும் முற்பட்டதாகும். இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்று அடிப்படையில் கூறுவதென்றால் தமிழில்இயற்றப்பட்ட இஸ்லாமிய இலக்கியங்களில் முதல் நூலாகக் கருதப்படுவது 'ஆயிரம் மசலா' நூலேயாகும். இந்நூலின முழுப் பெயர் ''ஆயிர மசலாவென்று வழங்கும் அதிஜய புராணம்'' என்பதாகும்.

இந்நூலின ஆசிரியரின் பெயர், அவர் வாழ்ந்த ஊர் ஆகிய விவரங்களை நூலாசிரியரே கடவுள வாழ்த்துப் பாடலில்.

''புயவாய்ந்த மதுரை கீழ்பாற்
பொருந்திய சுலையு மாணிற்
செயலாய்ந்த முல்லாமிய்யா
செயிமுரை செய்ய இந்நூல்
இயலாய்ந்த முதலிசெய்து
இசுஹாக்கெனு வகுதை நாடன்
பயஹாய்பர் அருள்சேர் வண்ணப்
பரிமளம் பகரலுற் றான்''

எனக் குறிப்பிடப்படுகிறது.

இந்நூலாசிரியரின் இயற்பெயர் செய்து இஸ்ஹாக் என்பதாகும். செய்கு முதலி இஸ்ஹாக்' என்று வழங்குதலும் உண்டு என்பர் 'வகுதை நாடன்' என இவர் வாழ்ந்த ஊர் குறிக்கப்படுவதால் வகுதை எனும் ஊரைச் சார்ந்தவர் என்பது தெளிவாகிறது. இன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் வங்கக் கடலோரம் அமைந்துள்ள கீழக்கரை எனும் ஊரே அன்று வகுதை நகராக வழங்கிய ஊர் என்று ஆய்வாளர்கள் குறிக்கின்றனர். வகுதை நாடன் எனக் குறிப்பிடப்படினும் இந்நூலாசிரியராகிய செய்கு முதலி இஸ்ஹாக் எனும் வண்ணப் பரிமளப் புலவர் 'ஆயிர மசலா'வெனும் இவ்வருங்காப்பியத்தை மதுரை மாநகரிலிருந்தே இயற்றினார் என்பது கடவுள் வாழ்த்துப் பகுதியால் தெளிவாக அறிய முடிகிறது.

இதன் ஆசிரியர் 'வண்ணப் பரிமளப் புலவர் என்ற பெயரால் அழைக்கப்படுகிறார். சங்க காலம் தொட்டே மூலப் பெயர் தெரியாத காரணத்தால் மட்டுமல்ல, புலவர்களின் இலக்கியத் தனித்தன்மையைக் குறிக்கும் வண்ணம்

புலவர்களின் பெயர்கள் அமைவதுண்டு. மேலும் இலக்கியத் திறமையின் அடிப்படையிலும், குறிப்பிட்ட இலக்கியப் பிரிவில் அவர்க்குள்ள தனியாற்றல், தனித்தன்மை கருதியும், அவர் பாடிய பாடலில் அவர்க்குப் புகழ் ஈட்டித் தந்த வரிகளின் பெயராலும், புலவர்களின் பெயர் அமைவது உண்டு. 'செம்புலப் பெயல் நீரார்', 'வண்ணக் களஞ்சியப் புலவர்' போன்ற பெயர்களைப் போன்றே 'ஆயிர மசலா' இயற்றிய ஆசிரியர் 'வண்ணப் பரிமளப் புலவர்' என அழைக்கப்படுகிறார். இப்பெயரிலிருந்து வண்ணம் பாடுவதில் இப்புலவர் வல்லவராகத் திகழ்ந்துள்ளார் என தெரிகிறது. இந்நூல் இயற்றப்பட்ட காலம் கடவுள் வாழ்த்துப் பாடலில் காணும் செய்திப்படி பார்த்தால் இன்றைக்குச் சரியாக 413 ஆண்டுகட்கு முன்பு 1572-ம் ஆண்டில் ''அந்தமுறு மதுரைதனிற் செந்தமிழோர் சங்கத் திலரங்கேற்றி'' என கடவுள் வாழ்த்தில் குறிப்பிடுவதால் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில், புலவர்கள் மத்தியில் முறைப்படி இந்நூல் அரங்கேற்றும் செய்யப்பட்டது என்பது தெளிவாகிறது. இந்நூல் 'அதிசய புராணம்' என்ற பெயராலும் அழைக்கப்படுகிறது 1095 பாடல்களைக்கொண்ட இந்நூல் காப்பியப் போக்கில் அமைந்துள்ளது.

இந்நூலின் முதற் பக்கத்தில் ''நபிகள் நாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுகள்'' என்று குறிக்கப்பட்டுள்ளதிலிருந்து இந்நூலுள் கூறப்பட்டுள்ள விஷயங்கள் பெருமானாரின் வாழ்வையும் வாக்கையும் உள்ளடக்கிய ஹதீது அடிப்படையில் உருவாக்கப்பட்டது என்பது தெளிவாகிறது.

'ஆயிர மசலா' எனப் பெயரிடப்பட்டிருப்பினும் இந்நூலுள் முன்னூறு கேள்விகள் மட்டுமே கேட்கப்படுகின்றன. எனினும் அக்கேள்விகளுக்கான விடைகளில் ஆயிரம் இஸ்லாமிய உண்மைகள் தர்க்க வாத அடிப்படையில்

ஆசிரியரால் எடுத்தோதப்படுகின்றன.எனவே இந்நூலுக்கு ''ஆயிர மசலா'' எனப் பெயரிடப்பட்டது பொருத்தமே எனக் கருதப்படுகின்றது.

இந்நூலில் உள்ள 'பதிக வரலாறு' என்னும் பகுதியில் உள்ள பத்துப் பாடல்களில் பெருமானாரின் வாழ்வைச் சுருக்கமாகக் கூறிவிடுகிறார் அடுத்து வரும் நாற்பத்தி யாறு பாடல்கள் மூலம் இந்நூலுக்கான பின்னணி காரண காரியங்களோடு அமைக்கப்படுகிறது. அதன் பின்னுள்ள பாடல்கள் யூத அறிஞர் அப்துல்லா இப்னு சலாமுக்கும் பெருமானாருக்கும் இடையே வினா-விடை வடிவில் நடை பெறும் விவாதங்களாகும்.

நூற்பயன் கூறவந்த ஆயிர மசலா ஆசிரியர்,

''மூதறிவுண்டாம் நாளும்
 முதல்வன் கிருபை தோன்றும்
தீதரும் துன்பம் தீரும்
 செல்வமும் சிறப்பும் உண்டாம்
பூதலத்து உயிர்கள் யாவும்
 புகழ்ச்சியும் மகிழ்ச்சியான
ஆதியை இரசூல் தம்மை
 அகமகிழ்ந்து அருளுவோர்க்கே''

எனக் கூறுவதன் மூலம் இந்நூல் கற்போர் பெறுகின்ற நூற் பயனை தொடக்கத்திலேயே சுட்டிச் செல்கின்றார்.

அப்துல்லா இப்னு சலாம் என்பவர் யூத இனத்தைச் சேர்ந்தவர். இவர் 'கைபார்' எனும் நகரில் வாழ்ந்து வந்த வர். கல்வியறிவு நிறைந்தவர்; அக்காலத்தில் சிறந்து விளங் கிய அறிஞர்களுள் ஒருவராகக் கருதப்பட்டவர்.தன் காலத் துக்கு முன்னர் இறைவன் தன் நபிமார்கள் மூலம் அனுப் பிய சபூர், தவ்ராத், இன்ஜீல் ஆகிய வேதங்களில் மிகுந்த தேர்ச்சியும் நிறை புலமையும் உள்ளவர். இவ்வேதங

கள் அனைத்தின் நுட்பப் பொருள் உணர்ந்த அறிஞர். இந் நபிமார்களின் வரிசையில் இறைதூதராக இறுதி நபி பிறந்து, உலக மக்களுக்கு தீன நெறி புகட்டி நெறிப் படுத்துவார் என்பதை நுண்மாண் நுழைபுலத்தோடு உணர்ந்து தெளிந்திருந்தவர். இறுதி இறைத்தூதை எதிர் நோக்கி இருந்தவர் நாயகத் திருமேனி மதினா மாநகரத் தில் இருந்தபோது ஒருநாள் வானவர் தலைவர் ஜிபுரயீல் தோன்றி மதினாவுக்கு வடக்கே நெடுந்தொலைவில் வாழும் அப்துல்லா இப்னு சலாம் எனும் அறிஞர் பெருந் தகைக்கு மடல் விடுத்துத் தொடர்பு கொள்ளுமாறு அறி வுறுத்தினார். அண்ணலார் தம் அருமைத் தோழர் உக் காஸ் என்பாரை அழைத்து வானவர் தலைவர் கோரியபடி அப்துல்லா இப்னு சலாமுக்குக் கடிதம் வரையுமாறு பணித்தார். அக்கடிதத்தில் 'இறைதூதர் முகம்மது நபி' என்று குறிக்கப்பட்டது. கடிதத்தைப் பெற்ற அப்துல்லா இப்னு சலாம் இறுதி நபியை எதிர்பார்த்திருந்த நிலையில் நபியொருவர் விடுத்த கடிதம் என்பறிந்து வியந்து நின் றார். தான் வாழும் நகர மாந்தர் அனைவரையும் ஒருங் கழைத்து, கடித விவரம் கூறினார். முன்பு உலக மக்களை வழிநடத்த இறைவன் தன் தூதர்கள் மூலம வழங்கிய மூன்று வேதங்களிலும் போதிய புலமையுள்ள அவர், மேலும் தான் தெளிவு பெற விரும்பி விடுக்கும் ஆயிரம் ஐயங்களை-மசலாக்களை-பெருமானாரிடம் கேட்பது என வும் அவற்றிற்கு அண்ணலார் உரிய விடையளிப்பாரேயா கில் அவரே உலகம் எதிர்நோக்கி நிற்கும் இறுதி இறைத் தூதர் எனத் தெரிந்து அவர் வழியில் இணைவோம் என வும் கூறினார்.

'பொருட்செயும் எனவே கேட்பேன்:
பூண்டெமக்கு உரைத்தாராகில்
வரும் நபி அவரே''

என முடிவு செய்து, பெருமானாரைச் சென்றடைந்தார்.

அண்ணலாரிடம் "ஆயிரம் கேள்விகள் இஸ்லாமிய மார்க்கம் குறித்துக் கேட்பேன். என் கேள்விகளுக்கு உரிய விடைகளையளித்து ஐயந் தெளிவிக்க வேண்டும். உங்கள் விடைகள் எனக்கு மனநிறைவளித்தால் நானும் என் உற்றார் உறவினர்களும் என் இனத்தைச் சேர்ந்தவர்களும் மட்டுமல்லாது நான் வாழ்ந்துவரும் என் நகரத்தைச் சேர்ந்தவர்களும் முழுமையாக இஸ்லாத்தில் இணைவோம் எனப் பெருமானாரிடம் கூறினார். இதனைக் கேட்ட அண்ணலார் அகமகிழ்ந்து, அப்துல்லா இப்னு சலாமின் நிபந்தனைக்கு இணங்கியவராகக் கேள்வி கேட்கப் பணித்தார் அப்துல்லா இப்னு சலாம் விடுத்த வினாக்களுக்கெல்லாம் உரிய விடையை பெருமானார் அளிக்க, அதனைக் கேட்டறிந்து பெருமானாரின் உண்மைத் தூதுவத்தையும் இறைவனின் இறுதித் தூதராம் பெருமானாரின் பெருநெறியாம் தீன் நெறியின் மகத்துவத்தையும் ஒருசேர உணர்ந்தவராக, அவரும் அவர் உற்றார் உறவினர், இன மக்கள் ஈராக கைபார் நகரத்தாரும் தீன் நெறியாம் இஸ்லாத்தைப் பின் பற்றி முஸ்லிம்களாயினர் எனும் வரலாற்றை எளிய, இனிய நடையில் காவியப் போக்கில் எடுத்துரைக்கிறது 'ஆயிரமசலா' எனும் இந்நூல்.

பெருமானார் இருப்பிடம் ஏகிய அப்துல்லா இப்னு சலாம், ஐயம் போக்கும் நோக்கில் அண்ணலாரைப் பார்த்து,

"துங்கமா மசலாவினுக்கு உத்தரம்
　　சொல்லில் ஆதிதன் தூதுவராகுநீர்
திங்கள்வீசு உலகத்தினில்உம்முடை
　　தீனிலாதொரு தீனிலையாகையால்
எங்கள்மாநகர் உள்ளர்யாவரும்
　　யானும் என்னொடி ணங்கியபேர்களும்
பொங்குநற் கலிமா உரைத்திந்நெறி
　　பூண்டுதீனிடை புக்குவதுண்மையே"

எனத் தன் வருகையின் நோக்கத்தையும் விடைகள் தனக்குப் பூரண மனநிறைவளித்தால் மட்டுமே இஸ்லாத்தோடு இணைய எண்ணியுள்ளதையும் கூற, அதனைச் செவிமடுத்த பெருமானார் அவர்கள்,

' இப்படி உரைக்கக் கேட்டங்கு எம்இறசூல்
தாம் சொல்வார்
மெய்ப்புடன் உமக்கு மிக்காய் வேண்டுவ
தெல்லாம் கேளும்
செப்பிடு வித்தை அல்ல திண்மையாய்
உம்மை நாயன்
ஒப்புடன் எம்மைக் கொண்டே உத்தரம்
சொல்லுவிப்பான்''

எனக் கூறி, அப்துல்லா இப்னு சலாமால் விடுவிக்கப்பட்ட வினாக்களுக்கெல்லாம் நபிகள் நாயகம் தக்க விடை கூறி தெளிவுறுத்தினார்கள்.

'ஆயிரமசலா'வில் முப்பது படலங்களில் விடுவிக்கப்பட்ட வினாக்களும் பெருமானாரின் பதில்களும் படிர்போரின் கருத்தைக் கவர்வதோடு சிந்தனையையும் தூண்டுவனவாக அமைந்துள்ளன. இக்கேள்வி-பதில்கள் மூலம் இஸ்லாமிய நெறியின் பல்வேறு சிறப்பம்சங்களையும் தீனெறியின் நுட்பங்களையும் படிப்பவர்களால் இனிதுணர்ந்து இன்புற முடிகிறது. இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்களை தத்துவார்த்தமாக, வரலாற்று அடிப்படையில் சுவையாகச் சொல்லிச் செல்வதால் இந்நூல் நீதிக் களஞ்சியமாகவும் அமைந்துள்ளதெனலாம்.

அண்ணலார் இறைச் செய்தியை வஹீயாய் பெற்று மக்களுக்கு உரைத்து, உரைத்தவாறு தானும் வாழ்ந்து, இறைவனின் அழகிய முன் மாதிரியாக வாழ்ந்து காட்டும் பெற்றியினர் என்பதை அறிந்த அப்துல்லா இப்னு சலாம்,

என பெருமானாரை நோக்கி உங்களுக்கு இறைச் செய்தி எவ்வாறு எட்டுகிறது என வினவினார். அதற்கு மறு மொழியாக நபிகள் நாதர்,

"அப்படிக் கலம்இறையால் அணிபல
கையில் எழுத
மெய்ப்பொருள் இசுறாபீல், மீக்காயீல்
தமக்கருள
செட்பிய மீக்காயீல் - ஜிபுறாயீ லுக்கருள
இப்படி ஜிபுறாயீல்வந் தேகி எனக்கருள்வார்"

எனக் கூறினார்.

இறைவன் தன் ஆணையைக் 'கலம்' எனும் எழுது கோல் கொண்டு மக்பூல் எனும் பலகையில் எழுத, அவ் வெழுத்தைப் படித்த இசுறாபீல் மீக்காயீலுக்குக் கூற, மீக் காயீல் ஜிபுறாயீலுக்கு அருள, ஜிபுறாயீல் அவ்வாணையை நபிகள் நாதருக்கு அருள, அஃது அண்ணலார் வாய்மொழி யாக மக்களை வந்தடைகிறது.

சாதாரணமாக வினா - விடை அமைப்பில் உருவாகும் இத்தகைய நூல், ஒவ்வொரு கேள்வி-பதிலுக்கும் அதிகத் தொடர்பில்லாமலே அமைவதுதான் இயல்பு. ஆனால், இநநூலாசிரியர் வண்ணப் பரிமளப் புலவர். தொடக்கம் முதல் இறுதிவரை கேள்வி-பதில்களை ஒருவிதத் தொடர் போடு அமைந்திருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

'ஒன்று முதல் நூறின் உரை வரலாறு' எனும் படலத் திஒ ஒன்று முதல் நூறு வரையிலான எண்களை தொடர்பு படுத்திக் கேட்கப்படும் கேள்விகளுக்கு விடையாக புனித ரமலான் மாதத்தில் இருபது முதல் முப்பது நாள் வரை நடைபெற்ற வரலாற்றுச் செய்திகளைச் சுவையாகச் சொல்லிச் செல்வது கருத்துக்கு விருந்தாய் அமைகிறது.

20-ம் நாள் : இறைவன் தாவூது நபிக்கு சபூர் வேதத்தை அருளினான்.

21-,, ,, : சுலைமான் நபிக்கு இறைவன் முத்திரை வந்தது.

22-,, ,, : மூசா நபி பிறந்தார்.

23-,, ,, : ஈசா நபிக்கு இன்ஜீல் வேதம்அருளப்பட்டது

25-,, ,, : மூசா நபி பிர்அவ்னின் கொடுமையிலிருந்து காப்பாற்ற இஸ்ரவேலர்களை அழைத்துக் கொண்டு செங்கடலில் இறங்கினார்.

26-,, ,, : மூசா நபிக்கு தவ்ராத் வேதம் இறக்கப் பட்டது

27-,, ,, : யூனூஸ் நபியை கடல்மீன் விழுங்கியது.

28-,, ,, : யாகூப் நபி குருட்டுத் தன்மை நீங்கி குண மானார்.

29-,, ,, : இத்ரீஸ் நபி தன் உடலுடன் வானகம் ஏகி னார்.

30-,, ,, : இறைவன் மூசா நபிக்கு அறுதி கூறினான்.

இவ்வாறு ஒவ்வொரு நாளையும் ஏதேனுமொரு இஸ்லாமிய வரலாற்று நிகழ்ச்சியோடு இணைத்துத் தொடர்புப்படுத்திக் கூறியிருப்பது சுவைமிக்கதாக உள்ளது.

அப்துல்லா இப்னு சலாம் அண்ணலாரை நோக்கி விடுக்கும் வினாக்கள் சில சமயம் விடுகதைகள் போல அமைந்து படிப்போர் கவனத்தை ஆர்வத்துடன் ஈர்க்கின்றன. சான்றாக பெருமானாரை நோக்கி,

"பிதாவினும் பிள்ளை மூர்க்கம்
பெற்றுறு தந்தை தன்னைச்
சதாளுறும் கோல தாகச்
சதிசெயும் அது ஏதென"

அப்துல்லா இப்னு சலாம் வினவுகிறார். "தந்தையைவிட மகன் மூர்க்கமானவன்; தன் தந்தையை சாய்க்கும் வல்லமையுண்டு. அது எது?" என்று விடுகதை போன்று விடுக்கும் வினாவுக்கு விடையாகப் பெருமானார்.

' இரும்பு பிறக்கும் கல்லிடத்தில்
ஈடுபடுத்தும் இரும்புகல்லைப்
பொருந்த உருக்கை இரும்புபெறும்
பூண்ட இரும்பை உருக்கறுக்கும்
திருந்த நெருப்பை உருக்கீனும்
செய்ய உருக்கைத் தீவாட்டும்
வருந்தும் பிதாவின் பிள்ளைமிடுக்
காகும் மசலா இது என்றார்"

எனக் கூறுவதன் மூலம் 'கல்லிடத்தே பிறக்கும் இரும்பே கல்லை உடைக்கிறது; இரும்பே உருக்காகி இரும்பை அறுக்கிறது; வெட்டுகிறது. உருக்கு நெருப்பை ஈனுகிறது; அந் நெருப்பே உருக்கை வாட்டுகிறது. இதுவே, பிதாவின் பிள்ளை மிடுக்கு' எனக் கூறினார்.

கேள்வி ஒரு வரியினதாக இருந்தாலும் அதற்கான விடை ஒரு வரலாற்றின் மையமாக அமைவதும் உண்டு. சான்றாக, பெருமானாரை நோக்கி,

"கருதி ஒரு நாட்பொழுதைக் கண்ட நிலம் எது?"

என்ற கேள்விக்கு விடை கூறும் பெருமானார்.

''காசாக்கம் செய்யும் பிருஊன் கலக்கத்தால்
மூசாப் பயகாம்பர் முன்னீர் இடைபுகவே
ஆசாத் தடியால் அடித்தார் ஈராறுவழி
ஊசாப் பெருங்கடலின் உட்புகுந்து கொண்டதுமே''

எனக் கூறுகிறார். மூசா நபியவர்களின் வாழ்வின் மைய மாகவும் திருப்புமுனைப் பகுதியாகவும் விளங்கிய சம்ப வத்தை இப்பாடல் மூலம் விளக்குகிறார்.

எகிப்து நாட்டை ஆண்டுவந்த பிர்அவ்ன் எனும் கொடுங்கோல் மன்னன் தன்னையே இறைவனாக மக்கள் வணங்க வேணடும் எனப் பணித்திருந்தான மறுத்த இஸ்ரவேலர்களை மிகவும் கொடுமைப்படுத்தினான். பிர் அவ்ன் மன்னனின் பெருங் கொடுமைகளிலிருந்து, இஸ்ரவேலர் களைக் காக்க எண்ணிய மூஸா நபியவர்கள் தன் இனத் தாரை அழைத்துக்கொணடு செங்கடலை நோக்கியும் சென்றார், செங்கடலில் இறங்கிய மூசா நபி ஆசா எனும் கைத்தடியால் செங்கடல் நீரை அடிக்க, அக்கடல் நீர் 12 வழிகளாகப் பிரிந்து பாதை காட்ட இஸ்ரவேல் மக்கள் அதன் வழியே நடந்துசென்று தப்பிக்க வழி வகுக்கிறது. கடல்நீரினுள் காலங் காலமாக அமிழ்ந்து கிடந்த அந்நிலம் அன்றுதான் நீரற்ற நிலமாகக் காட்சி தந்து, கதிரவனின ஒளிக்கதிர்களைக் கண்டது. சூரிய ஒளி படர்ந்த அக்கடல் நிலப் பாதை வழியே இஸ்ரவேல் மக்கள் நடந்து சென்று மறுகரை அடைந்தனர். அவர்களை விரட்டிவந்த கொடுங் கோலன் பிர்அவ்னும் அவன் படையினரும் இஸ்ரவேலர் சென்ற அப்பாதை வழியே துரத்திச்செல்ல முயன்றபோது கடல்நீர் ஓடி அவர்களை அழித்தது. ஆகவே. கடலினடி யில் கிடந்த நிலம் கதிரவன் ஒளிபெற்ற நாள் அன்று ஒரு நாள் மட்டுமே என்ற வரலாற்றுச் செய்தியைப் பதிலாகத் தந்து தெளிவுறுத்துகிறார் பெருமானார்.

அடுத்து,

'விண்ணிலிருந்து விழுவதுமில்லை. மணணிலிருந்து ஓடுவதுமில்லை. ஆனால், விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே அந்தரத்தில் ஓர் ஆறு ஓடுகிறது. அது என்ன ஆறு' எனக் கேட்கப்படுகிறது.

''மண்தரைக்குள் ஏறாது வானிருந்து ஓடாது அங்கு
அந்தரத்தில் ஓராறுண்டது எமக்குக் கூறுமென
சுந்தரத்தோள் இபுனு சலாம் சுருதிவழியே கேட்க'

அதற்குப் பெருமானார், 'கடுமையாக உழைக்கும் உழைப் பாளி மக்களின் உடலில் ஓடும் வியர்வை நீரே விண்ணிற் கும் மண்ணிற்கும் இடையில் அந்தரத்தில் ஓடும் ஆறு' எனக் கூறுவதன் மூலம் உழைக்கும் மக்களின் வியர்வை யின் உன்னதத்தையே உணாத்தி விடுகின்றார் பெரு மானார் அவர்கள்.

ஆயிர மசலா ஆசிரியர் வண்ணப் பரிமளப் புலவர், இந்நூலில் சொர்க்கத்தின் மேனமையையும் நரகத்தின் கொடுமையையும் மிக விரிவாகப் பேசுகிறார். இதனைப் படிப்போர் இறையச்சம் மிக்கோராய் நரக வேதனைக் குரிய தீய செயல்களைவிட்டு முற்றிலும் விலகி, இறைவன் கட்டளைக்கிணங்க, அவன் வகுத்தளித்த நன்னெறி வழி ஒழுகி, சொர்க்கம் சேர்ந்து சுவனப் பெருவாழ்வு பெற உணர்வுபூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் வழிகாட்டு கிறார்.

இவ்வுலக வாழ்வில் இறைநெறி தவறி வாழ்வோர் எரிநரகில் பெறவிருக்கும் பெருந்துன்பத்தையும், அத்துன் பத்தை எத்தகையோர் பெறுவர் என்பதையும் பட்டியலிட் டுக்காட்டி நம்மை அச்சுறுத்துகிறார். நரகிற் சேர்வோர்:

"தொழுகை மறந்தவர்; சூது விரும்பியோர்; வட்டி வாங்கியவர்; வழிகெட நின்றவர்; ஆண்டவனுக்கு அஞ்சாதவர்; பொய் பேசியவர்; புறங்கூறியவர்; உருவ வழிபாடு செய்தவர்; உண்மையில் பிறழ்ந்தவர்; இபுலீசின் (சைத்தான்) மாயையில் மகிழ்ந்தவர்; சகுனம், குறி பார்த்தவர்; ஈமான் (இறை நம்பிக்கை) ஏற்காதவர்; உள்ளத்தில் நஞ்சு கொண்டு உதட்டில் இனிப்பாயப் பேசியவர்; ஒப்பாரி வைத்து அழுதவர்: மார் அடித்துக் கொண்டவர்' ஆண்டவனை ஏசியவர்; எத்தீம்களை (அனாதைகளை) நோக வைத்தார்; ஜக்காத்து (ஏழைவரி) வழங்காதவர்; கூத்துப் பார்த்தவர்; மது உண்டவர்' வெகுளியுற்றவர்' சூரியனை வணங்கியவர்; அறிவு நெகிழ்ந்தவர்; அதபு (நல்லொழுக்கம்) கடந்தவர்; பிழை செய்தவர்; தாய் தந்தையர் மனம் நோகச் செய்தவர்; பேயொடு உறவு பூண்டவர்; சேயொடு பகை கொண்டவர்; கோள் சொன்னவர்; வீண்மொழி பேசியவர்; வெள்ளி, திங்களில் அழுதவர்; உஸ்தாதைப் (ஆசிரியர்) பழித்தவர்; கணவன மனத்தை நோகச் செய்தவர்; கணவன் சொற்கேளாது தன் சொற்படி கணவனை நடத்தும் சேடியர்; கணவன் உத்தரவின்றி அயல்மனை சென்றவர்; அயல் ஆடவனை நயந்தவர்; அயலார் முன் தோளும் தலையும் தோன்றத் திறந்த ஆடை அணியும் பெண்டிர்; சொந்த மனையில் செட்டுச் செய்யும் பெண்கள்; காபிர் (இறைவனை நிராகரிப்பவர்) வழி நடப்பவர்; அவையில் அடாத சொல் பேசியவர்; ஒருவர் இறந்த பின் அவரைப் புறஞ்சொன்னவர்; கணவன் பொருளைக் காரணமின்றிக் கண்டோர்க்கு ஈபவர்; துணைவன் பணத்தைத் திருடும் பெண்டிர்; முனாஃபிக் (நயவஞ்சகன்) ஆனவர். அல்லாஹ்வை இரசூலை இழந்தவர்; சொர்க்கம், நரகம் இல்லை என்றவர்; கூன் (கொலை) செய்து பொதுப் பொருளை அழித்தோர்; புறுக்கானில் (திருக்குர் ஆன்) ஓரெழுத்தையும் இகழ்ந்தவர்; வல்லாண்மை பேசித் தம்மைப் பெருமை செய்து கொள்பவர்: நான்கு வேதங்களில் எதை

யேனும் இகழ்ந்தவர்; மார்க்கத்திற்கு ஒவ்வாத வாணிபம் செய்தவர்; அறிவாளிகள் சொன்னதை அசட்டை செய்தவர்; அடிமைகளுக்கு அறக் கொடுமை செய்தவர் தீன்நெறி பகைத்தோர்; நம்பியவரை மோசம் செய்தவர், இறை ஏவலைக் கடந்து ஈனவழி; சென்றவர் அறுஷைப் படைத்த ஆண்டவனுக்கு அஞ்சி தவுபா(பாவ மன்னிப்பு)"செய்யாத ர்வ சூனியங்கள், வஞ்சனை செய்தவர்; பெரியோரைப் போற்றாதவர்; சிறுவர்க்குப் புத்தி சொல்லாதவர்; அநியாயம் என்று தெரிந்தும் அதிலிருந்து விலகாதவர்'' ஆகியோர் கொடிய நரகில் தள்ளப்படுவர் என அச்சுறுத்தி எச்சரிக்கை செய்கிறார்.

இன்னும் நரகம் அமைந்திருக்கும் சூழலையும், அங்கு தவறு செய்தோர் எவ்வகையான நகர வேதனை அடைவர் என்பதையும் விளக்கமாகவும் நுணுக்கமாகவும் எடுத்துரைக்கிறார். இவைகளைப் பற்றிப் படிக்கும்போதே படிப்போர் ஒருவித அச்சத்துக்கு ஆட்படுவர்; தவறின் பக்கம் தலை வைக்காமல் மனம் தடுத்தாட்கொள்ளுகிறது இறை வழியில் நேர்மையாக வாழ உள்ளம் அவாவுகிறது.

- மது இஸ்லாத்தில் அறவே விலக்கப்பட்ட ஒன்று. மது உண்போர் அறிவு மயங்கி, மதங்கொண்ட யானையின் நிலையில் இயங்க முனைவர். மது அருந்தியதால் உணர்வு பிறழ்ந்து தீமை பல செய்ய தூண்டுதல் பெறும் ஆடவர் எரி நரகில் மிகப் பல துன்பங்களை அடைவர் என்பதைச் சுட்டிக்காட்டிய வண்ணப் பரிமளப் புலவர், பெண்கள் மதுவுண்டால் இம்மை வாழ்வில் நரகில்படும் கொடுந் தண்டனைகளை விளக்கும்போது.

''மதமுறு மதுவையுண்ட மாந்தர்கள்
வயிற்றின் மீதே

கொதுகொது கொதெனக் காய்ந்து குமுறிய
கனல் வெந்நீரைக்
கதகத கதவென வார்க்கக் கனங்குடல்
ஈரல் எல்லாம்
மொது மொது மொதெனத் தள்ளி
வீழ்ந்திடும் முறண்டுதானே''

எனக் கூறுகிறார். மது உண்டவர் வயிற்றுக்குள் சென்று, இறைவன் இயற்கையாக அளித்துள்ள உணர்வுகளை, மயக்கி, மறக்கச் செய்கிறது. இதனால், மதுவுண்டவர் தன் நிலை தடுமாறி தவறுகள் இழைக்கின்றனர்; எனவே, மறுமை நாளில், நரக வேதனையினபோது, இத்தீமைக்கு காரணமான இடமாக அமைந்துள்ள வயிற்றின்மீது கொதுகொது எனக் கனலாகக் காய்ந்த கொதி நீர் ஊற்றப்படும். இதனால் மது மயக்கம் கொண்ட குடல் மொது மொது எனத் தள்ளி வீழ்ந்துவிடும். இப்பாடல் இரட்டைக் கிளவியாக அமைந்து மது மயக்கத்தால் மனிதர் அடையும் நிலையையும் அதன் விளைவாகப் பெறுகின்ற தண்டனையின் தன்மைகளையும ஓசை நயத்தோடு மனத்தில் பதியும் வண்ணம் கூறிவிடுகின்றன

'ஆயிர மசலா' நூல் மிகச் சிறந்த நீதி இலக்கியமாகவும் இஸ்லாமிய வாழ்வியல் நெறியாகிய தீன் நெறி உணர்ததும் அறிவுப் பேழையாகவும் அமைந்துள்ளதெனலாம். நீதிக் கருத்துக்கள் இந்நூலெங்கும் விரவிக் கிடக்கின்றன. சான்றாக,

''மெய்யிலே பொய்யை நாட்டி
வெஞ்சினப் பிணியின் மூழ்கிப்
பொய்யிலே மெய்யை நாட்டிப்
பொருந்துமோ புவனத்தோரே

செய்யிலே களையுண் டாககித்
தீங்கிலே விளைவுண் டாக்கிக்
கையிலே யிளித்தார் நேர்ஙமக்
கரும்பிலே கசப்பா மென றார்''

இனிக்கும் கருப்பிலே கசப்புக் கலந்தால் கரும்பின் இனிப்புச் சுவை கெட்டு விடுகிறது. வளமாக வயலிலே வளர்நதுள்ள பயிர்களுக்கிடையே களைகள் கலநது-வளர்ந்தால் விளைச்சல் வீணாகிவிடுகிறது. அதேபோன்று மெய்யிலே பொய்யைக் கலந்தால் மெய்யின் மேன்மைத தன்மை கெடுகிறது எனவே, பொய்மை நிறைந்த கொள் கைகளில் மெய்யைத் தேடுவது எங்ஙனம் பொருத்த முடைத்தாகும் எனக் கூறி, மிக உயர்ந்த நீதிக் கருதனை உணர்த்துகிறது.

தான் கூறவந்த கருத்துக்களை சொல்லோவியமாகத் தீட்டிக்காட்டி படிப்போர் மனதில் ஆழமாகப் படியச் செய்வதில் இவர் பேராற்றல் பெற்றவராகத் திகழ்கிறார். வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) அவர்களின் திருத் தோறறத்தைக் கூறவந்த வண்ணப் பரிமளப் புலவர்,

நகைமுகம் இலங்கும் வெள்ளை
நளினிலா வீசும் மேனி
சுகமக ரந்த நாசி
துலங்குகற் பூரத் தாலே
அகமிக மகிழ்ந்து வானோர்
அனைவரில் அழக தானோர்
திகமொளி பரந்த வெள்ளைச்
சிறகொடு வகைஎட் டுண்டே''

இவ்வர்ணனையைப் படிக்கும்போது வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) அவர்களே நம் மனக் கண்முன் அழ கோவியமாக காட்சி தருவது போன்று உள்ளது.

உலகம் தோன்றிய வரலாற்றையும் முதல் நபியும் முதல் மனிதருமான ஆதாம் நபியின் வரலாற்றையும் விரித்துரைக்கும் நூலாசிரியர் எளிய உவமைகளின் மூலம் இலக்கியச் சுவை ததும்ப அரிய பெரிய கருத்துக்களையும் சிந்தைகொள் மொழியில் செப்பி தம் ஆற்றலை வெளிப்படுத்துகிறார். பெருமானார், அப்துல்லா இப்னு சலாமுக்குக் கடிதம் எழுத உக்காசை அழைக்க உக்காசு உடன் வந்து செயல்பட்டதை,

''பூட்டுசிலை நாண் எறியும்
பூங்கணையது என்றே
ஓட்டமொடு சாதிபுனு
உக்காசு வந்தார்!''

என்றும், நபிகள் நாதர் விடுத்த ஓலையை எடுத்துச் சென்றவர் ஓட்டத்தை ''வேட்டைமான ஓட்டம் போல'' என்றெல்லாம் எளிய உவமைகளின் மூலம் இலக்கிய நயம் பெருக்குகிறார். அவர்கால பழமொழிளும்கூட இந்நூலுள் இடம் பெற்றதன் மூலம் இவை இலக்கியத் தரம் பெற்று விடுகின்றன.

பெருமானாரைக் காணும் பேறு பெற்றவர்களும் அவரது அமுத மொழியைச் செவி மடுத்தவர்களும் அடைகின்ற பெரும் பேற்றைக் கூறும்போது.

''தீதாறு கண்டவர்க்கும்
திருவசனம் கேட்டவர்க்கும்
வேதாந்தம் மிகவுண்டாம்
வெற்றிகளும் பெற்றிடுவார்''

எனத் தெளிந்த நீரோட்டம் போலத் தங்குதடையின்றி கருத்துக்களைக் கூறுவதன் மூலம் ஆயிரம் மசலாவென்னும் அதிசயபுராணத்தில் அப்துல்லா இப்னு சலாமுக்குப் பெருமானார் அவர்கள் இறை திருமறையாம் திருக்குர்ஆன்வழி

யிலும் ஹதீஸ் அடிப்படையிலும் கூறும் இனிய செய்தி களைப் படிப்போர் பெறுகின்ற-பெறப்போகும் பயனை யும் உணர்த்தி விடுகின்றார் வண்ணப் பரிமளப் புலவர்

பல்வேறு வண்ணங்களில் அமைந்துள்ள இந்நூற்பாக் கள் நடைச் சிறப்பும் மொழிச் சிறப்பும் கொண்டு இந் நூலை காலத்தால் மட்டுமல்லாது இலக்கியத் தரத்திலும் முதன்மை வாய்ந்த இஸ்லாமிய இலக்கியமாக ஆக்கிவிடு கின்றது.

மசலா இலக்கிய வகைகளுள் காலத்தால் இரண்டாம் இடத்தைப பெறுவது'வெள்ளாட்டி மசலா' எனும் நூலா கும். இதன் முழுப் பெயர் 'தவத்துது என்ற வெள்ளாட்டி மசலா' என்பதாகும்

இந்நூலை இயற்றியவர் காயல்பட்டணத்தைச் சேர்ந்த ஷெய்கப்துல் காதிறு லெப்பை என்பவராவார். இந்நூல் 1856-ம் ஆண்டில் வெளிவந்தது. ஆயிர மசலா நூலுக்குப் பின்னர் மிக நீண்ட இடை வெளிக்குப் பின்னரே இரண்டாவது மசலா நூலான 'வெள்ளாட்டி மசலா' வெளிவந்துள்ளது இங்குக் கவனிக்கத் தக்கதாகும்.

இதுவரை இந்நூல் ஐந்துபதிப்புகளாக வெளிவந்திருந்த போதிலும் ஒவ்வொரு பதிப்பிலும் நூல் தலைப்பில் மாற் றம் திருத்தங்களுடனேயே வெளிவந்துள்ளன. கீழக்கரை செய்கப்துல் காதிர் என்பவர் பதிப்பித்த இரண்டாம் பதிப்பு நூல் ''தவத்துது என்னும் வெள்ளாட்டி மசலா மறுமொழி வசனம்' என்னும் பெயரில் வெளிவந்தது. அப்துல் அஜீஸ் சாஹிப் என்பவர் பதிப்பித்து வெளியிட்ட மூன்றாம் பதிப்பு ''வெள் ளாட்டி மசலா'' எனும சுருங்கிய பெயரிலேயே வெளி வந்தது. நான்காம் பதிப்பை 1917-ம் ஆண்டில் வெளி யிட்ட முகம்மது லெப்பை சாஹிப் என்பவர்'வெள்ளாட்டி மசலா மறுமொழி 'விலாசம்'' என்ற பெயரில் வெளிக்

கொணர்ந்தார். இறுதியாக வெளிவந்த ஐந்தாம் பதிப்பு 'ஹதீது விசனம்- என்னும் சொற்றொடர் இணைய, ''தவத்துது என்ற வெள்ளாட்டி மஸ்அலா ஹதீது விச னம்'' எனும் பெயரில் உலா வந்துள்ளது

இந்நூல் 'ஆயிர மசலா' நூலினின்றும் வேறுபட்ட தாக வசன நடையில் இயற்றப்பட்டுள்ளது. இன்னும் சொல்லப் போனால் தமிழில் அமைந்து மூன்று மசலா நூல்களில் உரைநடையில் அமைந்துள்ள மசலா நூல் இது ஒன்றேயாகும் இந்நூலுள் 669 வினாக்களுக்கு விடை பகரப்பட்டுளளது வெள்ளாட்டி எனும் தமிழ்ச் சொல் லுக்குப் 'பணிப்பெண்' என்பது பொருளாகும்

இந்நூலில் கூறப்படுப சமபவங்களுக்கான வரலாற் றுச் சான்றுகள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்நூலின் தொடக்கத்தில் வெள்ளாட்டியாகிய தவத்துது பற்றிய வாலாற்றுச் செய்தி கூறப்படுகிறது. பகுதாது நாட்டிலுள்ள தாறுஸ்ஸலாம் எனும் நகரில் வாழ்ந்து வந்த செல்வந்தர் ஒருவருக்குக் குழந்தைப்பேறில் லாது இருந்தது. இறையருளால் நீண்ட காலத்திற்குப்பின் அச்செல்வந்தருக்கு ஆண் குழந்தை பிறந்தது. பிள்ளைப் பேறில்லாது வருந்தி முதுமைப் பருவத்தில் பிள்ளைபெற்ற தந்தை அக்குழந்தைக்குப் 'பதுறுஸ்ஸமான்' எனப் பெயரிட்டு அறிவிலும் ஆற்றலிலும் ஒழுக்கத்திலும் மார்க்கசீலத்திலும மிகச் சிறந்தவனாக வளாக்க விரும்பி னார். அதற்காக எல்லா குணநலன்களும் ஒருங்கே வாய்க் கப்பெற்ற பணிப்பெண் ஒருத்தியை தேடலானார். தான் விரும்பும் வெள்ளாட்டியாகிய பணப்பெண் எப்படிப் பட்டவளாக இருக்க வேண்டும் என்பதை,

''எனக்கொரு வெள்ளாட்டியவள் சிறிய வயதானவள்
ஐந்து வயதுப் பெண்ணானவள், வர்ணிப்பிலடங்காத

மிகுந்த அழகானவள், நல்லவள், குறிஞ்சிப்புள்ளவள்,
மதுரவாக்குள்ளவள் வாடை மணமாளவள், தலை
கனத்தவள், அவள் காலததிலவளுககு நிகரில்லாதவள்
அப்பேர்க்கொத்த பெண் வேண்டும்''

என்கிறார்.

இவ்வாறு எல்லாவகைத் திறமைகளும் குணநலன்களும் ஒருங்கே அமையப்பெற்ற ஐந்து வயது வெள்ளாட்டிப் பெண் வேண்டுமெனக் கருதி, அவளைத் தேடும் பணியில் முனைப்புக் காட்டினார். இறுதியில் அவர் விரும்பிய தன்மைகள் அனைத்தும கொண்ட ஐந்து வயதுப் பணிப் பெண்ணை வணிகர் ஒருவர்மூலம செல்வந்தர்பெறுகிறார். அவளுக்குத் 'தவத்துது' எனப் பெயரிட்டுத் தன் மகனை வளர்க்கும் வெள்ளாட்டிப் பணிப்பெண்ணாக அமர்த்திக் கொண்டார்.

அவ்விளம் சிறுமி மார்கக ஞானம் முழுவதையும் கணக்கு,பூகோளம் முதலான பிற துறை அறிவுச் செல்வங்கள் அனைத்தையும் கற்றுத்தேற, செல்வந்தர் வழிவகுத்தார். அப்பெண்ணின் துணையுடன் செல்வந்தர் மகன் பதுறுஸ்ஸமானும் பல்துறை அறிவும் நிரம்பப் பெற்றவனாக வளர்ந்து வாலிப நிலையை அடைகிறான்.

தன் வாழ்வின் இறுதிக் கட்டத்தை அடைந்த செல்வர் தன் மகன் பதுறுஸ்ஸமானை அழைத்து எல்லாவகைக் குணச் சிறப்பும் அறிவுத் தெளிவும் மார்க்க ஞானமும் நிரம்பப் பெற்ற பணிப் பெண்ணாகிய தவத்துது வெள்ளாட்டியை ஏற்றுக் கொள்ளுமபடி பணிக்கிறார். பதுறுஸ்ஸமான் தன் தந்தையான செல்வந்தரின் இறப்புக்குப் பின்னர், தன் தவறான போக்கால் தந்தை தேடித்தந்த செல்வம் அனைத்தையும் இழந்து வறியவனாகிறான். தன வாழ்க்கைத் தடம் புரண்டதால் இருந்தவற்றையெல்லாம் இழந்து கொடிய வறுமைவாய்ப்பட்ட பதுறுஸ்ஸமான்

தவத்துது வெள்ளாட்டியிடம் ஆறுதல் தேட, அவள் தன்னை சுல்தான் ஹாரூன் ரஷீதிடம் ஒப்படைத்து அதற்குப் பகரமாக பதினாயிரம் பொற்காசுகள் பெற்று நந்நிலை எய்துமாறு கூறுகிறாள். அவளது ஆலோசனைக் கிணங்க பதுறுஸ்ஸமான் அவளை சுல்தான் ஹாரூன் ரஷீதிடம் அழைதுச் செல்ல. அவளது ஆபார அறிவையும் திறமையையும் தான் வைக்கும் சோதனையில் நிருபித்தால் கேட்ட பொன்னைக் கொடுப்பதாகவும் அச் சோதனையில் அவள் தோல்வியுற்றால் அவளை வெறுமனே அழைத்துச் செல்ல வேண்டுமெனப் பணிக்க அந் நிபந்தனைக்கு பதிறுஸ்ஸமானும் தவத்துது வெள்ளாட்டியும் ஒப்பினர்.

தவத்துது வெள்ளாட்டியின அறிவாற்றலையும் மார்க்க ஞானச் சிறப்பையும் சோதிக்க விரும்பி நான்கு பேரறிஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைக் கொண்டு அவளைச் சோதிக்க ஏற்பாடு செய்தார். அந்நான்கு உலமாக்கள் கேட்ட 669 கேள்விகளுக்கும உரிய தக்க பதில்களை அளிக்க அவளது பரந்துபட்ட இஸ்லாமிய மார்க்க ஞானச் செறிவையும் சொல் திறமையும் பாராட்டி அவன் கேட்ட பதினாயிரம் பொன்னைத் தந்ததோடு, தவத்துது வெள்ளாட்டியையும் பதுறுஸ்ஸமானுக்கே பரிசாக வழங்கி ''நீரும்முடைய வெள்ளாட்டியைக் கூட்டிக் கொள்ளும். அவளுக்கு நீர் விலை கூறிய பதினாயிரம் தங்கக் காசும் உமக்கு ஹதியா'' வென்று சொல்லிக் கொடுத்து, அல்லாஹு தஆலா உங்களுக்குப் பறக்கத்துச் செய்வானாகவுமென்று துவாச் செய்தார். பின்னர் தவத்துது வெள்ளாடடியும் பதினாயிரம் பொன் பரிசு பெற்ற பதுறுஸ்ஸமானும் மண்விினை நிகழ்த்தி மகிழ்வோடு வாழ்ந்தனர்'' என நூல் முடிகிறது.

வெள்ளாட்டி மசலா நூல் இஸ்லாமிய நெறி முறைகள் பெரும்பாலானவற்றை திருக்குர்ஆன், ஹதீது அடிப்படையிலும் நபிமார்களின் வாழ்க்கை வழியேயும் அவர்தம்குண

நலன்களைத் தெளிவாக எடுத்துக் கூறுவதாகவும் அமைந் துள்ளது நான்கு உலமாக்கள் விடுக்கும் வினாக்களும் அதற்குத் தவத்துது வெள்ளாட்டி தரும் பதில்களும் படிப் போர்க்குச் சுவையூட்டுவதோடு இஸ்லாமிய தகவல் களஞ்சியமாகவும் அமைந்துள்ளதெனலாம்.

இஸ்லாத்தின் அனைத்து அம்சங்களையும் வெளிக் கொணரும் வகையிலேயே நான்கு உலமாக்களின் கேள்வி கள் அமைந்துள்ளன. முதலாவதாகக் கேள்வி கேட்ட உலமாஷெய்கு இப்றாஹீம் என்பர் 134 மசலாக்களை (கேள்வி) கேட்க அவற்றுக்குத் தக்க பதில்களை தவத்துது உடனுக்குடன் உரைக்க அவள் விடை தந்தத் திறனைப் புகழ்ந்த உலமா ''இவள் இஸ்லாமிய மார்க்கத்தில் மிகுத மும் அறிந்த வளாயிருக்கிறதின் பேரில் உங்களெல்லாருக் குத் தெரியப் படுத்துகிறேன்'' என்று சொல்லி தன் தோல்வியை ஒப்புக் கொள்கிறார். அடுத்துக் கேள்வி தொடுத்த ஷெய்கு அஹமது எனும் உலமா 174 மசலாக் களைக் கேட்டார்.. மூன்றாவது உலமாவான ஷெய்கு ரஹ்மத் என்பவர் 176மசலாக்களையும் இறுதியாகஷெய்கு அப்துல்லா கரீப் என்பவர் 185மசலாக்களையும் தவத்துது வெள்ளாட்டியை நோக்கி வினவ, அனைத்திற்கும் திறம் பட விடையளித்து தன் அறிவாற்றலையும் மார்க்க ஞான செழிப்பையும் நிறுவி வெற்றி பெறுகிறாள்.

நூல் முழுவதும் உலமாக்கள் கேட்கும் கேள்விகள் 'சுவால்' என்றுப், தவத்துது அளிக்கும் பதில்கள் 'ஜவாபு' எனவும் குறிக்கப்படுகின்றன. அரபி மொழியில் 'சுவால்' எனும் சொல்லுக்கு 'வினா' எனவும் 'ஜவாபு' எனும் அரபுச் சொல்லுக்குப் பதில்' என்பதும் பொருளாகும்.

தமிழில் உள்ள மூன்று மசலாக்களிலும்பொருளடக்கத் தைப் பொருத்தவரை வெள்ளாட்டி மசலாவே முதலிடம்

பெறத் தக்கதாக, இஸ்லாமிய ஞானச் செய்திக் களஞ்சியம் போன்று அமைந்துள்ளது ஆயிர மசலா, நூறு மசலா மசலா இரண்டும் செய்யுள் வடிவில் அமைந்திருக்க, வெள்ளாட்டி மசலா உரைநடை வடிவில் அமைந்திருப்பினும், இந்நூலுள் கூறப்படும் இஸலாமிய விஷயங்களைப் புரிந்து கொள்வது சாதாரணமானவர்கட்கு மிகவும் கஷ்டமாகும். திருமறையிலும் ஹதீதிலுப ஓரளவுக்கு நல்ல இஸ்லாமிய ஞானமுள்ளவர்களே வெள்ளாட்டி மசலாவைத தெளிவாகப் புரிந்து கொள்ள இயலும். சான்றாக,

கேள்வி: 'தீனென்பதென்ன' வென்று கேட்டார்.

பதில் : 'தீனாவது மஃரிபா வென்று நாயனையறிகிறதும் தவ்ஹீதென்னுமவனை ஒருமைப்படுத்தும் ஈமானென்றும், ஆறு கருமங்களைக் கொண்டு உறுதி கொள்வதும இஸ்லாமென்றும ஐந்து கருமங்களைக் கொண்டு வழிப்படுவதும் ஆக இந்நான்கும் பொதிந்ததுதான் தீனெனனு மார்க்கம்'.

இவ்விடையில் இடம்பெற்றுள்ள தீன், மஃரிபா, தவ்ஹீது, ஈமான் போன்ற சொற்களின் பொருள் விளக்கம் மட்டுமல்ல, அவை சுட்டும் விஷயங்களைப் பற்றிய போதிய மார்க்க ஞானமும் இருந்தாலொழிய இப்பதிலில் கூறியவற்றை யாரும் எளிதாகப் புரிந்து கொள்வது சற்றுக் கடினம்.

இநநூலுள் கேட்கப்படும் பல கேள்விகள் சுவை மிக்கதாயும் அதேசமயம் கருத்துச் செறிவுள்ளவையாகவும் அமைந்து படிப்போரை மகிழ்ச்சிப்படுத்துகின்றன. சான்றாக, வணக்கமில்லா ஆலீமுக்கும், கொடையில்லாத சீமானுக்கும், பொறுமையில்லாத பிச்சைக்காரர்கரும், நீதியில்லாத மன்னனுக்கும், பாவ மீட்சியில்லாத வாலிபனுக்கும், வெட்கமில்லாத மங்கைக்கும் உவமானம் என்னவென்று உலமா ஒருவர் விடுத்த வினாவிற்கு விடையாகத் தலததுது வெள்ளாட்டி

''வணக்கமில்லாத ஆலிம் —மழையில்லாத மேகம்
கொடையில்லாத சீமான் —பழமில்லா மரம்
பொறுமையில்லாத மங்கையர்—தண்ணீரில்லாத ஆறு
நீதியில்லா மன்னன் —மேய்ப்பாரில்லாத ஆடு
பாவமீட்சியில்லா வாலிபன் —ஓடில்லாத வீடு
வெட்கமில்லா மஙகை —உப்பில்லாத உணவு''

எனக் கூறும பதில்கள் மூலம் தர்க்கவாத அடிப்படையில் சுவையான உவமான உவமேயங்களுடன் சாதாரண மனிதனும் இலக்கியச் சுவை கலந்த பொது அறிவைப் பெற முடிகிறது

வெள்ளாட்டி மசலாவில் மற்ற இரு மசலா இலக்கியங் களைக் காட்டிலும் சற்று அதிகமான அளவில் அரபிய பெர்சியச் சொற்கள் கலந்துள்ளன. ஆயினும் கேள்வியிற் காணும் சுவையும் பதிலில் மிளிரும் சிந்தனைத் தெளிவும் படிப்போரைப் பெரிதும் ஈர்க்கத் தவறவில்லை. சுருங்கச் சொன்னால்; மூன்று தமிழ் மசலா நூல்களிலும் இஸ் லாமியச் செய்திகளை மிக அதிகமாகத் தருவது வெள் ளாட்டி மசலாவேயாகும்.

மசலா வகை இலக்கியப் படைப்புகளுள் காலத்தால் மூன்றாவது இடத்தைப் பெறுவது 'நூறு மசலா' எனும் இலக்கியமாகும்.

செய்யுள் வடிவில் அமைந்துள்ள நூறு மசலா நூலின் ஆசிரியர் பற்றிய விவரங்களையோ, எழுதப்பட்ட காலக் குறிப்பையோ, எழுதப்பட்ட சூழல் பற்றிய விவரங்களை யோ அரங்கேற்றச் செய்திகளையோ நூலிலிருந்து நம் மால் தெரிந்து கொள்ள இயலவில்லை. 'முன்னோர் பாடிய நூறு மசலா' எனும் குறிப்பைத் தவிர நூலில் வேறு விவரங்கள் இல்லை. ஆயினும் 'நூலின் முதற்பதிப்பு 1876-ல் முகம்மது சாஹிப் என்பவரால் வெளியிடப்

பட்டது என்ற குறிப்பு மட்டுமே கிடைக்கிறது. மற்ற இரு மசலா நூல்களைவிட இந்நூலே அதிகமான பதிப்புகள் வெளிவந்துள்ளன. அதன் மூலம் ஏராளமான மக்கள் படித்தின் புறவாய்ப்பேறப்பட்டுள்ளது.

1087 கண்ணிகளாக அமைந்துள்ள நாட்டு மன்னனின் மகள் மெஹர்பானுக்கும் அஹமது ஷா என்னும் மன்னன் மகன் அப்பாஸ் என்பாருக்கு மிடையே நடைபெற்ற வினா-விடைகளைத் தருவதாக அமைந்துள்ளது.

நூறு மசலா நூலின் கடவுள் வாழ்த்துப் பகுதி வல்ல அல்லாஹ்வின் தன்மையைப் போற்றும் வகையில் அமைந்துள்ளது.

''கண்ணுமின்றி செவியுமின்றி
நலவாயுமின்றி மூச்சுமின்றி
பெண்ணுமின்றி ஆணுமின்றி
ஒரு பேச்சுமின்றி மூச்சுமின்றி
ஊணுமின்றி உறக்கமுமின்றி
நல்லுயிர்க்குயிரா யிருப்பவனே
காணவொண்ணா முதலவனே
யாவும் காத்தருளும் ரஹ்மானே''

எனக் கூறும் ஆசிரியர் இறைவனின் தனித்துவச் சிறப்பை இனிதோதுகிறார்.

அடுத்து, நூல் வரலாறு விரிவாகக் கூறப்படுகிறது.

அஹமது ஷா என்னும் அந்துமான் நாட்டு மன்னன் பிள்ளைப் பேறின்றி நீண்ட காலம் வருந்துகிறான் திரண்ட பெருஞ்செல்வமிருந்தும் பிள்ளைப் பேறில்லா மன்னனுக்கு

இறையருளால் ஆண் மகவு பிறக்க, அதற்கு அப்பாஸ் எனப் பெயரிட்டு அன்போடு வளர்க்கிறான். பதினைந்து வயதாகும்போது அப்பாஸ் இளவரசன் வேட்டைக்குச் செல்கிறான். காடு மேடுகளில் வேட்டைகளென அலைந்து திரிந்த அப்ப்ாஸுக்குக் களைப்பும் தாகமும் மேலிட, குடிநீர் கிடைக்கா நிலையில் மனம் தடுமாறியவனாக மது நீராகிய கள் குடித்து மயக்கமடைகிறான். இதனையறிந்து மனத்துயருற்ற மன்னன் பெரு முயற்சிகளுக்குப் பின் தன் மகனின் மது மயக்கத்தைத் தெளியச் செய்கிறான். ஆயினும், இஸ்லாத்தால் அறவே கூடாது என ஒதுக்கிய மதுவை மகன் அப்பாஸ் அருந்திய காரணத்திற்குத் தண்டனையாக அப்பாஸைக் காட்டிற்கு அனுப்ப, அரசனாகிய தந்தை முடிவு செய்கிறான். ஆயினும் அருமந்தச் செல்வனை விட்டுப்பிரிய மனமில்லாதவனாக மன்னன் தன் மனைவியொடும் மகனோடும் நாட்டை விட்டுக் காட்டை நோக்கிச் செல்கின்றனர். கானகத்தே அவர்கள் பல்வேறு துன்பங்களை அனுபவிக்கின்றனர். அதன்பின் பகுவீறு எனும் நாட்டை அடைகின்றனர். அந்நாட்டு இளவரசி மெஹர்பான் என்பவள், தான் கேட்கும் நூறு கேள்விகளுகுத் தக்க விடை தருபவரையே திருமணம் செய்வதாகவும், விடை கூற இயலாதவர் தன் உயிரை இழப்பர் என்றும் அறிவித்திருந்தாள். இம்முயற்சியில் சிலர் ஈடுபட்டு உயிரையும் இழந்திருந்தனர். இந்நிலையில் மெஹர்பான் கேள்விகளுக்கு பதில் கூறத் துணிந்து முன் வந்த அப்பாஸ் அவள் விடுத்த நூறு கேள்விகளுக்கும் தக்க விடைகளைக் கூறி வெற்றி பெறுவதாகவும் அதன் மூலம் தான் இழந்த நாட்டை மீண்டும் பெற்று பெருவாழ்வு வாழ்ந்ததாகவும் கதை அமைந்துள்ளது.

நூல் வரலாற்றுப் பகுதியின் மன்னன் மகன் அப்பாஸ் அடைந்த இன்னல்களே மிகுதியும் பேசப்படுகின்றன. அவர்கள் பட்டபாட்டிற்கும் அடைந்த துன்பத்திற்கும் விதியே காரணம் என ஆசிரியர் கூறுகிறார்.

''சேற்றிலமிழ் யானை தன்னில்
மிக்க திறமிருந்தாங்கு என் செயும்?
ஆற்றைவிட்டுக் கரையில்வந்த
கொல்லவரு முதலைதான் என்செயும்?
தூண்டிலிலார் கடற்புலிதான்
தன்னின் சோர்விலாத பலமென் செயும்?
தாண்டும் வீரன் கால் முடங்கில்
பல சாமர்த்தியந்தான் என் செயும்?
இதுதான் விதியின் விளையாட்டு!
இந்த அவனி மீதில் ஆரென் செய்வார்?

எனக் கூறுகிற−ர்.

உருவத்திலும் வலிமையிலும் மிகப் பெரியது யானை. ஆனால், அது பரந்த ஆழ்ந்த, சேற்றில் மாட்டிக் கொண் டால் அதனால் என்ன செய்ய முடியும்?முதலை தண்ணீரில இருக்கும்போது எத்தகைய வலிமைமிக்க பெரிய விலங் கானாலும் அதனை எளிதாக இழுத்துச் சென்று கொல் லும் வலிமை படைத்தது. ஆனால், அம்முதலை நீரை விட்டு நீங்கி நிலத்திற் கிடந்தால் அதன் வலிமையனைத் தும் அதைவிட்டு நீங்கிவிடுவது இயல்பு. கடல் மீனகளில் உருவிலும் வலிமையிலும் பெரியதான சுறாமீன் தூண்டி யலில் மாட்டிவிட்டால் அதனால் எதுவும் செய்ய இயலா மல் வலிமை இழந்து போகும். தாண்டிக் குதித்து வீரம் நிலைநாட்டும் வாலிபனின் கால் முறிந்து முடமானால் அவன் வீர வ்ளையாட்டும் ஆட்டமும் இருக்குமிடம் தெரி யாமல் அடங்கி விடும்'' எனச் சாதாரண உவமான உவ மேயங்கள் மூலம் விதியின் வலிமை எத்தகையது எனபதை விளக்குகிறார் ஆசிரியர்.

இன்னும் மன்னன் அகமதுஷாவும் அவன் மனைவியும் நாடு கடத்தப்பட்ட தன் மகனும் கானகததே செல்லுங்கால்

அடைந்த துன்பங்களையெல்லாம் அழகுறத் தொகுத்து வழங்கி படிப்போரிடையே கழிவிரக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றார். கடும் சுரத்திடை நடந்து செல்லும் அம் மூவரும் எவ்வாறெல்லாம் இன்னலுற்றனர் என்பதை:

''துன்பமொடு மூவருமே அந்தச் சுர
நிலத்தில் நடக்கையிலே
வன்மனமார் கரடி புலியிந்த மாண்
பினரைப் பார்த்துரைக்கும்
நீதியுள்ள உங்களுக்கு விதி நேர்ந்தனால்
சுரத்தின் மிகும்
வேதனைதான் வந்ததை நீங்க வேகன்
செல்வானென் றேகும்
இந்தப்படி பலமிருகம் இந்த எழிலினரைப்
பார்த்துரைக்க';

எனக் கூறுகிறார் ஆசிரியர்.

இன்னும் பசிக் கொடுமையால் அவர்கள் பெருந்துன்பம் அடைகிறார்கள். அரண்மனை சுகவாசத்தில் காலங் கடத்திய அரசியினாலும் மண்ணாலும் பசியுடனும் களைப்புடனும் நீண்ட தூரம் நடக்க முடியவில்லை. தளர்ந்து கீழே வீழ்ந்து விடுகிறார்கள். அப்பாஸ் பெற்றோர் இருவரையும் தன் துன்பம் பொறுத்துத் தூக்கிச் செலகிறான். இதனை,

'இங்கிருக்கில் அவஸ்தைமிக நமக்கணுகுமென்று
தாய் தந்தைக்குச்
சங்கையொடும் சொல்லி பாபா
தம்மைத் தாஙகி வலத் தோளினிலும்
மதிமிகுந்த தாயார் தம்மையிடத்
தோலிலும்தான் வைத்துக்கொண்டு
நேயமுடன் கடுஞ்சுரத்திற் மிகுநெடுந்தொலை''

நடந்ததாகக் கூறி, பசியாலும் களைப்பாலும், நடக்க இயலாமையாலும் அம்மூவரும் கடுஞ்சுரத்தில் பட்ட கஷ்ட நஷ்டங்களையும் களைத்து வீழ்ந்த, பசி மிகுந்த பெற்றோரை இருதோளிலும் தூக்கிச் சென்று பணிவிடை யாற்றிய உத்தமச் செல்வனாகிய, அப்பாஸின் அருங் குணச் சிறப்பை சிந்தைகொள் மொழியில் செப்பி விடு கின்றார் ஆசிரியர்.

நூறு மசலா நூலின் கதாநாயகியான மெஹர் பானுவை ஆசிரியர் அறிமுகப்படுத்தும் பாங்கு சிறப்பா யுள்ளது. தன் பெற்றோருடன் பகுவீறு நாட்டைடந்த அப்பாஸ் அங்குள்ள கிழவி ஒருத்தியின் துணையைப் பெறு கின்றான். அக்கிழவி மூலம் மெஹர்பானுவை அறிமுகப் படுத்தும் ஆசிரியர்.

''இந்தவூரின் அதிசயந்தான் அம்மேயென்ன
வெனஅவள் மொழிந்தாள்
உந்துபகு வீரரசன் மகள் ஒருத்தியுண்டு
அவளோ வென்றால்,
சந்திரனை உருவமைத்து நாயன்தரணி
யிலே விடுக்க
வந்த பெண்ணோ அல்லகு வானிலுள்ள
மங்கையரில் ஒருத்தியோ
தெரிந்திலனே அவளழகை நான்தான்
செப்புவதெப்படி மகனே
பரிந்து சொல்லவொரு நிகருமிந்தப்
பாரிலவட்கில்லை மன்னர்''

எனக்கூறி மெஹர்பானுவின் அதியற்புத அழகைவர்ணித்து அப்பாஸுக்கு மட்டுமல்லாது நமக்கே அவளை நேரில் காண வேண்டும் என்ற வேட்கையை எழுப்பி விடுகிறார் நூலாசிரியர்.

அவளது விந்தை செறி எழிலை அழகு ஓவியமாகச் சொற் சித்திரம் தீட்டிக்காட்டிய ஆசிரியர் அடுத்து அவளது நோக்கங்களை எடுத்துக் கூறுகிறார்.

"இந்தவித அழகுகொண்ட இந்த ஏந்திழையாள்
தன்னை மணக்க
சொந்தமாகப் புரியவரும் நல்லவ தூயரசர்
தங்களிடம்
நூறுமசலாவின் கேள்வியினை நுவருகிற
எவர்களாலும்
கூறுடனே பொருமசலா தரும் பொருட்
டான் தெரியாமலே
மயங்குகின்றார்கள் இப்போதிலே வந்த
மன்னர்களைக் குறைவு சொல்லிப்
பயங்கரமாயவர்களுயிர் தன்னைப் பறிக்
கின்றாள் எமன்போல"

எனக் கூறி நூறு மசலா கேட்கும் மெஹர்பானின் செயற்பாட்டினையும் அதன் விளைவாக மன்னர் பலர் மாண்டு விட்ட செய்தியினையும் விளக்குகின்றார். அஞ்சா நெஞ்சினளாகக் கேள்விக் கணைகளால் பல மன்னர்களை வீழ்த்தி மண்ணறைக்குள் அனுப்பிய மெஹர்பான் இளவரசி, துணிவுடன் தன் மசலாவுக்குப் பதில் கூற வந்த அப்பாஸைக்கண்டு திகைத்துத் தன்னிலை மயங்கிய பாவையோ எனக் குறிக்கிறார்.

"சிங்கத்தைக் கண்டஞ்சுகின்ற நல்ல
செப்புமிளம் பிடியொத்தாள்
பங்கமவராது அங்கிருந்த தோழிப்பாவையர்
களிலே நினைத்தால்
வெற்றியுள்ள பலமன்னர் முன்னர்
வென்ற நந்த மண்புதல்வி
பற்றிலாதவொரு விடையிற்றானே
பாவையைப் போலாயினளே"

ஆயிரமசலா,வெள்ளாட்டி மசலாக்களில் கூறப்படாத பல புதிய செய்திகள் மசலாக்களாக இந் நூலினுள் இடம் பெற்றுள்ளன என்பதுகுறிப்பிடதக்கதாகும்.உதாரணமாக

மிருகங்கள், பறவைகளைப்பற்றி இந்நூலுள் மட்டுமே கேள்விகள் எழுப்பப்பட்டு விடை கூறப்பட்டுள்ளன.

நூறு மசலாவில் கேட்கப்படும் கேள்விகள் இஸ்லாமிய நெறி அடிப்படையிலும் பொது அறிவு அடிப்படையிலும் அமைந்துள்ளன. சில கேள்விகள் விடுகதைப் புதிர்களைப் போல அமைந்து படிப்போர்க்குச் சுவையூட்டுகின்றன. சான்றாக, பெஹர்பான், அப்பாஸை நோக்கி, ஒரு மரத்தில் பன்னிரண்டு கிளைகளும், கிளைதோறும் முப்பது இலைகளும், இலைகள் பாதிக் கருப்பும் பாதி வெளுப்புமாக உள்ளன. ஒவ்வொரு கிளையிலும் ஐந்தைந்து பூக்கள் இருப்பதாகவும் இதன் நுட்பக் கருத்தை விளக்கிக் கூறும் படியும் கேட்கிறாள்

''தொல்புவியில் மரமொன்றுண்டு
அதைச் சூழ்ந்தகொப்பு பன்னீரதில்
நல்லவிலை முப்பதுண்டு அதில் நற்கறுப்பு
பாதி வெள்ளை
சொல்கின்ற பூவைந்துண்டாம் இதைச்
சொல்லாவிட்டால் கொல்வேனென்றாள்.''

இதற்கு மறுமொழியாக அப்பாஸ்,

''சொல்லுகின்ற வருஷமொன்றே அதைச்
சூழ்ந்த கொப்பு பன்னிருமாதம்
கொல்லுமிலை முப்பதுநாள அதைச்
சூழ்ந்த கறுப்போடு வெள்ளை
நல்லிரவு பகலுமது நீதான்
நாடிச் சொன்ன பூவைந்துகேள்
வல்லவனை வணங்குவதற்கு வகுத்த
தானவை ஐந்தாம் எனமொழிந்தான்''

எனக் கூறுகிறது. மரம் எனக்கூறியது ஓராண்டு ஆகும் பன்னிருகிளைகள் என்பது பன்னிரண்டு மாதங்கள் ஆகும்.

கிளை தோறும் முப்பது இலைகள் என்பது முப்பது நாட்களைக் குறிக்கும் அவற்றுள் பாதி கருப்பு பாதி வெள்ளை என்பது இரவையும் பகலையும் குறிப்பதாகும். ஐந்து பூக்கள் எனக் குறித்திருப்பது ஐவேளைத் தொழுகையைக் குறிப்பதாகும் இவ்வாறு விடுகதிர்ப் புதிர் போல அமைந்து படிப்போரை இன்புறுத்துகிறது நூறு மசலா.

இப்பாடலில் மற்றொரு நுட்பமான கருத்தையும் உட்பொதிந்து வைத்துள்ளார் ஆசிரியர். மரக்கிளைகளில் பச்சை பசேலென்ற இலைகளுக்கு இடையே ஐந்து ஐந்தாக மணமிக்க மலர்கள் வண்ண மலர்களாகப் பூத்துக் குலுங்குகின்றன. மரத்தின் பயனே பூவும் அதினின்று உருவாகும் காயும் கனியும் விதையுமாகும். வண்ண மலர்கள் மலருக்கு அழகூட்டுவதோடு பயனும் அளிக்கிறது. அவ்வாறே வண்ண மலர்களாகிய தொழுகைகள் மனிதனுக்கு மிகுபயன் விளைவிக்கின்றன என்பதை இலைமறை காயாக உணர்த்திவிடுகின்றார் நூறு மசலா ஆசிரியர்.

ஆயிர மசலா நூலிலும் வெள்ளாட்டி மசலா நூலில் கேட்கப்படும் பல கேள்விகளுக்கான விடைகள் திருமறையாம் திருக்குர்ஆனுக்கும் நாயகத்திருமேனியின் வாழ்வும் வாக்குமாக விளங்கும் ஹதீதுக்கும் ஏற்ற விளக்கங்களாக அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. ஆனால் நூறு மசலா அவைகளினின்றும் சற்று வேறுபட்ட நிலையில் திருக்குர்ஆன், ஹதீது செய்திகளைவிட பொது அறிவுக்கும் அன்றாட நடைமுறை வாழ்க்கைப் போக்குக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. மார்க்க நெறி விளக்கங்களுக்கு மாறாக தங்கள் தனிப்பட்ட வாழ்க்கைபற்றி விளக்கங்கள் கேட்டுப் பெறப்படுகின்றன. மேலும், முதலிரண்டு மசாலாக்களில் இடையீடின்றி வினாத்தொகுத்து விடை பெறப்படுகின்றது. ஆனால், நூறு மசலாவில் தொடர்ந்து மசலா கேட்கப்படுவதில்லை. நாள்தோறும் சில கேள்விகளே கேட்கப்படுகின்றன. முதல் நாள் கேட்ட

கேள்விக்கு மறுநாள் விடையளிக்கப்படுகிறது. இந்த நாட்களுக்கு இடைப்பட்ட காலத்தில் பல்வேறு செய்திகளும் நிகழ்ச்சிகளும் சுவையுடன் விளக்கப்படுகின்றன. இந்த இடைவெளிகளில் மெஹர்பானின் அறிவும், வீரமும், செயல் திறனும் பெரிதும் வர்ணிக்கப்படுகின்றன. அவ்வாறே மெஹர் பானுவின் ஆற்றலும். அழகும் பெரிதும் போற்றப்படுகின்றன

மேலும், முந்தைய மசலா நூல்களில் கேள்வி கேட்பவர்களால் மட்டும் வினாக்கள் தொடுக்கப்படுகின்றன. ஆனால். நூறு மசலாவில் அம்முறை கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்படவில்லை பதில் கூறவந்த அப்பாஸே, மெஹர்பானை நோக்கி கேள்விகணைகளைத் தொடுத்து விடை பெறுகிறான். சான்றாக, அப்பாஸ், அழகு மங்கை மெஹர்பானை நோக்கி, தன் வாழ்க்கை ரகசியம் உள்ளடங்கிய கேள்வியொன்றைக் கேட்கிறான்.

''சொல்மசலாச் சொல்லக்கேள் என
தோகை மயிலே குயிலே
நல்லதொரு அரசனுக்கு முன்னாள்
நடு வயதில் மவுத்தடுத்து
மெல்ல நடந்தானவனும் பின்னர்
மீண்டு மொரு மவுத்தடுத்து
பல்லுவாயும் நடுநடுங்கியொரு பாழ்க்
கிணற்றில் கிழித் தெறிந்தான்
கிணற்றிலொரு மவுத்தடுத்துப் பின்னால்
கிட்டிய மூன்றா மவுத்தில்
மணத்தரசன் வரிசைபெற்றான் அந்த
வண்ணம்சேர் மும் மவுத்ததனை
கணக்குடனே மொழியு மென்றான்''

தன் பெற்றோருடன் அரசு துறந்து வெளியேறியது முதல் மவுத்து (இறப்பு) எனவும் கொடிய காட்டிடையே

அலைந்து திரிந்து அல்லுற்றது இரண்டாவது மவுத்து எனவும், மெஹ்ர்பானுவின் மசலாக்களுக்கு விடை பகர்வது மூன்றாவது மவதது எனும் தன் சொந்த வாழ்க்கை நிகழ்ச்சிகளையே புதிர் போல அமைந்து அப்பாஸ் கேள்வி கேட்க, அதற்குச் சரியான மறுமொழி கூற இயலாத மெஹர்பான், இதற்கான தக்க விடையை நாளை சொல்வதாகக் கூறிச் செல்கிறாள்.

அப்பாஸின் கேள்விக்கான பதிலை, அப்பாஸ் தங்கியுள்ள இடத்திற்குச் சென்று அவன்மூலமே, மறைமுகமாக அறிந்து கொள்ளத் திட்டமிடுகிறாள். இதற்காகத் தன்னை அழகுப் பதுமையாக அலங்கரித்துக் கொள்கிறாள். அவள் செய்து கொள்ளும் அலங்காரங்களை அழகுச் சுவை ததும்ப அற்புதமாக வர்ணித்துப் படிப்போரைப் பரவசப்படுத்துகிறார். ஒப்பனை முடித்துக் கட்டிலில் அமர்ந்திருக்கும் மெஹர்பானுவின் தோற்றப் பொலிவை,

''பூவையன்ன மயிலென்னவே வெகு
பூவை மடவார் சூழல்
காவிக்கயல் விழிமடவாள் செம்பொன்
கட்டிலின்மேல் வீற்றி ருந்தாள்''

என வர்ணிக்கிறார். அதுமட்டுமா அவள் அழகுப் பதுமையாக நடந்து செல்லும் பாங்கினை சொல்லோவியமாக வடித்துக் காட்டுகிறார்.

''அன்னமெனும் திருநடையாள் மிகும் ஆட
வரைக் கொலும் விழியாள்
சின்னவிடைத் தனங்கள்விம்ம அந்தச்
சேயிழையாள் மணிகள் மின்ன
சொன்னமணிச் சிலம்பு கொஞ்ச அந்தத்
தோழியுடன் இருவருமாய்க்

கன்னலெனும் திருமொழியாள் மெல்லக்
கடையின் வீதிதனில் நடந்தாள்''

எனச் சொற்சுவை பொங்கக் கூறுகிறார்.

அப்பாஸின் முன்னிலையில் அழகுச் சிலையாக நிற்கும் மெஹர்பானுவின் அழகில் மயங்கிய அப்பாஸ் அவள் விந்தைசெறி மேனி எழிலைக் கண்டு மயங்கி நிற்கும் மயக்க உணர்வை ஆசிரியர்.

''மானுடமோ மடக்கொடியோ இவள்
வஞ்சிக்கொடி இளமயிலோ
தேனினமோ சிறுகிளியோ செம்பொன்
செஞ்சிலைவேள் ரதிமாதோ
ஆனினமோ காமாதி நல்ல
ஆடரங்கோ தாமரையோ
மீனினமோ விழிகளிரண்டுந் துய்ய
வெண்ணிலவோ இவள்மேனி
மேவியசீர்கொள் குழல்முகிலோ இந்திர
வில்வினையோ இவள்புருவம்
தூய்மையுள்ள வெள்ளலரோ நல்ல
துலக்கமுள்ள இவள்நாசி
நன்மையுளள கடைப்பிடியோ கன
நாகரிகத் திருமொழிதான்
மன்மதன்றன கண்விழியோ செழி
மாதனையோ இவள்கனிவாய்
மாதளையோயிவள் கனிவாய் சொல்லு
மவன்கமுகோவிவள் கழுத்துக்
கீதமொழியோ இவள்சொல் மதிக்கும்
புரிக்கொம் பெனுமுலையாள்
போதமுற்ற தாமரையோ செழும்
பூரணச் சந்திரமுகமோ
ஏதுநிக ரிவளுக் கொவ்வா......''

என அழகுமிழும் மெஹர்பானுவின் மேனியழகை பாராட்டிப் போற்றுவதன் மூலம் நூறு மசலாவின் இலக்கிய நயத்தை வெகுவாக உயர்த்துகிறார் ஆசிரியர்.

இவ்வாறு, நூறு மசலா ஆசிரியர் ஆங்காங்கே போதிய இடைவெளிகளை ஏற்படுத்தி நாயக, நாயகியை வர்ணிக்கவும் அவர்கள் வாழ்க்கையின் பல்வேறு நிகழ்ச்சிகளை விரிவாகப் பேசவும் முனைந்து அதில் வெற்றியும் பெற்று விடுகிறார்.

இறுதியாக மெஹர்பானுவின் மசலாவுக் கெல்லாம் தக்க விடை கூறிய அப்பாஸ் அவளை மணமுடித்துக் கொள்கிறான். இவர்கள் திருமணத்தை விரிவாக விளக்கிக் கூறும் ஆசிரியர், அப்பாஸ் தான் இழந்துவிட்ட நாட்டையும் செல்வத்தையும் மீண்டும் பெற்று பெருவாழ்வு வாழ்ந்ததை.

''விந்தையுள்ள அப்பாசும்
மெஹர்பானும் மகிழ்ந்திருந்தார்
சுந்தரஞ்சேர் அஹமதுஷா அவர்
தோகையரும் வாழ்ந்திருந்தார்''

என வாழ்த்துரைத்து முடிக்கிறார்.

நூறு மசலா ஆசிரியர் கையாளும் மொழியும் நடையும் மற்ற இரு மசலாக்களினின்றும் சற்று வேறுபட்டுள்ளது என்பது கருத்திற் கொள்ள வேண்டிய ஒன்றாகும். நீரொழுக்குப் போன்ற மொழி நடையில் அன்றாட வாழ்வில் கையாலும் சாதாரணச் சொற்களை வெகுலாவகமாகக் கையாண்டு எளிய இனிய மொழி நடையாக ஆக்கி விடுகின்றார். சாதாரண மொழியறிவுடையோரும் எளிதாக இந்நூலைக் கற்றுத் தெளிய முடிகிறது.'ஆஹாவென 'கூகூவென' என அன்றாட வாழ்வில் மக்கள் கையாளும் சாதாரண ஒலிக் குறிப்புச் சொற்களை ஆங்காங்கே பெய்

திருப்பதன் மூலம் உணர்ச்சி பூர்வமான பாடல்களோடு நம்மை ஒன்றச் செய்து விடுகின்றார்.

நூறு மசலா பாடல்களில் காணும் மற்றுமொரு சிறப்பு இந்நூலில் மிக அதிகமான உவமைகள் ஆசிரியரால் கையாளப்படுவதாகும். சொல்லவந்த கருத்தையும் உணர்வையும் இவ்வுவமைகள் அழுத்தமாக் உணர்த்தப் பெருந்துணை புரிகின்றன. அதிலும், மிக அதிகமாக அடுக்கு உவமைகளை ஆங்காங்கே திறம்படக் கையாணடு இலக்கியச் செறிவேற்றுகிறார். சான்றாக இங்கே ஒரு பாடலைப் பார்ப்போம்.

தன் பெற்றோருடன் பகவீறு நாடு வந்த அப்பாஸ் அங்குள்ள மூதாட்டி ஒருத்தியைச் சந்திக்கிறான். அவள் மூலம் அந்நாட்டு இளவரசி மெஹர்பான் பற்றியும் அவள் தன்னை மணக்கவருவோரிடம் நூறு கேள்வி கேட்பதையும் தக்கவிடை தராதவர்கள் அவள் அளிக்கும் மரணதண்டனை பெறுவதாகவும் அறிந்து அவளைச் சந்தித்து அவள் கேள்விகட்குவிடை பகர்ந்து அவளை மண முடிப்பதாகக் கூறுகிறான். பலர் தோல்வியுற்று மரணத்தைத் தழுவிய இப்பயங்கர முயற்சியில் ஈடுபட வேண்டாம் என மூதாட்டி தன்னை தடுத்தும் கேளாத அப்பாஸ், முதல் நாள் மெஹர்பானு விடுத்த கேள்விக்குத் தக்க விடை பகர்ந்து மீண்டும் மூதாட்டியை அடைகிறான். வெற்றியோடு திரும்பிய அப்பாஸைக் கண்ட கிழவி வியப்பு மிக்கவளாய் அவனை ஆரத்தி எடுத்து திருஷ்டி கழித்துக் கூறியதாக,

''சிங்கத்தின்முன் தப்பிவந்த கருந்தேக
முள்ள ஆனைபோலும்
தங்குமயில் வாயிற்றப்பும் நெடுசர்ப்ப
மது தன்னைப் போலும்

சர்ப்பவாயில் தப்புகின்ற குளத்தவளை
யது தனைப்போலும்
செப்பிடுமா வேங்கையில் தப்புப்செம்
மறியாடு ஆதனைப் போலும்

தூண்டிலே தப்புகின்ற சொல்லும்
சுந்தரஞ்சேர் மீனைப் போலும்
சேண்டனிலார் வல்லூறுமுன் தப்பும்
திருக்கொள் புறாவதனைப் போலும்

காறியுமி ழையத்திலேநின்று கடக்க
வந்த ஈயைப்போலும்
மாறுமொழிந் தணுவளவும் ஈயாவம்பரி
டம் நற்புலவோர்

பரிசுபெற்று வருதல்போலும் எல்லாம்
படைத்தவன்தன் அருளினாலே
வரிகைப்பகு வீறரசன்பெற்ற மாதிடம்
போய்மீண்டு வந்தாய்''

என இப்பாடலில் அடுக்கடுக்காக உவமைகளைப் பயன் படுத்தி இலக்கிய மெருகேற்றியுள்ளார்

ஆயிர மசலாவிலும் வெள்ளாட்டி மசலாவிலும் மிக அதிக அளவில் பெர்சிய, அராபியச் சொற்களைப் பயன் படுத்தப்பட்டிருக்க, நூறு மசலாவில் மிகமிகக் குறைவா கவே அரபிய, பெர்சியச் சொற்கள் கையாளப்பட்டுள்ளன காரணம், முந்தைய இரு மசலா நூற்களும் இஸ்லாமிய நெறிக்கும் செய்திகளுக்கு மட்டுமே முதல் முக்கியத்துவம் தந்திருந்தன. ஆனால் நூறு மசலாவோ பொது அறிவுக் கும் பாத்திரங்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளுக்கும் அதிக இடமளித்துள்ளன. எனவே, தேவையான இடங்களில்

மட்டுமே தவிர்க்க முடியா நிலையில் அரபி, பெர்சியச் சொற்களைக் காண முடிகிறது.

காலத்தால் மிக முற்பட்டது என்பதனாலும் மிக அதிகமான அளவில் மசலாக்கள் இடம் பெற்றுள்ளது என்ற காரணத்தினாலும் ஆயிர மசலா இம்மூன்றினுள் ளும் முதன்மை நிலைபெறுகிறது. உரைநடையில் அமைந்த தாயினும இஸ்லாமிய மார்க்கச் செய்திகளை மட்டுமே சிறப்பாக விளக்கிக் கூறும் நூல் என்ற வகையில் வெள் ளாட்டி மசலா தனித்துவமுடையதாக அமைந்துள்ள தெனலாம். மொழி நடையிலும் கருத்துணர்த்தும் பாங்கி லும் இலக்கியச் சுவையைப் பெரிதும் பெற்றிருக்கும் நூறு மசலா எளிய நடையில் அமைந்த இனிய இலக்கியப் படைப்பு என்ற சிறப்புக்குரியதாக விளங்குகிறது.

இஸ்லாமிய வரலாற்று அடிப்படையிலும் நபிமார் கள், இறைநேசச் செல்வர்களின் வாழ்க்கையின் முக்கியப் பகுதிகளைப் பின்னணியாகக் கொண்டும் கேள்வி-பதில் வடிவில் அமைந்திருப்பதாலும் நூலில் படைக்கப்பட்ட கதை மாந்தர்களில் பலர் கற்பனைப் பாத்திரங்களாக அமைந்தாலும் அவர்கள் இஸ்லாமிய நெறி அடிப்படை யில் உயிரோட்டத்துடன் உலவி வருவதனாலும, இஸ்லா மிய நெறிகளைப் பற்றி மட்டும் பேசாது, அன்றாட வாழ் வியல் பிரச்சினைகளையும் தொட்டு விவாதிப்பதாலும், இந் நூற்கள் எழுதப்பட்ட காலத்தில் வழக்கிலிருந்த சாதாரணச் சொற்களே நூற்பாடல்களில் சரளமாகக் கையாளப்பட்டிருப்பதாலும் மக்களின் ரசனைக்கேற்ப பாடலாகவும் உரைநடையாகவும் இம்மசலா நூற்கள் அமைந்திருப்பதாலும இவை மக்களைப் பெரிதும் ஈர்த்து அவர்களிடையே மிகுந்த செல்வாக்கையும் வர வேற்பையும் பெற்றதில் வியப்பொன்றுமில்லை.

## கிஸ்ஸா இலக்கியங்கள்

இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள், தமிழுக்குப் புதிதாக வழங்கியுள்ள மற்றொரு இலக்கிய வகை 'கிஸ்ஸா' இலக்கியங்களாகும். 'கஸஸ்' எனும் அரபிச் சொல்லினடியாகப் பிறந்தது 'கிஸ்ஸா' எனும் சொல் இச்சொல்லுக்குக் 'கதை கேட்டல்' என்பது பொருளாகும்.

சாதாரணமாகக் கதை கேட்பது என்பது மனித இயல்பாகும். உழைக்கும் மக்கள் தங்கள் களைப்புத் தீர ஓய்வு நேரங்களில் கதை கேட்பதும் அதனை மனதுள் அசை போட்டு ரசித்து மகிழ்வதும் இயற்கை. இக்கதைகள் கேட்போரிடையே சிரிப்போடு சிந்தனையையும் தூண்டுவதாக இருந்தால் அது மிகு நலம் பயப்பதாக அமையும். இவ்வகையில்தமிழில்அமைந்தனவே. கிஸ்ஸா' இலக்கியங்கள்' அரபி மொழியில் அமைந்துள்ளவை போன்றே தமிழில் உள்ள கிஸ்ஸா இலக்கியங்கள் சுவையாகக் கதை கூறுவதோடு அமையாது தீன் நெறி அடிப்படையில் வாழ்வியல் நெறிமுறைகளை நுட்பமாகவும் எடுத்துக் கூறி மக்களிடையே இஸ்லாமிய ஞானத்தைப் பெருக்கும் வகையில் பெரும்பணியாற்றியுள்ளன என்பது மறுக்க முடியாத உண்மையாகும்

அராபிய மக்களை தன்பால் ஈர்த்தது போன்றே தமிழில் உருவான கிஸ்ஸா இலக்கியங்களும் மக்களிடையே குறிப்பாக இஸ்லாமியர்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்ற இலக்கிய வகையாக நிலை பெற்று வளர்ந்து தமிழையும் இஸ்லாத்தையும் வளர்ந்தன, வளப்படுத்தின எனக்கூறலாம்.மசலா இலக்கியங்களையும்விட மக்களிடையே மிக அதிக அளவில் செல்வாக்குப் பெற்றுள்ளனவாகக் கிஸ்ஸா இலக்கியங்கள் விளங்குகின்றன இதற்கு இரு முக்கியக் காரணங்கள் உண்டு. முதலாவது, தமிழில் உள்ள

கிஸ்ஸா இலக்கியங்களில் பெரும்பாலானவை இஸ்லாமிய வரலாற்றுப் போக்கில் பளிச்சிடும் முக்கிய சமபவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ளன. மீதமுள்ள கிஸ்ஸா இலக்கியங்கள் வரலாற்றுத் தொடர்பற்று ஆதார மற்ற சமபவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பட்டிருந்த போதிலும் அவை ஏதேனும் ஒருவகையில் இஸ்லாமிய நெறியின் அடிப்படையில் அல்லது தீன் நெறிக்கு விளக்கம் தரும் வகையில் சம்பவங்களையோ அல்லது பாத்திரப்படைப் புகளையோ கொண்டு விளங்கு வனவாக அமைந்துள்ளன. இவ்வாறு தமிழில் எழுதப் பட்டுள்ள கிஸ்ஸா இலக்கியங்கள் இருபத்தைந்துக்கு மேல் இருப்பதாகக் கூறப்படுகிறது.

வரலாற்று அடிப்படையில் எழுந்த கிஸ்ஸா இலக்கியப் படைப்புகள் நபிமார்கள் வலிமார்கள் வரலாற்றை முழுமையாகக கூறவில்லையெனினும், அவர்தம் வாழ்வில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளை அடித்தளமாகக் கொண்டு எழுந்துள்ளன. இவை இஸ்லாமிய நெறிகளை அவர்தம் வாழ்க்கை வழியே விரித்துரைப்பதாகக் அமைந் துள்ளன. இவ்வகையில் தமிழில் சுமார் பதினெட்டு இலக் கியங்கள் இயற்றப்பட்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்களால் கணிக்கப்பட்டுள்ளது. இவற்றைத் தவிர்த்து மீதமுள்ள கிஸஸா இலககியங்கள் மார்க்க ஞானத்தைப் புகட்டுவன வாக அமைந்துள்ளன. இவற்றில் ஆதாரபூர்வமான வரலாற்றுச் சம்பவங்கள் ஏதும் இடம பெற்றதாகத் தெரியவில்லை.

கிஸ்ஸா இலக்கியங்களின் வடிவ அமைப்பு எவ்வகை யானது என்பதை அவ்வளவு எளிதாக கணிக்க இயல வில்லை. எனினும், தமிழில் உள்ள கிஸ்ஸா இலக்கியங்கள் சில செய்யுள் நடையில், சில உரை நடை வடிவிலும் இன்னும் சில செய்யுள், உரை நடை கலந்த போக்கிலும் அமைந்துள்ளன.

தமிழில் உள்ள கிஸ்ஸா இலக்கியங்களுள் மக்களிடையே மிகு புகழ் பெற்றனவாக 'ஈசுபு நபி கிஸ்ஸா', அலி (ரலி) கிஸ்ஸா', 'முகம்மது அனிபு கிஸ்ஸா', 'சைத்தூன் கிஸ்ஸா, 'ஷம்ஊன் கிஸ்ஸா' முதலியனவாகும்.

தமிழிலுள்ள கிஸ்ஸா இலக்கியங்களிலேயே மிகப் பெரியதாகக் கருதப்படுவது 'இஸ்வத்து நாச்சியார் கிஸ்ஸா' ஆகும். மிகவும் குறுகியதாகக் காணப்படுவது 'கபன் கள்ளன் கிஸ்ஸா'வாகும்.

ஈசுபு நபியின் வரலாற்றுச்சம்பவங்களை விடுத்துரைக்கும் 'ஈசுபு நபி கிஸ்ஸா' மக்களிடையே மிகப் புகழ் பெற்றதாக விளங்குவதோடு இலக்கியத் தரமிக்கப் படைப்பாகவும் கருதப்படுகிறது மதாறு சாஹிபுப் புலவரால் இயற்றப்பட்ட இந்நூல் செய்யுள் நடையில் அமைந்துள்ளது.

இஸ்லாமிய மரபுப்படியும் திருமறையாம் திருக்குர்ஆன் படியும் முதல் மனிதர் ஆதாம் தொடங்கி, இறுதி இறைத்தூதர் நபிகள் நாயகம்வரை உலக மக்களுக்கு வழிகாட்ட இறைவன் ஒரு லட்சத்து இருபத்திநான்காயிரம் நபிமார்களை உலகுக்கு அனுப்பியுள்ளான். அவர்களுள் யாகூப் நபியின் மகனாகப் பிறந்தவர் ஈசுபு நபி. அவரது வரலாற்றைக் கதைப் போக்கில் கூறுவதே 'ஈசுபு நபி கிஸ்ஸா.' திருமறையிலும் ஈசுபு நபி வரலாறு கதைப் போக்கிலேயே கூறப்பட்டுள்ளது.

இதனை இயற்றிய மதாறு சாஹிபுப் புலவர் தஞ்சை மாவட்டத்தில் உள்ள அய்யம்பேட்டை எனும் ஊரைச் சேர்ந்தவர். இந்நூல் ஹிஜ்ரி 1170-ம் ஆண்டில் இயற்றப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. இந்நூலாசிரியர் பல்துறை அறிவும் வாய்க்கப்பெற்ற புலவர் என்பது இந்நூல் மூலம் நன்கு அறிந்துணர முடிகிறது.

தமிழக முஸ்லிம் பெருமக்களிடையே மிகப் பிரபலமாகப் பயிலப்பட்டு, அவர்களுடையசெல்வாக்குப்பெற்றுத்திகழும்

ஈசுப் நபி கிஸ்ஸா மிகவும் எளிய நடையில் அன்றாட வாழ்வில் பயிலப்படும் சாதாரண சொற்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாக நூலின் காப்புச் செய்யுளைக் கூறலாம். விருத்தப்பாவில் அமைந்துள்ள அப்பாடல்,

''அருளுண்டாம் கிருபையுண்டாம்
ஆண்டவனுதவி யுண்டாம்
பொருளுண்டாம் இன்பமுண்டாம்
பெருமையும் மகிழ்ச்சியுண்டாம
நரர் நபி யூசுபுதன ற கிஸ்ஸாவதனைக் கூற
திருவருளளிக்கும் கோமான்
சீர் தரக் காப்புத்தானே''

என மிக எளிய நடையில், அதே சமயத்தில் இலக்கியத் தரம் குறையாவண்ணம எடுத்தியம்புகிறார்.

தனது பன்னிரண்டு மக்களுள் ஈசுபு நபியவர்கள் மட்டுமே அறிவிலும் திருவிலும் மிக்கவராய் விளங்கியமை யால் யாகூபு நபியவர்கள் தம் அன்பையும் பாசத்தையும் மழை எனப் பொழியலானார். இஃது மற்ற சகோதரர்களி டமே பொறாமையுணர்வைப் பொங்கியெழச் செய்தன. தங்கள் தந்தையார் தங்களிடம் காட்டாத அன்பையும் அரவணைப்பையும் பொழிவதைக் காணப் பொறாதவர் களாக ஈசுபு நபியிடம் வெறுப்புக் கொண்டனர்.

சிறுவர் ஈசுப் ஒருநாள் இரவு தன் தூக்கத்தில் ஏதோ ஒரு பேரொளி தன் மடிமீது வந்தமர்ந்ததுபோல் கனவு கண்டு அதனைத் தன் தந்தையாரிடம் எடுத்துக் கூறினார். இதனைக் கேட்ட தந்தையார் யாகூபு நபியவர்கள், தன் மகன் ஈசுபும் நபியாகக் கூடும் எனக்கருதினார். நபித்துவம் பெறுவதற்கான மிக நல்ல அறிகுறியாக அதனைக் கருதி

மற்றவர்களிடம் எடுத்துக்கூறி மகிழ்ந்தார். இஃது சிறுவர் ஈசுபு மீது இன்னும் அதிகப் பிரியத்தையும் பாசத்தையும் காட்டி சீராட்டிப் பாராட்டத் தூண்டியது. இதனாலெல்லாம் அளவுக்கதிகமான வெறுப்பும் பொறாமையும் கொண்ட மற்ற சகோதரர்கள், சிறுவர் ஈசுபைத் தீர்த்துக் கட்டிவிட முடிவு செய்து, அதனை நிறைவேற்றுமுகமாக தம் தந்தை யாகூப் நபியவர்களிடம் சென்று, தாங்கள் அனைவரும் ஈசுபை உடன் அழைத்துக்கொண்டு ஆடு மேய்க்கப் போவதாகக் கூறி அனுமதி பெற்று அழைத்துச் சென்றனர். இந்நிகழ்ச்சியை.

''குளிர்ந்த நிழலுள மரத்தடியில்
கொண்டுபோய் விட்டுநாம் விளையாடுவோம்
தெளிந்தநீருள வருவிகுளந் தேடி
குளிந்தாடு மேய்த்து வாரோம்
குழந்தை யூசுபைக் கூட்டுமென்று
கூறிடப் பிதா மனங்குளிர்ந்து
பொழிந்துபால் தயிரமுது மூட்டி
போற்றி ஈசுபை அனுப்பி வைத்தார்''

எனக் கூறுகிறார் நூலாசிரியர் மதாறுப் புலவர் அவர்கள்.

ஆள் அரவமற்ற கானகப் பகுதியினுள் நீண்ட தூரம் சிறுவர் ஈசுபை அழைத்துச் சென்றனர். செல்லும்போதே சிறுவர் ஈசுபை அடித்தும், உதைத்தும் இம்சித்தனர். இறுதியாகப் பாழடைந்து கிடந்த கிணற்றினுள் தள்ளி விட்டு விட்டு வீடு திரும்பினர். மாபெரும் தவறைச் செய்து விட்டுத் திரும்பும் சகோதரர்களின் மனச்சாட்சி பெரிதும் உறுத்தவே அவர்களை அச்சம் கவ்விக் கொண்டது. 'சிறுவர் ஈசுபு எங்கே?' என்று கேட்கும் தந்தையாரிடம் என்ன பதில் கூறித்தப்புவது என்பதை எண்ணித் திகைத்து

நின்றனர். இத்தகைய சூழ்நிலை, சைத்தானுக்குத் தன்கை வரிசையைக் காட்டும் சந்தர்ப்பமாக அமைந்தது. சைத்தானாகிய இபுலீசின துணையோடு ஓர் உபாயத்தை மேற்கொண்டனர். எல்லோரும் தங்கள் இல்லம் ஏகியபோது, எதிர்பார்த்தவாறே அவர்தம் தந்தையார் 'இளைய மகன் ஈசுபு எங்கே? என வினவினார். பாவத்திற்கஞ்சா அச்சகோதரர்கள், தம்பி ஈசுபை காட்டில் ஓநாய்கள் கவர்ந்து சென்றுவிட்டதாக ஒத்த குரலில் துணிந்து பொய்யுரைத்தனர்.

இதே நேரத்தில், சிறுவர் ஈசுபு தள்ளப்பட்ட பாழுங் கிணற்றை அடுத்திருந்த நடைபாதை வழியே சென்ற வணிகக் கூட்டத்தினர், சற்று தூரததில் தங்கி இளைப்பாறலானார்கள். தாகத்தால் தவித்த அவர்களது ஒட்டகமொன்று தண்ணீர் குடிக்கக் கிணற்றைநோக்கிச்சென்றது அவ்வொட்டகத்தைப் பின் தொடர்ந்து சென்ற வணிகர் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவர் அங்கியிருந்த பாழும் கிணற்றினுள் நீர் இறைக்கத் தோண்டியொன்றை இறக்கினார்.

சகோதரர்களால் தள்ளப்பட்டு, மேலேற வழி தெரியாது கிணற்றினுள் தவித்துக் கொண்டிருந்த சிறுவர் ஈசுப் நீர் மொண்டு செல்ல இறங்கிய தோண்டியை இறுகப் பற்றிக் கொண்டார். நீர் இறைப்பவர் தோணடியை மேலே தூக்க அஃது மிகவும் கனமாக இருந்தது. மற்றொருவரைத் துணைக்கழைத்து மேலே தூக்க தோணடியின் மேல் அமர்நதவராக சிறுவர் ஈசுப் மேலே வந்தார் இந்நிகழ்ச்சியை ஆசிரியர்.

"தோண்டிதனிற் கயிறு கட்டிவிட
துய்யோனருட்படி சிபுறையிலும்
ஆண்ட ஈசுபைத் தோண்டியின் மேல்
அவரை ஏற்றியே தூக்கிவிட்டார்

மீண்டும் கயிற்றைத் தூக்கும்போது
மிகுந்த கனங்கண்டு இருவர் தூக்க
நீண்ட கிணறுவிட்டு வெளியில் வந்தார்
நிலவு போதவாக் கொப்பிடாதே''

எனக் கூறுகிறார்.

இறைவனருளாலும் வானவர் தலைவர் ஜிபுரீலின் துணையாலும் மேலே வந்த ஈசுபைக் கண்ட வணிகர்கள் வியந்து நோக்கினர். அருளொழுகும் பார்வையையும் பேரின்னலிடையையும் அமைதி தவழும் முகத்தையும் கண்டு வியந்தனர். அருள் நலமிக்க சிறுவர் ஈசுபை தங்களுடனே கூட்டுச் செல்வதென முடிவு செய்து அழைத்துச் செல்லலாயினர். சென்ற வழியில் எதிர்ப்பட்ட ஈசுபின் சகோதரர்கள், ஈசுபு மீட்கப்பட்டது அறிந்து வெகுண்டனர். அவரைக் காப்பாற்றிய வணிகர்களிடம் அவரைப் பற்றி மிகத் தவறான முறையில் கூறமுனைந்தார்கள். ஈசுபு ஒரு திருடர் எனக் கூறியும்கூட அதனைச் செவி மடுக்காத வணிகர்கள தங்கள் சொந்தநாடான மிசிறு நாட்டிற்கு சிறுவர் ஈசுபை அழைத்துச் சென்றனர்.

மிசிறு நாடடைந்தபோது, ஈசுபின் மதிமுகம் கண்ட பலரும் தங்கள் பொறுப்பில் ஈசுபை வளர்த்து ஆளாக்க விரும்பி முன்வந்தனர். பெரும் பொருளீந்து ஈசுபை பெற விரும்பிய செல்வ வளம் மிக்கவர்களிடையே வயது முதிர்ந்த மூதாட்டியொருவர், தான் நூற்ற நூலைக் கொண்டு ஈசுபைப் பெற விரும்பினாள். இதைக் கண்டு பணம் படைத்தோர் எள்ளி நகையாடினர். ஆயினும், அக் கிழவியினிடத்தே சென்று வாழ விரும்பி, அம்மூதாட்டியுடன் சென்றார்.

அறவழி ஒழுகும் மதிமுக ஈசுபு மிசிறு நாடுவந்து மூதாட்டியின அன்பான அரவணைப்பில் வாழுங்கால் மஃறிபு நாட்டு மன்னன் மகள் சுலைகா என்னும் பேரழகி.

ஒருநாள் இரவு ஈசுபு மிசிறு நாடு வந்திருப்பதைத் தன் கனவில் கண்டு அவர்மீது காதல் மிகக் கொண்டாள். சுலைகா கண்ட கனவைக் கூறவந்த மதாறுப் புலவர்.

''வயதின் முதியவள் சொல்லைக் கேட்டு
மனதுபிரியமா இருக்குநாளில்
நயமா மஃறிபு ராச்சியத்து
நகருக்கதிபதி யரசனுக்கு
இயல்பா யொருமகள் சுலைகாவென
இலங்கு வடிவினில் மதிமுகத்தால்
பயனாம் சொப்பனய்கண்டு முன்னால்
பட்சமுடன்வாழ் விரகமானாள்''

என சுலைகாவெனும் மங்கை நல்லாள் ஈசுபுமீதுகொண்ட மையலையும் அதனாலேற்பட்ட விரகதாபத்தையும் அழகாகக் கூறியுள்ளார்.

கனவிற் கண்டு காதல் கொண்ட சுலைகா ஈசுபுவின் நினைவாக துயரமடைந்திருப்பதை அறிந்த மஃறிபுநாட்டு மன்னன், தன் மகனின் மனதிற்குகந்த மணாளனை அடையச் செய்வதன்மூலம் மகளை மகிழ்ச்சிப்படுத்த விழைந்தான். தன் மகள் சுலைகாவின் காதல் விரக உணர்வை விளக்கி மிசிறு நாட்டு மன்னனுக்குத் தூது அனுப்பினான். தூதுவன் தந்த தகவலைத் தவறாகப் புரிந்து கொண்ட மிசிறு மன்னன் அசீசு என்பவன் சுலைகாவை வரவழைத்துத் தன் அரண்மனையில் தங்க வைத்துக் கொண்டான். தான் கனவில் கண்ட மதிமுக ஈசுபைக் காணாது சுலைகா வருந்தினாள். தான் கனவில் பார்க்காத மிசிறு மன்னன் அரண்மனையில் தங்கியிருப்பதைக் கண்டு திகைத்தாள்.

அந்நிலையில் ஏசுபைப் பெற செல்வர் பலர் அவாவினர். மாலிக் என்ற வணிகரின் பராமரிப்பில் இருக்கும் வாய்ப்பு ஈசுபுக்கு ஏற்பட்டது, ஈசுபைக் காண சுலைகா பெரிதும் விரும்பும் செய்தி ஈசுபைப் புரந்துவந்த மாலிக்கின் செவிக்கு எட்டவே, அவர் உயர்ந்த ஆடை அணிமணிகளால் அலங்கரித்து, சுலைகாவின் கண்ணில்படும்படியான அரசப் பெருவழியில் நடமாடச் செய்தார். ஈசுபைக்கண்ட சுலைகா தான் கனவில் கண்டு மையல் கொண்ட இளைஞர் ஈசுபே என்பதை அறிந்து களிமிகக் கொண்டாள். ஈசுபை எப்படியும் பெறவேண்டும் என உறுதி செய்து கொண்டாள். தன வேட்கையை மிசிறு மன்னன் அசீசிடம் பக்குவமாக எடுத்துக் கூறினாள். எப்படியேனும் சுலைகாவின் விருப்பத்தை ஈடேற்றி, அவளை மகிழ்ச்சியடையச் செய்ய விரும்பிய மன்னன் அசீசு, ஈசுபை அரண்மனைக்கு வரவழைத்து அங்கே தங்கியிருக்குமாறு பணித்தான். தான் விரும்பியவர் தன்னருகிலேயே, அரண்மனையில் தங்கியிருப்பதைக் கண்டு அளவிலா மகிழ்ச்சியடைந்தாள். தன் இச்சைக்கு இணங்க அறவே மறுத்துவிட்டார். இதனால் சினமுற்ற சுலைகா தான் வேணடுமென்றே இட்டுக்கட்டிய பொய்க் காரணங்களுக்காக அவரை கொடுஞ்சிறையில் தள்ள முயன்று அதில் வெற்றியும் பெற்றாள்.

வெஞ்சிறையில் வைக்கப்பட்ட ஈசுபு அங்குள்ள கைதிகளிடம் அல்பொழுக நடந்து கொண்டார். ஒழுக்கத்தின் விழுப்பத்தை அவர்களிடை உணர்த்தியதோடு அவர்கட்குக் கனவின் நுட்பங்களையெல்லாம் எடுத்து விளக்கி வந்தார். கனவுப் பலன் கூறிக் களிப்படையச் செய்தார். இவ்வாறு ஆண்டுகள் பன்னிரண்டு கழிந்தன

ஒருநாள் இரவு மிசிறு மன்னன் கனவொன்று கண்டான். பயங்கரமாயிருந்த அக்கனவு அவனை மிகவும்

அச்சுறுத்தியது. அக்கனவுக்கு என்ன பொருள் எனத் தெரியாது திகைத்தான். அரசவை அறிஞர்களை அழைத்து "கறுத்த இருள் கதிரை மூட, இருட்கிடாவொன்று பசுவைத் தின்பது போல' தான் கண்ட கனவைக் கூறி பலனைக் கூற அவர்களால் இயலவில்லை. இக்கனவிற்குத் தக்க விளக்கப் தருவோர் தகுவெகுமதி பெறுவர் என அறிவித்தான். யாராலும் நுட்ப விளக்கம் தரவியலாத இக்கனவுக்கு ஈசுபு அவர்களால் மட்டுமே விளக்கம் கூற முடியும் என்பதைச் செவியுற்ற மிசிறு மன்னன் சிறையிலிருந்த ஈசுபு அவர்களை நேரில் அழைத்து தான் கண்ட கனவின் பலனைக் கூறுமாறு கேட்டான். அதற்கு மறுமொழியாக ஈசுபு சிறைக் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்தால் கனவுக்குத் தக்கப் பொருள் விளக்கம் செய்வதாகக் கூறினார். இந்நிபந்தனைக்கு இணங்கிய மன்னன் அசீசு, கைதிகள் அனைவரையும் விடுதலை செய்தான். பின், மன்னன் தன் கனவைக் கூற. அதற்குண்டான பலனை,

"கண்ட கனவினைச் சொல்லுமென
காதலுடனதை மன்னன் சொல்ல
விண்ட னரீசுபு மன்னன் கண்ட
வேதனையுள்ள சொப்பனத்தை
ஒன்றா முதலிந்த வருடந் தொட்டு
உண்ணியே புரண்டு தழைத்திருக்கும்
என்றார் அதற்குப்பின் ஏழாண்டுதான்
இலங்கு பசியுன்றன் பஞ்சமுமே"

எனக் கனவுப் பலனை ஈசுபு கூறியதாக மதாறுப் புலவர் பாடுகிறார்.

கனவுப் பலன் கூறிய ஈசுபு நபி மீது மன்னன் அசீசுக்கு அன்பு அதிகரித்தது. அவரைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள அவாவினான். அவரது வரலாற்றை அக்கறை

யுடன் கேட்டறிந்தான் தன் வாழ்க்கை வரலாற்றை ஈசுபு விரித்துரைத்ததை,

"விரும்பினார் முன்னங் கண்ணான்விட்டு
வெளியே புறப்பட்ட நாள்முதலாய்த்
திரும்பிவந்த நாள்வரை நடந்த
செய்தியாவையும் விளப்பினரே"

என மதாறுப் புலவர் கூறுகிறார்.

மன்னனின் பேரன்பைப் பெற்ற ஈசுபு நபியவர்கள் வணிகத்தில் தீவிரமாக ஈடுபட்டார். பெரும் பொருள் திரட்டினார். ஒரு நாள் தன் ஊரைச் சார்ந்த அரபு வணிகர் ஒருவரைக் கண்டு பெரு மகிழ்வெய்திய ஈசுபு நபி தன தந்தையாரின் நலம் விசாரித்ததோடு அவருக்கு சலாம் கூறுமாறு வணிகரை வேண்டிக் கொண்டார்.

வணிகம் செழிப்பாக நடந்தது. பெரும் பொருள் குவிந்தது. வருங்காலத்தின நிலையை முன்னறியும் ஆற்றல் மிக்கவராதலின், பெருமளவில் பொருளையும் உணவையும் மக்கள் நலன் கருதி சேமித்து வைத்தார்.

மிசிறு நாட்டின் வளமான ஏழாண்டுகள் உருண்டோடிய பின் கொடிய பஞ்சம தலைவிரித்தாடத் தொடங்கியது, மக்கள் பொருள் பற்றாக்குறையாலும் வறுமையினாலும் வருந்தினர். பசியும் பிணியும் மக்களை வாட்டின. இச்சமயத்தில் தான் சேமித்து வைத்திருந்த உணவுப் பொருட்களை பசியென்று வந்தோர்க்கு வரையாது ஈந்தார். வள்ளண்மை கொண்ட ஈசுபு பஞ்சத்தால் வறுமைவாய்ப்பட்டோருக்கு நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தார் இன்னல் மிகுந்த இச் சூழ்நிலையில் மிசிறு மன்னன் அசீசு மறைவெய்தினான் தடை நீங்கிய சுலைகா தான் கனவில் கண்டு காதலித்த ஈசுபு

நபியவர்களை மணாளனாகப் பெற்றாள். நீண்ட நாள் கனவு நிறைவேறியதை எண்ணிக் களிமிகக் கொண்டாள் சுலைகா. இறையருளால் கருந்தொருமித்த இருவரின் இன்ப வாழ்வை மதாறுப் புலவர் அவர்கள்,

''தேனும் சீனியும் கலந்ததுபோல்
சீரும் செல்வமுமாய் இருக்கும்போது
ஊனும் உயிரும்போல் ஒத்திருந்து
உவந்த ஆண்டு அஞ்சில் பிள்ளையிரண்டாம்
ஈனம் அணுகாதல் இறையவனே
இருவர் நாட்டமும் நிறைவேற்றினாய்
தீனில் ஈசுபு நபியின் கூட
சுலைகாவுமே வாழ்ந்திருந்தார்''

என இறையருட் பெரும்பேறு பெற்றவர்களாய் அவர்கள் வாழ்ந்திருந்த பாங்கை அழகுறச் சித்திரிக்கிறார்.

ஈசுபு நபியவர்கள் செல்வ வளமும் இல்லற இன்பமும் ஒருசேரத் துய்த்துவரும் அதேசமயத்தில் அவரது சகோதரர்கள் கொடிய வறுமையில் கழன்று அல்லற்பட்டு வந்தார்கள். வறுமையின் கொடுமை தாளாத அவர்கள் ஒரு நாள் தங்கள் தந்தையாரிடம் சென்று, தங்கள் பசித் துன்பத்தை எடுத்துரைத்தனர். பிள்ளைகளின் துயரநிலை அறிந்த தந்தை யாகூப் நபியவர்கள், வேற்றிடம் சென்று கம்பளி மயிர் விற்று தானியம் பெற்று வருமாறு பணித்தார். கம்பளி மயிர் விற்பான் வேண்டு மிசிறு பகுதியை அடைந்து விலை கூறி வருப்போது தங்கள் சகோதரர் களின் நிலைகண்டு ஈசுபு நபி வருந்தினார், தன்னைத் தன் உடன்பிறந்தோர் அடையாளம் கண்டுகொள்ள இயலா விடினும் மீண்டும் அவர்களை வரச் செய்து. தன்னை இன்னாரெனப் புலப்படுத்திக் கொண்டதன் மூலம் சகோ

தரர்கள் அனைவரும் ஒன்றாயிணைந்தனர் என கிஸ்ஸா வை இனிது முடிக்கிறார் நூலாசிரியர் மதாறுப் புலவர் அவர்கள்.

இறைவழி வழுவா அற வாழ்வு வாழ்ந்த ஈசுபு நபி யின் வாழ்வை விளக்கும் 'ஈசுபு நபி கிஸ்ஸா' நூல் சிறந்த நீதி புகட்டும் படைப்பாகவும் திகழ்கிறது.

இந்நூல் விருத்தப்பாவால் ஆயது எனினும் 'தொங் கல்' வன வழங்கும் செய்யுள் அமைப்பையும் உட்கொண்ட தாக திகழ்கிறது

தமிழ்நாட்டு முஸ்லிம் பெருமக்களிடையே 'ஈசுபு நபி கிஸ்ஸா'வுக்கு அடுத்தபடியாக மக்களிடையே மிகுந்த செல் வாக்குப் பெற்றுத் திகழும் மறறொரு கிஸ்ஸா பேட்டை ஆம்பூரைச் சேர்ந்த அப்துல் காதர் சாஹிப் அவர்கள் இயற்றிய 'சைத்துள் கிஸ்ஸா' எனும் நூலாகும். ஈசுபு நபி கிஸ்ஸாவினும் எளிய நடையில் அமைந்த சைத்தூன் கிஸ் ஸா, சாதாரண தமிழறிவுள்ளவர்களாலும் எளிதாகப் புரிந்து கொள்ளும் வண்ணம் அமைந்துள்ள படைப் பாகும்.

இக்கிஸ்ஸாவின் கதையை மேலோட்டமாகப் பார்த் தால் வரலாற்றுத் தொடர்புடையது போன்று தோறற மளிப்பினும் ·இதிலுள்ள கதை சம்பவங்களுக்கு ஆதார பூர்வமான வரலாற்றுச் சான்றுகள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஹனீப் என்பவர் அறிவாற்றல் மிககவர்; 'வீர நெஞ் சினர். அவரும் அவரது நண்பர்கள் நால்வரும் ஒருநாள் வேட்டை மேற்சென்றனர். இவர் வேட்டையாடிய காடு சைத்தூன் எனும் மங்கைக்குச் சொந்தமானதாகும். அந் நியர்கள் தன் காட்டினுள் அனுமதியேதுமின்றி வேட்டை யாடுவதைக் கண்டு வெகுண்டெழுந்தாள் அவர்களோடு வெஞ்சமர் புரிந்தாள். சண்டையில் முஹம்மது ஹனீபு மயக்கமுற்றார் மற்றவர்களும் தோல்வியைத் தழுவவே,

அனைவரையும் கையகப் படுத்திக் கைதிகளாகத் தன் இருப்பிடம் கொண்டு சென்றாள் சைத்தூன் மயக்க மடைந்து கிடந்த முஹம்மது ஹனீபு, மயக்கம் தெளிந் தவராகத் தன் இல்லம் ஏகித் தன் தாயாரை அடைந்து நடந்தவற்றை விவரித்தார்.

ஹனீபின் நண்பர்களை வெற்றி கொண்ட சைத்தூன் வெற்றி பெருமிதத்தால் உந்தப்பட்டவளாக மதீனா சென்று வெற்றிவாகை சூடவிரும்பிச் சென்றாள். இதனை யறிந்த முகம்மது ஹனீபு சைத்தூனுடன்போரிட்டுவெற்றி பெற்றார் ஹனீபிடம் தோல்வியைத் தழுவிய சைத்தூன் இஸ்லாத்தையும் தழுவ வேண்டியதாயிற்று. இப்போர் களின் விளைவாக ஹனீபு இன்னல்கள் பலவற்றை ஏற்க நேரிட்டது. இதனால் அடுத்தடுத்துப் பல போர்களைச் சந்திக்கவும் நேர்ந்தது போர்க்களச் சூழ்ச்சியொன்றுக்குப் பலியாகி ஹனீபு நோய்வாய்ப்படவும், அந்நிலையில், கடலுக்கப்பாலிருந்த ஹரியாபரி என்பவளால் கவர்ந்து செல்லப்பட்டார். ஹனீபைத் தேடிச் சென்றவர்கள் பல் வேறு இடர்களை ஏற்று இறுதியில் இருக்குமிடம் தெரிந்து மீட்டு வரப்படடார் என்பதும், இப்போர்களின் விளை வாக இஸ்லாத்தை அறியாதிருந்த மன்னர்களும்வீரர்களும் வீராங்கனைகளும் இஸ்லாத்தின் மேன்மையையும் உன் னதத்தையும் அறிந்து உணர்ந்து இஸ்லாத்தோடு இணைந் தனர் என்பது இந்நூல் தரும் செய்திகளாகும்.

இந்நூலாசிரியர் 'தமிழில் வெள்ளை மொழியாகவும் கொஞ்சம் வசனமாகவும் கவியாகவும்அனைவருமவாசித்து இன்புற அருளியது' எனக் குறிப்பிடுவதறகேற்ப மிகஎளிய நடையில் இந்நூலின் பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன.

ஒரு பெண்மணியைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்டு எழுதப்பட்டுளள இந்நூல் படித்துப் புரிந்து கொள்வதற்கு மிக எளிதாக உள்ளது. ஓசையிடடு படித்து மகிழ்வதற்கேற்ற சந்தத்தில் பாடலின் சொல்லாட்சிகள்

இனிமையாக அமைக்கப்பட்டுள்ளது அதே சமயத்தில் கதை நிகழ்ச்சிச் சூழ்நிலைகளை மனக்கண்முன் கொணர்ந்து. அங்கு நடைபெறும் காட்சிகளை நேரில் கண்டு மகிழுமாறு செய்து விடுகிறார் ஆசிரியர். குதிரைகள் குளம்பொலி கிளப்பி விரைந்து செல்வதை வர்ணிக்கும் பொழுது.

'செந்தூள் பறந்து தூசி எழும்பிட
சூரர்கள் கண்டார்கள்
கருந்தூள் பறந்து தூசி எழும்பிட
கண்டார் அந்நேரம்''

என ஓசை நயம் ததும்ப எளிமையாகவும் தெளிவாகவும் கூறி இன்புறுத்துகிறார்.

வேட்டைக்கெனச் சென்ற ஹனீபு வீடு திரும்பாததைக் கண்டு வேதனையுற்ற தாயார், அவரைத் தேடி செல்கின்றார். அப்போது சைத்தூனைச் சந்தித்த ஹனீபின் தாயார், சைத்தூனின் போக்குக் குறித்து.

''காட்டுக்கு வேட்டையாட நீ வந்த
காரியம் ஒன்றும் இல்லை
வீட்டுக்குள்ளிருந்து நீ நூலினை நூற்பது
உனக்குத் தகுந்த வேலை''

எனக் கூறுவதாக அமைந்துள்ள கூற்று சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்துள்ளது.

இவ்வறிவுறுத்தலின் வாயிலாகப் பெண்கள தங்கள் மெல்லியல்புகளுக்கேற்ற எளிய பணிகளில்மட்டுமேஈடுபட வேண்டும்.'மாறாக ஆயுதமேந்திப் போர் புரிதல் போன்ற வன்மைக் காரியங்களில் பெண்கள் ஈடுபடுவது இறைவன் விதித்த நியதிகளுக்கும் பெண்ணுடலின் மெல்லியஇயல்புத் தன்மைக்கும் மாறானது என்பதைத் தெளிவுபடுததுகிறார்

பாட்டுடைத் தலைவியாகிய சைத்தூனை வீரத் திருவுருவாகக் காட்ட முயன்று அதில் வெற்றியும் பெறுகிறார். அவள் போர் புரியும் போது எத்தகைய வீரவுணர்ச்சி பொங்கப் போரிட்டாள் என்பதை சித்திரிக்கும் வகையில், எல்லோருக்கும் புரியும்படியான எளிய உவமான உபமேயங்களின் துணையுடன்,

''கொக்குக் குலத்தில் ராஜாளி போல்
குதித்தாள் சைத்தூனும்
ஆட்டுக் குமபலில் புலியைப் போல்
புகுந்தாள் சைத்தூனும்
''மலைபோல் வெட்டிக் குவித்தாள் சைத்தூன்
மண்டைமூளை சிதற
தயிரின் குடம்போல் மூளைகள் சிதற
தலைகள் தானுதிர''

என்றெல்லாம் வர்ணிப்பதின் மூலம் போர்க்களக் காட்சிகளையே நம் மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்துவதோடு சைத்தூனின் வீரத்தையும் அழகுறப் புலப்படுத்தி விடுகிறார் நூலாசிரியர்.

சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் கூறிச் செல்ல வேண்டும் என்ற நோக்கில் படைக்கப்பட்ட இக்கதை இலக்கியத்தில் இஸ்லாமியச் செய்திகளோ தத்துவ நுட்பங்களோ அதிகம் இடம் பெறவில்லையெனினும் கதைப் போக்கில் ஆங்காங்கே இஸ்லாமிய நெறியின் அடிப்படைத் தன்மைகளை ஆனாயாசமாகச் சொல்லி செல்ல ஆசிரியர் தயங்கவில்லை. முஸ்லிமல்லாதவர்களுடன் போரிட நேரிட்டால் முஸ்லிம்கள் முதலில் தங்கள் தாக்குதலைத் தொடுக்க இஸ்லாம் அனுமதிக்கவில்லை. எதிரிகள முதலில் தாக்க அதன் பின்னரே தாற்காப்பின் பொருட்டு எதிரியுடன் போரிட வேண்டும் என்பது இஸ்லாத்தின் அடிப்படை நியதியாகும்.

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சாந்தி வழியைப் பின்பற்றுகின்ற எந்தவொரு முஸ்லிமும் அமைதிச் சூழ்நிலையை உருவாக்கி, மற்றவர்களுடன் ஒருங்கிணைந்து வாழவே முனைய வேண்டும் என்பது தீன் நெறியாகும். இதனால் முதலில் விரோதிகளின் தாக்குதலைச் சந்தித்த பின்னரே முஸ்லிம்கள் போரிடுதல் முறை என்பவை தெளிவுறுத்தும் வகையில், ஹனீபு கூறுவதாக,

''எதிரி அடித்தபின் நாங்கள் அடிப்பது
எங்கள் வழக்கம் என்றார்''

இஃது இஸ்லாத்தின் அடிப்படை அம்சத்தை எடுத்துக் கூறும் வரிகளாகும்.

இவ்வாறு நூலின் இடையிடையே பொருத்தமான இடங்களில் இஸ்லாமியப் பண்பு நெறிகளைக் கூறும் முயற்சியில் நூலாசிரியர் பேட்டை ஆம்பூர் அப்துல் காதிரி சாகிபு அவர்கள் ஓரளவு வெற்றியும் பெறுகிறார்.

சாதாரண வாசகர்களைக் கவர்வதைக் கருத்தாகக் கொண்டு இயற்றப்பட்ட இந்நூல் எந்த ஆதாரத்தின் அடிப்படையில் இயற்றப்பட்டதென்பது இன்னும் புதிராகவே இருக்கிறது. இதில், இஸ்லாமிய வரலாற்றில மிக்க புகழ்பெற்ற பெரியார்கள் பலரின் பெயர்கள் ஆங்காங்கே குறிப்பிடப்பட்டாலும் அவர்களின் வாழ்க்கையின் எநதப் பகுதியாலும் இக்கதை நூலான கிஸ்ஸாவில் விவரிக்கப்படும் நிகழ்ச்சி நிகழ்ந்ததாகக் கூற முடியவில்லை. ஒரு வேளை இந்நூல் கற்பனையாக பாரசீக, அரபி மொழியிலிருந்து தழுவப்பட்டிருககலாம். இல்லையெனின் இஸ்லாமிய வரலாற்றுச் சாயலில் தமிழிலேயே மூலக் கற்பனை நூலாகப் படைக்கப்பட்டிருக்கலாம். எப்படியிருப்பினும் மிகச் சாதாரண மக்களும் கதைப் போக்கில் இஸ்லாமிய ஒளி பெற இந்நூல் தோன்றாத் துணையாக அமைந்துள்ளது என்பதில் ஐயமில்லை.

## நாமா இலக்கியங்கள்

தமிழில் முஸ்லிம் தமிழ்ப் புலவர்களால் கொண்டுவந்து சேர்க்கப்பட்ட மற்றொரு புதிய இலக்கிய வடிவம் 'நாமா' என்பதாகும். 'நாமே' என்ற பாரசீக மொழிச் சொல்லின் தமிழ் வடிவமே 'நாமா' வாகும். இதற்கு 'வரலாறு' என்று பொருள் கூறப்படுகிறது.

வாழ்வில் அருஞ்செயலாற்றிய பெரியார்களின் வாழ்க்கை வரலாற்றை அல்லது அவர்தம் வாழ்க்கை நிகழ்ச்சிக் கூறுகளை விளக்கிக் கூறும் இவ்விலக்கிய வடிவம் பாரசீக மொழி இலக்கிய அமைப்பை உட்கொண்டதாகத் தமிழில் புத்துருப் பெற்றுள்ளது எனலாம்.

தமிழில் சுமார் பதினாறு நாமா இலக்கியங்கள் இருந்த போதிலும் உலகப் படைப்பு வரலாற்றை விரித்துரைக்கும் 'நூறு நாமா'வும் பெருமானாரின் விண்ணுலகப் பயணத்தை விளக்கிக் கூறும் மிஃறாஜ் நாமா'வும், இறைவணக்கம் புரியாதோர் பெறப்போகும் இறைதண்டனைகளை சுவைபட விவரிக்கும 'இருஷாது நாமாவும்' மரண வேதனைகளை அடிப்படையாகக கொண்ட சக்கறாத்து நாமாவும் குறிப்பிடத்தக்க நாமா வகை நூல்களாகும்.

'நூறு நாமா' இலக்கியப்படைப்பு செய்யிது அஹ்மது மரைக்காயர் எனும் புலவரால்இயற்றப்பட்டுள்ளது.இவர் காயல்பட்டணத்தைச் சேர்ந்தவராவார். முடியா நின்ற உமறுதரு 'சீறாவை முடிப்பான் வேண்டி 'சின்ன சீறா' பாடிய பனீ அஹமது மரைக்காயரின் புதல்வர் என இவர் குறிக்கப்படுகிறார். ஆசிரியரின் நூற் குறிப்பின்படி இந் 'நூறு நாமா' நூல் இமாம் கஸ்ஸாலி பாரசீக மொழியில்

இயற்றிய நூலை அடியொற்றி எழுதப்பட்டதென்பது தெளிவாகிறது.

'நூறு நாமா' எனும் பெயர் 'நூர் நாமா' என்பதன் சிதைவாகும் 'நூர்' என்ற சொல்லிற்கு 'ஒளி' அல்லது 'வெளிச்சம் என்பது பொருளாகும்.

இறைவன் ஒளியால் இவ்வுலகைப் படைத்தான் என்பதை மனித இன வரலாற்று அடிப்படையில் இந்நூல் விவரிப்பதால் இப்பெயர் பெற்றது.

'நூறு நாமா' வின் இறை வாழ்த்துப் பாடல். இறைவனின் தன்மையையும் அவனது அருட்டிறத்தையும் இலக்கியச் சுவை நனி சொட்டச் சொட்டச் சுட்டிக் காட்டுகிறார் ஆசிரியர். காயும் பூவும் போல, பாலும் அதிலுள்ள ஆடையும் போல வல்ல அல்லாஹ எங்கும் இரண்டறக் கலந்து நிறைந்துள்ள பான்மையை,

''வானில் கடலில் குறுஷுறுசில்
வனத்தில் உயர் ஆகாயத்தில்
தானப் பதியினின் மற்றுமுள்ள
தலங்கள் முழுதிலும் எந்நாளுமே
காயும் பூவும்போல் பாலிலாடை
கலந்த உவமைபோல் சற்றேனுமோ
ஈனுமணுகாமல் நிறைந்த சோதி
இறையான் தனைப்போற்றி செய்குவோம்'

என இறை பெருமையைப் பறைசாற்றி, வல்ல அல்லாஹ் வின் உறுதுணையோடு நூலாக்கப் பணியை மேற்கொள் கிறார் ஆசிரியர்.

முதல் மனிதரும் முதல் நபியுமான ஆதாம்(அலை) அவர்கள் அவ்வா தாயாருடன் இனிது வாழ்ந்துவந்த காலத்தில்

இபுலீசு எனும் சாத்தானின் துர்ப் போதனையால். உண்ணக் கூடாதென இறைவனால் விலக்கி வைக்கப்பட்டிருந்த கனியை, இறைவனின் கட்டளையை மீறி உண்டதனால் அல்லாஹ்வின் கோபத்திற்காளானார்கள். இறை விருப்புக்கு மாறாக நடந்த ஆதாம் (அலை) அவர்கள் ஹிந்தீ எனும் தீவிலுள்ள மலைமேலும் ஹவ்வா தாயார் அவர்கள் ஜித்தா எனும் நிலப் பகுதிக்கும் இறைவனால் தூககியெறியப் பட்டனர். மனித வரலாற்றின் தொடக்ககால இந்நிகழ்ச்சியை.

''அந்தஉரையினிற் பயந்த ஆதமும்
அரிவை ஹவ்வாவும் இருதிசையில்
வந்து பூமியில் வீழ்ந்தார்கள்
மங்கை ஹவ்வாதாம் ஜித்தாவிலும்
ஹிந்தீயெனும் தீவிலொரு மலையில்
இவர்தன் கணவரும் பிரிவாகவே
அந்தி பகல் முந்நூறு என்னும் வருட
மாகுமட்டும் தபசிருந்தார்''

எனக் கூறுகிறார் ஆசிரியர்.

ஹவ்வா தாயார் தூக்கியெறியப்பட்ட ஜித்தா நிலப் பகுதி அரபு நாட்டில் உள்ளதாகும். ஆதாம் நபியவர்கள் தூக்கியெறியப்பட்ட ஹிந்தீ தீவு இன்றைய இலங்கையாக இருக்கலாம். ஏனெனில், அங்குள்ள மலையொன்றின்மீது ஆதாம் நபி தூக்கி எறியப்பட்டதாகச் குறிப்பிடப்படுகிறது. இத்தீவிலுள்ள மலையொன்றின் உச்சிப் பகுதி இன்று **'Adam Mount'** என முஸ்லிம்களாலும் கிருத்துவர்களாலும் கருதப்படும் ஆதாம் மலையாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

'தொங்கல்' எனும் செய்யுள் வடிவில் இந்நூல் இயற்றப் பட்டுள்ளதாக ஆசிரியரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொங்கல் செய்யுள் அமைப்பு எத்தகையது என்பதையும் ஆசிரியரே, "அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்தையே தொங்கல் என வழங்குவர்" என விளக்கிக் கூறியுள்ளார்.

இருநூறு தொங்கல் பாக்களைக் கொண்ட நூறு நாமா நூலின் இறுதிப் பகுதி இன்னிசைப் பாடல்களையும் கொண்டு விளங்குகிறது.

மற்றொரு புகழ்பெற்ற நாமா இலக்கிய நூல் ஐயம்பேட்டை மதாறு சாஹிபு அவர்களால் இயற்றப்பட்ட 'மிஃறாஜ் நாமா'வாகும். நபிகள் நாயகமவர்கள் வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) அவர்களின் உறுதுணையோடு விண்ணேற்றம் பெற்று இறைச் சந்நிதானத்தை அடைந்து திரும்பிய வரலாற்றை விரித்துரைப்பதாகும் 'மிஃறாஜ் நாமா.''

விண்ணேற்றம் பெறும் பெருமானாரை ஜெருசலத்திலுள்ள பைத்துல் முகத்திஸ் எனும் இறையில்லத் தலத்திற்கு வானவர்கோன் ஜிப்ரீல் (அலை) அவர்கள் அழைத்துச் சென்றார். மேலுலகங்கள் வழியாக இறைச் சந்நிதானததை அடைய வேண்டும். விண்ணேகு முன் தொழுகை நடைபெற்றது. வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) பாங்கு சொல்ல, பெருமானார் தொழுகை நடத்தினார்கள். இதனை ஆசிரியர்,

''வானின் ஜிபுரீல் வாங்கு சொல்ல
வரிசை நபியுல்லா பிரத்தி சொன்னார்
மூன்றுநூறுடன் பதிமூன்றான
முறுசலீன்களும் மற்றுமுள்ள
ஆனவொருலட்சத் திருபத்துநா
லாயிரச் சின்ன நபிமார்கள்
தீனோங்கிடச் செய்து அன்பியர்களும்
சிறந்த ஒலிகளும் இருக்கக் கண்டார்.''

எனக் கூறுகிறார்.

இவ்வாறு ஒரு லட்சத்து இருபத்தி நான்காயிரம் நபிமார்களும் முன்னூற்றுப் பதின்மூன்று முறுசலீன்களும் அன்பியாக்களும் நபிமார்களுட பின்பற்ற தொழுகை நடந்தது.

பின்னர், வானவர்கோன் ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபிகள் நாதரிடப் பால் நிறைந்த பாத்திரமொன்றை அன்புடன் நீட்டி, அதனைப் பருகுமாறு கூறினார். நன்றியுணர்வுடன் அதனைப் பெற்ற பெருமானார் சுவைமிக்க அப்பாலை பெரு விருப்புடன் பருகினார். சிறிது மிச்சப் பாலுடன் பாத்திரத்தை மீண்டும் வானவர் தலைவரிடம் தந்தார். ஜிபரீல் (அலை)அவர்கள் பாத்திரத்தில் இன்னும் கொஞ்சம பால் மீதமிருப்பதைக் கண்டு புன்முறுவல் பூத்தபடி பெருமானாரை நோக்கி, 'பெருமானாரைப் பின்பற்றும் உம்மத்துகளுள் அதாவது முஸ்லிம்களுள் சிலர் எரி நரகு ஏகுவர்' எனக் கூறினார். பால் முழுவதையும் பெருமானார் பருகியிருந்தால் முஸ்லிம்கள் அனைவரும் சொர்க்கம் புகும் வாய்ப்புக் கிட்டியிருக்கும் என்பதையும் விளக்கினார். இதைக் கேட்டுத் துணுக்குற்ற பெருமானார் மீண்டும் அப்பால் கலத்தைப் பெற்று மிச்சமுள்ள பாலையும் பருகி, முஸ்லிம்கள் அனைவருமே சுவனப் பெரும்பேறு பெற விருமபி அப்பால் பாத்திரத்தை மீண்டும் பெறும் பொருட்டுக் கையை நீட்டினார். திரும்பவும பால் பாத்திரத்தை தர மறுத்த வானவர்கோன் ஜிப்ரீல் (அலை) அவர்கள் வல்ல அல்லாஹ்வின் திருவுளப்படியே அனைத்தும் நடப்பதால் மீண்டும் பால் பாத்திரத்தை கேட்க வேண்டாமெனப் பணித்தார். இச்சம்பவத்தை,

"மலக்கு ஜிபுரீல் நபி பாலுண்ண
மறுகபா என்றே மகிழ்ந்தார்.
துலக்கு முடபாலில் கொஞ்சம் மிஞ்சத்
தூக்கி ஜிபுரீல் கையில் கொடுத்தார்

கலக்கமில்லா அதை ஜிபுரீல் வாங்கி
நபியே நீர் கொஞ்சம் பால்மீந்ததால்
சிலுக்கு நரகத்தில் உம்மத் தோரில்
சிறிதுபேரைப் போட்டு அதாபு செய்வான்
எல்லாப் பாலையும் குடித்தீர் ஆகில்
எல்லா உம்மத்தும சுவர்க்கம ஆவர்
சொல்ல ஜிபுரில் உரை கேட்டு
துய்ய நபியுலலா பாலைக் கேட்டார்
வல்ல ஜிபுரில் அது அங்குரைத்தார்
வரைந்து விளௌளக்கு எழுத்தின்படி
இல்லையினிக் கேட்க வேண்டாம் என்ற
ஏக நபியுல்லா தமக்கு உரைத்தார்,"

என செஞ்சொற் சித்திரமாகத் தீட்டிக் காட்டுகிறார் மதாறுப் புலவர் அவர்கள்.

வானவர் தலைவரின் உதவியுடன் விண்ணேகிய பெருமானார் ஒவ்வொரு வானமாய்ச்சென்று அங்கெல்லாம்வதியும் முதல் நபி ஆதாம், எஹியா நபி, ஈசுபு நபிஇஸ்மாயீல் நபி முதலியவர்களைக் கண்டு, சலாம் உரைத்து, அளவளாவி, தனக்கேற்பட்ட பல்வேறு ஐயப்பாடுகளையும் போக்கிக் கொண்டவராக இறைச் சந்நிதானத்தைப் பெருமானார் எட்டுகிறார்கள். நாயகத் திருமேனியிடம் அவர் வழியைப் பின்பற்றும் முஸ்லிம் உம்மத்துகளுக்கு நாள் தோறும் ஐம்பது வேளைத் தொழுகையைக் கடமையாக்கி வல்ல அல்லாஹ் பணித்தான். இதை அப்படியே ஏற்றுக் கொண்டு வந்தபெருமானார் இதனைப் மூஸா நபிகளிடம் கூற, அதைக் கேட்ட மூஸா நபி மிகக் கூடுதலான இத் தொழுகை எண்ணிக்கையைக் குறைக்குமாறு அல்லாஹ் விடம் மன்றாடுமாறு கூறினார். அதற்கொப்ப அல்லாஹ் விடம் அண்ணலார் மன்றாட, வல்ல நாயன்

பெருமானாரின் வேண்டுகோள் ஏற்று, ஐம்பது வேளைத் தொழுகையை ஐந்துவேளைத் தொழுகையாகக் குறைத்து எளிமைப்படுத்தினான். அவ்வாறே முன்பு கட்டளையிட்டிருந்த ஆறுமாத நோன்பை ஒரு மாத நோன்பாகவும், நாலிலொரு பங்காக இருந்த ஜக்காத்தை நாற்பதில் ஒரு பங்காகவும் ஆண்டுதோறும் நிறைவேற்ற வேண்டிய ஹஜ் கடமையை வாழ்நாளில் ஒருமுறையாகவும் அல்லாஹ் குறைத்து அருள செய்தான். இதனை,

''என்று ஒருநாளைக்கு ஐந்து நேரம
இலங்கித் தொழுது கொண்டு அதபுடனே
நன்றாய் கபிர் செய்து சக்காத்தையும்
நாற்பதில்ஒன்று தான். அளித்து
சென்ற வருடத்தில் றமுலானிலே
தீரவொரு மாதம் நோன்பு வைத்து
நன்றாய் வயதிலே ஒரு ஹஜ்ஜுதான்
நடந்து செய்திடப் போதுமென்றான்.''

இவ்வாறு அல்லாஹ்வால் இறைநம்பிக்கையாளர்களாகிய முஸ்லிம்களுக்கு கட்டாயமாக்கப்பட்ட ஐம்பெரும கடமைகளில் இறைநம்பிக்கையாம் கலிமா, தொழுகை, நோன்பு, ஜக்காத்து ஆகிய நான்கு கடமைகளை இனிது நிறைவேற்றத்தக்க புனித மாதமாக றமலான் அமைந்தது.

தமிழில் இயற்றப்பட்டுள்ள நாமா இலக்கியங்களுள் குறிப்பிடத்தக்க மற்றொரு படைப்பு காயல் ஷாமுனா லெப்பை எனப்படும் ஷாமு நைனா லெப்பை புலவர் பாடிய 'இருஷாது நாமா' வாகும்.

தன்னை வணங்குவதற்கென்றே இறைவன் மனிதனைப் படைத்தான் என்பது மரபு. இறைவனின் விருப்பத்துக்கு மாறாக இறைச் சிந்தனையின்றி அல்லாஹ்வினிடத்து அச்ச

மின்றி, தவறான வழியில் தான் தோனறிகளாய் இம்மையில் வாழும் மனிதர்களுக்கு மறுமையில் இறைவனால் எப்படிப்பட்ட தண்டனைகள் வழங்கப்படும் என்பதைச் சுவைபட விவரிக்கும் இலக்கியப் படைப்பே 'இருஷாது நாமா.'இறையுணர்வை மறநது இவ்வுலக வாழ்வில் மூழ்கி பொருள், புகழ் வயப்பட்டு வாழும் மனிதர்களுள் வெவ்வேறு வகைப்பட்ட ஏழு பகுதியினர் இறைச் சந்நிதானத்தை எட்டும்போது எத்தகைய கேள்வி கணக்குகட்கு ஆட்பட்டு இறுதியில் எவ்வகையான கொடுந்தண்டனை பெறுவர் என்பதை இலக்கியச் சுவையுடன் இந்நூல் விவரிக்கிறது.

முதலாவதாக அறிஞர் குழுவொன்று இறைச்சந்நிதானத்தில் வந்து நிற்கும். அவ்வணியின் தலைவராக வந்த அறிஞரை நோக்கி. இறைவணக்கப் புரிவதற்கென்றே உன்னையும், உனக்கு வேண்டிய அறிவையும் தெளிவான சிந்தனையையும் தந்திருந்தும் இவ்வுலக வாழ்வில் என்னை மறந்து. உன்னையே எண்ணி வாழ்ந்ததன் காரணம என்னவென வினவ, அதற்கு மறுமொழியாக. தான் கற்ற நூலறிவையும் பெற்ற பட்டறிவையும் கொண்டு மக்கட்டு அறிவுரை வழங்குவதிலேயே நாட்டமுடன் வாழ்ந்து விட்ட காரணத்தால் இறை வணக்கம் புரியத் தவறி விட்டதாகக் கூற, இறைவனின விருப்பத்துக்கு மாறாக வாழ்ந்த அவ்வறிஞனை கொடுநரகில் அல்லாஹ் தள்ளுவான் என்பதை,

> "அப்போது இறையவன் சொல்லிடுவான்
> அறிநத படிநீங்கள் செய்தீரில்லை
> செப்ப முடன்பணம் செல்வத்துக்காய்ச்
> செல்லும் சுதந்திரம் பெருமைக்காக
> மெய்பாய் மனிதர்கள் போற்றவென்று
> மொழிந்தீர் அறிவுகள் பலபேருக்கும்
> தப்பாய் நடந்திட்டீர் என்று சொல்லித்
> தரிக்க நரகத்தில் விடுவானென்றார்".

இறைவன் மனிதனுக்கு வழங்கியுள்ள அருட்கொடை அவன் பெற்றுள்ள அறிவாகும் அதன் துணைகொண்டு இறைவனை அறிய அவன் அருட்டிறத்தை உணர்ந்து தெளிந்து, அல்லாஹ்வை நெருங்கும் வகையில் இறை வழி பாடு அமைய வேண்டும் என்பதே இறை நாட்டம்.

மெய்யறிவாளன், தான் பெற்ற கல்வியின் வழி ஒழுகி பிறரையும் அவ்வாறு ஒழுகத் தூண்ட வேண்டும். 'கற்க, கற்றபின் நிற்க அதற்குத் தக' என்பது முதுமொழி. 'கல்வி யின் நோக்கமே வலல அல்லாஹ்வை வழுத்தி மேன்மை யுறுவது என்பதற்கு மாறாக, பணம், பதவி, புகழ் என கவர்ச்சிக்காகவே வாழ்ந்து, இறைவணக்க முறை மறந்து வாழும் அறிஞரும் எரிநரகிற் புகவேண்டியவரே என இறைத் தீர்ப்பு அமையும் எனக் கூறி அச்சுறுத்தி எச்சரிக் கை செய்கின்றார்.

இறைவன் திருமுன்பு இறுதித் தீர்ப்பை எதிர்நோக்கிய படி மண்ணாண்ட மன்னர்களும் மக்களை வழிநடத்திச் சென்ற தலைவர்களும் நிற்பர். இறைவன அவர்கட்குப் பெரும் பொறுப்புப உயரிய பதவி தந்தும் இறைவணக் கத்திலிருந்து வழுவி வாழ்ந்த அவர்களை நோக்கி நான் உங்கட்கு உயர் பதவி தந்தும் என்னை வணங்காதொழிந் தது ஏனோ? என வினவ, அதற்கு மன்னர்களும் தலைவர் களும், இறை தந்த உயர்பதவியின் விளைவாக அவர்களை கட்டுக்குள் வைத்து வாழச் செய்யவும், அவர்களிடையே எதிர்ப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு நெறிப் படுத்தவும், அவர்களுக்கு நீதி புரக்கவும்ம இருக்கும் காலத் தைச் செலவிட நேர்வதால் இறை வணக்கம் செலுத்த நேரமோ, சிந்தனையோ இல்லாது போயிற்று. இதற்கு முக்கியக் காரணம் தலைமை' என்ற பெரும் பொறுப் பைத் தங்கள்மீது இறைவன் சுமத்தியதுதான் என பழி யை இறைவன் மீதே சுமத்தி திறமையாகத் தப்பிக்க முய லும்போது இறைவன்,

"அப்போ பொருநாயன் முனிந்துசொல்வான்
அன்பர் புவிதனில் உமறுகத்தாப்
செப்பமுடியாத தலைமையேற்றார்
செகத்தில் அவரைப்போல் தலைமையோ நீ?
ஒப்ப முடனவர் தொழுகைதன்னை
ஒருநாளும் கலாச் செய்ததுண்டோ?
வெப்பக் கோபமாய்ப் பெரிய நாயன்
வெறுத்து நரகத்தில் விடுவானென்றார்"

என முனிந்து கூறியதாக ஆசிரியர் ஷாமுனா லெப்பைப் புலவர் பாடுகிறார். இஸ்லாமிய வரலாற்றில் மட்டுமல்லாது மனிதகுல வரலபற்றிலேயே நீதிநெறி வழுவா ஆட்சித் தலைமைக்கும் இறைச் சிந்தனைக்கும் இணையற்ற எடுத்துக்காட்டாக விளங்கிய இஸ்லாததின் இரண்டாம் கலீபா உமர்கத்தாப் (ரலி) அவர்களைச் சான்று காட்டி அல்லாஹ் இடித்துக் கூறுவதாக புலவர் மொழிகிறார். நீதிநெறி மிக்க நல்லாட்சியளித்த கலீபா உமறு கததாப் (ரலி) அவர்கள் எத்தகைய இக்கட்டான நெருக்கடி நேரத்திலும் ஒருவேளைத் தொழுகை கூடத் தவறிய வரல்லர் நான் அளித்த ஆட்சித் தலைமையையும் நீதிபுரக்கும் பொறுப்பையும் செவ்வனே நிறைவேற்றியதோடு, நான் விதித்த தொழுகையையும் இம்மியும் பிசகாது கடைபிடித்து வாழ்ந்த உமர்கத்தாபைவிட நீங்கள் உயர்ந்தவர்களோ? எனக் கூறி அவர்கட்கு நரக வாழ்வை நல்குவான் என இப்பாடல் கூறுகிறது.

மூன்றாது அணியாகச் செல்வக் சீமான்கள் வருவர். இறை வணக்கம் புரிய இயலாமற் போனதற்கான காரணத்தை இறைவனிடம எடுத்துக்கூறி விளக்க முனையும் செல்வர், "வரையிலா செல்வத்தை வாரி வழங்கியதால் எங்களின் முழுக் கவனமும் இரவு பகலாகச் செல்வத்தைப் பெருக்குவதி

லும், பெருகிய செல்வத்தை காப்பதிலுமே செலவிட நேர்ந்துவிட்டது'' எனப் பதில் கூறி நிற்பர்.

இக் கேள்விக்குப் பதில் தரும் இறைவன் சுலைமான் நபி அவர்களைச் சான்றாக்கிச் செல்வர்களை நோக்கி.

''எல்லாப் படைப்பையும் அவர்கைக்குளாய்
இருந்து பணிவிடை செய்திடவும்
பொல்லாப் புவியினின் வாழ்க்கையெல்லாம்
பொடிந்து மடிந்தாலும் அவர்வாழ்வினில்
அல்லாத் தொழுகையை வழுவாமலே
அறிந்து ஒருகாலும் விட்டாரில்லை
நல்லா நிறைவேற்றிக் கொண்டாரென்று
நாயன் கடுமையாய்த் தான்சினந்தான்.''

எனக் கூறுவதாகப் புலவர் பாடுகிறார்.

இப்பாடலில் சான்றாகக் கூறப்படும் சுலைமான் நபி அவர்கள் மனிதர்களுக்கு மட்டுமல்லாது இறைவன் படைப்பித்த உயிரினங்கள் அனைத்துக்கும் அரசராய் அமைந்து அனைத்து உயிர்களையும் காத்துவந்த அரசர்க் கரசர். உலகின் செல்வம் அனைத்தும் அவர் காலடியில். இவ்வாறு பொருட் செல்வமும் ஆட்சித் தலைமையும் ஒருங்கே வாய்க்கப் பெற்றிருந்தும் இறைவன் விதித்திருந்த தொழுகைக்கடமையை தொய்வின்றி செவ்வனே நிறை வேற்றிய இறைநேசச் செல்வர் இதனையறிந்து செல்வச் செறுக்கால் இருமாந்து தொழுகையை விட்ட செல்வர் வருந்தி நாணமடைவர். இறைவன் அளிக்கப் போகும் கொடுந்தண்டனையினின்று இனி தப்ப முடியாது என்ற உள்ளவுணர்வுடன் இறை தண்டனையை எதிர்நோக்கி யிருப்பர் எனக் குறிக்கிறார் ஷாமுனா லெப்பைப் புலவர் அவர்கள்.

நான்காவதாக ஒரு அணியினர் இறைச் சந்நிதானம் வருகின்றனர் அவர்களின் தோற்றமே அவர்தம் வறுமைச் சூழ் நிலையை பறைசாற்றியது பரட்டைத் தலையும் பஞ் சடைந்த கண்களும் கந்தலாடையும் அவர்கள் கொடிய வறுமை வாய்ப்பட்டவர்கள் என்பதைச் சொல்லாமல் சொல்லின அவர்களின் தோற்றத்தை.

''பசியால் மெலிந்துடல் வடிவுகுன்றி
படிமேல் அறிவற்று நினைவுமாறி
கொசியும் எம்மையே துனியாவிலே
குதாவே படைத்துநீ விட்டதனால்
வசியாத் தொழுகையின் பரக்கை விட்டு
வல்ல பெரியோனே வணங்கவில்லை
நிசமாய்ப் பணங்காசு நீ கொடாமல்
நிலத்தில் எங்களை வைத்தாயென்பார்.''

பசி, பட்டினியால் உடல் குன்றி, மற்றவர்களை யாசித்துப் பஞ்சைப் பராரிகளாய் கையேந்தி அலைந்து திரிந்து வாழ நேர்ந்ததால் இறை வணக்கம்புரிய நேரமோ மனமோ இல்லாமற் போய்விட்டது காலமெல்லாம் கவலையோடு வாழ நேரிட்ட எங்களுக்கு வளமான செல் வத்தை இறைவா நீ அளித்திருந்தாயேயானால், ஒரு வேளைத் தொழுகையும் விடாது ஒழுங்காய் இறைவணக் கம் செய்திருப்போம் என்ற வறியவர் கூற்றைக் கேட்ட இறைவன், மூசாநபி அவர்களை அவர் முன் வரவழைத்து 'வறுமையால் வாடியதால் வணங்க இயலாமற் போய் விட்டது எனக் கூறும் நீங்கள் ஈசாநபியைவிட வறியவர் களா?' எனக் கேட்டு,

''பஞ்சைப் பரதேசி போலாகியும்
பரிவாய் நடந்திட்டார் ஈசாநபி
அஞ்சி பயத்தொடு தொழுகை தன்னை
அழகாய்த் தொடரவே தொழுதுவந்தார்.''

எனக் கூறுவதாகப் பாடுகிறார் ஷாமுனா லெப்பை அவர் கள்.

மூசா நபி அவர்கள் சிறியவர்க்கும் வறியவராய் வாழ்ந்தவர். தன்னையே இறைவனாகப் பிரகடனப்படுத்திக் கொண்ட கொடுங்கோலன் பிர்அவ்ன் மன்னனை வணங்காது அவன் இழைத்த கொடுமைகளையெல்லாம் தாங்கிக் கொண்டு இறைநேசச் செல்வராய் அல்லாஹ் விதித்த இறை வணக்க முறையினின்றும் இம்மியும் பிசகாது ஒழுகியவர். அவரைச் சான்று காட்டியது கண்டு மறுமொழி ஏதும் கூறவழியற்றவர்களான ஏழையர், வணக்க முறை தவறியதற்கான இறை தண்டனையை எதிர்நோக்கியவர்களானார்கள்.

ஐந்தாவது அணியாய் வந்தவர்கள் நோயின் காரணமாக இறை வணக்கம் செலுத்தத் தவறியவர்கள். இறைவன் அளித்த நோயின் காரணமாக இறைவணக்கம் இல்லா தொழிய நேரிட்டது என்ற கூற்றைக் கேட்ட வல்ல அல்லாஹ், ஐயூப் நபி அவர்களை வரவழைத்து.சோதனை நிமித்தம் ஐயூப் நபியவர்கட்கு சொல்லொணாத நோய்த் துயரங்கள் ஏற்பட்ட போதிலும் இறை வணக்க முறையினின்றும் இம்மியும் பிசகாது இறையை வணங்கி ஆண்டவனின் அன்பு நேசராய் மாறியிருந்ததை எடுத்துக்காட்டி,

''ஆனா ராகிலும் என்னுடைய
அன்பர் தொழுகையை விட்டதில்லைக்
கோனான் புவிமீதில் உனக்கிப்படிக்
கொடிய நோயை விட்டதுண்டா?
தானே படைப்பெலாம் ஆளும்நாயன்
தானே கோபமாய் அவர்கள்மீதில்
வான மலக்கொடே ஏவல்செய்ய
வலித்து நரகத்தில் விடுவார்களே''

என இறைவன் கூறுவதாகப் புலவர் பாடுகிறார்.

கொடிய நோய்த் துன்பத்தில் உழன்றபோதும் இறை வணக்கமுறை பிசகா ஐயூப் நபி வாழ்வை ஒப்பு நோக்க

தாங்கள் இறை வணக்கமில்லா நிலைக்குப் பெறப்போகும் நரக தண்டனையை எதிர்நோக்கி நிற்பாராயினர்.

ஆறாவதாக, பெண்கள் அணியொன்று இறைவன் முன் வந்து நிற்கும், இவர்களில் சிலர் மனத் தூய்மையற்ற வர்கள். மற்றும் சிலர் காம உணர்வு மிக்கோர். வேறு சிலர் பிள்ளைப் பேற்றைப் பெரிதும் பெற்றவர்ள். மேற் கூறிய பல்வேறுவகைபட்ட ஆசாபாசங்கட்குஆட்பட்டவர் களாய் இறைவணக்கம் புரியத் தவறியவர்கள். இறைச் சந்நிதி ஏகிய இப்பெண்களை நோக்கி அல்லாஹ் இறை வணக்கம் புரியத் தவறியதற்கான காரணததை வினவும் போது தாங்கள் இறைவன் அளித்த வாழ்க்கைப் பேறு களையெல்லாம் முறறாக அனுபவிக்க முயன்றதால் இறை வனை தொழுதேதத நேரமில்வாது போயிறறு என்ற மறுமொழி கேட்கும் இறைவன், அவர்கள் முன்பாக ஹவ்வா தாயாரைத் தோன்றச் செய்து தொழாத அப் பெண்மணிகளை நோக்கிக் கூறுவான்; 'நீங்கள் வாழ்க்கை யில் அனுபவிக்க வேண்டிய இன்பப் பேறுகளையெல்லாம் வாரி வழங்கினேன் அவற்றில் உழன்ற நீங்களோ பேற் றினையீந்த வல்லோனையே பறந்து வழுத்தத் தவறி விட்டீர்கள். இன்பமின்றித் துன்பமில்லை எனற இனிய சூழலில் இறைநினைவு எழா தொழிநதது அதே சமயத்தில் உங்கள் முன் நிற்கும் முதல் பெண்ணாகிய ஹவ்வாவுக்கு எத்தனையோ சோதனை ஏற்படுத்தப்பட்டன தொல்லை கள் தொடர்ந்தன எதிர் வந்த இன்னல்களை இன்முகத் தோடு ஏற்று வல்ல அல்லாஹ்வை நேரந் தவறாது வாழ்த்தி வணங்க என்றுமே தவறியதில்லை. துன்ப துயரங்களிடையேயும் தவறாது இறைவனைப் போற்றி வணங்கிய ஹவ்வாவின் முன் இன்பப் பேறுகளை முற்றா கப் பெற்றும், அதனை அளித்த அல்லாஹ்வை வணங்க மறந்து வீண்பொழுது போக்கிய பெண்களை முனிந்து எரி நரகில் இறைவன் எறிவான் என்பதை.

"உனக்குப் புவிமீதில் இப்படிநான
ஒடுங்க வருத்தமும் விட் டதுண்டோ?
கனக்கும் படியாக ஹவ்வாவைப்போல்
கடின விடைஞ்சலும் விட்ட துண்டோ
மனைக்குள் வாழ்வினை மிகவளித்தேன்
மகிழ்வும் பரக்கத்தும் மிகவுமீந்தேன்
தனக்குப் பெருமையாய் வீண்போக்கினாய்
தக்கோன் முனிவினால் நரகிற்சேர்வாய்"

எனக் கூறி, படிப்போரை அச்சுறுத்துகிறார்.

ஏழாவது அணியாக அடிமைகளும் பணியாட்களும் எடுபிடிகளும் வந்து இறைவன் முன் நிற்பார்கள். தொழுகை முறையைப் பேணாது வானாட்களைப் போக்கிய அவர்களை நோக்கி, தொழுகை முறை பேணாமைக்கான காரணம் என்னவென வினவ, அதற்கு அவர்கள், தாங்கள் தங்கள் எஜமானர்களால் கொடுமையாக வேலை வாங்கப் பட்டதாலும் கடுமையாக உழைக்க நேர்ந்ததாலும், தங்கள் விருப்பம்போல் ந- க்கும் சுதந்திரம் தங்கட்கு இல்லாதத லும் இறைவணக்கம் புரிய இயலாமற் போய்விட்டது. மேலும தங்களை இறைவன் அடிமைகளாய்ப் படைத்த தனால்தான் இவ்விழி நிலை எனக் கூறிய கூற்றுக்குப் பகர மாக இறைவன் இத்ரீஸ்நபியவர்களை அவ்வணியின் முன் காட்டி 'இறை தூதராகிய நபியவர்கள் ஏழுபது பேருக்கு அடிமையாய் இருந்து தொண்டூழியம் செயதிருக்கிறார். ஆனால், இறைவனை வணங்கும் தொழுகையை மட்டும் ஒருபோதும் விட்டதில்லை. இத்ரீஸ் நபியை விடவா நீங் கள கடுமையாக அடிமைத தொழில் ஆற்றியுள்ளீர்கள் எப்படியாயினும் இறைவணக்கமாகிய தொழுகையைக கைவிட யாருக்கும் உரிமையில்லை. அப்பிழை செய்தோர் நரக வேதனையினின்றும தப்பவே முடியாது' என இறை வன் எச்சரிக்கை செய்வதாக.

இந்த வகையினுள் உலகத்தில்
எங்கள் தமைநல்லா வடிமை செய்தாய்
முந்த வடிமையுள் ஆகாவிடில்
முறைமை உடன் நன்றாய்த் தொழுது
கொள்வோம்
தொந்த முடன் உன்றன் அடியாருக்குத்
தினமும் அடிமையாய் நீயேன்செய்தாய்?
பந்த வடிமையாய்ப் படைத்ததனால்
பணிந்து நாங்களும் தொழுதோமில்லை''

என ஆசிரியர் ஷாமுனா லெப்பை கூறுகிறார்.

இவ்வாறு, பல்வேறு வாழ்க்கை முறைகளைக் கொண்ட மனித சமுதாயத்தினரை ஏழு பகுப்பாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவினரும் தொழுகை தவறினால் நரகத் துன்பம் அடைந்தே தீருவர் என்பதை காரணகாரிய விளக்கங்கோடு எடுத்துக் கூறுகிறது 'இருஷாது நாமா' நூல் அதோடு மனிதகுல மேன்மைக்குதொழுகைஎவ்வளவு இன்றியமையாதது என்பதை மிகத்தெளிவாக எடுத்துக் கூறி விளக்குகிறார். தொழுகை தவறின் வல்ல அல்லாஹ் வின் சினத்திற்கு ஆளாக நேருமே என அஞ்சி நிற்கும் மக்களை நோக்கி,

''அல்லாஹ் படைப்பினில் ஆண்பெண்ணோரே!
அஞ்சித் தொழநாயன் உதவி செய்வான்
பொல்லாப் பெரும்பாவம் உள்ளதெல்லாம்
பெரியோன் தனைநாடிக் கெஞ்சிக்கேளும்
நல்லாத் தினந்தொறும தொழுதுகொண்டால்
நாயன் பிழையெல்லாம் பொறுத்திடுவான்
வல்ல நபியுல்லா மன்றாட்டமும்
வல்லோன தீதாரும் கிருபையுண்டாம்''

எனக் கூறுவதன் மூலம் அல்லாஹ்வின் அன்பையும் பரிவை யும் கருணையையும் எளிதாகப் பெற அரிய சாதனமாக

அமைந்திருப்பது தொழுகையாகிய இறைவணக்கமே என்பதை மிக எளிதாக உணரச் செய்து விடுகிறார்.

இறை வணக்கத்தின் மேன்மையை விண்டுரைக்கும் அதே நேரத்தில் எத்தகையவராயினும் அவர் தொழுகை தவறின் நரக வேதனை எய்துவது உறுதி என்பதையும் எக்காரணம் கொண்டும் தண்டனையினின்றுல் தப்ப இயலாது என்பதை அழகாக தத்துவார்த்த அடிப்படையில் விளக்கி விடுகிறார் நூலாசிரியர்.

இந்நூல் 'இர்ஷாத்' என்ற அரபி நூலின் தமிழ் மொழி ஆக்கம் ஆகும். தமிழின் தன்மைக்கேற்ப யாப்பிலக்கண அமைத்துக்கெடாத பனுவலாக்கியுள்ள ஆசிரியர் ஷாமுனா லெப்பை சொல்லும் முறையில் மூலத்தனும் பெருஞ் சுவையைத் தமிழ்ப் பனுவலில் தேக்கித் தந்துள்ளார் என்பது எண்ணத்தக்கதாகும்

நாமா இலக்கியங்களில் முஸ்லிம் மக்களிடையே மிகப் புகழ் பெற்றதாக அமைந்திருக்கும் நூல் ''சக்கறாத்து நாமா'' எனும் இலக்கியப் படைப்பாகும். அரபுத் தமிழில் இயற்றப்பட்ட இந்நூலை பேட்டை ஆம்பூர் அப்துல் காதிர் சாகிபு அவர்கள் யாத்துள்ளார். இந்நூலில் அரபுத் தமிழில் நூறு பாடல்கள் அடங்கியுள்ளன.

மரணம் என்பது மனிதனால் தவிர்க்க முடியாத ஒன்று. இறைவன் விதித்த நெறிப்படி, தீனவழி ஒழுகி, இறைவனின் இன்னருள்பெற்ற நிலையில் இறப்பை எய்தாது மாறுபட்ட போக்கில் வாழ்ந்து, இறுதி நெருங்கிய நேரத்தில் மரண வேதனையில் மனித உள்ளம்படுகின்ற துன்ப நிலை அழகாகத் தொகுத்துரைக்கப்படுகிறது இந்நூலில்.

இறப்பின் இறுதிக்கோட்டில் நிற்கும்போது இறையருளை எண்ணி ஏங்கித் தவிக்காது. தொடக்கமுதல் எம்முறையில் வாழ்ந்தால் இறுதி நிலையில் மரண வேதனையிலிருந்து ஆறுதல்பெற்று அமைதி கொள்ளலாம்என்பதை

"வாழ்ந்த காலத்திலெல்லாம் வாழ்ந்து
வல்லோன் தனை வணங்காமல் நீங்காமல்
சூழ்ந்த வினையெல்லாம் உலகிற் செய்து
தொலையாத் துன்பமாய் வீண் நாள்போக்கி
தாழ்ந்து மடிந்து இங்கே வந்தபோது
தவிப்பது மிகக் குற்றமாமே
வாழ்ந்த நாளிலே வணங்கிவந்தால்
வரிசை மிகவுண்டு றாஹத்துண்டு"

எனக் கூறுவதன் மூலம் இறைவன் விதித்த தீன்நெறி வழியே வாழ்ந்து, இறைவனின் இன்னருளைப் பூரண மாய்ப் பெறுபவன் மரண வேதனையினின்று விடுபட்டவ னாய், இறுதித் தூக்கத்தில் பூரண அமைதி பெறுவான் என்பதைத் தெளிவாக்குகிறது இச்'சக்கறாத்துநாமா' நூல்

இந்நூல் ஒருவர் இறக்கும் தருவாயில் படும் மரண அவஸ்தைகளைப் பற்றி விஸ்தாரமாகப் பேசும் அதே நேரத்தில், அவ்வேதனைகளினின்றும் எளிதில் விடுபட இறை மன்றாட்டையும் பற்றி இனிதோதுகிறார். இந் நூலைப் படிப்போர் இயல்பாகவே இக்கொடிய மரண வேதனையற்றவர்களாகத் தங்களை ஆக்கிக் கொள்ள, இறைவனின் பொருளுக்குட்பட்டவர்களாய், வல்ல அல்லாஹ் விதித்த நியமப்படியான வாழ்க்கை முறையை தீன் நெறி வாழ்ந்து உய்வு பெறத்தக்க தூண்டுதல்களை இயல்பாகப் பெறுவர்.

இந்நூல் மற்ற இஸ்லாமிய நூல்களில் கையாளப்பட் டுள்ள 'தொங்கல்' எனும் பாவினத்தில் படைக்கப்பட்டி ருந்தாலும் ஆங்காங்கே வெண்பாக்களும் இடம்பெற் றுளளன.

'நாமா' இலக்கிய வகை நூல்கள், மக்கள் இம்மையின் இன்பத்தில் மூழ்கி இறை வழி பிசகி மறுமையில் அடையும் துன்பத்தைப் பற்றி பெரிதும், அச்சமூட்டி எச்சரித்து மக்களை இறைநெறி வழுவாமல் வாழத் தூண்டி, வழி நடக்க வழி காட்டுகின்றன.

## முனாஜாத்து இலக்கியங்கள்

இஸ்லாமிய இலக்கிய வடிவங்களிலே மிகச் சிறந்த மற்றொரு புதுவகை இலக்கிய வடிவம் 'முனாஜாத்து' என்பதாகும். 'முனாஜாதது' எனும் அரபுச் சொல்லுக்கு, இரகசியமாய்ச் சொல்லுதல்' எனப் பொருள் கூறப்படுகிறது இறைவனிடம் மனமுருகிப் பிரார்த்தனை செய்தல் எனவும் இச்சொல்லுக்கு விளக்கம் தரப்படுகிறது. இதன் மூலம் முனாஜாத்து என்பதற்கு இஸ்லாமிய பக்திப்பனுவல் வாயிலாக இறையருள் வேண்டும் இறைவேட்டல் 'பாடல்கள்' எனும் கருத்துப் பெறப்படுகிறது. இச்சொல்லுக்குப் பொருள் விளக்கம் கூறவந்த செ.மு. செய்யிது முகம்மது ஆலிம் புலவர் அவர்கள் ''அல்லாஹுத் தஆலாவினிடத்திலும் அவனது திருவருளைப் பூண்ட மகான்களிலொருவரிடத்திலும் மன்றாடி வேண்டி நிற்றற் பொருளில்பாடப்படும் எண் வரையறுக்கப்படாத தமிழ்ச் செய்யுளுக்குப் பக்தி கிகாமணிகளாய் விளங்கிய பெரியோர்களால்வழங்கலாயிற்று'' எனக் கூறியுள்ளது கவனிக்கத் தக்கதாகும். சுருங்கச் சொலலவதெனில் இறைவன் மீது, அவன் தூதர்கள் மீது இறைநேசச் செல்வர்கள் மீது பாடப்படும்புகழ்ப் பாக்கள் அல்லது பக்திப் பாடல்கள் என்று கூறலாம்,

இறையருளை இறைஞ்சும்இம்முனாஜாத்துப் பாக்களை பெரும்பாலான முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் பாடியிருக்கிறார்கள் தீன்நெறியாகிய இஸ்லாத்தின் கொள்கைகோட்பாடுகளையும் சாதாரண பாமரரும் எளிதாகப் புரிந்து கொள்ளப் பெரிதும் உதவுவது இம்'முனாஜாத்து'ப்பாடல் களே யாகும்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வடிவங்களில் எண்ணிக்கையில் கிஸ்ஸா இலக்கியங்களுக்கு அடுத்தபடியாக மிக அதிக அளவில் இயற்றப்பட்டவை முனாஜாதது இலககியங்களே யாகும்.

இஸ்லாமியத் தமிழ்க் காப்பிய உலகில் தன்னிகரற்ற நான்கு காப்பியங்களை இயற்றி,புலவர் நாயகமாக விளங்கும் சேகனாப் புலவர் எனப்படும் செய்கு அப்துல் காதர் லெப்பை ஆலிம் புலவர் அவர்களும் முகியித்தீன் புராணம் எனும் செஞ்சொல் இஸ்லாமியக் காவியத்தை இயற்றிய பதுருத்தீன் புலவரும் மற்றும் சில இஸ்லாமியக் காப்பியப் புலவர்களும் கூட தங்கள் கைவண்ணத்தை முனாஜாத்துப் பாடல்களில் காட்டத் தவறவில்லை.

ஒருமுறை சென்னை நகரில் கொடிய விஷபேதி நோய் பரவி மக்களை அலைக்கழித்தது. நோயின் கடுமையால் மக்கள் மிகுந்த துயருக்குள்ளாயினர். அப்போது சென்னையில் இருந்த பெரும் முஸ்லிம் தமிழ்ப் புலவரான புலவர் நாயகம் சேகனாப் புலவர் அவர்களை முஸ்லிம்கள் அணுகி, விஷபேதி நோயின் கொடுமையொழிய இறைவனை இறைஞ்சி முனாஜாத்துப் பாடி, தங்களை துயரினின்றும் காக்குமாறு வேண்டினர். இன்னலுறும் மக்களின் நல்வாழ்வுக்கு அருள் செய்யுமாறு அல்லாஹ்வை நோக்கி இறைஞ்சும் வகையில் ''ஹக்கு பேரில் முனாஜாத்து'' எனும் பெயரில் ஒரு முனாஜாத்து நூலை இயற்றியளித்தார். இதிலுள்ள பாடல்கள் அனைத்தும் அல்லாஹ்வை நோக்கித துதித்துப் பாடப்பட்டவைகளாகும். ''ஹக்கு'' என்ற அரபுச் சொல்லுக்கு ''உண்மை'' என்பது பொருளாகும். உண்மையானவனாகிய அல்லாஹ் மனித குலத்துக்குத தந்தருளியுள்ள பேறுகளைப் புகழ்ந்தேத்தும் வகையில் இம்முனாஜாததின் முதல் பாடல் அமைந்துள்ளது.

''காவலாய் நிற்கும் வல்லோன்
கத்தனாய்ச் சீவனெல்லாம்
ஆவலாய்ப் போற்றி வாழ்த்தி
அதற்குணவளித்த கோமான்

ஆவினா வெளியோர் கேட்டு
நாட்டத்தின்படியே தந்து
தாவிலா றகுமத்தாலே தற்காக்கும்
பொருள் தாமே''

என அல்லாஹ்வின் அருளைப் போற்றிப் புகழ்கிறார்.

இஸ்லாமியர்கள் இறைவனின் இறுதித் தூதராக வந்துதித்த அண்ணலார் மறைவழி வகுத்தளித்த இறைவழியாகிய தீன் வழியில் நாளும் ஒழுகி வாழ்பவர்கள். தங்களுக்கு ஏதேனும இன்னல்கள் ஏற்படின் பெருமானார் வழிவாழும் எங்களைக் காத்தருள எல்லாம் வல்ல அல்லாஹ்வை வழுத்தி வேண்டி மன்றாடும் போக்கில் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடி இறையின் காப்பை வேண்டுகிறார் புலவர் நாயகம் சேகனாப் புலவர்.

''வள்ளன் மகமூது எனும் நயினார்
வழியின் ஒழுகி உன்னுடைய
விள்ளும் மார்க்கம் தலையெடுத்து விளக்கும்
தீனோர் ஆகையினால்
தெள்ளும் அறிவே மெய்ப்பொருளே தெளிவே
எங்கள் கண்மணியே
எள்ளும் ஆபத்து அணுகாமல இன்பம்
புரிவாய் றகுமானே''

என மனமுருகிப் பாடுகிறார்.

அல்லாஹ்வின் இறை நேசர்களின் மூலமாக இறைவனின் திருவருளை வேண்டுவதாக அமைத்துள்ள முனாஜாத்துப் பாடல்கள் இறைவனின் கருணையைப் பக்தி பூர்வமாக வேண்டுவதாக அமைந்துள்ளன. அவ்வகையில் நாகூர் ஷாகுல் ஹமீது ஆண்டகையை முன்னிலைப்படுத்தி அல்லாஹ்விடம் இறைஞ்சும் சேகனாப் புலவர்.

''தோத்த்ரம் செய்யத் துணையாயிணையில்
பாத்திரம்பெற்றுப் பாக்கியம் பெறவே
முத்திசேர் நாகை முதுநகர்
தத்துவம் பூண்ட ஷாகுல் ஹமீதே ''

என உளமுருகிப் பாடுகிறார்.

முனாஜாத்துப் பாடல்களில் தங்கள் குறையிரந்து வேண்டுதலோடு, தங்கள் தொடர்புடையோருக்காகவும் இறைஞ்சி வேண்டுவதுண்டு. கல்விச் சுடர் ஏற்றிய ஆசிரியர், இறைமறை கற்பித்து ஒழுக்க வாழ்வுக்கு வழி வகுத்த நல்லுரையாளர்கள் தங்கள் மீது அன்பைப் பொழிந்து அருளுணர்வோடு துணை நின்றோர், இடுக்கண் எதிர்ப்பட்டகாலத்தில் முனைந்து நின்று உதவி, இடர் களைந்தோர், உறுதுணையாயமைந்த உற்றார் உறவினர் ஆகியோருக்காகவும் குறையிரந்து முறையிடுவது போன்ற முனாஜாத்துப் பாடல்கள் தமிழில் நிரம்பவுண்டு. சான்றாக, பதுருத்தீன் புலவர் முகியித்தீன் ஆண்டகையின் பேரில் பாடிய 'முகியித்தீன் முனாஜாத்து, எனும் அரிய பக்திப் பனுவல்களில் முப்பத்தைந்தாவது இறுதிப் பாடலாக இடம் பெற்றிருக்கு பாடலில் கீழ்க் கண்டவர்கட்காக குறையிரந்து அருள் வேண்டுகிறார்.

''எந்தனக்கு அறிவு தந்தோர்
இறைகுர்ஆன் ஓதித் தந்தோர்
வந்தனைக் கிருபை வைத்தோர்
வரும்பொருள் உள்ள மீந்தோர்
சொந்தமாங் கிளைஞ ரெல்லார்
சொற்பிழை பொறுதெந் நாளு
தந்தருள் கிருபை செய்வீர்
சமது யாமுஹியித்தீனே''

மற்றொரு புகழ்பெற்ற முனாஜாத்து கீழக்கரை செ.மு. செய்யிது முகம்மது ஆலீம் புலவர் இயற்றிய 'முனாஜாத்து மாலிகை'' என்பதாகும். பன்னிரண்டு முனாஜாத்து பாடல்கள் அடங்கிய இந்நூல் பண்டிதர் முதல் பாமரர் ஈறாக எல்லோருக்கும் மிக எளிதாக விளங்கும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது. மாலை எனும் பொருளடிப்படையில் மாலிகை எனும் சொல் இந்நூலில் கையாளப்பட்டுள்ளது.

இந்நூலின் அவையடக்கப் பாடலில் தான் இந்நூலை எழுதத் தொடங்கியபோது தன் மனத்தில் ஏற்பட்ட கிளர்ச்சிகளையும் அதனால் உருவான உள்ளத்தின் பதை பதைப்பையும் மனமுருகக் கூறுகிறார். இறைவனாகிய வல்ல அல்லாஹ்வை போற்றி, பெருமானாரைப் புகழ்த்துரைக்கும் அப்பாடல்ல் இவ்வாறு போற்றிப் புகழ தனக்கென தனியாற்றல் ஏதுமில்லையே என ஏங்குகிறார். இருப்பினும் இப்பணியைத் துணிந்து மேற்கொண்டதனால் தன் உள்ளத்தில் ஏற்பட்ட பதைபதைப்பை,

''பூவா ருலகம் புனைக்கும்வல் லோனை
புகழ்ந்து நின்று
மாவா ருயர்சல வாத்தால் முகம்மதை
வாழ்த்திய பின்னர்
நாவா ருசித முனா ஜாத்து மாலிகை
நன்கு இயப்பப்
பாவா ரரும்பதந் தேரா தநெஞ்சம
பதைக்கின் றதே''

என அவை அடக்கத்தோடு கூறி அமைகிறார்.

அடுத்து வரும் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ''அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனும்'' எனும் பொருள்படும் அரபுமொழித் தொடரான' அர்ஹ்முர்ராகிமீன்'' என்பதை அமைத்தே பாடலை முடிக்கிறார்.

நாமெல்லொரும் வணங்குதற்குரியவன் அல்லாஹ்வே என்றும் நல்லோர், தீயோர் எல்லோருக்கும் இறுதித் தீர்ப்பு நாளில் அவர்கள் மீது இரக்கம் காட்டுபவனும் அல்லாஹ்வே என்பதை

''வணங்குதற் குரியோன் அல்லா மலர்தலை
உலக மீதில்
இணங்கிடு நல்லார் பொல்லார்க்கிரங்கிடும்
ரஹ்மான் பின்னாள்
பிணக்கறு முஸ்லீம்கட்கே பேரருள்
புரியம் ஆதி
அணங்கிலா ரஹீமெஞ்றோதும் அர்ஹமுர்
றாஹி மீனே''

எனக் கூறுகிறார்.

இறைவனாகிய அல்லாஹ்வுக்கு தொண்ணூற்று ஒன்பது திருப்பெயர்கள் உண்டு. இறைவனைப் போற்றும் போது இத்திருப்பெயர்களைப் பயன்படுத்தி போற்றுவது வழக்கம். இப்பெயர்கள் குறிக்கும் உட்பெயர்களையெல் லாம்' தெளிவாக அறிந்துணர்ந்தவராக, இத்திருநாமங் களின் அரபுச் சொற்றொடர்க்குப் பொருள் விளக்கம் தரும் வகையில் பாடல்களைப் பாடியளித்துள்ளார் ஆசிரியர்.

மக்களுக்கு வேண்டிய உணவை அளிப்பதால் அல்லாஹ்வை 'ரஸாக்' என்ற பெயரால் அழைக்கிறோம். இம்மை மறுமைப் பேறுகளை மனிதனுக்கு அளிப்பதால் இறைவனை 'பத்தாஹ்' எனும் பெயர௱ல் போற்றித்துதிக் கிறோம. எல்லையிலா ஞானத்தையுடையஅறிவாளன்என் பதால் 'சலீம்' என்ற அழகுப் பெயரால் வல்ல அல் லாஹ்வை வாழ்த்துகிறோம். பிரியும் உயிரை மேவிப் பிடிப்பவன் எனும் பொருளில் காயில் எனும் சிறப்புப்

பெயரால் போற்றி வணங்குகிறோம். இவையனைத்தை ஒரே பாடலில் அமைத்து,

"இரண மீநதிடும் றஸ்ஸாகே இகபர நன்மை யாவும்
கரம ளித்திடும் பத்தாஹே கனவறி வுறும் அலீமே
பிரிந்திட உயிரை மேவிப் பிடித்திடும காபி லான
அருமறை பகரும் ஆதி அர்ஹமுர் ராஹி மீனே"

எனப் பாடுவது சிந்தைக்கு விருந்தூட்டுவதாய் அமைந்துள்ளது.

இவ்வாறே, பெருமானார் பேரில் பாடிய முனாஜாத்துகளின் இறுதியில் 'முகம்மது நபியுல்லாவே' என்ற சொற்றொடருடன் பாடல்களை முடிக்கிறார். சான்றாக,

"சொன்மனக் குபிரர்கூடிக் கொடுமிடம்
விளைத்த காலும்
புன்மனத் தினரை யாமும் பொடிபடுத்
திடவுத் தாரம்
சொன்மின்னன் அமரர் வேண்டும்
தொடர்மொழி மறுத்துப்பேசு
முன்முறை புகழ வந்த
முகம்மது நபியுல்லாவே"

என்ற பாடலில் 'முகம்மது நபியுல்லாவே' என்று முடிப்பதோடு நபிகள் நாயகத்தின் உயர்பெருங் குணச் சிறப்பையும் படம்பிடித்துக் காட்டிவிடுகிறார்.

நபிகள் நாயகம் அவர்கட்கு முஸ்லிமல்லாதவர்களில் பலர் இன்னல் பல ஏற்படுத்தினர். அமரர்களால்கூட சகிக்க முடியாத அத்துன்ப துயரங்களை பெருமானார் மிகுந்த பொறுமையுடன் தாங்கிக் கொண்டார். துன்பமிழைப்போரைத் தண்டிக்கப் பெருமானாரிடம் அனுமதி கேட்டபோதெல்லாம் அதற்கு மறுத்துவிட்டவர் பெரு

மானார் என்பதை மேற்கண்ட பாடல் மூலம் அழகாக உணர்த்தி விடுகிறார் ஆசிரியர் கீழக்கரை செய்யது முகம்மது ஆலிம் புலவர் அவர்கள்.

இவ்வாறே பெருமானாரின் மருகர் அலி (ரலி) அவர்கள் மீது பாடப்பட்ட முனாஜாத்துப் பாடல்களின் 'அலியுல்லாவே' என முடிக்கிறார். இப்பாடல்களின் மூலம் அலி (ரலி) அவர்களின் அறிவாற்றலும் வீரமும் பிற குணச் சிறப்புகளும் தெளிவாகவும் சுவையாகவும் விளக்கப்படுகின்றன. வீரத்திருவுரு அலி (ரலி) அவர்கள் ஐம்பொறிகளை அடக்கியாலும் அருந்திறனைப் பாராட்டும் போது.

''பொறியெனும் கரிகள் யாவும்
புவன்தொரும் புகுந்திடாது
அறிவெனும் துறட்டிதன்னால் அடக்கியே
புறத்தில் வீழ்த்தி
நெறியெனும் கொலுவி லார்ந்து
நிறையருள் சிறந்தநாளு
முறைவழி பிழைத திடாத
முர்தலா அலியுல்லாவே''

எனக் கூறும் இப்பாடலைப் படிக்கும்போது, அறிவெனும் அங்குசத்தால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கியாள்பவன் அறிவுக்கு வித்துப் போன்றவனாவான் எனக் கருத்துரைக்கும் வள்ளுவரின் குறளான.

' உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன என்னும் வைப்பிற்கோர் வித்து''

என்ற குறட்பா நம் சிந்தையில் நிழலாடவே செய்கிறது.

அடுத்து மிகச் சிறந்த முனாஜாத்துப் பாடல்கள் அடங்கிய நூல் 'நவநீத புஞ்சம்' என்பதாகும். இந்நூலுள் திருப்

புகழ், பிள்ளைத் தமிழ் மற்றும் மாணிக்க மாலை முதலிய பகுதகள் இடம் பெற்றிருந்தாலும், இந்நூலுள் முனா ஜாத்துப் பாடல்களாகப் பல அமைந்துள்ளன. அவை முனாஜாத்துப் பக்கங்களாகவன்றி பதிகங்களாக அமைந்துள்ளதெனலாம். செய்யிது முகியத்தீன் கவிராயர் இயற்றிய இம் முனாஜாத்துப் பாடல்கள் சொற்களையும் பொருட் சுவையும் நிறைந்து கருத்துச் செறிவோடு விளங்குகின்றன.

இக்கவிராயர் அல்லாஹ்விடம் தன் குறைகளைக் கூறி அவற்றைப் பொறுத்துத் தன்னை ஆட்கொள்ளுமாறு வேண்டுகிறார் இவர் குறிக்கும் குற்றங் குறைகள் சாதாரணமாக மக்களிடையே காணப்படுவனவாகும். ஆயினும் பொதுமக்கள் செய்த குற்றங்களையெலலாம் தானே செய்தது போல் பாவித்து, அவற்றை அல்லாஹ்விடம் முறையிட்டு கழுவாய் தேடுவதன் மூலம் மக்களுக்கு இறையருள் வேண்டுகிறார். அத்தகைய குற்றங்களைப் பட்டியல் போட்டுக் காட்டி வேண்டுகிறார்,

''மனவரம்பில்லா பாவியைப் புவிமாயை
மாதரைத் தொடருமிந்த
வஞ்சகனை அஞ்சொகுத்தும் தொழாத்
தோஷியை மறப்பினாலிடு மூடனை
இனவரம்பில்லா மெய்ஞ்ஞான போதம
எள்ளளவு இலா முரடனை
எந்நேரமும் கொடிய ஆணவத்தாலேயே
இடும்பு செய்யு மூழுவண்டனை
முன்பெனக் காணாதகட் குருடனைக்
காசாசை யானிதமு மேதுசெய்
வேனென்ற கவலையில் அழுந்தழுகலை
சேவைதேந்தாட் கொள்வ தெந்நாளோ
அல்ஹமது லில்லாஹி றப்பில்லால
மீனாதி ரஹ்மானியே''

எனக் கூறுகிறார்.

உள்ளத்தை அடக்கியாண்டு நல்வழியின்கண் திருப்ப இயலாது மனம் போன வழியே தறிகெட்டுத் திரிபவன் பாவியாவான். மயக்கும் மொழி பேசும் ஒழுக்கமிலா மங்கையர் வழி நடப்போன் வஞ்சகனாவான். இறைவன் விதித்த மறைவழி ஐந்து நேரமும் தொழுது இறைவணக்கம் புரியாதவன் தோஷியாவான். மறதிக்குட்பட்டவன் மூடனாவான். மனித உள்ளத்தை மென்மைப்படுத்திஇறையடியுணர்வுடன் ஒன்றச் செய்யும் மெய்ஞ்ஞான உணர்வோ அறிவோ இல்லாதவன் நிர்மூடனாவான் தான்எனும் அகந்தைக்கு ஆளாகும் ஆணவ உணர்வுள்ளவன் தனக்கு மட்டுமல்லாது பிறருக்கும் தீங்குண்டாக்கும் வண்டனாவான் கண்முன்னே தெளிவாகத் தெரிபவைகளைக் கூடக் காண மறுப்பவன் கண்குருடனாவான்எப்படிச்சம்பாதிக்க வேண்டும் என்ற உணர்வில்லாதவனாய் எப்படியாவது பெரும் பொருள் குவிக்க வேண்டுமென பணம் திரட்டும் வெறியோடு இரவுபகலாய்ச் சிந்தித்து பொருள் சேர்க்கும் வெறியுடன் கவலையே உருவாய் வாழ்பவன் அழுகல் மனிதனாவன். இத்தகைய தீய பண்புகள் அனைத்தும் தன்னிடம் நிறைந்திருப்பதாயும் இத்தீய-குணங்களைத் தன்னிடமிருந்து அகற்றி தன்னை மன்னித்து ஆட்கொள்ளுமாறு இறைவனை இருகரமேந்தித் துதிக்கிறார். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அகிலமனைத்தையும் படைத்துக் காத்துப் மரிபாலிப்பவன் அவனே'' எனும பொருள் பொதிந்த அரபிச் சொற்றொடரான ''அல்ஹம்துலில்லாஹிறப்பில் ஆலமீன்'' எனும் வாக்கியத்தை அப்படியே இப்பாடலில் பயன்படுத்தியுள்ளார். மேலும ''ஆதி றகுயானியே'' என அல்லாஹறவை விளித்துப் பாடுவதன் மூலம் 'அனைத்திற்கு முதலாயமைந்தவனும் அன்புடையோனுமாக' அமைந்திருக்கும் வல்ல அல்லாஹ் மீது தான் கொண்டுள்ள பக்திவுணர்வை வெளிப்படுததுவதோடு, அவற்றை படிப்போர் நெஞ்சத்திலும் பக்குவமாய் படியும் வண்ணம் பாடுகிறார்.

இந்நூலில் பெருமானார் மீது பாடப்பட்டுள்ளபாடல்கள் ஒவ்வொன்றின் இறுதி அடியும் ''ஹாமிதிறசூல் நபியே'' என முடிகிறது. இப்பாடல்களின் மூலம் நபி பெருமானாரிடம் குறையிரந்து அண்ணலாரை அருள்புரிய வேண்டுவதன் வாயிலாக நபிகள் நாயகத்தின் புகழ் பேசப்படுகிறது. அண்ணலாரின வாழ்க்கை நிகழ்ச்சிகளின் அடிப்படையில் அவர் தம் பெருமையும் குணச்சிறப்பும் புகழ்ந்தோதப் படுகின்றன.

பெருமானாரின் இஸ்லாமிய நெறி முறைகளை ஏற்க விரும்பாத மக்கா குறைஷிகளால் பெரிதும் துன்புறுத்தப் பட்ட அண்ணலாரும் அவர்தம் ஆருயிர்த் தோழர் அபூ பக்கர் சித்தீக் (ரலி) அவர்களும் மதினா மாநகருக்குத் தப்பிச் செல்லும்போது, தேடி வரும் எதிரிகளிடமிருந்து தப்பிக்க எண்ணி வழியில் இருந்த குகையொன்றில் ஒளிந்திருந்தனர். அங்கே தங்கியிருந்தபோது கொடிய அரவமொன்று அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களைத் தீண்டி விட்டது. பாம்பு கடித்தவிடத்தில் அண்ணலார் தம் அன்புக் கரத்தால் தடவிவிட விஷம் மறைந்தது. அந் நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்டும் முறையில்,

''அமலிற் சிறந்த அபூபக்கரின்
அடியில் அரவம் கடித்தவிடம்
தமது கரத்தால் சலவாத்தைச்
சாற்றி நீககும் பார்த்திபரே
விமல நிதியே கண்மணியே
வினவும் அடியேன் முகம்பார்த்துக்
கமலப் பதம் தந்தருள்புரியும்
ஹாமீ முகம்மது ரசூலே''

என இம்முனாஜாத்துப் பாடல் அமைந்துள்ளது.

அல்லாஹ் மீதும் பெருமானார் மீதும் பாடப்பட்ட முனாஜாத்துப்பாடல்களுக்கு அடுத்த நிலையில் அதிகமான

முனாஜாத்து பாடல்கள் முகியத்தீன் அப்துல் காதர் ஜீலானி அவர்கள் மீது பாடப்பட்டுள்ளன. உலக இறை ஞானச் செல்வர்களின் தலைவரான முகியத்தீன் ஆண்டகையிடம் தம் குறையிரந்து அருள் புரிய வேண்டும் பாடல்கள் பலப்பல உண்டு அவற்றுள் ஒன்று,

''எங்கே திரிந்தாலும்
எவ்வழில் சென்றாலும்
அங்கே உதவி செய்யும
அன்புடையார் தாங்களல்லோ
இங்கே அடிமைக்கிரங்கி
இரட்சித்து ஆண்டருளும்
செங்கமலப் பாதச்
செய்கு முகியத்தீனே'

என்பதாகும்.

மற்ற முஸ்லிம் புலவர்கள் இயற்றிய பாடல்களில் அல்லாஹ், இறைத்தூதர் அண்ணலார், இறைநேசச் செல்வர்கள் காதர் முகியத்தீன் ஜீலானி, இறையடியார்கள், பெருமானார் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மீதெல்லாம் முனாஜாத்துப் பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. எந்தப் புலவரும் பாடாத இரு நபிமார்கள் மீது பாடப்பட்ட முனாஜாத்துப் பாடல்கள் சாகுல் அமீதுப் புலவர் பாடிய ''சற்கீத சிந்தாமணி'' எனும் முனாஜாத்துப் பாடல்களில் காணப்படுகின்றன. அந்நூலின் தொடக்கப் பாடலில் கிளிறு நபி (அலை) அவர்கள் பேரிலும் இல்யாசு நபி (அலை) அவர்கள் பேரிலும் முனாஜாத்துப் பாடல்கள் அமைந்துள்ளன. இருவர் பெயரும் இணைந்தே இம் முனாஜாத்துப் பாடல்களில் இடம் பெற்றிருப்பது புதுமையாகும். ஒவ்வொரு பாடலிலும் இரண்டு நபிமார்களின் பெயரும் இணைந்த நிலையில் ''கிளறில்யாசு'' எனக் குறிக்கப்படுகின்றனர். இப்பாடல்களில் காணும் மற்றொரு சிறப்பம்சம் ஒவ்வொரு பாடலின் முதற் சீரும்

மடக்காகப் பயன்படுத்தப்பட்டிருப்பதாகும். சான்றாக ஒரு பாடலைப் பார்ப்போம்

"சிறப்புறும் நபிமார்க் கெல்லாம்
செய்யிதா யுதித்தென்னானாம்
சிறப்புறு மிறசூ லுல்லா திவ்விய
வாக்குப் போலும்
சிதப்புறும் தீனோர்க் அன்புசெயும் நபி
கிளிறில் யாசும்
சிறப்புறஞ் சரணமுத்தி செயம்பெறு
நாலெந் நாளோ"

இதன் ஆசிரியர் பெயர் ஒரு பாடலில் குறிப்பிடப் பட்டுள்ளது. தன் பெயர் அசன் அலி என்றும் தன் தநதை வழிப் பாட்டனாரின் பெயர் கந்தப் புலவர் என்றும் அவர் வகுதையைச் சேர்ந்தவர் என்றும் குறிக்கட பட்டுள்ளது. மற்ற முனாஜாத்துகளில் காணாத புதுமையாக, இம் முனாஜாத்துப் பாடல்களைப் படிப்போரை வாழி வாழி என வாழ்த்தும் போக்கையும் காணலாம.

"மலர்மக ளுவகை தாங்கி வருகலை
மகளிர் சேர்ந்து
உலவிய வகுதையின்சீ ருடையவன்
பரன்வாழ் கந்தப்
புலவர் பேரன்யா னென்று புகழசன்
அலிமு னாஜாத்து
இலகிய அமுதப் பாவை இயம்புபவர்
வாழி ஆமீன்."

இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்களால் இயற்றப்பட்ட பக்திப் பனுவல்களாகிய முனாஜாத்துப் பாடல்களில்தமிழ் யாப்பமைதி பெரிதும் பேணப்பட்டாலும் ஆங்காங்கே அரபி மொழி இணைவுக்கேற்ப சிறுசிறு மாற்றங்களைச்

செய்து கொள்ளத் தயங்கவில்லை. இத்தகைய இலக்கண வழுக்கள் தமிழ் மொழியைப் பொருததமட்டில் சரியாக இருக்கலாமேயொழிய அரபி மொழி இலக்கணத்தைப் பொருத்தமட்டில் சரியானதாகவே அமைந்துள்ளது. சான்றாக, தமிழ் மொழியின் உயிர் மெய் எழுத்துக்களில் ங, ட, ல, ள, ழ, ர, ற, ண, ன என்ற எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வராது என்பது விதி. ஆனால், அரபு மொழியில் எல்லா எழுத்துக்களுமே மொழிக்கு முதலில் வரும். எனவே, அரபு மொழி அமைப்பைப் பின்பற்றி, புலவர் நாயகம சேகனாப் புலவரும் வேறுசில புலவர் களும் தமிழ்ப் பாடல்களை, முனாஜாததுகளாகப் பாடி யளித்துள்ளனர். அரபு எழுத்துக்கள் ஒவ்வொன்றையும் முதலெழுத்தாகக் கொண்டு பாடப்பட்டுள்ள முனாஜாத் துப் பாக்களின் மூலம் இஸ்லாமிய தத்துவ ஞானம் சிறப் பாக விளக்கப்படுகிறது. சான்றாக, அரபு அரிச்சுவடியின் 23வது எழுத்து 'லாம்' என்பதாகும். தமிழில் 'ல' எனும் உயிர் மெய்யெழுத்து மொழிக்கு முதலில் வராது ஆயி னும் புலவர் நாயகம் அவர்கள் தம் முனாஜாத்துப் பாடல் ஒன்றின் முதலடியின் முதலெழுத்தாய் 'ல' கரத்தை அமைத்துப் பாடியுள்ளார்

''லவுலாக்க ஆலமெல்லா நான்படை
யேனென் றோதும்
அவுலாநீ ராகை யாலும் அறுவாகுக்
குயிர்நீ ராலே
கவுலான துள்ள நோக்கிக் கட்கடை
யென்பா னோக்கு
மவுலா அலா ழறாதி முகம்மது
நபியுல்லாவே''

எனும் அப்பாடலில் 'ல' கரத்தை முதலெழுத்தாகக் கொண்டு 'லவுலாக்க'எனும் சொல்லுடன்தொடங்குகிறது

அச்சொல்லுக்கேற்ப நான்கு அடிகளிலும் எதுகை அமைத்துள்ளது இவ்வெதுகைச் சொற்கள் நானகுமே அரபுச் சொற்களாக அமைந்துள்ளது கவனிக்கத்தக்கதாகும். இங்கு 'ஆலம்' எனும அரபுச் சொல் பொருள் பொதிந்ததாக அமைந்துள்ளது. இறைவன் தன் திருமறையில் ''அண்ணலாரைப் படைததிராவிட்டால் உலகங்களையே படைத்திருக்க மாட்டேன்' என இறைவன் தன் திருமறையில் குறித் திருப்பதற்கொப்ப, இங்கே ஆலம்' எனும் அரபுச் சொல்லை எல்லா உலகங்களையும் குறிக்கும் வகையில் பயன்படுத்தியுளார் இவ்வாறு அரபு எழுத்துக்களை சொற்களை அப்படியே பயன்படுத்தி மறைவழி இறையருளை வேண்டும் வகையில் பாடியுள்ளார்.

இதேபோன்று பதுறுத்தீன் புலவர் இயற்றிய முகியித்தீன் முனாஜாத்து நூலில் இடம்பெற்றுள்ள 35 பாடல்களில் முதல் :0 பாடல்களிய் அரபு அரிச்சுவடியிலுள்ள 29 எழுத்துக்களில் வரிசைக்கிரமமாக ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு பாடலிலும் முதல் எழுத்தாக அமைந்துள்ளது. 21வது எழுத்தான 'காப்' இரண்டு பாடல்களில் முதல் எழுத்தாக இடம் பெற்றுள்ளது. இப்பாடல்களின் இறுதியடியின் இறுதிச் சொல் பெருப்பாலும் 'முகியித்தீன்' என்றே முடிகிறது.

பதுறுத்தீன் புலவரின் முகியித்தீன் முனாஜாத்துப் பாடல்களில் பாடலின் முதல் அடியின் முதலெழுதது அரபு எழுத்துக்களின் ஒலிபெயர்ப்பாக இடம் பெற்றிருப்பதுடன், ஒவ்வொரு அடியிலும் இரண்டு மூன்று அரபுச் சொற்கள் சராசரியாக இடம் பெற்றுள்ளன,

' அலிபதின் அஸ்லாய் நின்ற அட்சரஞ்
சுழிந்து வீசி
றலிபெனும் இஷ்கு மீறி அஹது
மீமஹாு மதான

மெலிவிலா சிபத்துள் மீமாய்
வெளிதரு முகியித்தீனே''

எனும் இப்பாடல் அடிதொறும் அரபுச் சொற்கள் பல இடம் பெற்றுள்ளன.

பதினெட்டாவது அரபு எழுத்து 'ஐன்' என்பதாகும். ஒரு பாடலில் இந்த அரபு எழுத்தின் தமிழ் ஒலி பெயர்ப்பு அடியின் முதலில் இடம் பெற்றிருப்பதோடு அஃதே முற்று மடக்காக நான்கு வரிகளிலும் வந்து கருத்து வளமூட்டு கின்றன.

''ஐனது லாத்து ஐனிய பேமாய்
ஸாரினுள்ளாய
ஐனது அவ்வ லான அஹ்மது
நபியுள் லாவின்
ஐனது ஆரி பான அவிததாம்
பொருளை யென்னுன்
ஐனதாற் காட்சி காண அருளும்
யாமுகி யித்தீனே''

என்பதாகும் அப்பாடல் மேலும் அரபுச் சொற்களை ஒலி பெயர்ப்பாக எழுத நேரும்போது கிரந்த எழுத்துக்களைத் தாரளமாய்க் கையாள்வதையும் காணமுடிகிறது. இயன்ற வரை அரபுச் சொற்களை சிதைவில்லாமல் படிக்கும் போது ஒலிக்க வேண்டும் என்பது ஆசிரியர் கருத் தாயிருக்கலாம்.

இறைவனிடம் குறையிரந்து அருள வேண்டும் பக்திப் பாடல்களான முனாஜாத்து நூல்கள் தமிழில் பதினைந் துக்கு மேல் இயற்றப்பட்டுள்ளன. இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்களால் உருவாக்கப்பட்ட இம் முனாஜாத்து நூல் கள் எளிய நடையில அமைந்து, சாதாரண தமிழறிவுள்ள முஸ்லிம்களாலும் தெளிவாகப் புரிந்து கொள்ளும் வகை யில் நாள்தோறும் பாடப்பட்டு வருகின்றன.

## படைப்போர் இலக்கியங்கள்

இதுவரை நாம் பார்த்த புதுவகை இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வடிவங்கள் அரபி,பெர்சிய மொழிகளில் அமைந்துள்ள அமைப்பை-பெயரை அடியொற்றி தமிழில் அறிமுகப்படுத்திய இலக்கிய வடிவங்களாகும். தமிழ்க்கேயுரிய முறையில் தனித்துவமுள்ள புதுவகை இலக்கிய வடிவங்களைத் தமிழ்ப் பெயராலேயே தமிழில் தோற்றுவித்துத் தமிழைப் பல்லாற்றானும் போற்றி வளர்த்துள்ளனர் முஸ்லிம் தமிழ்ப்புலவர்கள். அவற்றுள் 'படைப்போர்' என்பது குறிப்பிடத் தக்க இலக்கிய வடிவமாகும். இப்புது வகை தமிழ் இலக்கிய வடிவத் தோற்றத்திற்கு மூலாதாரமாக அமைவது அரபி மொழியில் எழுந்த படைப்போர் பற்றிய இலக்கியங்களாகும்.

இவ்வகையில் தமிழில் பரணி இலக்கியங்கள் பலவுண்டு ஆனால் அவை போரில் வெற்றி பெற்றுத் திரும்பிய மன்னனின் வெற்றிப் பெருமிதத்தைக் கற்பனை வளத்தோடு மிகுதிப்படுத்திப் பாடுபவைகளே தவிர முஸ்லிம் தமிழ்ப் புலவர்களால் உருவாக்கப்பட்ட படைப்போர் இலக்கிய அமைப்பு முறையில் உருவானவை அல்ல.

ஏறக்குறைய ஆங்கிலத்தில் வழங்கப்பட்டு வரும் ''வார் பேலட்'' (war Ballad) எனும் இலக்கிய வகையினவாகத் தமிழில் உருவானவை 'படைப்போர்' இலக்கியங்கள் எனக் கூறலாம். இதிலுள்ள படை, போர் என்ற இரு சொற்களும் ஒரே பொருளைக் குறிப்பனவாகும்.

போர் நிகழ்ச்சிகளையும், படை நிலைகளையும் படை நடத்தும் பாங்கையும், வீரர்களின் ஒலி முழக்கங்களையும் அவர் தம் வீர உணர்வுகளையும், படைவீரர்களின் தோற்றங்களையும் படைக்கள வர்ணனைகளையும், அடித்தள

மாகக் கொண்ட படை நூல்கள் தமிழில் இருப்பதாகத் தெரியவில்லை. இக்குறையை நீக்க எண்ணிய இஸ்லாமி யத் தமிழ்ப் புலவர்கள் படைப்போர் இலக்கியங்கள் பல வற்றைத் தமிழில் யாத்துள்ளனர்.

மேலும், இவ்வகை இலக்கியம் உருவாக வேறொரு காரணமும் இருந்திருக்க வேண்டும் இஸ்லாமிய நெறிகள் கொள்கை கோட்பாடுகளிடத்து நீங்காப் பற்றும் பாசமும் கொண்ட முஸ்லிம்கள் அவற்றை வீரப் பனுவல்களாக்கி, நெஞ்சத்திலிருத்திக் கொள்ள விழைந்ததும் காரணமாக இருக்கலாம். இதற்குப் பாலுணர்வு அடிப்படையிலான பரணி இலக்கியங்களில் காணப்படும் கடைதிறப்பு, காளி பாடியது, பேய் பாடியது, பேய் முறைப்பாடு, ;அவதாரம் ஆகிய வைப்பு முறைகள் இஸ்லாமிய நெறிமுறைகளுக்கு முற்றிலும் மாறுபட்டனவாக அமைந்துள்ளதன் காரண மாக தேவையை அனுசரித்துப் புதுவகை இலக்கியத்துறை யாகப் 'படைப்போர் எனும் இலக்கிய வடிவத்தை முஸ் லிம் தமிழ்ப் புலவர்கள் உருவாக்கியிருக்கலாம். ஆயினும் பரணி இலக்கியத்திற் காணும் 'போர் பாடியது' என்ற அமைப்பினை மட்டும் முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இஸ்லாமிய வரலாற்றின் தொடக்க காலத்தில் நிகழ்ந்த புகழ் பெற்ற போர்களான பத்ரு, உஹது, ஹுசைன், கைபர், அகழப் போர், கர்பலா போன்றவிடங்களில்நடை பெற்ற போர்களைப் பற்றிப் புலவர்கள் பாடியதாகத் தெரியவில்லை. ஆயினும், பெருமானார், அலி (ரலி),பெரு மானார் பேரர்களான இலாம் ஹஸன். இமாம் ஹுசைன் போன்றவர்கள் தொடர்புடைய வரலாற்று நிகழ்ச்சிக்கூறு களையே மையப் பொருளாக்கி, வேறு சில வீர மாந்தர் களைக் கற்பனையாகப் கதைப்போக்கோடு படைத்து, இணைத்து படைப்போர் இலக்கியங்களை உருவாக்கியுள் ளனர். சில போர்கள் வரலாற்றுப் பின்னணியுடையன போல் தோற்றம் தரும கற்பனைப் போர்களாகும்.

தமிழில் இதுவரை பதின்மூன்று படைப்போர் இலக்கியங்கள் முஸ்லிம் தமிழ்ப் புலவர்களால் எழுதப்பட்டுள்ளன. இவையனைத்தும் முஸ்லிம்கட்கும் முஸ்லிமல்லாதவர்கட்குமிடையே நடைபெற்ற போர்களாகும். இவை வழக்கமான மண்ணாசை' பெண்ணாசை போன்றவைகட்காக நடைபெற்ற போர்கள் அல்ல. இவையனைத்தும் இறைநெறியை இஸ்லாமியக் கொள்கையை கோட்பாடுகளை நிலை நிறுத்தும் பொருட்டு நடைபெற்ற போர்களாகவே அமைந்துள்ளன என்பது எண்ணத் தக்கதாகும்.

இப்படைப்போர் இலக்கியங்களை ஆய்வாளர் இருவகைகளாகப் பிரிப்பர்.காப்பியத்திற்குண்டான இலக்கண அமைப்போடு ஓரிரு சிறு மாற்றங்களுடன் அமைந்தவைகளைப் 'படைப்போர்' காப்பியங்கள் என்றும் காப்பிய அமைப்பு முறையினின்றும் சற்று வழுவி,காப்பியக் கட்டுக்கோப்பின்றி, ஓசை நயம், கள வர்ணனை போன்றவற்றில் அதிகக் கருத்தூன்றி சாதாரண மக்களின் சிந்தையை வீர உணர்வால் நிறைக்கும் வண்ணம் எழுதப்படும் சிறுசிறு போர்களைப் பற்றிப் பாடும் படைப்போர் இலக்கியங்களை நாட்டுப்புற வீரக் கதை இலக்கியங்கள் என்றும் பாகுபடுத்திக் கூறுவர்.

படைப்போர் இலக்கியங்கள் தமிழில் எழுதுவதற்குத் தோன்றாத் துணையாக அமைந்த நூல் 'கிதாபுல் மகாஸி' எனும் அரபி மொழி நூலாகும். பெருமானார் காலத்தில் நடைபெற்ற பல்வேறு போர்களைப் பற்றிய செய்திகளையெல்லாம் தொகுத்தளிக்கும் நூலாகும் இஃது. இதன் ஆசிரியர் முகம்மது இப்னுல் உமறுல் வாகிதி என்பவராவார்.

படைப்போர் இலக்கியங்களில் காலத்தால் மிகவும் முற்பட்டதாகக் கருதப்படும் நூல் மதுரையைச் சேர்ந்த வரிசை முகியித்தீன் புலவரால் இயற்றப்பட்ட "சக்கூன்

படைப்போர்'' ஆகும். இன்றைக்குச் சரியாக முன்னூறு ஆண்டுகட்கு முன்பாக 1686-ம் நுண்டில் இந்நூல் இயற்றப்பட்டதாகக் குறிக்கப்படுகிறது. இந்நூலே ''படைப்போர்' இலக்கிய வகையை முதன்முதலாகத் தொடங்கி வைத்ததோடு இவ்வகை இலக்கியங்கள் பலப்பலவாக உருவாக வழிகாட்டியாகவும் அமைந்தது எனலாம்.

சக்கூன் படைப்போர்., சக்கூன் எனும் முஸ்லிமல்லாத ஈராக் நாட்டு மன்னனுக்கும் பெருமானார் (சல்) அவர்களுக்கும் இடையே நடந்த போரை விரித்துரைப்பதாகும். இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளாது அதற்கு மாறுபட்டு நின்ற ஈராக் மன்னனான சக்கூன், இறைதூதராம் பெருமானாரோடு பொருத முனைந்து போருக்கெழுந்தான். ஆற்றலோடு பெரும்படை கொண்டு போர் செய்தும் இறுதியில் பெருமானாரிடம் தோல்வி கண்ட சக்கூன் மன்னனும் அவன கூட்டத்தாரும் இஸ்லாத்தை ஏற்றனர். முஸ்லிமாகிவிட்ட சக்கூன் மன்னனுக்கே வெற்றிகொண்ட இராக் நாட்டைப் பெருமானார் மீண்டும் ஒப்படைத்து தீனோங்க உழைக்கச் செய்தார். இரான் நாட்டில் தீன் பயிர் செழித்துவளர சக்கூன் மன்னன் முனைந்து பாடுபட்டான் என முடிகிறது 'சக்கூன் படைப்போர்' இதனை வருனக முகியித்தீன் புலவர்,

''மற்றுமரசர்சள் வந்து திறையளக்க
குற்றமொன்றில்லாத கோனாம் சக்கூனரசும்
செங்கோல் செலுத்திந் தேசமெல்லாம்
தீன்விளங்க
மங்கா திருமறையால் வாழ்ந்திருந்தாரம்மானை '

எனக்.கூறி விளங்க வைக்கிறார்.

இந்நூலாசிரியர் எளிய உவமைகளின் மூலம் ஆழிய உணர்வுகளை உருவாக்குவதில் தனித்திறமைபெற்றவராகத்

திகழ்கிறார். போரின் தொடக்கத்தில் பெருமானார் அவர்கள் அசுகாபிமார்களோடு இருக்கும் காட்சியைக் கூறும் போது,

''வட்டமதி தன்னை வான்மீன்கள் சூழ்ந்ததுபோல்
இட்டமுள்ள நந்நபியை எல்லவரும் சூழ்ந்துவர''

எனக் கூறுவதன்மூலம் பன்மீன் தடுவண் அப்பன் மீனெனப் பெருமானார் இருந்த காட்சியையும் சூழலை இனிது படம் பிடித்துக் காட்டி விடுகிறார்.

காப்பிய இலக்கண அமைப்போடு தமிழில் முஸ்லிம் புலவர்களால் உருவாக்கப்பட்ட படைப்போர் இலக்கியங்களில் குஞ்சுமூசு லெப்பை ஆலிம் புலவர் இயற்றிய ''இரவுசுல்கூல் படைப்போர்'', ''செய்திதத்துப் படைப்போர்'' ஆகிய இரு படைப்புகளும் குறிப்பிடத்தக்கவைகளாகும் இவ்விரு நூல்களும் முறையாக நாட்டுப் படலம் நகரப் படலம் முதலியன அமைந்த காப்பியங்களாகும்.

'இரவுசுல்கூல் படைப்போர்' 45 படலங்களைக் கொண்டு 2383 விருத்தங்களால் ஆனது. ஒவ்வொரு படலமும் குறைந்த அளவு 10 பாடல்களையும் அதிகபட்சம் 189 செய்யுட்களையும் கொண்டதாகும்

இந்நூல் பாட்டுடைத் தலைவியின் பெயரால் 'சல்கா படைப்போர்' எனவும் அழைக்கப்படுகிறது கடவுள் வாழ்த்துச் செய்யுளில்,

''........கண்ணுறக் காண்கவுற்ற
கன்னி சல்காப் போர்ப்பாட
வெண்ணுதற் கடங்காதான
வேகனே காப்பு நீயே''

எனக் கூறுகிறார். இதன் மூலம் தமிழ்க் காப்பியங்களின் பாட்டுடைத் தலைவிகளான 'மணிமேகலை' 'குண்டலகேசி' என அமைந்திருப்பது போன்று இப்படைப்போரின் பெயரும் 'சல்காப் படைப்போர்' என அழைக்கப்படுகிறதோ என எண்ணத் தோன்றலாம்.

இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் படைத்தளித்த படைப்போர் இலக்கியங்கள் முஸ்லிமல்லாத எதிர்த் தரப்புத் தலைவர்களின் பெயரைக் கொண்டே அமைந்திருக்கிறது, அவ்வழக்கைப் பின்பற்றி குஞ்சுமூசுப் புலவர் இஸ்லாமியர்களை எதிர்த்துப்போரிட்ட இரவுகல்கூல் என்பவனின் பெயராலேயே ''இரவுசுல்கூல படைப்போர்'' எனப் பெயரிட்டிருக்கலாம். கன்னி சல்கா தொடக்கத்தில் முஸ்லிமல்லாதவளாக இருந்து பின்னர் பெருமானார் வழியைப் பின்பற்றி இஸ்லாமானவள். அவள் முஸ்லிமல்லாத சூழலில் காப்பியம் தொடங்குவதால், அவள் பெயரை ஒரு வேளை, இந்நூலுக்கு இட்டிருக்கலாம். காப்பியத்தில் முகப்புப் பக்கத்தில் இந்நூலாசிரியர் குஞ்சமூசுப் புலவர் அவர்கள் ''சல்காப் படைப்போர் என்று வழங்கா நின்ற இரவுசுல்கூல் படைப்போர்'' என இரு பெயராலும் அழைக்கிறார். சல்கா முஸ்லிமல்லாதவளாக இருந்தாலும் இஸ்லாத்தில் இணைந்த பின்னர் அவள் பெயரைக் காப்பியத்திற்கு இடுவது 'படைப்போர்' இலக்கியக் கொள்கைக்கு மாறுதலாக இருக்குமோ என்ற ஐயத்தில் மரபு காக்க வேண்டி இஸ்லாத்தின் விரோதியாகப் போரிட்டு மடிந்த 'இரவுசுல கூல்' என்பானின் பெயராலேயே இந்நூல் அழைக்கப்பட்டிருக்கலாம்,

சாதாரணமாக யார் படையெடுத்துச் செல்கின்றாரோ அல்லது போருக்கு யார் காரணமாக அமைகின்றாரோ அவர் பெயராலேயே இலக்கியப் படைப்பின் பெயர் அமைவதுதான் மரபு. ஆனால், முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் இயற்றிய படைப்போர் இலக்கியங்கள் அனைத்துமே

முஸ்லிம் அல்லாதவர்களின் பெயராலேயே அமைந்துள்ளன. இதற்குச் சரியான காரணம் இருக்கின்றது. அமைதியைப் போற்றும் சாந்தி மார்க்கமான இஸ்லாத்தில் ஆக்கிரமிப்புக்கு இடமே இல்லை. ஒரு முஸ்லிம் முதலில் யார் மீதும் போர் தொடங்கவோ அன்றி எதிரியின் நிலத்தையோ பொருளையோ ஆக்கிரமிப்புச் செய்யவோ அனுமதி இல்லை. அதேசமயம் பிறர் படையெடுத்து வரும்போதோ ஆக்கிரமிப்புச் செய்யும் போதோ தற்காப்புக்காகப் போரிடுவதை இஸ்லாம் தடை செய்யவில்லை. எனவே தான், முஸ்லிம்களின் மீது ஆக்கிரமிப்பாகப் படையெடுத்து வநத முஸ்லிமல்லாத எதிரிகளின் பெயராலேயே 'இரவுசுல்கூல் படைப்போர்', 'செய்யிதத்துப் படைப்போர்', 'இபுனியஅ படைப்போர்', 'வடோச்சிப் படைப்போர்', 'உச்சிப் படைப்போர்' என அழைக்கப்படுகின்றன.

ஆசிரியர் குஞ்சுமூசு ஆலிம் லெப்பை அவர்கள் இஸ்லாமிய ஞானம் மிக்கவராதலின் திருமறையின் தொடக்க வசனத்தின் தமிழ்ப் பிழிவாகத் தன் நூலின் காப்புச் செய்யுளை அமைத்துப் பாடியுள்ளார்.

> ''எல்லாத்துதி யும்புகழ் எவ்வகையும்
> நல்லாலம் அனைத்துடன் நடத்தியருள்
> அல்லாவொரு வற்கவை யாகும்எனும்
> சொல்லானது கொண்டு தொடங்குமால்''

என்பது அப்பாடல்.

சாதாரணமாக இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்களில் காப்புச் செய்யுட்களாக நான்கைந்து பாடல்கள் இடம் பெறுவதுதான் வழக்கம். ஆனால், குஞ்சுமூசுப் புலவர் அவர்கள் தம் இரவுசுல்கூல் படைப்போர் காப்பியத்துள் பதினொரு பாடல்களைக்காப்புச் செய்யுளாகப்பாடியிருப்பது அவருக்கு இறைவன் மீதுள்ள பக்தியுணர்வையும் பெரு

மானார் மாட்டுக் கொண்டுள்ள பேரன்பையும் இஸ்லாத்தின் மீதுள்ள இணையிலாப் பற்றையும் விண்டுரைப்பதாயுள்ளது. அதிலும் திருமறை வசனங்களின் பிழிவாகப் பாடல்களை அமைத்திருப்பது எண்ணத்தக்கதாகும்.

'இரவுசுல்கூல் படைப்போர்' இலக்கியத்தின் தலைவியாகிய சன்னி சல்காவை முன்னிருத்தியே பெண்களைப் பற்றிய வர்ணனைகளை விரிவாகச் செய்ய வேண்டிய நிலை. இதனை மிகச் சிறப்பாகச் செய்து காவியத்துக்கு மெருகூட்டி விடுகிறார். அதிலும் பிற இலக்கியங்களில் வரும் காப்பியத் தலைவியரை அடிமுதல் முடிவரை விஸ்தாரமாக வர்ணிக்கும் முறையையும் பின்பற்றக் கவிஞர் தவறவில்லை, ஆனால் இவ்வகையான வர்ணனைகளை சல்கா இஸ்லாத்தை ஏற்கு முன்னரே வர்ணித்துவிடுகிறார் இஸ்லாத்தோடு இணைந்த பின்னர் ஒரு முஸ்லிம் பெண் மணியை இவ்வாறு வர்ணித்துப் போற்றுவது இஸ்லாமிய நெறிகட்கு முரணானது என்பதைச் சொல்லாமல் சொல்லிவிடுகிறார்.

கன்னி சல்கா பன்மீன் நடுவண் அப்பன் மீனெனத் திகழும் சந்திரனின் தண்ணொளியும் பகலவனின் வெண்ணொளியும் மிக்காளாக விளங்குகிறாளாம். இவ்விரு ஒளியிணைந்த பேரொளிப் பிழம்பான மேனி எழிலோடு உருவாக்கப்பட்டவரோ எனப் புலவர் ஐயுறுகிறார். புள்ளி பெய்த பட்டாடையணிந்து, பொன்னும் மணியும் பூண்டு அழகோவியமோ அன்றி அழகுத் திருவுருவோ என எண்ணி வியக்கும் வண்ணம் எழில் தோற்றமளித்தாள் என்பதை,

''வெள்ளிக் கரசாம் விதுலமுதும்
வெய்யோன் கதிரும் சரிகலந்தே
தெள்ளித் தெளித்து வடித்ததனால்
தெரிவை யுருச்செய்து இயற்றியதோ

புள்ளிப் படமார் பணிமணியோ
பொன்னோ நவரத்தின அறலை
அள்ளிப் படைத்த வடிவினளோ
அவர்கள் திருமுன் அணுகினளே'

என அழகிய சொல்லோவியமாய்த் தீட்டிக் காட்டுகிறார்.

வீரத்தின் திருவுருவாகத் தோற்றமளித்த சல்காவின் இயற்கை அழகைப் பாராட்ட முனைந்த குஞ்சுமூசுப் புலவர்,

''மலையினில் பயிலுமிளம்பிடி யானை
வருகின்ற சாயலோவல்லால்
இலங்கிய வருங்கண் தூவியின் தோகை
இணையடி பெயர்த்ததோ கமலத்
துலவியநறும் போதினிற்றிரி பனங்கள்
உலவலோ சொல்லரு நடையாள்
மெலமெல நடந்து தத்தைதா யிருக்கும்
விகசிதவிடத்தை நண்ணினளால்''

என சல்காவின் மேனியழகை. ஒயிலான நடையை யானையின் ஒய்யார நடையோடும் மயிலின் தளிர் நடையோடும் தாமரையின்கண் தங்கியுள்ள அனைத்தின் மென்னடையோடும் ஒப்பிட்டுக் காண இயலாது தவிப்பதாகக் கூறுவது ஆசிரியரின் அழகுணர்வை வெளிப்படுத்துவதாயுள்ளது.

சல்காவின் அழகை வர்ணித்து மகிழ்வூட்டும் ஆசிரியர் போர்க்களத்தில் இரவுசுல்கூலை எதிர்த்துப் போரிடும் வீரத்தை—போர்த்திறத்தை நரர்புலியான அலி (ரலி) அவர்களே கண்டு வியக்கும் வண்ணம் போரிட்டதை ஆசிரியர்,

''இருவகைப் படையும் எதிர்த்தமராட
விலங்குமின்னென வரும்சல்கா

பரிமுனம் விடுத்தே அலிமுதல் யாரும்
பார்த்து அதிசயத்திடப் பொரவே
ஒருவருக்கொருவர் ஒருபுற மீண்டவொரு
புறக்குழுவொடு மீண்டத்
தரியவர் மிகுபேர் இறநதனர் உய்த்தோர்
தமக்கெனச் சிறை பிடித்தனரன்றே''

எனக் கூறி சல்காவின் வீரத்தை அஞ்சாநெஞ்சை பெருமித உணர்வு பொங்கப் பாடி விளக்குகிறார்.போரிடும் சூழலையும் போர்க்களச் செய்திகளையும் விவரிக்கும்போது நம்மைப் போர்க்களத்துக்கே கொண்டு சென்று நேரில் காணுவது போன்ற மனப்பிரமையை ஏற்படுத்து விடுகிறார்.

அதுமட்டுமா படைவீரர்களின் போர்க்கள வருகையைக் கூறும்போது, வில்லேநதியவர்களும், வேல் பிடித்தவர்களும், கல்லெடுத்து வந்தோரும், கசையைக் கையிற் கொண்டவர்களும் போர்க்களத்தே வந்துகுழுமினர் உடற் கட்டுடையரான மல்யுத்த வீரர்களும் வாள்பிடித்த வீரர்களும் அவர்களை ஒழுங்கு நடைபோட ஆணை பிறப்பிக்கும் மேலாண் வீரர்களும் வந்து குழுமுவதை,

''வில்லினர் மிடைந்திட வேன்மி டைந்திடக்
கல்லினர் மிடைந்திடக் கசைமி டைந்திடச்
மல்லினர் மிடைந்திட வாண்மி டைந்திடச்
சொல்லினர் மிடைந்திடத் துகண்மி டைந்திட

என ஓசை நயம் ததும்பக் கூறுகிறார்.

இதேபோன்று செய்யிதத்துப் படைப்போரில் போர்க்களம் நோக்கிச் செல்லும் அபூபக்கர் (ரலி) அவர்களின் குதிரைச் சவாரியை விண்டுரைக்க வந்த புலவர்,

காலினிக் ஐங் கதியைல் காட்டி கருத்தினில்
திடத்தைக் காட்டி
மேலினால் வியர்ப்புக்காட்டி விழியினில்
எரியைக் காட்டி
தாதுவின் தலைலையக காட்டி தரைவிடும்
துகளைக் காட்டி
வாலினில் விசையைக் காட்டி வயப்பரி
நடந்ததம்மா!

என வியப்புணர்வோடு ஓசைநயம் பொங்கக் கூறி இன் புறுத்துகிறார்.

போரைப்பற்றிய செய்தியேயாயினும் இஸ்லாமிய நெறிகளை, தீனின் மேன்மையை எடுத்துக்கூறத் தவற வில்லை. இரவு சுல்கூல் படைப்போரில் மதீன நகர்ப் படலத்தில் உள்ள ஒரு பாடல் திருக்குர்ஆனை ஒளியூட்டும் விளக்காகவும் கலிமாவை நெய்யாகவும் தீன்நெறியைத் திரியாகவும் உருவகித்துப் பாடியிருப்பது வெகு அருமை யாகும். அப்பாடலில்,

"வெறறியி சூல்மறை விளக்கினை நிறுத்தி
உற்றகலி மாநெயை உவப்பொடு நிரப்பிக்
குற்றமறு தீன்திரி குயிற்றியிசு லாந்தீப்
பற்றுவர்கள் எங்குமுயர் பாவையிள மின்னார்"

எனக் கூறுகிறார் குஞ்சுமூசுப் புலவர் அவர்கள்.

படைப்போர் இலக்கியங்களில் குறிப்பிடத்தக்க மற்று மொரு நூல் 'ஐந்து படைப்போர்' ஆகும். அசன் அலிப் புலவரால் பாடப்பட்ட இவ்விலக்கியத்தில் ஐந்து படைப் போர்கள் அடங்கியுள்ளன. இஸ்லாமியப் படைகட்குத் தலைமை தாங்கிய அலி (ரலி) அவர்களை எதிர்த்து வந்த இஸ்லாமிய விரோதிகளான ஐந்து அரசர்களை எதிர்த்துப்

போரிட்டு வெற்றி கொண்ட வரலாற்றை விரித்துரைக்கிறது இந்நூல. முஸ்லிம்கள் மீது படையெடுத்து வந்த முஸ்லிமல்லதாருக்குத தலைமையேற்றுப் போரிட்ட அரசர்களான இபுனியன், உச்சி தாகி, வடோச்சி, இந்திராயன் ஆகியோரின் பெயராலேயே இவ்வைந்து படைப்போர்களும் தனித்தனிப் பெயரில் இபுனியன் படைப்போர், தாகிப் படைப்போர், வடோச்சிப் படைப்போர், இந்திராயன் படைப்போர் என அழைக்கப்பட்டாலும் இவ்வைந்தும் முஸ்லிம்களின் சார்பில் தலைமையேற்றுப் படை நடததிய மாவீரர் அலி (ரலி) அவர்களோடு பொருத காரணத்தால் ஐந்து படைப்போர்களும் இணைந்த நிலையில் ஐந்து படைப்போர்' என அழைக்கப்படலாயிற்று.

சுமார் இருநூறு ஆண்டுகட்கு முன் எழுதப்பட்ட இந்நூலின் ஆசிரியர் தென்பூவை எனும் ஊரைச் சேர்ந்தவர்; கந்தப்பிள்ளை என்பாரின் திருமகனாவார்; தென்பூவை வாழ் மக்களிடையே அரங்கேற்றப்பட்டது என்ற தகவல்களையெல்லாம்.

''திருவளரும் தென்பூவை சேர்ந்த முஸ்லிம்களிலே
மருவளரும் திண்புயத்தான் வாகுகந்தப்பிள்ளைஅதன்
ஆதியருளாலே அசன் அலியென்றோதும் பையல்
நீதிபெறப் பாடி நிகழ்த்தியரங் கேற்றினனே''

எனத் தோற்றுவாய்ப் பாடல் மூலம் தெளிவாக்குகிறார்.

இந்நூல் உருவாகத் தோன்றாத் துணையாகப் பொருளுதவி செய்த வள்ளல் பெருந்தகை ஆரைநகர் ராவுத்தப்பிள்ளை என்பாரை நன்றியுடன் நினைவுகூற இந்நூலாசிரியார் தவறவில்லை. ஐந்து படைப்போர் ஆக்கம் பெறத் துணை நின்ற கொடை நாயகருக்கு வல்ல அல்லாஹ்வின் பேரருள் பொழிய இருகரமேந்தி இறையருள்வேண்டுகிறார்.

''இம்மா நிலமதனின் எல்லவரும் கேட்பதற்குப்
பெம்மா னினல்லா பெரிய வருளாலே
அம்மானை பாட ஆனவுரைதான் கொடுத்தார்
இம்மை மறுமைக் கிலங்கும் புகழாளர்
அஞ்சு படைப்போராக அருமையுடன் பாடுதற்கு
வஞ்சகமில்லா வரிசைபெறும் ஆரை நகரர்
ஆதியருள் பெற்ற அஹ்மதென்போர் நற்சுதன்மா
நீதி றாவுத்த நிதிகோடி தானீந்தான்
அம்மானைசேர்க்க அரியகொடை தந்ததனால்
மெம்மா னவற்குப் பெரும்பதவி செய்திடுவான்''

எனக் குறிப்பிட்டுப் பேற்றும் ஆசிரியன் நன்றி மறவாத் தன்மை கண்டு உவக்கிறோம்

''ஐந்து படைப்போர்'' நூலின் அமைப்பு முறையை நோக்கும்போது ஒரே இலக்கியம்போல் தோற்றமளிப் பினும் அவற்றுள் தனித்தனியே அமைந்த காப்புச் செய் யுட்களும் தனித்தனியான கதைகளும் இதனை படைப் போர்களைப்பற்றிய தொகுப்பு நூலாகவே காட்டுகிறது. காப்புச் செய்யுட்களாக அமைந்து ஐந்து வெண்பாக் களைத் தவிர்த்து, இந்நூல் இரண்டாயிரத்து எழுநூற்றி ஐம்பத்திரண்டு அம்மானைக் கண்ணிகளைக் கொண் டுள்ளது. ஈரடிகளில் அமைந்த அம்மானைக் கண்ணிப் பாடல்கள் ஓசையினிமை மிக்க ஆங்கில படைப்போர் செய்யுள் வடிவான ஈரடி வீரப் பாடல்களையே நினை வூட்டுகின்றன. எளிய நடையில் இனிய அம்மானைக் கண்ணிப் பாடல்களாலான இந்நூல் நாட்டுப்புற இலக் கியமாகவும் கருதத்தக்க அளவில் அமைந்துள்ளது எனலாம்,

இறைவனின் காப்பைத் தேடி அவனருளை வேண்டி நூலைத் தொடங்கும் ஆசிரியர், நூலின் தொடக்கத்தி லேயே கதையைப் படிப்போரும், சொல்லக் கேட்போரும் இறையருள் பெற்றோராய்ச் சிறப்புடன் வாழ,

"ஐந்து படைப்போரை அழகாய் படித்தோரும்
சிந்தையுற்று கேட்போரும் சிறப்பாகவே வாழி"

என வாழ்த்துவது இவர்தம் உயர்பண்பை எடுத்துரைப் பதாய் அமைந்துள்ளது.

ஐந்து படைப்போரில் முதல் போராக அமைவது இபுனியன் படைப்போராகும். குறாசான் எனும் நாட்டை ஆண்டுவந்த கொடுங்கோல் மன்னன் இபுனியன் என் பான், தன் நாட்டைத் தீய வழியில் செலுத்தி, மக்களைக் கொடுமைக்குள்ளாக்கி வந்தான். இவனது தவறான ஆட்சியில் மக்கள் அடைந்த பெருந்துயருக்கு அளவே யில்லை இந்நிலை கண்டுணர்ந்த பெருமானார் அவர்கள் அவனுக்கு நறபுத்தி புகட்டி, நல்வழிகாட்ட காலித் எனும் அறிஞரைத் தூதனுப்பினார். காலிதின் ஆனற அறிவுரை களைக் கேட்ட கொடுங்கோலன் இபுனியன் காலிதை ஏள னம் செய்ததோடு தன்னை நல்லாற்றுப்படுத்தத் தூதனுப் பிய பெருமானனாரயும் ஏசிப் பேசினான். மதீனா மீது படையெடுத்து பெருமானரை அழிப்பதாகவும் வஞ்சினம கூறினான். இதனை அறிந்த அண்ணலாரும் அவர்தம் உற்ற தோழர்களான அலியார், அபூபக்கர்; உமர், உது மான் ஆகியோரும் மற்றவர்களும் கவலை கொண்டனர். கொடுங்கோலன் படையெடுத்தால் அதனைச் சமாளிக்க வேண்டிய ஏற்பாடுகளையும் செய்யத் தொடங்கினர். இடையே இபுனியனுக்கு நல்லறிவு புகட்ட இறுதி வாய்ப் பாக மீண்டும் தூதனுப்பப் பட்டது. பெருமானாரின சமாதானத்தை ஏற்காததோடு முஸ்லிம்கள்மீது படை யெடுக்கவும் ஆயத்தமானான். இந்நிலைவுணர்ந்த அண்ண லாரும், அலியார் தலைமையில் இபுனியனை எதிர்க்கப் படையனுப்புகிறார். இருபடைகளும் பொருதுகின்றன. ஏராளமான பேர் போரில் மடிகின்றனர். இறுதி நிலையிலாவது இபுனியின் திருந்தி நல்வழிப்பட மாட் டானா என எண்ணிய அலியார் மீண்டும்சமாதானத்தூது

அனுப்புகிறார். வந்த தூதை இழித்தும் பழித்தும் பேசிய தோடு, மதீனமா நகரத்தையும் முஸ்லிம்களையும் ஒழிப் பேன் எனக் கூறி, மூர்க்கமாகப் போரிடத் தொடங்கு கிறான். அதனை முழு மூச்சோடு எதிர்த்து அலியார் தலைமையில் முஸ்லிம்கள் போரிட்டு வெற்றி நடை போடுகின்றனர். தோலவியைத் தழுவத் தொடங்கிய இபுனியன் படைகள் அழியத் தொடங்குகின்றன. முற்றி லும அவர்கள் அழிந்து படா வண்ணம் காக்க இறுதி வாய்ப்பாக அலியார் மீண்டும் இபுனியன் நல்வழிப்பட்டுத் திருந்தி வாழ, அமைதித தூது அனுப்புகிறார். இநத அரிய இறுதி வாய்ப்பையும் ஏறகாத இபுனியன் மூர்க்கத் தோடு முஸலிம்களைத் தாக்க முற்பட்டு மரணத்தைத தழுவுகிறான். தன் கணவனை இபுனியனை போர்க்களத்தில் வெட்டுண்டு வீழ்ந்த செய்தியறிந்த அவன் மனைவி அலி யாரிடம் தன் மகளோடு சென்று, அழுது புலம்பித் தன ஆற்றாமையை வெளிப்படுத்துகிறாள். அலியார் அவ ளுக்கு நல்லுரை கூறி, நல்வழிப்பட்டு வாழுமாறு கூறி, இபுனியன ஆட்சிக்குட்பட்ட அரசை அவன் மனைவிக்கே வழங்கி நேர் வழிப்பட்ட ஆட்சி புரியுமாறு பணிக்கிறார். அவளும் அவள் மகளும் அவள் ஆட்சிக்குட்பட்டோரும் தீன் நெறி தழுவி நல்லாட்சி புரிய முனைகிறுறாள். இது வரை நடந்தவறறை விவரித்து அண்டை நாட்டரசன் இந்திராயன் என்பானுக்குத் தூதனுப்புகிறாள் இத்தோடு இபுனியன் படைப்போர் பற்றிய முதல் கதை முடிவடை கின்றது

முதல் படைப்போரின் கதாநாயகன் இபுனியனின் தோற்ற வர்ணனை, அவனை அரக்கத்தன முள்ள மனனன என்பதை சொலலோவியமாகக் காட்டிவிடுகின்றது. அதோடு மூர்க்கத்தனமாகப் போர்க்களத்தில இரு படை களும் பொருதுகின்றன. அப்போது எழுந்த தூசிப்படலம் கதிரவனை மறைத்து வானத்தையே மூடிவிடுகின்றது, ஒரு படையினர் மற்ற படையினர்க்கு என்ன நேர்ந்தது என்று அறிய இயலாமறபோய் விட்ட தவிப்பை,

''இருவர் படைக்காற்றூசால் எழும் பொழுதை
காணாதங்
கொருவர் படையெ-வருற் றுணர்ந்துதானறியார்''

என ஆசிரியர் அசன் அலிப் புலவர் கூறுவதன் மூலம் போரின் உக்கிரத்தை நமக்கு உணர்த்தி விடுகின்றனர்.

அணடை நாடான முலுத்தானை இந்திராயன் என்பான் ஆண்டு வந்தான். மூர்க்கத்தனமிகுந்த மன்னனான அவனுக்கு இரு பெண்மக்கள் இருந்தனர் மூத்தவளை தாகி என்பவனுக்கு மணமுடித்துக் கொடுத்திருந்தான். இளையவள் பனிமதி எனும் பெயரினள். பெண்ணலம் அனைத் ஒருங்கே வாய்க்கப் பெற்ற அழகுமிகு நங்கை நல்லாள். அவளுக்குகந்த மணாளனைத் தெர்ந்தேடுக்க சுயம்வர ஏற்பாடு செய்திருந்தான் இந்திராயன். குணநல மிக்க பனிமதியை மணமுடிக்க மன்னர் பலர் இந்திராயன் அவைக்கள மண்டபத்தே குழுமியிருந்தபோது இபுனியன் மனையாள் அனுப்பிய தூதுவன் வந்து சேர்ந்தான்.

இபுனியன் மறைந்த விவரங்களை அறிந்த மன்னன் இந்திராயன் சினமிகக் கொண்டான். இபுனியனின் அழிவுக்குக் காரணமானவர்களை அழித்தொழிக்கப் போவதாக ஆர்ப்பரிததான். இறைத்தூதையும் இறை மொழியையும இழிமொழிகளால் பழித்து வஞ்சினம் கொண்டான். சுய்ம்வர மண்டபத்தில் குழுமியிருந்த சுயம்வர மண்டபத்தில் குழுமிருந்தோரிடையே,

''அலிதனைக் கொண்டு வந்தோர் அக்கணமே
யென்மகளை
தாலிகட்டி வாழ்ந்திடலாம் தாராதபேர்களெல்லாம்
பீடிகட்டி சேலைகட்டி யேசும்புறவூர்க் கேகி
கூலி நெல்லு குத்திக் கொண்டுகுறைதீர்க்கலாமினி''

எனக் கூவி ஆர்ப்பரித்தான் இந்திராயன்.

இதனைச் செவி மடுத்த உச்சி என்பான் அலியின் தலையைக் கொய்து வருவேன் எனச் சூளுரைத்து விரைந்தான். மற்றைய மன்னாகளும் அவ்வாறே ஆரவாரித்து அவனைத் தொடர்ந்து அணி வகுத்துச் சென்றனர்.

மதினா நோக்கிப் பெரும்படை வருவதையறிந்த பெருமானார், அப்படையினை எதிர்த்துப் போரிடத் தானைத் தலைவராகச் செல்லத் துணிந்தார். இதையறிந்த அவர் தம் தோழர்கள் அபூபக்கரும உமரும் உதுமானும் தாங்கள் சென்று வென்று வர அனுமதி வேண்டினர். மூரர் புலி அலியாரோ தன் தலை கொய்யத் திரண்டு வரும் கொடியவர்களை வெறறி கொள்ளத் தான் செல்வதே பொருந்துமெனக்கூறி அண்ணலாரிடம் அனுமதி வேண்டினார். பெருமானார் அலியாருக்கே அனுமதி அளித்தார்

அலியார் தலைமையில் சென்ற முஸ்லிம்களின் பெரும் படையை உச்சியின் படைகள் சுற்றி வளைத்துத் தாக்க முயல்வதை,

''சிங்கத்தை ஆட்டினங்கள் சேரவளைத்தன போல்
பக்கத்தில் சூழ்ந்தார்கள பயகாம்பர் சேனைகளை
காற்று மழையுங் கனமுயலு மொன்றாய்
கற்று குணம் பாய்ந்ததுபோல் நின்று பொருதனரே'

எனப் போர்க்களக் காட்சியையே படம்பிடித்துக்காட்டி விடுகிறார் ஆசிரியர்.

கடுமையாக எதிர்த்துப் போரிடும் பகைவனான உச்சி மீது அலியார் அவர்கள் பரிவு காட்ட விழைகிறார். தான் மேற்கொண்டுள்ள தவற்றிலிருந்து தப்பிப் பிழைக்க இறுதியாக அன்பழைப்பு விடுகிறார், ஆயினும் அவரது உயர்ந்த நோக்கத்தை உணர்ந்து தெளியும் ஆற்றலில்லாத

உச்சி அலியாரின் வாளுக்கு இறையாகி வெட்டுண்டு மடி கிறான். தலைவன் வீழ்ந்து பட்டதையறிந்து அவன் படையினர் சிதறியோடினர் இதனைக் கூறவந்த ஆசிரியர்,

"ஊரோடு நாமும் ஒக்க ஓடுவோமென்றிடுவார்,
பாரோடு நாமும் பரதேசம் போவோமென்பார்"

எனக் கூறி பயத்தோடும் உச்சிப் படையினரையே நம் மனக் கண் முன் கொணடு வந்து காட்டி விடுகின்றார். இவ்வாறு இரண்டாவது படைப்போர்முடிவடைகின்றது,

மூன்றாவது படைப்போர் வடோச்சிப் படைப் போராகும். உச்சி தோற்று மடிநததால் மன உளைச்ச லுற்ற இந்திராயன் துவண்டிருந்த நேரத்தில் வட்ட மண் டல மன்னன் வடோச்சி என்பான் இந்திராயனைக் காண வருகிறான், பனிமதியின் பேரழகில் மனதைப் பறி கொடுத்து, அவளை மணமுடிக்க அவாவிநின்ற வடோச்சி இந்திராயனின் எண்ணத்தை நிறைவேற்ற முனைந்து நின்றான். இபுனியனையும் உச்சியையும் கொன்று குவித்த அலியாரின் தலையைக் கொய்து வருவதாகச் சூளுரைத் தான். அவ்வாறு கொய்து திரும்பினால் தன் மகள் பனி மதியை மணமுடித்துத தருவதாக வாக்களித்தான் இந்திராயன்.

இந்நிலையில் உப்பரிகை மாடத்தில் உலாவி நின்ற பனிமதியின் அழகுமிகு தோற்றம் அவன் உள்ளத்தில் ஆசை வெறியாக அலை மோதுகின்றது. அவள் அழகுரு வை எண்ணி எண்ணி வியக்கிறான். இதனை,

"கிஞ்சுகம் போல் மொழியும் கீற்றுப்பிறை போல்
நுதலும்
மஞ்சுதவழ் குழலும் மாமதியைப்போல் முகமும்
முருக்கம்பூ போலிதழும் மோகமுற்ற பல்லழகும்
கருக்கெழுதும் கண்ணழகும் கழறுகின்ற கைவீச்சும்

வாளைத்தண்டு போலே வடிந்த தடிக்காதும்
கொள்ளை கொள்ளும் ஆடவரைக் கொந்தளக
பாரமதும்

பச்சை முகமதுபோல் பாசக் கழுத்தழகும்
இச்சை பூந்தேன் வார்த்த தேய்நவேய் பொற்றோளும்
அரம்பை போலே துடையும் அகமெலாம் பூஷணமாய்
இன்னமவள் பேரகங் கெவ்விடத்துமில்லையென"

எனக் கூறுகிறார் ஆசிரியர் அசன் அலிப் புலவர்

பனிமதிபோன்றே வடோச்சியும் அழகும் வீரமும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவன் அழகில் சீவகனையும் ஆற்றலில் வீமனையும் வில்திறனில் அர்ச்சுனனையும் தேரோட்டத்தில்நலனையும்கொடைத்திறத்தில்கர்ணனையும் விஞ்சும் தகைமை மிக்கவன். இத்தகைய வடோச்சியிடத்து பனிமதியும அன்பு கொண்டிருந்தது வியப்பன்று. தன் தலைவன் பனிமதி மீது கொண்டுள்ள காதலுணர்வை புலப்படுத்திய பாங்கனிடம பனிமதி ஆயுதமேந்திப் போரிடாது அமைதி வழியில் நபிகளார் நல்வழியில் வடோச்சி வாழக் கருதின் அவனோடு வாழ்தல் எளிது மட்டுமல்ல இனிதுமாகும எனப் புலப்படுத்துகிறாள். எனினும், தன் வாள் மீது கொண்ட நம்பிக்கையால் பெரும் படை கொண்டு அலியாரை எதிர்க்கத் துணிந்துபுறப்படுகிறான்.

முஸ்லிம்கள் மீது போரிட மதீனா நோக்கிப் படையெடுத்து வந்த வடோச்சி தீதின்றி உய்ய நபிகள் நாயகம் தூதனுப்பி மறைவழி காட்டும் இறைவழி நடக்குமாறு பணிக்கிறார். அவர் தூதுரைக்குச் செவிமடுக்கா மன்னன் வடோச்சி பெரும்படையுடன் அலியார் முன் ஏகுகிறான். அவன் அழிவதைவிட வாழ்வதே நலம் என அலியார் இந் நிலையிலேனும் தீயவழி விடுத்துநல்வழிப்பட அறிவுறுத்து கிறார். அதற்கிணங்கா மன்னன் வடோச்சி, ஆயுதமின்றி இருக்கும் அலியாரின் தலைகொய்ய முயலுகிறான். அலி

யார் அவனைத தேரோடு சாய்த்துத் தரையில் வீழ்த்து கிறார். வீழ்ந்து பட்ட வடோச்சி இந்நிலையிலும்நல்வழிப் பட்டு தீன நெறி பேணி பிழைக்க வழி காட்டுகிறார். நபி மருகர் அலியாரின் அறிவுரையைச் செவிமடுத்த வடோச் சிககு பனிமதியை மணமுடிக்கும் எண்ணமே மிக்கிருந்தது அலியார் வழி நடப்பதாகவும் அதற்கு அவர் தலையைத் தத்துதவ வேண்டுமென கேட்க, அதற்கு அலியாரும் ஒப்பு கிறார். வடோச்சி எததனை முறை முயன்றும் அலியார் தலையை ஏதும் செய்ய இயலா நிலையுணர்ந்து மனந் தளர்ந்து அண்ணல் மருகர் காட்டும் அறவழியேதான் உய் யத் தக்கநெறி என உணர்கிறான். இஸ்லாத்தில் வடோச் சியும் அவன் பரிவாரங்களும் இணைகின்றனர். இதனை,

''சூரியனைக் கண்ட துய்ய நல்ல தாமரைபோற்
காரியமென்றே யவினயங்கண்டவர்களுள் மகிழ்ந்தே
வாரியென வந்த வடோச்சியர்கோனும் படையும்
கோரியாய்த்தானே குணமான நல்மனதாய்
ஈமான் தனை மனதிலெண்ணியலியைப் புகழ்ந்தார்
கோமாநபிக்கிமான் ககாண்டான் வடோச்சியர்
கோன்''

எனக் கூறுகிறார் அசன் அலிப் புலவர்.

எனினும் பனிமதியை மணக்கும் உள்ளுணர்வு அவனுள் பொங்கி நின்றது. அலியார் தலையைக் கொய்து கொடுத் தால் மட்டுமே இந்திராயன் மகிழ்ந்து தன் மகளை மண முடித்துக் கொடுப்பான். இதற்குத் திட்டமிட்ட வடோச்சி அலியார்போல் தோற்றமும் குரலோசையும் உள்ள தாகி என்பவனைப்பற்றி எண்ணுகிறான் தாகி இந்திராய னின் மூத்தமகளை யணந்தவன். தீய குணங்கள் அனைத் தும் குடி கொண்ட துஷ்டன், அவனிடம் தூதுசென்று அண்ணலார் வழிபின்பற்றப்பணிப்பது;எதிர்த்தால்அவன் தலையைக் கொய்து. அலியார் தலையெனக் காட்டி,

பனிமதியை மணமுடிப்பது எனத் திட்டமிட்டு அதனை அலியாரிடம் கூற அதனை ஏற்காத அலியார் பெண்ணாசையால் வடோச்சி கொண்டுள்ள தவறான வழி முறையை விடுத்து நேர்வழியில் தாகியை அணுகி இஸ்லாத்தை ஏற்கச் செய்வோம் எனக் கூறுவதுடன் மூன்றாவது படைப்போரான வடோச்சிப் படைப்போர் முற்றுப் பெறுகிறது.

இஸ்லாத்தை ஏற்ற வடோச்சியும் அவன படையினரும் தனிநகரை ஆண்டுவரும் தாகியின் கோட்டையை முற்றுகை யிடுகின்றனர். தாகி தீன் வழி ஒழுகி வாழ்வில் ஏற்றம் பெறுமாறு அறிவுரை வழங்க தூதொன்று அனுப்பப்படுகிறது அத்தூதுவரோ நல்வழிப்படத்தக்க அறிவுரைகள் பலகூறியும் பயனின்றிப் போய்விடுகிறது. தூதை நிராகரித்ததுடன் கடுஞ்சினம்கூறி போருக்கெழுந்தான். இரு சாராருக்குமிடையே கடுமையான போர் நிகழ்ந்தது. போரில் ஆயுதங்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பதை நூலாசிரியர் அசன் அலிப் புலவர்,

> ''ஆயுதங்களெல்லாம் அழியப் பொருதனரே
> வாய்மதங்கள் பேசி வலியகணை கொண்டெறிவார்
> ஆதித்தனும் மறைந்தான் அம்பு மழையாறுடனே''

எனக் கூறி விளக்குகிறார்.

போரின்போதே தாகி தகாதவழி விடுத்து நேர்வழி பேணி நடக்க அறிவுரை கூறப்பட்டது.

> ''வழிக்குப் பொதிசோறு வண்மையுள்ள ஈமான்காண்
> வழிக்கு வந்து நில்லாதே பாழ்படும் உன்தேச
> மெல்லாம்''

அறிவுரையோடு அச்சமூட்டிஎச்சரிக்கைசெய்யப்பட்டான்

குறிப்பிட்ட இடத்தை அடைவதைக் குறிக்கோளாகக் கொண்டு செல்லும் பயணிக்கு எப்படி கட்டிச்சோறு

பயன்படுகிறதோ அது போன்று இஸ்லாம் எனும் நேர்வழி யில் இறையருள் பெறுவதை இலட்சியமாகக் கொண்டு வாழும் முஸ்லிமுக்கு ஈமான் இன்றியமையாததாகும் என பதை எடுததுக் கூறியும் அதனை ஏற்காத தாகி பேருணர் வில் மூழ்கினான். ஆயுதமில்லா அலியாரை வாளால் வெட்ட வந்ததாகியை தரையோடு தரையாக வீழச் செய் கிறார். விரைந்து வந்த வடோச்சி தாகியின் தலையை வெட்டியெடுக்க அஃது இறையருளால் அலியார் தலை போன்ற தோற்றத்தைப் பெறுகிறது. அதனை இந்திரா யனிடம் காட்டி அவன் அழகு மகள் பனிமதியை மண முடிக்க விரைந்து செல்கிறான வடோச்சி.

தன் கணவனைப் போர்க்களத்தே இழந்த தாகியின் மனைவி தாங்கொணாத் துயருற்று,தாகியின் மரணத்தை யும் அதன் தலையுடன் தாகி வரும், விபரத்தையும் கூறும் கடிதமொன்றைத் தன் தந்தை இந்திராயனுக்கு அனுப்பினாள. இத்துடன் நான்காவது படைப்போரின் கதை முடிகிறது.

இந்திராயனுக்கு அலியார் தலையுடன் வடோச்சி வந் திருக்கும் செய்தி அறிவிக்கப்படுகிறது. அளவிலா மகிழ்ச்சி யுற்ற மன்னன் தன் மகள் பனிமதியை மணக்கத்தக்க மாவீரன் வடோச்சியே எனப் பாராட்டி அவர்தம் திரு மணத்திற்கான ஏற்பாடுகளை விரைந்து முடிக்கப் பணிக் கிறான். திருமணச் செய்தியறிநத பனிமதி, வடோச்சி கொண்டுவந்தது மாவீரர் அலியின் தலையாக இருக்க முடியாது எனத் தீர்க்கமாக தன் தோழியரிடம் கூறினாள்.

''சும்மாவிருங்கள் தோன்றலலியார் தலையை
இம்மாநிலத்திலுள்ளோர் எவரேனும்வெட்டுவரோ
அம்மாடி சும்மா அறைந்தார்கள் பொய்யதனைத்
தெய்மாடிப் புந்தி சிறந்த இந்த இராஜாக்கள்
நிறையாய் அறிந்திலரோ நீதமுள்ள இராஜாக்கள்''

எனக் கூறி மறுத்ததாகப் புலவர் குறிக்கிறார்.

ஆயினும் மன்னன் இந்திராயன் ஆணைப்படிதிருமண ஏற்பாடுகள் மும்முரமாகச் செய்யப்பட்டன. நகரத் தெருக்கள் தோரண அலங்காரங்களால் அழகுபடுத்தப் பட்டன எங்கும் மகிழ்ச்சி வெள்ளம் பாய்ந்தோட மக்கள் பூரிப்போடு ஆடிப்பாடி மகிழ்நதிருந்த வேளையில், தன் கணவனின் தலையை வெட்டிக் கொண்டு வந்துஅலியாரின் தலை எனக் காட்டிய வடோச்சியை இனங்காட்டும தாகி யின் மனைவி எழுதிய கடிதம் அவள் தந்தை இந்திரா யனிடம் வந்து சேர்கிறது.

''சத்தி கெட்ட பாவியென்று தானவந்தே
எனனிடத்தில்
புத்திகெட்டிங்கு என்மருமகன் போந்ததலை கொண்டு
வந்தான்''

எனக் கூறி கொதித்தெழுந்தான் தன் மருமகனின் தலை யையே வெட்டி வந்து அலியார் தலையெனக் காட்டித் தன்னை ஏமாற்றி தன் இளையமகள் பனிமகியை மண முடிக்க முயன்ற வடோச்சியின் வஞ்சகச் செயல் கண்டு கொதித்தெழுந்த இந்திராயன் வடோச்சியை பழி தீர்க் கும் வகையில் வெட்டிக் கொள்ளத் தன் படையினர்க்கு ஆணையிட்டான். உண்மை நிலையை உணர்ந்த வடோச் சியும் இந்திராயனை எதிர்க்கத் துணிந்து, தன் படை யோடு கடுமையாகப் போரிட்டான். வெற்றி தோல்வி யாருக்கெனக் கூற இயலாத நிலையில் கடும்போர் நிகழ்ந்தது. இதனைக் கேட்டறிந்த னிமதி தீன்நெறி சேர்ந்த வடோச்சி எப்பபடியும் போரில் வெற்றிபெறத் துணைபுரியுமாறு பெருமானாரை மனத்திலிருத்தி வல்ல இறைவனை வழுத்தினாள்.

இந்திராயனின் பெரும்படையின் மூர்க்கத்தனமான தாக்குதல் வடோச்சியை நிலை குலையச் செய்கிறது. போதிய படையோ, படைக்கருவிகளோஇல்லாத நிலையில் சோர்வுற்றவனாக இருந்த வடோச்சிக்கு மாவீரர் அலியின் நினைவு வருகிறது. இடருற்றபோது ஏந்தல் அலியாரை

எண்ணி முரசொலித்தால் அவருதவி கிடைக்குமென எண்ணிய வடோச்சி இறைவனை எண்ணி முரசறைந்தான். அப்போது பேரித்தங்கனி பறித்துக் கொண்டிருந்த அலியார் செவியில் முரசொலி விழவே. வடோச்சிக்கு ஏற்பட்ட இன்னலையும் அவல நிலையையும் உணர்ந்து, அவனுக்கு உதவ விழைந்தார். தோல்வியும் துன்பமும் தொடருமோ என மனக்கலக்கமுற்றுத் துவண்டு போயிருந்த வடோச்சி முன் மாவீரர் அலியார் இருப்பதைக் கண்ட வடோச்சி அளவிலா ஊக்கமும் உற்சாகமும் கொண்டான் துன்பத்தின் உச்சியில் துணை புரிய அலியாரை அனுப்பிய அல்லாஹ்வின் பேரருளைப் புகழ்ந்தான்; அப்போது வடோச்சி பெற்ற மனநிலையைக் கூற வந்த ஆசிரியர்.

''வாடும் பயிரதற்கு மழைவந்த வாறதுபோற்
தேடும் பொருள் வலியச் சிக்கினது போற்றினமும்
கண்குருடானவர் கண்பெற்ற வாறதுபோல்
உணடுடுக்க ஒன்றுமில்லாது உற்ற வெளியோர்கள்
கணடெடுத்த நற்புதையல் கைசேர்ந்த வாறது
போல்
பிள்ளையில்லா மானிடர்க்குப் பிள்ளைவந்த
வாறது போல்
உயிர்போய் இருந்தார் உயிர்பெற்ற வாரதுபோல்
கைர்பெற்றுக் ஜொள்ளக் கத்தனலி இங்குவந்தார்''

எனக் கூறுவதன் மூலம் அலியார் வருகையால் வடோச்சி பெற்ற பெரு மகிழ்வைப் புலப்படுத்துகிறார்.

வடோச்சிக்கு உதவும் வகையில் போரிடும் அலியாரின் வீரத்தின் முன் இந்திராயனும் அவன் படைவீரரும் திணறினர். அலியாரின் வாள் வீச்சுக்கு படைத் தலைவர்கள் பலியாயினர். படையினர் மாண்டு மடிந்தனர். செய்வகை தெரியாது போர்க்களத்தே திகைத்து நின்ற இந்திராயனின் நிலை இரங்கத்தக்கதாக இருந்தது. அந்நிலையிலும் சாந்தி வழி போற்றும் அலியார் இந்திராயன் நல்வழிப்

நெறி போற்றியொழுக தூது அனுப்புகிறார் தூதுவர்களின் இன்மொழி கேட்ட இந்திராயன் நபிகளாரின் நன்மொழியை, அலியாரின் அன்புரையைக் கேட்க மறுத்த உச்சிக்கும் தாகிக்கும் ஏற்பட்ட அவல முடிவை ஒரு கணம் எண்ணிப் பார்த்தான். அதே கதி தனக்கும் ஏற்படுவதை அறவே விரும்பாத இந்திராயன் இறைநெறி வழி ஒழுகி வாழ்வில் ஏற்றம் பெற உறுதி கொண்டான். தானே இஸ்லாத்தைப் பின்பற்றி முஸ்லிம் ஆனதோடு தன் அன்பு மகள் பனிமதியை வடோச்சிக்கே மணமுடித்துக் கொடுத்து வாழ்த்தினான். பின்னர் மாநபியை நேரிற் கண்டு மகிழ பெருமானார் இந்திராயனுக்குப் பரிசு பல அளித்து மகிழ்வித்ததாக இந்திராயன் படைப்போர் முற்றுப் பெறுகிறது

"ஐந்து படைப்போர்" இலக்கியம் ஒன்றுக்கொன்று தொடர்புடைய கதையம்சத்தோடு விளங்குகிறது. இந் நூல் படிப்பறிவு மிக்க பண்டிதர்களைக் காட்டிலும் ஓரளவு படித்தறிந்த மக்களை மகிழ்விக்கும் வண்ணம் ஓசைநயமும் இனிய நடையும் எளிய சொல்லாட்சியும் கொண்டு விளங்குகிறதெனலாம். இதனாலேயே இஃது நாட்டுப்புற வர்ணனைகளில் சாதாரண நாட்டு வழக்குச் சொற்களும் அன்றாட வாழ்வில் பாமர மக்களால் பயன் படுத்தப்படும் பழமொழிகளும் தாராளமாகக் கையாளப் பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சந்த நயமிக்கக் கண்ணிகளால் பாடம்பெற்ற 'ஐந்து படைப்போர்' சாதாரணமாக வாய்விட்டு இசை நயத்தோடு படிப்பதற்கு மிகச் சிறந்த நூலாகும். அதோடு வில்லுப் பாட்டாக இசைப்பதற்கும் ஏற்ற நூலாக விளங்குகிறது.

அநீதியை அகற்றி நீதியை நிலைநாட்டுவதையும் வழி தவறிச் செல்வோரை நேர்வழிக்குத் திருப்ப முயல்வதையும் எச்சமயத்திலும் போரைத் தவிர்த்து சமாதான வழியில் வாழத் தூண்டுவதையும் தவிர்க்க முடியாத நிலை

யில்மட்டுமே வாளேந்தல் வேண்டும் என்பதையும் இலை மறைகாயாப் படிப்போருக்கு உணர்த்தும் பாங்கில் இந் நூல்அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

'ஐந்து படைப்போர்' இலக்கியத்தில் அவலச் சுவை குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறத் தவறவில்லை. போர்க் களத்தே தன் கணவன் இபுனியன மாண்டான் என்ற செய்தியைச் செவிமடுத்த அவன் மனைவி துக்க மேலீட்டால் எப்படியெல்லாம துடிக்கிறாள், துயரம் தாங்காமல் அழற்றினாள் அழுது புலம்பினாள் என்பதை அருமையாகப் படம் பிடித்துக்காட்டி படிப்போர் உள்ளத்திலும் அவலச் சுவை பொங்கச் செய்துவிடுகிறார் அசன் அலிப் புலவர். இறந்து போன இபுனியனின் மனைவி துக்க மேலீட்டால்,

"என்னைவிட்டுப் போனீரோ யெப்போதுமைக்
காண்பேன்
மன்னவரே யென்று மாரடித்தாள் மாமயிலாள்"

என ஒப்பாரி வைப்பதாகக் கூறுகிறார்.

இதேபோன்று, போர்க்களத்தே அலியாரின் வாளுக்கு இறையாகிவிட்ட தாகியின் மரணச் செய்தி கேட்டபோது அவன் மனைவி துயரத்தின் உச்சிக்கே சென்று விடுகிறாள் அவள் அடைந்த துயரநிலையை.

"விழுந்தாள் எழுந்தாள் வெற்றி மன்னே என்றழுதாள்
கொழுந்தே எனைப் பிரியக் கூடுமோ என்றழுதாள்
மூடி வைத்த தீ முனையில் மூளுகின்ற வாட்போலும்
ஆட்டிவிட்ட பம்பரம்போல் ஆயிழையாள்
தானழுதாள்"

எனக் கூறுவதன் மூலம் அவள் பெற்ற துயர உணர்வைப் படிப்போரும் பெறுமாறு செய்து விடுகிறார் ஆசிரியர்.

அதுமட்டுமா? அலியாரின் பெரும் படை இபுனியன் படைகளை எதிர்த்துப் போரிடுங்கால், இரு பக்கத்திலும் ஏற்பட்ட சேதங்களைக் கூறும்போது,

"அம்பு தொட்ட கைகள் அறுந்து கிடப்பாரும்
கும்பிட்ட கையோடு குடற்சரிந்து கிடப்பாரும்
தலையின் விதியெனறே தான் மொழிநது வீழ்வாரும்
மலைபோற் புறமறுந்து மாண்டு கிடப்பாரும்"

என போர்க் களத்தின் கொலைக்களக் காட்சியையே கண் முன் கொண்டுவந்து காட்டி, அவல உணர்வூட்டி விடுகிறார்.

'ஐந்து படைப்போர்' இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் எதிர்த்துப் போரிட்ட ஐந்து மன்னர்களின பெயரில் அமைந்திருந்த போதிலும் இந்நூலின் பாட்டுடைத் தலைவராகப் பெருமானார் அவர்களே விளங்குகிறார்கள். அதோடு ஐந்து போர்களிலும் கதாநாயகராக விளங்குபவர் பாவீரர் அலியார் அவர்களே எனபது தெளிவு. உக்கிரமான பேரினிடையேயும எதிரியிடம் சமாதானத் தூதனுப்பும் அலியாரின் அருஞ்செயல் எந்நிலையிலும போர் தவிர்தது அமைதி கண்டு மக்களின் வாழ்வில் சாந்தியும் சமாதானமும் நிலவச் செய்வதில் இஸ்லாம கொண்டுள்ள நாட்டத்தைப் புலப்படுத்துவதாயுள்ளது.

படைப்போர் இலக்கியங்களுள் குறிப்பிடத் தக்க மற்றுமோர் மாமணி 'செய்யிதத்துப் படைப்போர்?' என்பதாகும. காப்பியத்திற்குண்டான இலக்கண வடிவமைப்புகளைத் தன்னகதே கொண்ட இந்நூல், காப்பியமாகவே கணிக்கப்படுகிறது. மொத்தம் 515 பாடல்களைக் கொண்ட இந்நூலை இயற்றியவர் 'இரவுசுல்கூல் படைப் போர்' எழுதிய குஞ்சுமூசுப் புலவரே யாவார். முந்தைய நூலுக்குப் பெயரமைத்தவாறே இந்நூலுக்கும் 'செய்யிதத்து' எனும் பெண்பாற் பெயரையே நூலின் பெயராக அமைத்துள்ளார்.

சல்காவைப் போன்றே செய்யிதத்தும் முதலில் இஸ்லாத்தை எதிர்த்து நின்று, பின்னர் முஸ்லிமாகி இஸ்லாத்தை எதிர்த்தவர்களோடு போரிட்டவர். எனினும், தொடக்கத்தில் இஸ்லாத்தை எதிர்ப்பவராக, பகைவராக விளங்கியமையால் இந்நூல் அவரது பெயராலேயே 'செய்யிதத்துப் படைப்போர்' என வழங்கலாயிற்று.

இந்நூல் சுமார் 200 ஆண்டுகட்கு முன்னர் இயற்றப் பட்டதாகும்.

பெருமானாருக்குப் பின்னர், முதல் இஸ்லாமிய ஆட்சித் தலைவராகப் பொறுப்பேற்று வரலாற்றில் அழியாச் சிறப்பிடம் பெற்ற அபூபக்கர் சித்திக் (ரலி) அவர்களின் மகனான அப்துர் ரஹ்மான் என்பவர் தொடக்கத்தில் இஸ்லாத்தில் இணையும முன்னர், இஸ்லாத்தின் விரோதிகளில் ஒருவராக இருந்தார். இஸ்லாத்தின் பரம வைரியாக விளங்கிய அபுசுப்யானின் மகளான சையிதத்து எனும் மங்கையை மணந்திருந்தார். தொடக்கத்தில் இவர்கள் இருவரும் இஸ்லாத்தின் எதிரிகளாக இருந்தபோதிலும் பின்னர், மனம் மாறி இஸ்லாத்தில் இணைந்து, இஸலாத்தின் விரோதிகளோடு போரிட்டு வென்று வெற்றிக் கொடி நாட்டிய வரலாற்றை விரித்துரைக்கிறது இக் காப்பியம்.

இறைவனின் இறுதித் தூதராக வந்துதித்த பெருமானாரின் அருமை பெருமைகளை செவி வழிச் செய்தியாக கேட்டறிந்து வியந்து போற்றி நின்றார். யெமன் நாட்டு மன்னர் அசுமத் இப்னு கிதாப் நபிப் பட்டம் பெற்று, அறியாமை இருளகற்றி இறையொளி பரவ அல்லும் பகலும் உழைத்து வரும் உத்தமத் திருநபியை நேரிற்கண்டு, அவரின் அருளுரை பெற்று, இஸ்லாமியநெறியைப் பரப்பும் தொண்டில் தன்னையும் தன் மைந்தரையும் இணைத்துக் கொள்ள அவாவினார். பெருமானாருக்குப் பரிசாக வழங்க அரியபெரிய பரிசுப்பொருட்களை ஒட்டகங்

கள் மீதேற்றி தன் மைந்தர் உடன்வர மதினாமாநகர் நோக்கிப் பயணமானார்

திடீரென எங்கிருந்தோ வந்த படையினர் யெமன் நாட்டு மன்னரையும் அவர்தம் மைந்தரையும் உடன் வந்தோரையும் சிறைபிடித்து, பெருமானாருக்கென அவர்கள் கொண்டு வந்த பரிசுப் பொருட்களையும் கவர்ந்து சென்றனர்

சிறை பிடிக்கப்பெற்ற யெமன் நாட்டு மன்னரையும் அவர்தம் மைந்தரையும் அவர்தம் ஆட்களையும் இஸ்லாத்தின் விரோதியாக விளங்கிய சிற்றரசன் அப்துல் ரஹ்மானின் முன் கொண்டு நிறுத்தினர் முன்பின் அறியாத அச்சிற்றரசன் யார் என்பதை அறிகிலிருந்தவர்களிடம் அசுமத் கேட்டபோது.

'பதியினில் சிறந்த மக்கமா நகரில்
பரிவுடன் இருந்தணிந் திலங்கும்
மதினா புரத்தில் வருமகுமூது
நபிமரபி னில் அபூ பக்கர்
சுதன் இவர் தமருமனையும் அத்தனையும்
சுருதியின் வழிமுறை விடுத்தே
அதிகநல் வளம்சேர் இவ்வரை அடைந்தார்
அவர்க்குறும் பெயர் அப்துர் ரகுமான்''

என அறிந்தபோது பெரிதும் மகிழ்ந்தார். நபிவழி வந்தவர். இறைதூதரின் அன்புத் தோழர் அபூபக்கர் சித்தீக்கின் மைந்தர். பெருமானாரைக் காணச் செல்லும் செய்தி கேட்டால் பெரிதும் மகிழ்வார். உண்மை அறியாது கொள்ளையிட்ட பொருள்களை திரும்ப அளித்து அண்ணல் திருமுகம் காண அனுப்பிவைப்பார் என்றெல்லாம் தனக்குள் எண்ணி மகிழ்ந்தார். அப்துர் ரஹ்மானை நோக்கி, தான் பெரும் பரிசுப் பொருள்களோடு இறை

தூதர் ஏந்தல் நபியைக் காணச் செல்லும் நோக்கைக் கூறினார். இவ்வுண்மை அறியாது சிறைப்படுத்தப்பட்ட தன் மைந்தனையும் விடுவிப்பதோடு தாங்கள் அண்ணலா ருக்கென கொண்டு செல்லும் பரிசுப் பொருளகளையும் திரும்பத் தருமாறு வேண்டிநின்றார்.

இதைக்கேட்ட அபுசுப்யானின் மருமகனான அப்துர் ரஹ்மான்.

"அவ்வுரை தனைக்கேட் டரசப்துர்-ரகுமான்
அகுமது நபிநமக் கிவைதாம்
இவ்வழி கொடுநீ போவதை அறிந்தே
இன்னணம் முடித்தனன் உனது
செவ்விய மகவை விடுவதும் இலைநீ
சிறுவனை இழந் துயிருடனே
நௌவிமெய் யிறசூல் மதினா நகர்க்கே
செல்கென நவின்றனன் இரங்கான்"

எனக் கூறியபோதுதான் இஸ்லாத்தின் விரோதியாக அப்துர் ரஹ்மான் விளங்குவதை அறிய முடிந்தது. மனம் வருந்தினார். தன்னிடமிருந்து கொள்ளையடித்த பெருமா னார்க்குரிய பரிசுப் பொருட கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு தன் அருமை மைந்தரையும் தன்னையும் விடு விக்குமாறு மன்றாடி நின்றார். அவரது உருக்கமான வேண்டுகோள் அப்துர் ரஹ்மானின் மனதைச் சிறிது அசைத்தது. ஓரளவு மனமிரங்கியவராய், யெமன் நாட்டு மன்னரை மட்டும் விடுவிப்பதாகவும், அவர் மைந்தரை விடுவிக்க வேண்டுமெனில் தான் கேட்கும் பணயப் பொருள்களை குறிப்பிட்ட கால எல்லைக்குள் கொண்டு வந்து கொடுப்பின் மைந்தரை விடுவிப்பதாகவும் கூறி தந்தையை மட்டும் விடுதலை செய்து அனுப்பினார் அப்துல் ரஹ்மான்.

சிறைப்பட்டு வருந்தி நிற்கும் தன் மைந்தனை எண்ணி நெஞ்சம் பதைத்தார் அசுமத். தன் மைந்தனை மீட்கும்

வழியாது திகைத்தார். இறுதியில் அலீ ணைலாரிடமே உதவி பெற விழைந்தார். மதினமா நகர் சென்று, நாயகத் திருமேனியிடம் நடந்தவற்றை விவரித்தார். குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் பயணப் பொருள தரவில்லையெனில் தன் மைந்தர் உயிர் பறிபோகுமென்பதை நினைவூட்டி, தன் செல்வ மகளை மீட்டுத் தந்து தன் குலந்தழைக்க உதவுமாறு பெருமானாரிடம மன்றாடி நின்றார். தன் மகனை மீட்டு உயிர்ப்பிச்சைத் தருமாறு உருக்கமாக வேண்டி நிற்கும் தந்தையின் கண்ணீரும் வேண்டுகோளும் அண்ணலாரின் உள்ளத்தை மெழுகென உருக்கியது. இக் கொடுஞ்செயல் கேட்டு நபித்தோழர்களில கொதித்தனர் சிலர், கண்ணீர் உகுததனர் பலர். இதனை,

> ''இன்னணம் அசுமத்தோத எழில்நபி இறசூலுல்லா
> தன்னுளம் பெருக வாடிச் சலித்தனர் அவையிலுற்ற
> மின்னென அவனிஏந்தி விறல்மனம் நிறைந்ததீனின்
> மன்னவரெவரும் ஏங்கி வாய்விடுத் தழுலதானார்''

எனக்கூறி அங்கு ஏற்பட்டிருந்த துன்பச் சூழலை அப்படியே சொல்லோவியமாகக் கூறிவிடுகிறார் குஞ்சுமூசுப் புலவர் அவர்கள்.

அதன் பின்னர் பெருமானார் அலி அவர்களை அழைத்து, மைந்தரின நினைவாய் வருந்தி நிற்கும் அசுமத்தைத் தன் மனைக்கு அழைத்துச் சென்று அறுசுவை உண வளித்துப் உபசரிக்குமபடி பணித்தார்.

ஆயிஷா நாயகியாரின் மனையில் இருந்த அண்ண லாரை காண வந்த அபூபக்கர் சித்திக் அவர்களிடம் மெஸ்ய நாட்டு மன்னன் அசுமத்தும் அவர் தம் மைந்தரும் அப்துல் ரஹ்மானிடம பட்டபாட்டையும் இழப்பையும் ஏற்றஇன்னல்களையும்பற்றிஎடுத்துக்கூறினார்.' வெவ்விய

சினத்தினோடும் விழிசிவந்து உரைத்த காட்சி'யை அப்படியே நம் மனக்கண்முன் கொண்டு வருகிறார் புலவர்.

''வள்ளல் இறசூலுல்லா மனம்வெகுண்டு
உரைத்த மாற்றம்
தெள்ளிய கருத்துள்மேவத் திறல்
அபூபக்கர் கேட்டுக்
கள்ளவிழ் விசனக் கண்ணீர்
கவின்மழை சொரிதலாகி
விள்ளரும் துயரவாரி மீதடைந்
தழுவ தானார்''

அசுமத்தும் அவர் மைந்தரும் அடைந்த இன்னல் கேட்டு நெக்குருகி அழுதார் அபூபக்கர் சித்திக் அவர்கள். தம் மைந்தனின் தீச்செயல் கண்டு கண்ணீர் உகுத்தார்.

துன்மார்க்கத்தில் ஈடுபட்டுள்ள தன் மகன் அப்துர் ரஹ்மானை துன்மார்க்கத்தின் பால் திருப்ப, தானே செல்ல அனுமதிக்குமாறு அபூபக்கர் சித்திக் அவர்கள் அண்ணலாரிடம் அனுமதி கேட்டு நின்றார். தம் ஆருயிர்த் தோழரின் உளப் பாங்கினை உணர்ந்த பெருமானார் 'அவ்வாறே செய்க என அபூபக்கர் சித்திக் அவர்கட்கு அனுமதி வழங்கினார்.

அரிமா போல் வீரத்திற் சிறந்த அபூபக்கர் சித்திக் அவர்கள் அண்ணலார் அனுமதி கிடைத்தவுடன் தன் மனை நோக்கிச் சென்றார். இக்காட்சியைக் காட்ட வந்த புலவர், அன்னாரின் அரிய வீரத்தையும் பொன்னால் பொறிக்கத்தக்க அவர்தம் பெயர் மாட்சியையும் அழகுற விவரிக்கிறார். மயில் போன்ற ஒயிலான தோற்றப் பொலிவையும் கூரிய விழிகளையும் அழகு மொழி பேசும் பவளச் செவ்வாயையும் உடைய அவர் தம் துணைவியார் உம்முரூமானின் சோலை சூழ்நிலையை அடைந்ததை,

''அரியவன் தூதர்கூற அரியினிற்
பொறித்த நாமத்து

அரியபூ பக்கரென்னும் அரிவிடுஞ்
திரலோ ரேகி
அரிநிறத் தோகைபோன்ற அரிவிழித்
துகிர்வாய் மேவும்
அரிமொழி உம்முருமான் அரியெழின்
மனையிற் சார்ந்தார்''

எனக் கூறிக் களிப்பூட்டுகிறார். இப்பாடலில் 'அரி' என்ற ஒரே சொல் திரும்ப எதுகையாகவும் மோனையாகவும் அமைந்து சுவையூட்டுகிறது

நேர்வழி பிறழ்ந்து அல்லலுறும் தன் மகனை அடக்கி நேர் வழிகாணச் செய்ய ஆயுத பாணியாகத் தன்னை உரு மாற்றிக் கொண்ட அபூபக்கர் சித்தீக் அவர்கள் ஆவேசத் துடன் தன் புரவியேறி தன் மைநதனோடு மோத சேரு களம் நோக்கிச் செல்லலானார். அவர் ஏறிச் சென்ற புரவி யின் நடையைக் கூறவந்த குஞ்சுமூசுப் புலவர் அவர்கள்,

''காலில் ஐங்கதியைக் காட்டிக்
கருததினுள் திடத்தைக் காட்டி
மேலினில் வியர்ப்புக் காட்டி
விழியினில் எரியைக் காட்டி
தாறுவின் தலையைக் காட்டி
தரைவிடும் துகளைக் காட்டி
வாவினில்! விசையைக் காட்டி
வயப்பரி நடந்த தம்மா''

எனக் குதிரை சென்ற காட்சியை அழகுமிகு சொல்லோவிய மாக வடித்து மகிழ்விக்கிறார்.

தன் மகன் நல்வழிப்பட இறையருளை இறைஞ்சிப் புறப்பட்ட அபூபக்கர் சித்தீக் அவர்கள் இடைவழியில் முர்ரத் என்பவரைச் சந்திக்கிறார். மக்காவாசியான மூர்ரத் வழிவழி வந்த இறைவணக்க முறையைக் கைவிட்டு

இஸ்லாத்தின் பக்கம் அபூபக்கர் சேர்ந்ததைக் கடிந்து பேசுகிறார். இதைக் கேட்ட அபூபக்கர் சித்தீக் (ரலி) இஸ்லாத்தின் மேன்மையையும் பெருமானாரின் பெருமையையும் தீன் நெறியின் சிறப்புக்களையும் எடுத்து விளக்கிக் கூறினார். சிந்தனைத் தெளிவு பெற்ற முர்ரத் அக்கணமே உண்மை உணர்ந்து கலிமாச் சொல்லி இஸ்லாத்தோடு தன்னை இணைத்துக் கொண்டார்.

முர்ரத் இஸ்லாத்தைத் தழுவிய இனிக்கும் செய்தியை பெருமானாருக்குச் சொல்ல நண்பரோடு மதினமாநகர் திரும்பி அண்ணலாரிடம் நடந்தவற்றைக் கூறினார். அபூபக்கர் பின்னர் முர்ரத்தைத் தன் இல்லம் அழைத்துச் சென்று அறுசுவை உணவூட்டி, தன் மகன் அப்துர் ரஹ்மான் பற்றி விசாரித்தார்.

முர்ரத் இஸ்லாத்தின் எதிரியான அபுசுப்யானின் மகளை மணமுடித்து மலைநாட்டுச் சாரலில் வாழ்ந்து வரும் அப்துர் ரஹ்மானின் வாழ்க்கைப் போக்கையும் அங்குள்ள சூழலையும் எடுத்துக்கூறி விளக்கினார்.

அதைக் கேட்ட அபூபக்கர் சித்தீக் (ரலி) தன் மைந்தனை மருள் நெறியினின்றும் மீட்டு அருள் நெறியாம் இஸ்லாத்தின்பால் செலுத்தத் தான் அவாவி நிற்ப்தையும் அதற்குரிய யோசனை கூறுமாறு கேட்டார். அதற்கு முர்ரத,

''உங்கள் திருநாமமுற ஓலைதருவீரேல்
அங்கவன் இடத்தினில் அடைந்ததை அளித்தே
பொங்கமுத நன்மொழி புகன்று மறுசெய்தி
செங்கையின்முடங்கல்கொடுசேர்வன இவண் என்றார்'

தனயன் நல்வழிப்பட தந்தையும் தாயும் மடல் வரைந்து கொடுப்பின் அதைத் தானே எடுத்துக்' கொண்டு, தூது சென்று, மகனை நேர்வழிக்கு அழைத்து வருவதாகக் கூறினார் முர்ரத். இந்த யோசனை அபூபக்கர்சித்தீக்(ரலி)

அவர்கட்கு மிகவும் பிடித்தது. அன்பு வழியில் அமைதியான போக்கில் தன் மகனைத் தீனின் வழியில் திருப்ப, முர்ரத கூறியவாறே செய்வதாகக் கூறி வல்ல அல்லாஹ்வின் இன்னருளை இறைஞ்சி முடங்கல் எழுத முனைந்தார். கடிததத்தின் தொடக்கமே கல்லையும் கரையச் செய்யும் உருக்கத்துடன் அமைந்தது தன் மைந்தன் மீதுள்ள பாசத்தையெல்லாம் பிழிந்தெடுத்து உருவாக்கிய சொற்களால் முடங்கள் வாசகங்களை முடைந்தார்.

''என் கண மணியே இருதயக் கனியு ளாய்எம்
அங்கமதில் ஆவியெனும் அப்துல் ரகுமானே
வெங்கரியின மிக்க விறல் மேவு சுதனே! நீ
சங்கை மாநகர் தனைப் பிரிதலாலே.''

எனத் தன் பிரிவாற்றாமையைக் குறித்து எழுதிய அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் மதனின் பிரிவால் குடும்பத்தார் அடைந்த மனத் துனபத்தை அவலச் சுவை ததும்ப,

''மன்னர் மகிழ் நின்றனை வருத்த முற ஈன்ற'
அன்னையும் உடன் பிறவி யானஆயிஷாவும்
பன்னரும் தமர்களோடு பார்த்திபனாம் யானும்
உன்னை நினைவுற்றுருகி ஊண் துயிலும்அன்றோம்'

எனப் பிரிவுத் துயரை நெஞ்சுருகக் கூறி புத்திரசோகத்தை புலப்படுத்தும் அதே சமயத்தில் குபிர் வழி நடந்து நல்லோர்க்குத் தொல்லையும் துயரமும் தந்துவரும் வழி கேட்டினையும் சுட்டிக் காட்டி,

''வள்ளல் மகுமூதடி வணங்க வருகின்றோா
துள்ளுபரி நன்னிதிகள் தூசு நெடுஞ்சோகும்
கொள்ளை கொடுபோய் உயிர்கள் கொண்டபடியாலே
உள்ளம் எயிறண்ணமும் மெலிந்து கருகிற்றே''

என எழுதுவதன் மூலம் நல்லோர் உள்ளமெல்லாம் வருந்துவதோடு, ஈன்ற தன் உள்ளம் இத் தீச் செயல் கேட்டு துயரத்தால் உள்ளம் ஒடுங்குவதோடு கருத நேர்ந்த அவலத்தைச் சொல்லி வருந்துகிறார்.

அத்துடன பெற்றோர்க்குப் பெருமை சேர்க்கும் வண்ணம் மருள்நெறி நீங்கி அருள் நெறி சார்ந்து நாயகத் தடம்பற்றி, இறையுணர்வு பொங்க வாழ வழி காட்டு கிறார்.

''பாதகமுறும் குபிர் எனும் பகையகற்றி
வேதர் இறசூல் நபிதன் மெல்லடி இறைஞ்சப்
போதமுடனே வருதல் புந்தியென வெண்ணிக்
காதலொடு வட்மென வரைந்தனர் கரத்தால்''

முடங்கலை எழுதி முடிந்த அபூபக்கர் சித்தீக் (ரலி) முர்ரத்தின் யோசனைப்படி தன் மனைவியை அணுகி, இதே போன்று தாங்கள் பெற்ற மைந்தர்க்கு தாய் என்ற நிலையில் கடிதம் வரைந்து தருமாறு கேட்டார். மனந் திறந்து கூறும் இருவர் சொலலும் மைந்தனின் மனத் திலே மாற்றத்தை ஏற்படுத்தி நேர் வழி திருப்பும் எனக் கருதி அன்னையும் மடல் வரைந்தார்.

''அயிலுறுஞ் செழுங்கரத் ததிக மைந்தனே!
வயிறிடை உனைச் சுமந்து அளித்து வாயினில்
செயிரற அமுதமும் சிறப்ப ஊட்டும்தாய்
பயிரென வளர்த்தவப் பலனும இங்கிதோ''

எனக் கூறுகிறார். ஈரைந்து மாதங்கள் சுமந்து பெற்று, அமுதூட்டி வளர்த்த தாயின் பிரிலாற்றாமைத் துயர் எத்தகையது என்பதை சிந்தை கொள் மொழியில் கூறு கிறார்.

மேலும், உடன் பிறந்த நங்கை நல்லாள் ஆயிஷாவை அவனி புரக்க வந்த அண்ணலார்க்கு மண முடித்ததால் தாங்கள் பெற்ற மகிழ்வை நலத்தைச் சொற் சித்திரமாகத் தீட்டிக் காட்டும் வகையில்,

''உன்னுடன் பிறந்தொளி இலங்கும் ஆயிஷா
என்னும் என்புதல்வியை இறைவன் தூதுவர்
முன்னுதித் தவரருள் முரசலாகிய
மன்னர் மன்னபி திருமணம் புரிந்தனர்

வள்ளல் என்புதல்வியை மணந்து வாழ்வதால்
தெள்ளிய பதவியும் சிறப்பும் செல்வமும்
விள்ளரும் தலைமையும் விரலும் மேன்மையால்
உள்ளதிங் குனக்குமுன் தனக்கும் உற்றதே

மறைநபி எமக்கொரு மருகர் ஆனதால்
இறையவன் கருணையும் இலங்கும் ஏமநாடு
உறைவதற் குதவியும் உயர் அறங்களும்
குறையறப் படைததனன் கருணை மைந்தனே

எவர்க்கு மன்னபியென இறை அனுப்பியிங்கு
அவர்க்கருள் மறைக் கலிமா அறைந்தவர்
பவக்கடல் கடந்து அரும்பசும் பொனால் அமை
சுவர்க்க நன்னகர் மனைச் சுகத்தில் எய்துவார்.''

என அழகுற மொழிகிறார்.நாயகத் திருமேனியின் நல்வழி நடப்போர் வாழ்க்கையின் எல்லாப் பேறுகளையும் எளிதாகப் பெற்று இன்புறுவர் என்பதையும் தன் குலச்செல்வி ஆயிஷாவை பெருமானார் மணந்ததன் மூலம் தன் குலம் பெற்ற பெரும் பேற்றையுப் மகனின் உள்மனத்தில்சென்று தங்கும் வண்ணம் நளின நடையில் எழுதினார்.

இறை தூதரின் தீன் நெறிக்குப் புறம்பாக வாழமுனைவோர் பெறப்போகும் பெருந்துயரம் எத்தகையது என்பதைச் சுட்டிக் காட்டும் வகையில் தொடர்ந்து,

''ஆதியை அகுமதை அறிந்திறைஞ்சிலாப்
பாதகப் பணியினர் பணியும் தேள்களும்
ஓதரும் எரியும் ஒன்றாக வுற்றபல்
வேதனை மிகுந்த வெந்நரகில் வீழ்குவார்''

எனக் கூறுவதன் மூலம் அடாத செயல் செய்து நல்லோர் உள்ளங்களை வேதனைக்காளாக்கிவரும் தன் மைந்தனை அச்சுறுத்தி எச்சரிக்கிறார். குபிர்வழி வாழ்வோர் இறுதியில் எரி நரகில் வீழ்ந்து படும் துன்பங்களை அடுக்கிக்கூறி, தன் மைந்தனை நல்வழிப்படத் தூண்டுகிறார் அத்துடன் பெருமானார் காட்டும் பெருவழியாகிய இஸ்லாத்தின் பாதையில் நடந்து தீன் நெறி போற்றுமாறு வேண்டுகிறார்.

''ஆகையால் எனதுதன் அருமை மைந்தனே
தோகை ஆமீனத்தருள் தோன்றல் நாயகம்
மேகமார் குடைநபி வேந்தர் தீன்வழி
வாகுசேர் கருத்துடன் வருதல் வேண்டுமால்''

தந்தையும் தாயும் தம் மைந்தருக்கு உள்ளமுருக, அதே சமயத்தில் தவறான பாதையில் செல்வதால் விளையவிருக்கும் பெருங்கேட்டினை எடுத்துக் காட்டியும் அண்ணலைக் காணவந்த அன்பர் அசுமத அடைந்துள்ள துயர நிலையையும் சுட்டிக்காட்டி, அசுமத் மகனையும் கொள்ளைப் பொருளையும் திரும்ப ஈந்து, நபிவழி நின்று இறையருள் பெற வழிகாட்டி எழுதிய இரு மடல்களையும் எடுத்துக் கொண்டு தூதுவராக அப்துர் ரஹ்மான் வாழ்விடம் நோக்கிச் சென்றார் முர்ரத்

சோலை சூழ் மதினாவை விட்டுப் பாலைவழி செல்லும் முர்ரத்தின் பயணப் பாதையாகிய, பாலையின் கொடூரத்தைச் சொல்லோவியமாகத் தீட்டி, நம்மையே பாலையில் பயணம் செய்யும்படி செய்துவிடுகிறார் புலவர் பாலையின் வெப்பம் நஞ்சுண்ட நரகம்போல் உள்ளதாம். வெம்மை தாங்காது விரைந்தோடும் குதிரையின் வாய்வழி வெளிப்படும் வெப்பமூச்சு நிலவுலகே உருகியோடும் உலைக்கள அனல் போன்றுள்ளதாம். கடிதங்களைக் கொண்டு செல்லும் தூதுவர் கடந்து செல்லும் பாலைவழி.

''விடமுங்கிய நரகக்கனல் விளையுங்கமர் வழியோ
படியெங்கணும் உருகும்படிப் பரிவாயிடும் உலையோ
சுடுவெங்கதிர் இன்னாயிரஞ் சுரரின்கர மீண்டி
உடலுங்கன தகையாருதர் உடன்பாலை கடந்தார்,''

என வர்ணிப்பதன் மூலம் பாலை நில வழி பற்றிய ஒருவித அவலச் சுவையைப் படிப்போரிடையே ஏற்படுத்தி விடுகின்றார் குஞ்சுமூசுப் புலவர்.

தூதர் முர்ரத் அப்துர் ரஹ்மானின் உறைவிடம் சென்றபோது அசுமத்தின் மகன் மீது விதித்த பணயப் பொருள் கெடு முடிந்து விட்டதால் அச்சிறுவனை கொல்லப் பணித்த அப்துர் ரஹ்மானை நோக்கி ''உங்கள் அன்புத் தந்தையின் மீது ஆணையிட்டுக் கேட்டுக் கொள்கிறேன். இச்சிறுவனை கொல்லாது விடுக'' எனக் கூறியதோடு எந்தப் பாவமும் அறியாத அச்சிறுவனைக் கொல்லாது விட்டுவிடுமாறு இறைஞ்சி நின்றார். தந்தையின் பேரால் இறைஞ்சி நிற்கும் அத்தூதுவரின் வார்த்தை அப்துர் ரஹ்மானின் உள்ளத்தைத் தொட்டது அச்சிறுவனை கொல்லாது விடுத்ததோடு, அவனைஅன்போடு தன்னுடன் இறுத்திக் கொண்டார்.

தன் தந்தை அபூபக்கர் சித்தீக் (ரலி) மீது வாஞ்சை கொண்டுள்ள அத்தூதுவரிடம் தன் பெற்றோர் குறித்து விசாரித்தார் அப்துர் ரஹ்மான். அதற்கு மறுமொழியாக முர்ரத்.

''தந்தைதாய் உமைத்தான் நாடி
சஞ்சலக் கடலில் மூழ்கி
எந்தநாள் காண்போம் என்ன
எழில்பெறும் விழிநீர் சிந்தி
மைந்தனே! எனவும் கூவி
வாய்விடுத் தழவே வேலை

விந்தைசேர் இனத்தோர் கூடி
விலக்கவே வேலை ஐயா!''

எனப் பெற்றோர் நிலையைக் கூறினார். தனை ஈன்று வளர்த்த தாய் தந்தை மீது அன்பும் வாஞ்சையும் பொங்கி யெழத் தொடங்கியது. பெற்றோரைக் காணும் நாள் எந்நாளோ என ஏற்கினார். அவருள் அடைபட்டிருந்த பாசம் உணர்ச்சிப் பிரவாகமாக வெளிப்படத் தொடங்கியது.

அச்சமயம் அங்குவந்த அப்துல் ரஹ்மானின் மாமனாரும் இஸ்லாத்தின் பரம வைரியுமான அபுசுப்யான் பணயச் சிறுவனைக் கொல்லாத காரணம் கேட்டு நின்றான். அதற்கு மறுமொழி கூறிய மருமகன் அப்துர் ரஹ்மான் என் தந்தையின் பேரால் கொல்லாது விடுக! எனக் கூறியதால், அச்சிறுவனைக் கொல்லாது உயிர்ப் பிச்சை தந்து அபயமளித்ததாகக் கூறினார்.

அப்துர் ரஹ்மானின் மன மாற்றத்திற்கும் காரணமான அபூபக்கர் சித்தீக் (ரலி) மீது மிகுந்த வெறுப்புக் கொண்டான். என் மருமகனின் மனந்திருந்தக் காரணமான அபூபக்கர் சித்தீகை அழிக்கப் போவதாக ஆர்ப்பரித்தான்.

தன் தந்தையை இழித்துப் பேசி வெஞ்சினம் கூறிய மாமனார் அபுசுப்யான் மீது அடக்கொணா வெறுப்புக் கொண்டார் அப்துர் ரஹ்மான். இதுவரை அவருள் கசிந்து கொண்டிருந்த தந்தை பாசம் வெள்ளமாக வெளிப்பட்டது.

தன் தந்தையின் பெருமையை பலபட உணர்ந்தார், அபூபக்கர் சித்தீக்கின் அருமை பெருமை அறியாது அற்பத்தனமாகத் தரம் தாழ்த்திப் பேசிய தன் மாமனார் மீது மட்டற்ற கோபம் கொண்டார். அன்பு மகன் அப்துர் ரஹ்மான். தன் தந்தையின் அறிவு, ஆற்றல். வீரம்

எத்தகையது என்பதை எடுத்துக் கூறினார். கருணை நபி வழி நடக்கும் அவர்தம் புகழைப் போற்றிப் பேசினார். முப்பது வீரர்கள ஒருசேர முயன்றாலும் தன் தந்தையின் முடியொன்றைக்கூட அகற்றமுடியாதென்பதை ஆக்ரோசத்துடன் எடுத்துக் கூறினார். அப்துல் ரஹ்மானின் கடுஞ்சினத்தை,

"அப்பொழுது அவனை நோக்கி
அடவரி கடுப்பச் சீறி
மெய்ப்புக ழுடைய தாதை
விரல்வலிப் பெருமை வீரம்
செப்பியங் கவர்தே கத்தின்
சிறுமுடி யொன்று நின்போல்
முப்பது பெயர் சென்றாலும்
முறிப்பதற் கரிதென் றாரால்"

எனச் சொல்லோவியமாகத் திட்டி அவரின் சீற்றமிகு தோற்றத்தையே நமக்குப் படம் பிடித்துக் காட்டிவிடுகிறார் புலவர்

இவ்வுரை கேட்டு வெகுண்ட அபுசுப்யான் சினத்தின் எல்லைக்கே சென்றவனாய் பேரதிர்ச்சியுடன் வந்தவழி நோக்கி நடக்கலானான்.

அப்துல் ரஹ்மானின் உள் மனத்தை மூடியிருந்த இருள் படலம் கொஞ்ச கொஞ்சமாக விலகத் தொடங்கியது. அதுவரை மனத்துள் அடைப்பட்டுக் கிடந்த பெற்றோர் பாசம் அவரை முழுமையாக ஆட்கொண்டது தன் சுற்றத்தின் நலத்தையெல்லாம் பற்றி தூதுவந்த மூர்ரத்திடம் ஆவல் பொங்கக் கேட்டார். அதுவே அருமையான தருணம் என எண்ணிய தூதர் முர்ரத் அன்புத் தந்தை அபூபக்கர் சித்தீக் (ரலி)கும் அருமைத் தாயாரும் எழுதியனுப்பியிருந்த பாசமிகு கடிதங்களை அப்துல் ரஹ்மானின் கையிற் கொடுத்தார்.

கடித வாசகங்கள் மைந்தனின் கண்களில் நீரை சொரி யச் செய்தன. அவரின் உள்ளம் தெளிந்த நீரோடை போலாயிற்று. அபுசுப்யானின். அந்தகாரச் சூழலினின்றும் முற்றும் விடுபட்டு தீனொளியின்பால் சிந்தையைச் செலுத்தினார் நல்வழி ஏக நற்செய்தி கொண்டுவந்த முர்ரத்தின் இருகரம் பற்றி அவரையே சாட்சியாக வைத்து,

''ஏகனே உண்மை என்றும்
எழில் நபி ரசூல் என்றும்
மோகமாம் கலிமா முற்றும்
மொழிந்தனர் முக்கா லன்றே''

இஸ்லாத்தைத் தழுவினார். நபிவழி நடந்து மறை நெறி போற்றி இறைவழி வாழ உறுதி கொண்ட அப்துர் ரஹ்மானின போக்கறிந்து சினமிகக் கொண்ட அபுசுப் யான் பணயப் பொருளாக நிற்கும் அசுமத்தின் இள மகனை இழுத்துச் சென்று கொல்லுமாறு பணிக்கிறான். இதைக் கண்டு கொதித்தெழுந்த அப்துர் ரஹ்மான் சிறு வனின் தளைதெறித்துத் தன்னருகே இருத்திக் கொண் டார். இதைக் கண்டு செய்வகை தெரியாது திகைத்து நின்ற அபுசுப்யான், ஏமாற்றம் மிக்கவனாய் வந்தவழி நடந்தான்.

இனியும் இஸ்லாத்தின் விரோதியாகிய அபுசுப்யா னோடு இருக்க விரும்பாத அப்துர் ரஹ்மான், பெற்றோர் வாழும் மதினா மாநகர் செல்ல ஆயத்தமானார். தன் உள் ளக் கிடக்கையைத் தன் இல்லக் கிழத்தியாகிய அன்பு துணைவிக்கு அறிவித்து,

''எங்கள் நன்னெயினாக முகமது நபியை
இருதயத் திருத்தி என் தகப்பன்
தங்கிய மதினவள நகர் அதனில்
சார்வதற்கு இன்றுயான் பயணம்

உங்கள் தன் இனத்தோடு உனையருள தாதை
உறுமனை சேர்ந்திடும எனவே
திங்கள் என்று இலங்கு முகமலர் தனக்கோர்
தீயெனச் சுடும் சொற்றனரால்.''

இதனைக் கேட்ட மனையாட்டி செய்யிதத்து கவலை மிகக் கொண்டாள். கொண்டானை இழந்து, குபிர் வாழ்வு வாழும் தன் தந்தை அபுசுப்யானின் இல்லத்தில் ஒரு கணமும் வாழ விரும்பாது கணவன் எவ்வழி அவ்வழி மனைவி எனக் கருதி, கணவன் வழியில் வாழ முடிவு செய்தாள். இஸ்லாத்தில் இணைவதோடு. கணவனுக்கு முன்னதாக மதின மாநகர் புறப்படப் போவதாகவும் உறுதியுடன் கூறினாள். இதனைக் குஞ்சுமூசுப் புலவர்,

''அன்னவை உரைப்ப அரிவை செய்யிதத்தும்
ஐயனை இழந்தனன் தலைவன்
உள்ளிய படி அப்பெரும் புதிபுகுத
உமக்குமுன் பயணம் என்றுரைத்தே
மின்னிய வடிவாள் வலிபெறும் கணவன்
விளங்கும்மென் கரததினைத் தீண்டி
நனையம் பொருந்து நபித்திருக் கலிமா
நாவினால் நயப்பட நவின்றால்'

தன்னை மீறி தன் மருமகன் அப்துர் ரஹ்மானும் அன்பு மகள் செய்யிதத்தும் இஸ்லாத்தைப் பேணிப் பின்பற்ற உறுதி கொண்ட நிலையானது, அபுசுப் யானின் உளளத்தில் எரிதழலாய் கொழுநது விட்டெரி யந் தொடங்கியது. அவர்களைத தம் வழி திருப்ப இயன்றதெல்லாம் செய்து பார்த்தான் அவர் தம் உள்ள உறுதியை கடுகளவும் மாற்ற இயலவில்லை. சாம, பேத தான முறைகளைப் பின்பற்றித் தோல்வி கண்ட அபுசுப்யான் இறுதியில் தணடமேந்தித் தடுக்க முடிவு செய்தான் படையுடன் மதின மாநகர் செல்ல முயன்ற மருமகனையும் மகளையும் முர்ரத்தையும் அசு

மத்தின மைந்தனையும் படை கொண்டு தடுத்து நிறுத்த முயன்றான். இதற்கஞ்சாத அப்துர் ரஹ்மானும் செய்யிதத்தும் எதிர்த்துப் போரிடுகின்றனர் அபுசுப்யானின் மூர்க்கத்தன மிகு பெரும் படையின் முன்பு அப்துர் ரஹ்மானின் சிறுபடை பொருத நேர்ந்தது இஃது அப்துர் ரஹ்மானுக்கேற்பட்ட பெருஞ்சோதனையாக இருந்தது.

இக்கடுஞ் சோதனையினின்றும் தன் வழிப்பட்ட அப்துர் ரஹ்மானுக்கும் செய்யிதத்துக்கும் உதவும் வண்ணம், இந்த இக்கட்டான நிலையை 'வஹி' மூலம் பெருமானாருக்கு இறைவன் அறிவிக்கிறான். உண்மை உணர்ந்த அண்ணலார் அப்துர் ரஹ்மானுக்குத் துணை நிற்கும் பொருட்டு நரர் புலி அலியாருடன் ஆமிர்,சுபைர், மிக்தாது ஆகியோரைப் பெரும் படையுடன் அனுப்பி வைக்கிறார். அப்துர் ரஹ்மானுக்குத் துணை செய்யச் செல்லும் இப்படையின் தன்மையை,

"கடலை நடுங்கக் கரைகளும் நடுங்கக்
ககனமும் நடுங்கிடச் சுடர்கள்
உடலுளம் நடுங்க உறும்படை நடுங்க
உலகமும் நடுங்குற வனந்தன்
விடமுடி நடுங்க மழைமுகில் நடுங்க
விரிவுறு வரைபல நடுங்க
நடமிடு பரிகள் ஆக்ரமித் தடர
நால்வருங் களிப்புறப் போந்தார்."

எனப் புலவர் கூறும்போது, கடலும் வானும் நிலமும் மலையும் நடுங்கும் வண்ணம் வீரத் திறலுடன் நால்வரும் நடத்திச் செல்லும் போர்ப்படையின் மாட்சியை,குபிர் வழி நடந்து இஸ்லாத்திற்கும் இன்னல்பல தந்து வரும் அபுசுப்யானின் படையை அழித்தொழிக்கும் ஆர்வப் பெருக்குடன் செல்லும் படையினரின் களிப்பையும் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துவிடுகிறார்.

மதினாவிலிருந்து அண்ணலார் அனுப்பிய படை வந்துசேருமமுன்னரே அபுசுப்யானின் பெரும்படை அதி மூர்க்கத்தனமாக அப்துல் ரஹ்மானின் சிறுபடையை தாக்கிச் சின்னாபின்னப்படுத்த முயன்றது. இறைவனின் அருளை வேண்டியவர்களாக அப்துர் ரஹ்மானும் செய்யிதத்தும் களம் புகுந்து, அபுசுப்யானின் படைகளை கதி கலங்கச் செய்கினறனர்.

இருபடைகளின் மோதலைச் சிறப்பாகச் சித்தரிக்கிறார் புலவர் அதிலும் குறிப்பாக பெண் அடலேறாகப் போர்க் களத்தே புகுந்து, இஸ்லாத்தின் எதிரிகளை வெட்டி வீழ்த்தும் வீராங்கனை செய்யிதத்தின வீரத்தைப் பெரிதும் பாராட்டிப் பாடுகின்றார்.

செய்யிதத்து குதிரைமீதமர்ந்து அடலேறுபோல பகைவர்களை அம்பெய்து கொன்று குவிக்கிறாள். இக் காட்சியை,

''எடுத்தவில்லுடன் இடக்கையும்
இலங்கு செம்பு ருக்கின்
தொடுத்த சட்டையும் உரதைையும்
துளைத்து அகததுயிரை
அடுத்து வெளவி அப்புறம் புகுந்து
எமன்கரத் தளித்தே
தடுத்த தாரெனத் தாவின
தையல்கைச் சரங்கள்

'புலியென நடத்தினள் புவி நடுங்கவே' எனக் கூறி பெரிமிதப்படும் குஞ்சு மூசுப் புலவர்,

''செய்யி தத்தெனும் சிற்றிடைத்
தையல் தன்கரத் தாரைவாள்

கொய்யு ளைப்புறங் கொண்டவர்
மெய்ய றுந்திட வீசினார்''

என வீரப் பனுவல் இசைக்கிறார். இவ்வளவு வீரத்தோடு ஆவேசமாகப் போராடும் செய்யிதத்தின் வீரப் போரின் விளைவால்

''தலைகு விந்தன தானையின்
சிலைகு விந்தன செம்புனல்
அலைபொ ருந்திய வாறெலாம்
மலைகு விந்தன வாறுபோல்''

எனக் கூறி மகிழ்கிறார்.

போர்க்களத்தே எதிர்ப்பட்ட எதிரிகளின் கையை வெட்டியும் காலைத் துண்டித்தும் தலையைக் கொய்தும் வீரப்போர் புரியும் செய்யிதத்து ஆணா அல்லதுபெண்ணா என்ற ஐயப்பாட்டையே வீரர்கள் மத்தியிலே ஏற்படுத்தி விடுகிறது. அப்பெண்ணணங்கால் அதுவரை உலகம் கண்டிராத புதுவகை இரத்த ஆறு உருவாகிப் போர்க் களத்தே ஓடுவதாகக் கூறி, செய்யிதத்தின் வீரத்தைப் போற்றுகிறார்.

''கையறுந்து புய வரையறுந்துபய
காலறுந்துவிழ வாயற
மெய்யறுந்துவரி யுரமறுந்துநடை
வெப்பரிக்கள மறுந்திட
செய்யிதத்தெனு மிசைந்தநாமமுறு திருவினாள்
பொருத செங்களம்
வையகத்திலொரு புதியசோரிநதி வந்து
தோன்றுவது போன்றதே''

எனப் பாடி செய்யிதத்தின் வீரச் செயலை விளங்கவுரைக்கிறார்.

கொலைக்களத்தே மாண்டு கிடக்கும் எதிரிப்படை வீரர்களின் பிணங்கள் எவ்வாறு கிடந்தன என்பதைக் கூறும்போது, அழகிய உவமையைக் கையாண்டு போர்க் கள அவலச் சூழலையே நம் மனக்கண்முன் கொண்டுவந்து காட்டிவிடுகிறார் புலவர்,

செந்நீர்க் கடலிடை மிதந்து கிடக்கும் பிணங்களின் வயிற்றைக் கிழித்துப் பருந்துகள்கவ்விச்செல்கின்றனவாம் அப்போது தொங்கும் குடல்களோடு பருந்து செல்லும் காட்சி, தரையிலே சிறுவர்கள் பட்டம் விடுவதுபோல் காட்சியளிக்கிறதெனக் கூறுவதன் மூலம் நம்மை கொடூர மிக்க போர்க்களத்திற்கே அழைத்துச் சென்று காட்டி விடுகிறார் புலவர்.

''வாரி நிகர்த்தசெந் நீரில் உறும்பிண
வல்லுத ரக்குடலை
தேரோடு பற்றியெ டுத்தபருந்து
நெடுந்தொலை விண்செலவே
தாரணி மீது தரித்திளைஞோர்கள்
சமைத்துள பட்டமதைச்
சீரொடு கட்டிய நூலொடும் விட்டுச்
சிறந்து பறந்தனபோல்.''

இதே போன்று போர்க்களக் காட்சியை மற்றுமொரு கல் எறியப்பட்டபோது தாவிப் பறந்தோடும் காக்கை களைப் போல் எதிரிகள் செய்யிதத்தின் அம்பு தங்களைக் குறிவைத்து எய்யும்போது அலறித் தாவி ஓடினராம். விண்ணில் பறக்கும் பருந்து தரையில் இரை பொறுக்க அலையும் குஞ்சுகள் மீது குறி வைத்துப் பாயும்போது பயத்தால் நடுங்கிய குஞ்சுகள் புகலிடம் தேடிஓடித்தப்பிக்க முயல்வதைப்போல், எதிரிகள் செய்யிதத்தின் குறியினின் றும் தப்பி அலறியடித்து அங்குமிங்கும் ஓடினராம். தங்

களைத் தாக்க முனையும் கொடிய புலியைக் காணும்புள்ளி மான்கள் உயிருக்கஞ்சி ஓடி ஒளிவதைப்போல் செய்யிதத் தெனும் வீரத் திருவுருவைக் கண்ட மாத்திரத்தில் எதிரிப் படையினர் இருக்குமிடம் தெரியாது பாய்ந்தோடி மறைந் தனராம்.

"எறிந்தகல் வரவு கண்டங்கு
எழுந்தகல் காகம் போலும்
பறந்தசெம் பருந்தைக் கண்ட
பஞ்சுகம் வெருண்ட போலும்
மறந்திகழ் புலியைக் கண்ட
மானினம் வெருண்ட போலும்
தறிந்துயிர் போய்வெ ருண்ட
தரியலர் ஓடினாரால்"

என எளிய உவமைகளின் துணைகொண்டு வீரத்திருமகள் செய்யிதத்தின் வீரப்பெருக்கையும், அடலேறுபோல் போர்க்களத்தே பொருது நின்ற காட்சியையும் அவரது வீரத்திற்கு முன்னால் அபுசுப்யானின வீரப்படை கோழை போல் அஞ்சியோடிய காட்சியையும் நம் கண்முன்னே வந்து காட்டி விடுகிறார்.

இறைநெறி போற்றும் இஸ்லாமியப் படைக்கும் எதிரி அபுசுப்யானின் பெரும் படைக்குமிடையே நடந்து உக்கிர மான போரில் இறுதியில் இறை நெறிப் படையே வெல் கிறது. தீனநெறிப் படையினர் விழுப்புண் பல பெற்று வெற்றிக் கொடி நாட்டுகின்றனர். அதுவே இஸ்லாத்தின் பெரும் வெற்றியாக அமைகிறது.

வெற்றிப் பெருமிதத்தோடு அப்துர் ரஹ்மானும் செய் யிதத்தும் அசுமத்தின் மகனும் முர்ரத்தும் மதினா சென்று இஸ்லாத்தின் வெற்றிக் கனியைப் பெருமானருக்கு காணிக் க்கையாக்கி ஆசி பெறுகின்றனர். தீன்வழி திரும்பிய மகனையும் மருமகளையும் பெற்று மகிழ்ந்தனர் அருமைத்

தந்தை அபூபக்கர் சித்தீக்கும் அவர் தம் துணைவியாரும் பணயப் பொருளாக விட்டு வந்த அருமந்தச் செல் வனைத் திரும்பப் பெற்ற அசுமத் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார். தன் தூது மாபெறும் மனமாற்றத்தை ஏற் படுத்தி, தீனெறி செழிக்க வகை கண்டது குறித்து மகிழ்ந்து நின்றார் முர்ரத் இததகையஇனியகாட்சியோடு செய்யிததது்ப் படைப்போரை முடிக்கிறார் புலவர் குஞ்சு மூசு ஆலீம் லெப்பை அவர்கள்.

குஞ்சுமூசுப் புலவரின் முந்தையப் படைப்பான சல் காப் படைப்போரில் கன்னி சல்கா இஸ்லாத்தில் இணையு முன்னர், அவளது எழிலழகை இனிய சொல்லோவிய மாகத் தீட்டிக் காட்டியது போன்றே ‘செய்யிதத்துப் படைப்போர்’ இலக்கியத்திலும் அழகுமிகு நங்கை செய் யிதத்து. இஸ்லாத்தில் இணையும் முன்னர் அவளது பேரழகைப் பாராட்டி வர்ணித்துப் போற்ற புலவர் தயங்க வில்லை. இஸ்லாமியநெறியை ஏற்ற பின்னர் இவ்வாறு பெண்ணழகைப் போற்றிப் பாராட்டி மகிழ இடமிருக் காது என்பதைத் தெளிவாக உணர்ந்தவராதலின், அதற்கு முன்பே தன் வர்ணனைத் திறனால் அவளது வடிவழகை சொற்சித்திரமாக வெளிப்படுத்தி படிப்போரை இன்ப உணர்வில் துளைக்கச் செய்து விடுகிறார். சான்றாக. ஒரு பாடலைப் பார்ப்போம்.

விண்ணிலே தண்ணொளி பரப்பிவரும் வாலமதி ஒரு நாள் பூமியை நோக்கித் தன் பார்வையை செலுத்தியதாம் அப்போது தரையிலே நடமாடிய ஒரு மங்கையின் மீது நிலவின் பார்வை நிலைகுத்தி நின்றது. இரவு நேரங்களில் வானில் தோன்றி மண்ணுலகின் இருளகற்றி ஒளி பாய்ச்சி பெருமித நடைபோட்டு உலகையே வலம் வரும்நிலவாகிய தன்னைவிட ஒளிமிக்க வதனமதி கொண்ட செய்யிதத்து எனும் மங்கை நல்லாளின் ஒளிமுகம் நிலவைத்திகைக்க வைத்தது. தண்ணொளி மிக்க தன்னைவிட அழகுமங்கை செய்யிதத்து ஒளி மிக்கவளாக இருப்பதறிந்த நிலவு நாணு

கிறதாம் வெட்கத்தால் அதன் உடல் கூனிக் குறுகி ஒடுங்கி வளைந்து நெளிந்து சிறுத்துப் போகிறதாம், இவ்வாறு கவலையாலும் ஏக்கத்தாலும் தேய்ந்து மெலிந்து மறைந்து பின், தேறுதலடைந்து சிறிதுசிறிதாக வளர்ந்து மீண டும் வெட்கத்தாலும் ஏக்கத்தாலும் தேய்ந்து மறைகிற தாம் இவ்வாறு மாதந்தோறும நடைபெற்று வருகிற தாம். இதை,

''செய்யிதத்து எனும் மடந்தை
செய்யதுணை மாமதி
வையகத்து இருப்பு வந்துவந்து
கண்டு வெட்கலான்
மெய் ஒடுங்கி அமுதுசிந்தி
மிகவளைந்து நாணிவெண்
கையிழந்து தேயும் இந்து
கவலும் திங்கள் தோறுமே''

எனக் கூறிக் களிப்பூட்டுகிறார் புலவர்.

இவரது காப்பியத்தில் அழகுச் சுவை ஆங்காங்கே இடம் பெற்றிருப்பது போன்றே, அக்காலத் தமிழக முஸ் லிம பெரு மக்கள் கைக்கொணடிருந்த இஸ்லாமியப் பண்பு நெறிகளும் இடம்பெற்று இன்புறுத்துகின்றன. இனிய சந்த இசையோடு கூடிய இவரது காப்பியப் பாடல களுக்கிடையே அக்காலத்தில் இசையொலி எழுப்பப் பயன்பட்ட இசைக்கருவிகளைப் பற்றிய செய்திகளும் இடப்பெறத் தவறவில்லை. அக்காலத் தமிழகத்தில் பயன் பட்டு வந்த பதினெட்டு வாத்தியக் கருவிகளின் பெயரை ஒரு பாடலில்,

''முரசு துந்துமி திமிலை பம்பைகள்
முருடு திண்டிமி மத்தளம்
குறைசெய் பூரிகை கவுரிகாகம்
கொம்பு மோகர வீணைகள்
பெருவணப் பறை சின்னமுந்துடி
பேரி கின்னரமும் தவில்

அரவம்மிஞ்சிய கடல் அமைந்திட
ஆர்த்த டர்ந்தன சேனையே''

எனக்கூறி அக்காலத்தில் வழக்கிலிருந்த இசைக்கருவிகளை யெல்லாம் நம் மனக் கண் முன் வரிசையாக வந்து தோற்ற மளிக்கச் செய்துவிடுகிறார்.

சல்காப் படைப்போர் இலக்கியம் போன்றே இச்செய்யிதத்துப் படைப்போர் இலக்கியத்திலும்பெருமானாருக்கே எல்லா வகையிலும் மூக்கியத்துவம் தந்து பாடியுள்ளார் ஆசிரியர். பெருமானாரின் பெருமையை, அருள் உள்ளத்தை, கருணைத் தன்மையை தீயன கண்டு வெகுண்டு அதனைப் போக்கத் துடிக்கும் துணிவை, இறை நெறி பேணிப் பரப்புவதல்காணும் மனததிட்பத்தைப்பற்றியெல்லாம் சிறப்பித்துப் பாடுவதன் மூலம் இலை மறை காயாக பெருமானாரையே காப்பிய நாயகராக அமைத்துள்ளார் எனில் அஃது மிகையன்று; உண்மை.

தமிழ்நாட்டுச் சூழலில் அரபு நாட்டை அமைத்துக் காப்பியம் பாடி வெற்றி கண்டவர் புலவர் குஞ்சுமூசு ஆலிம் லெப்பையவர்கள். அவரது படைப்புகளாக 'சல்காப் படைப்போர்' படைப்பிற்கும் மூல நூலாக அமைந்தது ஹலரத் ஹசனுல் பிஸரி (ரஹ்) அவர்களின் அரபி மொழி நூல்களாகும். அவற்றின் தழுவல்களாக எழுந்தவையே இவ்விரு நூல்களும் என்பது இங்குக் குறிப்பிடத் தக்க செய்தியாகும்.

பிற படைப்போர் இலக்கியங்களில் காண்பதுபோன்றே இஸ்லாமிய வரலாற்றுச் சாயல் இவற்றில் தென்படினும், நாயகத் திருமேனியின் பெயரும் அவர்தம் அருமைத் தோழர்களின் பெயர்களும் அன்பர்கள் சிலரின் பெயர்களும் இஸ்லாத்தின் எதிரிகளான அபுசுப்யான் போன்றோர்களின் பெயர்களும் தாராளமாக இவற்றில் இடம்

பெற்றபோதிலும் இந்நூல்களில் கூறப்படும் சம்பவங்கள் எவையும் வரலாற்று உண்மைகளோடு நேரடித் தொடர் புடையன எனக் கூறுவதற்கில்லை. வரலாற்றுச் சாயலில் மேற்கொள்ளப்பட்ட கற்பனைப் படைப்புகளாகவே இக் கதைச் சம்பவங்கள் கருதப்படுகின்றன ஆயினும் இஸ்லாம் போர் பற்றிக் கொண்டுள்ள கொள்கைகளையும் இஸ்லா மிய நெறியை, எதிரிகளின் உள்ளமும் ஏற்கும் வகையில் எடுத்துக் கூறப்படும் தன்மையையும் இப்படைப்புகள் சிறப்பாக எடுத்துக்கூறத் தவறவில்லை.

படைப்போர் இலக்கிய வரிசையில் நாட்டுப்புறப் பாடல் போக்கில் அமைந்த மற்றொரு குறிப்பிடத்தக்க இலக்கியம் 'காசிம் படைப்போர்' ஆகும். இந்நூல் எழுதப் பட்ட காலம் என்ன என்பதும் தெரியவில்லை. இந்நூலா சிரியர் பெயர் என்ன என்பதும் தெரியவில்லை. ஒரு சிலர் இந்நூலை எழுதியவர் அப்துல் காதிர் ராவுத்தர் எனக் குறிப்பிடுகின்றனர். ஆனால், இதனை உறுதிப்படுத்த ஆதாரங்கள் ஏதும் கிடைக்கவில்லை.

இந்நூல் 215 ஈரடிக் கண்ணிகளால் ஆனது. முதல் மூன்று காப்புப் பாடல்கள் விருத்தப் பாடல்களாகஅமைந் திருந்தாலும் பாமர வாசகர்களைத் தன்பால் பெரிதும் ஈர்க்கும் தன்மையுடையனவாய் பாமர மக்கள் அன்றாட வாழ்வில் அதிகம் கையாலும் சாதாரண நடைமுறை வழக்குச் சொற்களையே அதிகம் கையாண்டு பாடல்கள் புனையப்பட்டுள்ளன. எனவே படிக்கவும் கேட்கவும் எளி தாகப் புரிந்து கொள்ளவும் ஏற்றதாக இப்படைப்போர் இலக்கியம் அமைந்துள்ளது

வல்ல அல்லாஹ்வின் பேரருளை வேண்டியும் அண்ணல் நபி முதலாக இறைத் தூதர்கள் ப்போற்றுதலோடும் தொடங்கும் இப்படைப்போர் இலக்கியம் கர்பலா போர்க்

களத்தே காசிம் எனும் கட்டிளங்காளை எசீதின் எதிரிப் படைகளோடு வீரப் போரிட்டு மடிந்த சோக வரலாற்றை சுவைபட விரித்துரைக்கிறது.

மக்களாட்சி முறையில் ஆட்சித் தலைவர்கள் தேர்வு செய்யப்பட்டு வந்த இஸ்லாமிய ஆட்சி முறைக்கு முற்றிலும் மாறுபட்டதாக அரேபியாவின் சர்வாதிகார ஆட்சித் தலைவராகத் தன்னை அறிவித்து முடிசூட்டிக் கொண்ட எசீதின் கொடுங்கோலாட்சியை எதிர்த்து அண்ணலார் போதித்த, அவர்தம் அருமைத் தோழர்களால் கடைப்பிடிக்கப்பட்ட மாநிலம் போற்றும் மக்களாட்சி முறையை மீண்டும் நிலைநாட்ட போருக்கெழுகிறார் அண்ணல் நபியின் அருந்தவப் பேரர் ஹுசைனார். கூஃபா மக்களின் பேராதரவை நம்பி எழுபத்திரண்டு பேர்களுடன் யூப்ரட்டீஸ் நதிக்கரையில் கர்பலா எனுமிடத்தில் தங்கியிருக்கும் ஹுசைனாரின் சிறுபடையை எதிர்பாரா நிலையில் நாலாயிரம் பேர் கொண்ட உமறு இப்னு சஆதின் பெரும் படை தாக்குகிறது. சற்றும் எதிர்பாரா நிலையில் வந்து போதிய எசீதின் படையை எதிர்த்துக் கொடுஞ்சமர் புரிந்தனர் இமாம் ஹுசைனின் சிறு படையினர். மக்களாட்சி முறையை மீண்டும் மலரச் செய்வதில் அசைக்க முடியா உறுதிகொண்ட ஹுசைனாரின் கூட்டத்தார், ஏற்பட்ட பெருஞ் சேதத்தைக் கண்டு சிறிதும் கலங்காது இறுதிவரை போரிடுகின்றனர். இதில் நரர்புலி அலி (ரலி) அவர்களின் அருமைப் பேரரும் இமாம் ஹசனாரின் மகனுமான காசீம் எனும் கட்டிளங்காளை காண்போர் வியக்கும் வண்ணம் எதிரிகளோடு போரியற்றிய நிகழ்ச்சிகளைப் பெரிதும் விவரிக்கிறது 'காசீம் படைப்போர்' இலக்கியம் இதனைப் பற்றிக் கூறும் நூலாசிரியர்,

''காரணன் தூதரான ஹபீபுல்லா மருகரான
நேரணி அலியார் மைந்தர் நிறைந்த கண்மணியாய்
வந்த

சீரணி அசனார் பாலர் செய் படைப்போரைச் சொல்
வோம்''

எனக் கூறி தெளிவுறுத்துகிறார்.

படிப்போரின் அல்லது படிக்கக் கேட்போரின்நெஞ்சங் களை நெக்குருகச் செய்யும் வண்ணம் நிகழ்ச்சிகள் அமைக் கப்பட்டுள்ளன.

நாலாயிரம் போர்வீரர்களைக் கொண்ட உமறுஇப்னு சஆதின் தலைமையிலான எசீதின் படையினர் எழுபத் தரண்டு பேர்கள் மட்டுமே அடங்கிய சிறு குழுமத்தோடு மூர்க்கமாக மோதிப் பொருது சின்னாபின்னப்படுத்துகின் றனர். ஒருவர்பின் ஒருவராக மடிகின்றனர். இறை நம் பிக்கை ஒன்றையே உயிர்மூச்சாகக் கொண்ட இமாம் ஹுசைனாரின் சிறுபடை சர்வாதிகார முடியாட்சிக்கு முடிவுகாணும் வேட்கையோடு மோதி தாங்கொணா துயரங்களை அடைகின்றது.

இந்நிலையில் இமாம ஹுசைனாரின் மூத்த மகன் அலியக்பர் முதன் முதலாகப் போரியற்றப்புறப்படுகிறார். வீரப் போரிடும் அலியக்பர் எதிரியின் வாளுக்குஇரையாகி மடிவதை நேரிற கண்ட இமாம் ஹசனாரின் செல்லப் புதல்வர் காசிம் எழுச்சியும் உணர்ச்சியும் மிகக் கொண்ட வராகப் போர்க்களம் நோக்கிப் புறப்படுகிறார். இதனை யறிந்த இமாம் ஹுசைனார் காசிமின் தந்தை இமாம் ஹசனார் இறப்புக்குமுன் வெளியிட்ட இறுதி விருப்பத்தை வெளியிடுகிறார். ஹுசைனாரின் மகளை காசிம் மணக்க வேண்டும் என்பதே அவ்விருப்பம் தன் தந்தையின் இறுதி விருப்பத்தை இனிது நிறைவேற்ற விழைந்த இளைஞர் காசிம் அவ்வாறே மணமுடிக்கிறார். மணக்கோலம் கலை யும் முன்னரே வாளேந்திச் செறுகளம் நோக்கிச் சென்று எசீதின் படையுடன் வீரப் போரிட்டு மாய்கிறார். சுற்றம் சூழ எங்கும் அவலச் சூழல் கவ்வ அவரது நல்லுடல் அடக்கம் செய்வதோடு நூலை முடிக்கிறார் ஆசிரியர்.

குறுகிய கால வட்டத்திற்குள் நடந்து முடியும் இக் கதைப் பாத்திரங்களும் மிகச் சிலராகவே அமைகின்றனர். இஸ்லாமிய நெறியையும் மசகளாட்சி முறையையும் காக்க நடந்த இப்போரில் மிகுதியும் இடம் பெறுவது அவலச் சுவையேயாகும்

அநீதிக்கெதிராக கொதித்தெழும் அலி (ரலி) அவர் களின் பேரர் காசிமின் வீரமும் செயலும் இலக்கியம் முழுதும் பரக்கப் பேசப்படுகின்றது. மூல எதிரியான எசீதின் பெயர் இவ்விலக்கியத்தில் கூறப்பட்டாலும் நேரடிப் பாத்திரமாக இக்கதையில் இடம் பெறவில்லை என்பது கவனிக்கத்தக்கதாகும்

எளிய சொற்களைக் கொண்டு ஈரடிக் கண்ணிகளா லான இவ்விலக்கியம் துயர உணர்வை மிகுவிக்கும் வகை யில் சந்தச் சிறப்போடு அமைந்துள்ளது வீரப் போரிட்டு எதிரியின் வாளுக்கு இறையாக வீழ்ந்து கிடக்கும் காசிமின் உடலைக் கண்டபோது அவரது தாயாரும் சிறிய தந்தை யார் இமாம் ஹுசைனாரும் காசிமின் மனைவியும் கதறியழுகின்றனர் சிறிய தந்தை, தன் அண்ணன் மகனை மடியில் போட்டு மிகுந்த துயரத்துடன் வாய் விட்டு புலம்புவதாக,

> ''எங்கள் குடிக்கரசே மகனே
> இருப்பாய் என்றெண்ணியிருந்தேன்
> தங்க மகனாரே எங்கள்
> தலைவிதி யிதுவோ!''

என அவலச்சுவை ததும்பும் சொற்சித்திரமாகப் புனைந்து காட்டிப் படிப்போரின் கண்களையும் குளமாக்கி விடுகின் றார்.

காசிமின் மனைவி, மணமுடித்த கணநேரத்தில் வீர மரணத்தைத் தழுவிய தன் கணவர் காசீம் உடல் கண்டு,

''கூந்தல் அவிழ்க்கலையே
தங்கக் காப்பு கழட்டவில்லை
கொண்டு மணமுடித்த மலர்மாலை
செண்பகம் வாடலையே''

என்றெல்லாம் கதறியழுதுக் கண்ணீர் சிந்திப் புலம்பும் காட்சி, நாட்டுப்புற மக்களிடையே நிலவி வரும் ஒப்பாரிப் பாட்டாகவே அமைந்துள்ளது.

காசீம் வீரத்தை மிகைப்படுத்திக் காட்டும் வகையில் இயற்கை கடந்த செயல்களாக வானோர் வாழ்த்துவது, காசீமின் வெற்றி முகம் கண்டு மலர்மாறி பொழிவது காசீமின் இறப்பறிந்த சொர்க்க மங்கையரும் வானவரும் துயரமிக்கவர்களாக வருந்தியழுவது போன்றவை காசீமின் ஆற்றலையும் வீரப்புகழையும் உயர்த்திக் கூறக் கையாளப்பட்ட உத்திகளாக அமைந்துள்ளன.

சாதாரண படிப்பறிவுள்ளவர்களையும் பாமர மக்களையுமே கருத்திற் கொண்டு படைக்கப்பட்ட 'காசீம் படைப்போர்' நாட்டுப்புற இலக்கிய வட்டத்திற்குள் சேர்க்கப்படத்தக்கதே என்பதில் ஐயமில்லை. மற்ற படைப்போர் இலக்கியப் போக்கினின்றும் சற்று மாறுபட்ட போக்கிலும் சூழலிலும் இந்நூல் அமைந்துள்ளது,

இந்த நூலுள் கையாளப்பட்டுள்ள அளவுக்கு பாமரர்களின் வழக்குச் சொற்களும் உவமான உவமேயங்களும் பழமொழிகளும் வேறு எந்தப் படைப்போர் இலக்கியத்திலும் இடம் பெறவில்லை எனத் துணிந்து கூறலாம். நாட்டுப்புற மக்களின் உணர்ச்சிப் போக்குகளைக் கருத்திற்கொண்டு இயற்றப்பட்ட நாட்டுப்புற இலக்கியப் படைப்பாகவே 'காசீம் படைப்போர்' அமைந்துள்ளது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இதே போக்கில் அமைந்த மற்றொரு படைப்போர் இலக்கியம் காளை அசனலிப் புலவர் இயற்றிய 'ஹுசைன் படைப்போர்' ஆகும். படிப்போர் நெஞ்சை உருகச் செய்யும் சம்பவங்கள் நிறைந்த இவ்விலக்கியத்தின சந்தம் சில சமயங்களில் படிப்போரின் கண்களைப் பனிக்கச் செய்து விடும் தன்மையுடையனவாக அமைந்துள்ளன.

அடுத்துக் குறிப்பிடத்தக்க மற்றொரு படைப்போர் இலக்கியம் 'மலுக்கு முலுக்கு படைப்போர்' நூலாகும். இந்த இலக்கியத்தைப் படைத்தவர் தமிழ் இஸ்லாமிய இலக்கிய உலகில் யாராலும் மறகக முடியாத அளவுக்கு பலப்பல நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுப் பெருமை தேடிக் கொண்ட கண்ணகுமது மகுதூம் முகம்மதுப் புலவராவார். இவர் சுமார் நாற்பது ஆண்டுகளில் அறுபதுக்கு மேற்பட்ட இஸ்லாமிய நூல்களைப் பாடபேதம் திருத்திப் பதிப்பித்துள்ளார். இத்தகு பெரும் பணியாற்றிய இவர், எழுதிய குறிப்பிடத்தக்க நூல் 'மலுக்கு முலுக்குப் படைப் போர் ஆகும்.

மற்றும், கொழும்புவைச் சோந்த அ.வெ. அமீது என்பார் இயற்றிய 'இபுலீசுப் படைப்போர்' நூலும் செய்யது முகம்மதுப் புலவர் எழுதிய 'நபுஸு படைப்போர்' இலக்கியமும் குறிப்பிடத்தக்க வேறு சில படைப்போர் இலக்கியங்களாகும்.

தமிழுக்கென்றே தமிழ்ப் பெயரோடு தமிழ் முஸ்லிம் புலவர்கள் உருவாக்கிய புத்தம் புதிய இலக்கிய வடிவமான படைப்போர் இலக்கியங்கள் தமிழுக்கு மேலும் பொலிவும் வலுவும் சேர்க்கும் வகையிலேயே அமைந்துள்ளன என்பது மறக்க முடியாத உண்மையாகும்.

## நொண்டி நாடகம்

தமிழுக்காக எனப் 'படைப்போர்' இலக்கிய வகையை உருவாக்கியது போன்றே, முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் உருவாக்கிய மற்றொரு தமிழ் இலக்கிய வடிவம்'நொண்டி நாடகம்' என்பதாகும் இதைச் சிறப்பாகத் தம் ஆய்வுகளில் பல இடங்களில் குறிப்பிட்டுப் பாராட்டிக் கூறியுள்ளார் தமிழ் இலக்கிய ஆய்வறிஞா திருமயிலை சீனி-வேங்கடசாமி அவர்கள்.

நொண்டி நாடகத்தின் கதாநாயகன் ஒரு காலை இழந்தவனாக நொண்டிக் கொண்டு ஆடியபடியே தன் வரலாற்றை விரித்துரைக்கும் முறையில் அமையும் ஒரு வகைக் கூத்தாகும். இதற்காக ஆடுகளம் ஏறுவோன் தன் காலை முழங்காலுக்கு மேல் மடித்துக் கட்டிக் கொண்டு, ஒற்றைக் காலில் தத்தித் தத்தி ஆடும் முறையில் அமையும். எனவே, இது 'ஒற்றைக்கால் நாடகம்' என்ற பெயராலும் அழைக்கப்படுவதுண்டு.

உழைத்துக் களைத்து வரும் ஊர்மக்கள் ஊர்நடுவே அமையப்பெற்ற மேடையருகே இரவு நேரங்களில் பொழுது போக்கிற்கென கூடுவர். கூத்து நிகழ்த்துவோன் தனியொரு நடிகனாக உடுக்கடித்துக் கொண்டோ அன்றி ஜால்ரா போன்ற கருவியை இசைத்துக் கொண்டோ காலை மடித்துக் கட்டியபடி பாடியும், பாட்டிற்கேற்ப ஆடியும் ஓடியும் குதித்தும் மெய்ப்பாடு தோன்ற நடித்து மக்களை மகிழ்ச்சிப்படுத்துவான் இதுவே முக்கியத்துவம் பெறுகிறது.

தமிழில் எழுதப்பட்ட சிற்றிலக்கிய வகைகளையெல்லாம் 'பிரபந்தங்கள்' என்ற பொதுப் பெயரால் அழைப்பது

வழக்கம் இத்தகைய பிரபந்த வகைகள் தொண்ணூற்றாறு என வகைப்படுத்திக் கூறுவர். ஆனால், இப்பிரபந்த வகைகளுள் 'நொண்டி நாடக' வகை இடம் பெறவில்லை. இதிலிருந்து, இவ்வகை நாடக முறை மிகவும் பிற்காலத்திலேயே உருவாக்கப்பட்ட இலக்கிய வடிவம் என்பது தெளிவாகிறது.

இத்தகைய நொண்டி நாடகங்களில் முதலாவதாக உருவாக்கப்பட்ட நாடகம் 'செய்தக்காதி நொண்டி நாடகம்' என்பதாகும். இந்நாடகக் கதாநாயகரான செய்தக்காதி என்பவர் சீதக்காதி என அழைக்கப்படும் வள்ளல் பெருமகனாரான செய்கு அப்துல் காதிர் அவர்களாவார்.

நொண்டி ஒருவன் வள்ளல் செய்தக்காதியின் வள்ளல் தன்மையைப் பாராட்டிப் புகழும் முறையில் கதைப் போக்கு அமைக்கப்பட்டுள்ளது: படிக்கவும் நடிக்கவும் ஏற்றதாக இந்நாடக இலக்கியம் அமைந்துள்ளது கவனிக்கத் தக்கதாகும்,

இந்நொண்டி நாடகத்தை இயற்றிய ஆசிரியர் ஒரு முஸ்லிம் என்பதற்கான சான்றுகள் கிடைக்கின்றவே தவிர, ஆசிரியர் முழுப் பெயர் இது தான் என்று அறுதியிட்டு உறுதிப்படுத்துவதற்கான சான்று எதுவும் இது வரை கிடைத்திலது. எனினும் இப்புதுவகை இலக்கிய வடிவத்தை உருவாக்கியவர் இஸ்லாமியத் தமிழ்ப் புலவரே என்பதற்கான அகச் சான்றுகளும் புறச் சான்றுகளும் இலக்கியப் புலவர்களாலும் திறனாய்வாளர்களாலும் உறுதியாக எண்பிக்கப் பட்டுள்ளன.

இந்நாடகத்துள் வரலாற்றுச் சம்பவங்கள் இடப் பெற்றிருப்பதால் இஃது எழுதப்பட்ட காலத்தை ஒருவாறு ஊகித்தறிய இயலுகிறது.

டில்லிப் பேரரசை மாமன்னர் அவுரங்கசீப் ஆலம்கிர் அவர்கள் ஆண்டு வந்தபோது. 1689 ஆம் ஆண்டில் மாமன்னரின படை மராட்டிய மன்னர் பொறுப்பிலிருந்த இராமராயர் செஞ்சிக் கோட்டையில் தஞ்சமடைந்தார். மாமன்னர் அவுரங்கசீப்பின் படைத் தளபதியான துல்ப கார்கான், இராமராயர் தஞ்சம் புகுந்திருந்த செஞ்சிக் கோட்டையை முற்றுகையிட்டார். இந்த வரலாற்று நிகழ்ச்சி இந்நொண்டி நாடகத்தில்,

''ஆகரை நகர்புரக்கு—மனுமதி
அவரங்கு சேகுசாய் பருட்படியே
சேகர மாகக் கூடி—ஒசீருகள்
தெக்கண திசை முற்றுந் திறை கொள்ளவே''

எனக் கூறப்படுகின்றது. இச்சான்றிலிருந்து இந்நூல் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இயற்றப் பட்டிருக்க வேண்டும் எனத் துணிய முடிகிறது

'செய்தக்காதி நொண்டி நாடகப்' 224 நொண்டிச் சிந்துகளால் இயற்றப்பட்டுள்ளது. புதுவகை இலக்கிய வடிவமான இந்நொண்டி நாடகம் எழுதப்பட்டதன் நோக்கத்தை இந்நூலாசிரியர் காப்புச் செய்யுளில்,

''கண்டவர்கள் கொண்டாடும் கன்னன் வகுதையில்வாழ்
மண்டலிகன் பெரியதம்பி மரைக்காயன் அருளுந்தித் தோன்
கொண்டவர்கள் கலிதீர்க்குங் குருசெய்தக் காதிதன்மேல்
கொண்டவர்கள் கலிதீர்க்குங் குருசெய்தக் காதிதன்மேல்'
மொண்டிநா டகத்தைப் பாட முதல்வனே காப்புத்தானே''

எனக் கூறி தெளிவுபடுத்துகிறார். வள்ளன்மை மிக்க வராக செல்வச் செழிப்புடன் காயலில் பிறந்து கீழக்கரையில் மன்னராக ஆட்சி செலுத்தி, அவுரங்கசீப் ஆலம்கிரின் அன்பான அரவணைப்பில், தமிழ்ப் புலவர்களை போற்றி வாழ்ந்த செய்குஅப்துல்காதர் எனும சீதக்காதியின் பெரும் புகழை வள்ளன்மையை, இறைவழியில் உய்த்துணர வழி காட்டிய பெருங்குணத்தை விதந்தோதுவதே நூலின் நோக்கமாக அமைகிறது.

'செய்தக்காதி நொண்டி நாடகம்' முழுவதும் இனிய சந்தப் பாடல்களாலாகியது என அறிவோம். 'நொண்டி' பாத்திரத்தின் தன்மைக்கொப்ப அவன் பாடும சந்தச்சீரும பாடும்போது இடையிடையே தடைபடுவது போன்று 'விட்டிசைத்தல்' முறையில் புனையப்பட்டுள்ளது. இனிமை பாகப் பாடுவதற்கேற்ற சந்தச் சீர்மை கொண்டவை இப் பாடல்கள்.

''நொண்டி நாடகம் ஒரு கேயப் பிரபந்தம் (இசைப் பாட்டு) ஆகும் இதிலுள்ள சிந்துகளெல்லாம் பாடுவதற்காகவே ஏற்பட்டவை. சந்தத்தின அமைப்பு முதலிலாயினும், ஈற்றிலாயினும சொற்கட்டுகளின மூலமாக விளக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு சிந்திலும் நொண்டியான சீர் முதல் வரியாயினும், இரண்டாம் வரியிலாயினும் அல்லது ஈற்று வரியிலாயினும் காணப்படும். நொண்டிச் சீரின் கால அளவிற்கு முந்தின சுரத்தின் இசையே பாடப்படும'' என்பர் ஜனாப் முஹம்மது ஹுஸைன் நயினார் அவர்கள்.

மேலும் அவரே 'செய்தக்காதி நொண்டி நாடகம் ஒரே வர்ண மெட்டான சிந்துவில் பாடியிருப்பது எத்துணை ராகச் சிறப்புடையதாக விளங்குகிறது என்பதை விளக்கும் போது

''சீதக்காதி நொணடி நாடகத்தில் பூபாளம் நாதநாமக்கிரியை, மோகனம் என்னும் மூன்று ராகங்கள் காணப்படுகின்றன. இவை மனோ ரம்மியமான ராகங்கள். பாட்டுக்கள்

ஆதி தாளத்தில் அமைக்கப்பட்டிருப்பது மிக்க பொருத்த மாகும்'' என மேலும் கூறியுள்ளது கவனிக்கத்தக்கதாகும்.

இசைச் சிறப்புடன் கூடிய இந்நாடகம் சாதாரண மக்களும் எளிதில் புரிந்து சுவைக்கும் வண்ணம் எளிமை யான சொற்களால் பாடப்பட்டுள்ளது. மக்களின் அன் றாட வாழ்வில் மிகுதியும் பயன்பட்டு வரும் சொற் களே இந்நூலில் அதிகம் இடம் பெற்றுள்ளன.

தனி நடிப்புப் போக்கில் அமைந்துள்ள இந்நாடகத் தைக் கேட்டு, பார்த்து அனுபவிக்கும் மக்களுக்கு சலிப் பேற்படா வண்ணம் ஆங்காங்கே நகைச் சுவையூட்டும் வண்ணப் பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன.

தமிழ் மொழி நெறிமுறைக் கேற்ப முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் தங்கள் தமிழ் இலக்கியப் படைப்புகளை காப் புச் செய்யுள் இறைவணக்கம், நபிமுதலாகவுள்ள பெரி யார்கள் வாழ்த்து என்று அமைப்பது வழக்கம். அம முறையிலேயே இந்நொண்டி நாடகக் காப்புச் செய்யுள், பெரியார் வாழ்த்துப் பகுதிகளை முறையாக எட்டுப் பாடல்களில் ஆசிரியர் அமைத்துப் பாடியுள்ளார்.

அடுத்து. நொண்டி தன் வரலாற்றை தானே விரித் துரைக்குமுன், சபையோர்களை முன்னிலைப்படுத்தி தன் குணாதிசயங்களை வெளிப்படுத்தும் முறையில் பதினான்கு பாடல்களில் முன்னுரையாகச் சில செய்திகளைச் சொல்லி, பின் தன் வரலாற்றைக் கூறுகிறான்.

''சோலைமலை எனும் ஊரைச் சேர்ந்த வணங்காப்புலி என்பானின் மகன் ஒழுங்காப்புலி என்பது என் பெயர் எல்லா வித களவுகளும் தெரியும். வஞ்சனை முதலாகவுள்ள களவு உத்திகளையெல் லாம் கற்றறிந்த பின்னர் மதுரையில் குடி கொண்டுள்ள சொக்கநாதரைக் கும்பிடச் சென்று கொடி

மரத்தடியில நின்று வணங்கும்போது விலைமாது ஒருத்தி தன் பால் கவர்ச்சி காட்டி ஈர்த்தாள். அவளோடு சென்று ஒரு திங்கள் வாழ்ந்தபோது கைப்பொருளெல்லாம் கரைந்து போய்விடடது. இதனால் விலைமாதின் தொடர்பு அறுந்தது. பொருள் தேடும் வேட்கையோடு திண்டுக்கல்லை அடைந்த போது களவுத் தொழில் நண்பனான சிங்கணன் என்பானைச் சந்தித்து அவளோடு ஒரு நாள் தங்கி மறுநாள் திருச்சியை அடைந்தேன்

காவிரியில் குளித்து சீரங்கத்துத் திருமாலை வணங்கி ஐந்தாறு நாட்கள் அங்கே தங்கியிருந்தபோது திருப்பதித் திருடன் ஒருவனைச் சந்திக்க நேர்ந்தது. இருவரும் கூட்டாகச் சேர்ந்து, திட்டமிட்டு ஒருநாள் இரவு விலை மாதின் வீடுகளில் தனித்தனியே தங்கினோம். நள்ளிரவில் விலைமாதுக்கு மயக்கப் பொடி தூவி அவள் சேர்த்து வைத்திருந்த நகைகளையெல்லாம் திருடிக்கொண்டு வெளியேறி விட்டேன். அவ்வாறே திருப்பதித் திருடனும் வேறொரு விலைமாதின் நகைளைத் திருடிவந்தான்.

செஞ்சிக் கோட்டையை நெருங்கியபோது கோயில் பூசாரி ஒருவனது நட்பு எனக்குக் கிடைத்தது. அவன் எனக்கு உணவும் உறையுளும் தந்து ஆதரித்தான். அவனிடம் நான், திருடி வந்த பொருள்களையெல்லாம் அடைக்கலமாகத் தந்து விட்டு நாலைந்து நாட்கள் அங்கேயே தங்கியிருந்தேன்

அச்சமயம் மொகலாய சேனை செஞ்சிக் கோட்டையை முற்றுகையிட்டிருந்தது. மொகலாயச் சக்கரவர்த்தி அவுரங்சீப்பின் தளபதி துல்பர்கான் என்பவர் பெரும் படை கொண்டு முற்றுகையிட்டிருந்தனால் எங்கும் ஒரே கெடுபிடியாக இருந்தது

மொகலாயப் படை தங்கியிருந்த பாடி வீட்டினுள் புகுந்து திருட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

எப்படியும் தளபதி துல்பர்கானுக்குச் சொந்தமான குதிரையைத் திருடுவது எனத் திட்டமிட்டு, அதற்கான சில கருவிகளோடு மாறு வேடத்தில் மொகலாயர் படை தங்கியிருந்த பகுதிக்குள் நுழைத்து, என்னை யாரும் அடையாளம் கண்டு கொள்ள இயலாதபடி. திறமையாக நடந்து கொண்டேன். அங்குள்ள இரகசியங்களையெல்லாம் தெரிந்து கொண்டேன். இவ்வாறு பதினைந்து நாட்களை ஒட்டினேன்.

ஒருநாள் அமாவாசை இரவன்று, கும்மிருட்டில், தளபதிக்குச் சொந்தமான மிக அழகான குதிரையொன்றைக் கைப்பற்றி மெதுவாக ஒட்டிச் சென்றேன் எல்லோரும் ஆழ்ந்த தூக்கத்திலிருந்தனர் அந்தச் சமயம் பார்த்து ஒரு சோனி நாய் குரைத்தது. படைவீரர்கள் எழுந்தார்கள். குதிரையை விட்டிரங்கி தண்ணீர் எடுக்கப் பயன்படும் தோல் பைக்குள பதுங்கிக் கொண்டேன், ஆனால், படைவீரர்களோ எரிபந்தம் கையிலேந்தி என்னை எங்கும் தேடினார்கள்.

தோல் பையைவிட பாதுகாப்பான இடத்தில் பதுங்க எண்ணி அருகிலிருந்த விறகுக் கட்டைகளுக்குள் மறைந்து கொண்டேன். எங்கிருந்தோ வந்த தேள் ஒன்று இருளில் பதுங்கியிருந்த என்னைக் கொட்டி விட்டது. அதுவும் தோள் பட்டையில கொட்டியதால் விஷக்கடுப்பு தாள முடியவில்லை. பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்துப் பார்த்தேன். இயலவில்லை. வலி தாங்க முடியாத நிலையில் கீழே படுத்துப் புரண்டேன், அழுது புலம்பிக் கதறினேன். என் சத்தத்தைக் கேட்டு மொகலாய வீரர்கள் நான் பதுங்கியிருந்த இடத்தைக் கண்டறிந்து, என்னைக் கையும் மெய்யுமாகப் பிடித்து என் குடுமியை இறுகப் பற்றியவர்களாய் தளபதி துல்பர்கான் முன்னிலையில் நிறுத்தினார்கள். அவர் என் காலையும் கையையும் வெட்டுமாறு உத்தரவிட்டார். அவ்வாறே என் காலும் கையும் துண்டிக்கப்பட்டன.

காலையும கையையும் இழந்த நான் கத்தினேன்; கதறினேன். ஆனால், என்னைக் காப்பார் யாருமில்லை. எல்லோரும் என்னை வேடிக்கை பார்த்தார்களே தவிர யாரும் எனக்கு உதவ முன் வரவில்லை

அப்போது சென்னைப் பட்டிணத்திலிருந்து செஞ்சிக்கு வந்திருந்த மாமு நயினா மரைக்காயர் என்பவர் என்னை பார்த்தார். இவர் வள்ளல் செய்தக்காதியின் தம்பி. நான் படும் வேதனையைக் கண்டு மனமிரங்கினார். பரிவுடன் என்னிடம் பேசினார். நான் ஆறுதல் தேடி நடந்தவற்றை யெல்லாம் கூறினேன். அவர் என் மீது அன்பும் பரிவும் கொண்டார்.

ஆயிரம் பொன் கையில் கொடுத்து மருத்துவம்செய்து கொள்ள உதவினார் காயங்கள் ஆறியவுடன் கீழக்கரை வந்து சந்திக்குமாறும் பணித்துச சென்றார்.

மருத்துவச் செலவு போக மீதமிருந்த தொகைக்குக் குதிரையொன்றை வாங்கி துணைக்கு ஒரு ஆளையும் அமர்த்திக் கொண்டு, பல்வேறு ஊர்களைக கடந்து கீழ்க் கரையை அடைந்தேன்.

கீழககரையில் தன் பண்டகசாலையில் மாமுநெய்னா மரைக்காயருடன் இருத்த வள்ளல் செயதக்காதியின் காலில் விழுந்து வணங்கி நின்றேன். என் நிலைமையை உணர்ந்து தெளிந்த வள்ளல் பெருந்தகை ஆயிரம் பொன்னைக் கையில் கொடுத்து, தனது குருவும் ஞான வள்ளலுமான சதக்கத்துல்லா அப்பா அவர்களிடம் சென்று அறிவுரை பெற்று, அவர் காட்டும் வழியில் சென்று உய்தி பெறுமாறு கூறி அனுப்பினார்.

ஞானச் செல்வர் சதக்கத்துல்லா அப்பா அவர்களிடம் சென்று கலிமாச்சொல்லி முஸ்லிமானேன். என் வாழ்க்கை

உய்தி பெற்றது தொழுதேன். நோன்பு நோற்றேன், தானம் செய்தேன். திருட்டுத் தொழில் சிந்தனை அறவே என்னை விட்டொழிந்தது. நல்லுணர்வு மிக்கவனாக, செய்த தவறுகளுக்கும் பாவங்களுக்கும் மன்னிப்பு வேண்டி வல்ல அல்வாஹ்விடம் மன்றாடினேன்.

எனக்குள் ஒரு பேராசை எழுந்தது. புனித பூமியாகிய மக்கா இறையில்லம் சென்று, இறைவணக்கம் புரிய வேண்டும் எனபதே அது. என விருப்பத்தை வள்ளல் செய்தக்காதியிடம் சமயமறிந்து வெளியிட்டேன். இல்லையெனாது வாரிக் கொடுக்கும் வளளல் தன் வணிகக் கப்பல் மூலம மககமா நகர் செல்ல ஏற்பாடு செய்தார்.

மக்கா இறையில்லம் சென்று தொழுது மகிழ்ந்த நான் மதினா சென்று தொழுது. நான் செய்த பாவங்களுக்கெல்லாம் மன்னிப்புக் கேட்டு இறைவனிடம் மன்றாடி கண்ணீர் விட்டுக் கதறியழுதேன். பின்பு அங்கேயே அயர்ந்து தூங்கி விட்டேன்.

மறுநாள் காலை விடிந்தபோது எழுந்தேன். என்ன அதிசயம்! என்னாவேயே நம்ப முடியவில்லை. வெட்டப்பட்டிருந்த காலும் கையும் வளர்ந்து முன்பு போலிருந்தன இறைவனின் கருணையை எண்ணி உருகினேன். தொழுது வணங்கி நன்றி கூறிக் கொண்டேன். நான உய்ய வழி காட்டிய வள்ளல் செய்தக்காதியையும் அவரை அறிமுகம் செய்த அவர் தப்பி மாமு நபினார் மரைக்காயா அவர்களையும், நான் இறைவனின் பெருங்கருணையைப் பெற வழிகாட்டிய ஞானவள்ளல் சதக்கத்துல்லா அப்பா அவர்களையும் நன்றிப் பெருக்குடன் நினைத்து,

''காயலின் மகராயன்—செய்தக்
காதியைத் திசைநோக்கிக் கையெடுத்தேன்
தாயென உபசரித்து—மாமுநெயினார்
தன்னையும் நினைந்தே தாழ்ச்சி செய்தேன்,

அழிக்கும் புலிவாழி—செருவில்
அரியதுரை சேதுபதிவாழி
கீழைக்கரைவாழி—சிங்கச்
கேசச் சதக்கத்துல்லா வாழி''

என வாழ்த்துவதுடன் இந் நொண்டி நாடகம் நிறைவு பெறுகிறது.

இந் நொண்டி நாடகத்தை 'இலக்கியம்' என்ற வரையறைக்குட்பட்ட கோட்பாட்டோடு பார்க்கும்போது தரமிக்க இலக்கியம் எனக் கூறுவதற்கில்லை. ஆனால், அன்றையச் சூழலில் உருவாக்கப்பட்ட நாட்டுப்புற இலக்கியப் படைப்புகளோடு ஒப்பிடும்போது, அவற்றுள் இஃதுகுறிப்பிடத்தக்க உயர் படைப்பே என்பதில் ஐயமில்லை.

இந்நூல் மூலமாக அன்றைய அரசியல் சூழலையும் வரலாற்று நிகழ்ச்சிகளையும் தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது.

அக்கால கட்டத்தில் செஞ்சிக்கும் கீழக்கரைக்கும் இடைப்பட்ட வழியிலுள்ள முக்கிய ஊர்களைப் பற்றிய செய்திகளையும் கீழக்கரையின் செல்வச் செழிப்பையும் ஊரின் புகழ்பெற்ற இடங்களையும் மிகத் தெளிவாக இந்நூல் விளக்கிக் காட்டுகிறது.

இந்நூல் வள்ளல் செய்தக்காதியின் பெருமையையும் பேசுவதாக இருப்பினும் அக்காலச் சமூகச் சூழலையும் மலிந்திருந்த திருடு விபசாரம் போன்ற சமூகத் தீங்குகளையும் விரிவாக எடுத்துக்கூறி, அவற்றால் ஏற்படும் கொடுந் தீங்குகளைச் சுட்டிக்காட்டி, படிப்போர்க்குஅவற்றின் மீது வெறுப்பை ஏற்படுத்தி சமூகத்தினின்றே இத் தீங்குகளை ஒழித்துக் கட்டுவதற்கான உணர்வையும் உத்வேகத்தையும் மக்களுக்கு ஏறபடுத்துவதும் ஒரு முக்கிய நோக்கம், இலைமறை காயாக இந்நூலுள் இடம் பெற்றிருக்கிறது

இந்நொண்டி நாடகத்தின் மூலம், சீதக்காதியின் உற்றார் உறவினர்களின் பெயர்களையும், அவரது அன்பு சூழலில், அறவணைப்பில் வாழ்ந்து வந்த தமிழ்ப்புலவர் பெருமக்களையும் அறிந்துகொள்ள முடிகிறது. கீழக்கரையில் செய்தக்காதி கொலு வீற்றிருக்கும் காட்சியை,

''கானுலா வியகொடையான்—செய்தக்காதி
கதிர்ப்பிரபை தங்குந்தங்கச்சவுக்கையின்மேல்

பிறைநுத லியர்மதவேள்—மீராப்
பிள்ளை மரக்காயர் வள்ளலுடன்
திறமுட னடுததிருந்தே—பலபல
செய்திகள் யோசனை செய்திடவே

வரிசை செய்யிதுநயினா—னுடைசுதன்
வாலமன் மதன் ஒருபாலிருக்க
அரசர்கள் தொழுசரணன்—குட்டி
ஆலிப் பிள்ளை யொருபாலிருக்க

மாதர்கள் மதரூபன்—எனவரு
மாப்பிள்ளை மாமுநயி னாப் பிள்ளையும்
பூதர புயசயிலன்—சேகுக் கண்டுப்
பூபதியுடனொரு புறத்திருக்கச்

சந்தமும் தமிழ்தேறுங்—கல்வித்
தலைவர் மகிழ்உமறுப் புலவருடன்
செந்தமிழ்க் கந்தசாமிப்—புலவனுஞ்
சீராட் டெனத் தமிழ் பாராட்டவே''

எனக் கூறுவதன் மூலம் செய்தக்காதியுடன் வரலாற்றுத் தொடர்புடைய பல பெரியார்களை அறிய முடிகிறது.

செய்தக்காதி கொலுவீற்றிருக்கும்போது, அவையில் இசைமழை பொழியப்பட்டதைக் கூறும்போது,

"மத்தளமுங் கைத்தாளமுந் - தம்பூரு
வாத்தியங்கள் கொண்டுபலர் கீர்த்தனஞ் செய்ய"

எனக் கூறுதவன் மூலம் அக்காலத்து அரசவைகளில் மிகுதியும் பயன்பட்ட இசைக் கருவிகளையும் தைத்தாள முறையையும் அறிய முடிகிறது.

இந் நொண்டி நாடகத்தின் கதாநாயகன் சமூகத்தின் மிகப் பெரும் தீங்கான திருட்டுத் தொழிலையும் வஞ்சகமாகப் பொருளை அபகரித்து வாழும் போக்கையும் கைக்கொண்டு வாழ்ந்ததோடு காம உணர்வு மிக்கோனாய் விலை மாதர் கூட்டுறவால் வறுமை வாய்ப்பட்டு அதன் காரணமாக மீண்டும் மீண்டும் திருட்டுத் தொழிலைச் செய்து, இறுதியில் கொடுந் தணடனையாக கைகால்களை இழப்பதன் மூலம் தீய பழக்கங்களும் கொடிய வறுமையுமே இத்தகைய சமூக ஒழுக்கக் கேடுகளுக்கு அடிப்படை என்பதைச் சொல்லாமல் சொல்லி விடுகின்றார் ஆசிரியர்.

கொடிய தணடனைக்காளாகி மனம் திருந்தும் நொண்டி உய்யும் வழியாக இஸ்லாமிய நெறியை மேற்கொண்டு மக்கா, மதினா சென்று இறையருளால் இழந்த காலையும் கையையும் பெற்றதாகக் கதையை முடிக்கும் ஆசிரியர் இஸ்லாமியக் கருத்துக்களையும் தீன் நெறியையும் விளக்கிக் கூறவேண்டிய கட்டாயத்திற்காளாகிறார்.

ஆனால், இந்நூலின் தொடக்கத்திலேயே நபிகள் நாயகம், அபூபக்கர், உமர், உதுமான், ஹஸன் ஹுஸைன் முகியித்தீன் ஆண்டகை ஆகியோரின் வாழ்த்துக்களை வேண்டியும வள்ளல் செய்தக்காதி, அவர் குரு ஞான வள்ளல் சதக்கத்துல்லா அப்பா ஆகியோர் பற்றியெல்லாம் பேசுமிடங்களில் இஸ்லாமியச் சிந்தனைகளை, இஸ்லாமிய நாகரிகத்தை, ஒழுக்கத்தைப்பற்றிப் பேச நேர்ந்தபோதெல்லாம் அவற்றை முழுமையாக, ஆதார

பூர்வமான செய்திகளைக் கூறுவதாகச் சொல்ல முடிய வில்லை. இஸ்லாத்தை ஆழமாக அறியாது, மேற்போக் காக அறிந்து கூறுவது போன்ற மன உணர்வே ஏற்படு கின்றது. அதே சமயத்தில் இந்துமதச் சமபவங்களை ஓரளவு நன்குணர்ந்தவர் போன்று, சப்பவங்களையும் கருத்துக்களையும சுட்டிச் செல்வதை ஒப்பிட்டு நோக்கும் போது, இந்நூலாசிரியர் இந்துவாக இருந்து இஸ்லா மியத்தைத் தழுவி தானறிந்த, இஸ்லாமிய உணர்வையும் சிநதனையையும் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டவராக இருக்கலாம் அல்லது இந்து சமய இலக்கியங்களில் பெற்ற அளவுக்குப் பயிற்சி இஸ்லாமிய நூல்களிலோ இலக்கியப் படைப்புகளிலோ இல்லாமலிருக்கலாம்.

இந்நூலின் வாயிலாக மற்றுமோர் உணமையும் புலனாகின்றது. இஸ்லாம் எவ்வாறு மக்களிடையே பரவியது என்பதற்கு இந்நாடகப் போக்கும் அமைப்புமே தகக சான்றாகும. 'இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டது' என்ற வாதம் பொய்யானது; ஆதாரமற்றது என்பது எல்லா வகையிலும் எண்பிக்கப்படுகிறது தெரிந்தோ தெரியாமலே தீங்கான வாழ்வை மேற்கொள்வோர் உய்யும் வழியாக இறைநெறியாகிய இஸ்லாமிய நெறி அமைந்துள்ளது என்பதை பாதிப்புக்கு ஆளாகி அவதி யுற்று தீன் நெறி திரும்பியோர் அனுபவப்பூர்வமாகக் கூறும்போது, மக்களிடையே ஏற்படும் மனமாற்றமே அவர்களை இஸ்லாத்தின்பால் ஈர்த்துவந்தது என்பதற்கு நொண்டியின் அனுபவம் கூறும் நொண்டி நாடகமே தக்க சான்று. கடந்த காலத்தில் இவ்வகைப் பணியை அமைதி யாகவும் அழுத்தமாக இஸ்லாமியத் தமிழ் இலககியங்கள் ஆற்றி வந்துள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை யாகும்.

மதினா பள்ளியில் இறைமன்னிப்பையும் இறையருளை யும் வேண்டி மன்றாடிய நொண்டி தூங்கி விழித்தபோது, வெட்டுண்ட காலும் கையும் மீண்டும் வளர்ந்தன எனக் கூறும் நிகழ்ச்சி இயற்கை கடந்த செயலாக இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

இஸ்லாமிய இலக்கியங்களில் அரபி, பெர்சியச் சொற்கள் ஆங்காங்கே இடம் பெறுவது தவிக்க முடியாததாகும். திருக்குர்ஆன் அரபி மொழியில் அமைந்திருப்பதனாலும் இஸ்லாமிய நெறியை பெருமானாரின்பெருவாழ்வை இறையடியார் பற்றிய செய்திகளெல்லாம பெரும்பாலும் அரபி மொழியிலும் பெர்சிய மொழியிலும் கிடைப்பதாலும் அவற்றைப் பற்றிய செய்திகளைத் தமிழில் சொல்லும்போது இஸ்லாமியக் கலைச் சொற்களாக அவற்றைக் கையாள வேண்டிய கட்டாயத் தேவை ஏற்பட்டுவிடுகிறது

ஆனால் இந்நாடகத்தினுள் வழக்கம்போல் இஸ்லாமியக் கலைச்சொற்கள்இடம்பெறுவதோடுவேறுமொழிவாசகங்கள் முழுமையாக இடம் பெற்றுள்ளது புதுமையாகும்.

செஞ்சியை அடைந்த திருடன் முற்றுகையிட்டிருக்கும் மொகலாயப் பாடி வீட்டிற்குள்புகுந்து திருட திட்டமிட்ட பக்கீர் போன்று வேடமிட்டு மொகலாயர்களை அணுகும் போது அவர்கள் தங்கள் மொழியில்,

"அவுரே கான்சே ஆத்தேயென்றார்—சாய்புநான்
ஆபுலக்கா புலாத்தே ஆயாவென்றேன்
காவுரே கானா வென்றார்-இதுநல்ல
கருமமென் றேசென் றருகிருந்தேன்"

என நகைச்சுவையோடு பக்கீர் வேடத்திலிருக்கும் திருடன் கூறுவது சுவையாக உள்ளது.

இஸ்லாமிய இலக்கிய வடிவங்களான மசலா, கிஸ்ஸா நாமா, முனாஜாத்து. படைப்போர் போன்ற புதுவகை இலக்கிய வடிவங்களில் முஸ்லிம்களைத் தவிர வேறுசமயத்தார் யாரும் இலக்கியம் படைத்திருப்பதாகத் தெரியவில்லை. ஆனால முஸ்லிம் தமிழ்ப்புலவரால் உருவாக்கப்பட்ட நொண்டி நாடக வடிவைப் பின்பற்றி கிருத்துவப் புலவர்கள் உட்பட பல்வேறு சமயத்தவர்களும் இலக்கியம் படைத்திருப்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

## திருமண வாழ்த்து

முஸ்லிம் தமிழ்ப் புலவர்களால் தமிழில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட மற்றொரு இலக்கிய வகை 'திருமண வாழ்த்து' என்பதாகும்.

முந்தைய தமிழ் இலக்கியங்களில் மணமக்களைவாழ்த்தும் பகுதிகள் இடம்பெற்றிருக்கலாம். ஆனால், 'திருமண வாழ்த்து' என்ற பெயரில் தனி வடிவமோ வகையோ உருவாக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வகையில் புதுவகையான இலக்கிய வடிவத்தைத் தோற்றுவித்து வளர்த்த பெருமை இஸ்லாமியத் தமிழ்ப் புலவர் பெருமக்களையே சாரும்.

இவ்வகையில் இயற்றப்பட்ட முதல் 'திருமண வாழ்த்து' நூல் எட்டையபுரம் உமறுகத்தாப் புலவரால் எழுதப்பட்ட 'செய்தக்காதி மரைக்காயர் திருமண வாழ்த்து' என்பதாகும். 448 கண்ணிகளாலான இத்திருமண வாழ்த்து தனிவகையானதொரு அமைப்புடைய இலக்கியப் படைப்பாக விளங்குகிறது

இந்நூலாசிரியர் பெயர் 'எட்டையபுரம் உமர்கத்தாப் புலவர்' எனக் கூறப்படுகிறது. பெருமானார் பெருவாழ்வை சீறாவாக விரித்துப்பாடி பெருமை கொண்ட உமறுப் புலவரே இவர் என்பாரும் உண்டு. சீறா பாடிய உமறுப் புலவரும் திருமண வாழ்த்துப் பாடிய உமறுகத்தாப் புலவரும் ஒருவரல்ல, வெவ்வேறு புலவர்கள் என்று கூறுவாறும் உளர்.

உமறுப்புலவரின் சீறாப்புராணத்தையும் எட்டையபுரம் உமறுகத்தாப் புலவரின் 'செய்தக்காதி மரைக்காயர் திருமண வாழ்த்து' நூலையும் ஒப்பிட்டு ஆயும்போது பாடல் நடைச்சிறப்பும் சொல்லாட்சியும் வேறுபட்டவையாகவே

தோன்றுகின்றன. சீறாவைவிட பல இடங்களில் தரம் தாழ்ந்தும் ஒருசில இடங்களில் இணையாகவும் இருப்பதைக் கண்டுணர முடிகிறது. எனவே சீறாப்புராணம் இயற்றிய உமறுப் புலவரே இத்திருமணவாழ்த்து நூலை எழுதியிருக்க முடியாது என்றும், எட்டையபுரம் உமறு கத்தாப் எனும் வேறொரு புலவரே இத்திருமண வாழ்த்து நூலை இயற்றியிருக்க முடியும் எனத் துணியலாம்.

இந்நூலைத் தவிர வேறு எந்த இஸ்லாமிய இலக்கியத்திலும் உமறுகத்தாப் புலவரின் பெயர் குறிக்கப்படாதது கொண்டு இவர் இத்திருமண வாழ்தது நூலை மட்டுமே சீதக்காதியின் சிறப்புக்களை கூற வேண்டி எழுதியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

இந்நூலைப் படிக்கும்போது நமக்கு வேறொரு உணர்வும் ஏற்படுகிறது இந்தநூலுள் சீதக்காதி குடும்பத்தார் பற்றிக் கூறப்படுப் செய்திகளை நோக்கும்போது, இந்நூலாசிரியரான உமறுகத்தாப்புலவர் வள்ளல் சீதக்காதியின் குடும்பத்தாரோடு நீண்ட காலம் நெருக்கமான தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

'செய்தக்காதி மரக்காயர் திருமணவாழ்த்து' நூலுருவில் கிடைத்த போதிலும் இடையிடையே சில பாடற் கண்ணிகள் இல்லாமலும் ஒரு சில கண்ணிகளில் ஒரு சில சொற்கள் விடுபட்ட நிலயிலேதான் நூல் வெளி வந்துள்ளது. ஆயினும், நூலைப் படிப்போர்க்கு இது ஒரு பெருங் குறையாகத் தோன்றாதவாறு நூல் அமைநதுள்ளது அதன் தனிச் சிறப்பாகும்.

பிற இஸ்லாமிய இலக்கியங்கள் போன்றே இத்நூலும் இறைவனைப் போற்றியும நபிகள் நாதரையும் நான்கு கலீஃபாக்களையும் முகியித்தீன் ஆண்டகையையும் வாழ்த்துவதோடு

"நிதக்கத்துள் ளாக்குபிறர் நெஞ்சம் பிளக்கவரும்
சதக்கத்துல் லா உபய தாமரைத்தாள் போற்றி
செய்வாம்"

என அக்காலத்தில் இறையருள் பெற்ற இஸ்லாமிய ஞானச் செல்வராக விளங்கிய சதக்கத்துல்லா அப்பா அவர்களையும் வாழ்த்திப் போற்றிப் பாடுகிறார். பின்னர், சீதக்காதி வள்ளலின் முன்னோர்களை வாழ்த்தி விட்டு இறுதியாக,

"செங்கமலை மார்பிற் சிறந்தசெய் தக்காதி
மங்கள வாழ்த்தும் மணவாழ்த்தும்

வாழ்த்துகிறேன்"

என வாழ்த்தி, வாழ்த்துப்பாவை முடிக்கிறார்.

திருமண வாழ்த்து நூலின் நாயகரான செய்தக்காதியைப் பாராட்டும்போது, அவரது முன்னோர்களின் பெருமையெல்லாம் சொல்லிப் பாடுகிறார். அவர்தம் பெருமைகளையெல்லாம் செய்தக்காதியின் பெருமையாக கூறி மகிழ்கிறார்.

இப்பாராட்டினிடையே சில சுவையான நிகழ்ச்சிகளும் காட்டப்படுகின்றன.

ஒரு சமயம் மதுரைப் பாண்டியன் இந்நூலின் பாட்டுடைத் தலைவருக்கு விருந்தளித்தான். விருந்துண்ட இடத்தை எச்சில் பட்ட இடமாகக் கருதி சாணம் தெளித்ததையறிந்து, அச்செயலுக்குப் பாடங் கற்பிக்கும் வகையில், மதுரைப் பாண்டியனுக்கு வள்ளல் பெருந்தகை விருந்தளித்தார். பாண்டியன் அறுசுவை உணவுண்டு முடித்தவுடன், விருந்துண்ட கூடத்தையே வள்ளல் எரித்துவிட்டாராம். இந்த விவரத்தை,

''ஏதென்றீர் சாணாகமிட்டாற்போ மெங்களெச்சில்
சூதொன்று முங்களெச்சில் சுட்டாற்போ மென்ற
துங்கன்''

எனக் கூறிப் புலப்படுத்துகிறார்.

அடுதது, மணமகனாகிய செய்தக்காதியின் வீரமிக்கக் குலப்பெருமை பேசி, அவர்கள் வணிக நிமித்தம் சென்று வரும் நாடுகளையெல்லாம் வரிசைப் படுத்தி, அவர்கள் அங்கெலலாம் விற்கும் பொருள்களின் பட்டியலையும் தருகிறார்.

மணமகனின் வீரம், கருணை, வாய்மை, பொறுமை, அறிவு ஆற்றல் ஆகியவற்றை பலபட பாராட்டிய நூலாசிரியர். அடுத்து, மணமகனின் ஒழுக்கத்தை இறை நெறி போற்றும் செந்தண்மையை எடுத்துரைக்கிறார்.

''ஆதி யொருபொருளை அஞ்சுவத்தும் தப்பாமல்
நீதி யுடன் வணங்கு நேமமற வாதபிரான்
செப்பரிய ஹஜ்ஜு வண்ணம் செய்கின்ற சக்காத்து
முப்பது நோன்பும் முடிக்குந் தபோதனன்காண்
அய்யா நபுல்நோன்பும் ஆசுறா நன்னோன்பும்
நையாமல் ஆசார நன்னோன்பு நோற்பவன்காண்'

என்றெல்லாம் கூறி தீனெறி போற்றும் தகைமையைப் பாராட்டுகிறார்.

அதன் பிறகு நிச்சியதார்த்தம் முகூரத்தக்கால் நாட்டின செய்திகளையெல்லாம் சொல்லிச் செல்கிறார் நூலாசிரியர்.

மணப்பந்தல் அலங்காரத்தைச் சற்றுவிஸ்தாரமாகவே வர்ணிக்கும் ஆசிரியர், மணப்பந்தல் மலர்ப் பந்தலாகவே மாற்றப்பட்டிருக்கும் விந்தைமிகு காட்சியை,

''மல்லிகையுஞ் செம்பகமும் வாய்ந்தகுட மல்லிகையும்
முல்லையொரு பிச்சி முறை முறையாய் முன் தூக்கிச்

செங்கழுநீர் வெண்டாமரை செந்தாமரை பைங்கமலத்
தங்குமலர் பாதிரிமந் தார மிருள்வாசி
செவ்வந்தி பொற்கொன்றைசெவ்வாம்பல் மாதுளம்பூ
அவ்வந்தி நேர்மலர்ந்த அழகியநீ லோற்பலமும்
இந்தமல ரெல்லாம் இசைந்தசர மாய்த்தொடுத்துப்
பந்தரிட மெல்லாம் பரிந்துவிதா னித்தலரே''

எனக் கூறும்போது, படிப்போரையே மணப்பந்தலுக்கு அழைத்துச் சென்று விடுகிறார் நூலாசிரியர்,

மேலும் பொன், வெள்ளி, வஜ்ரம், மரகதம், தங்கத் தகடு, மாணிக்கப், புருடராகம் ஆகியவற்றை சரங்களாகத் தொங்கவிட்டு பந்தலெங்கும் தென்னம்பாளை கதலித் தாறு இளநீர்ப்பைங்குலை எலுமிச்சப்பழம் கொழிஞ்சிப் பழம் வாழைப்பழம் மாதுளங்கனி தாமரத்தம பழம் பலாக்கனி முதலியவற்றை வைத்து, கரும்பு, கதலி, கமுகு ஆகியவற்றை பந்தலின் தூண்கள் தோறும்கட்டி, மேக வண்ணப்பட்டு, வீரவானிச்சேலை, ரத்ரவன்னி, சந்திர வன்னி, சூர்யபடம் பொற்சரிகைக் கம்பிக்கரைச் சேலை ஆகியவற்றை வண்ணவண்ணமாக விரித்துப் பரப்பிக் கட்டிப் பந்தலை அலங்கரித்து மணமேடை அமைத்திருந்த தாகக் கூறுகிறார் மற்றும் நவரத்தின விளக்கும். தூண்டா மணி விளக்கும் தூக்கு விளக்கும் குத்து விளக்கும், சித்திர விளக்கும் ஏற்றி, மணவறைமுன் பொன்னிறை குடத்தில் பூம்பாளை சாய்த்து வைத்திருந்ததாகவும் குறிக்கிறார். இவ்வர்ணனையின்மூலம் அக்கால இஸ்லாமியத் திருமண அலங்காரங்கள், பந்தல், மேடை அமைப்புகள் தமிழ் மண்ணுக்கே சொந்தமான பாங்கில், பிற தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களை ஓரளவு அடியொற்றி அமைந்திருந் தது என்பதையே நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

கண்ணையும் கருத்தையும் ஒருசேர கவரவல்ல இவ் வலங்காரங்களைக் காண வந்த ஊர் மக்களின் மனநிலை யை மிக அழகாக,

'மாகத் தளாவு மணிக்கா வணம்பார்த்துப்
போகக்கா லேறாத பொன்னனையா
ரோர்கோடி''
வஞ்சியிடை தள்ளாடட்வந்துபசுங்
கிள்ளையொடுங்
கொஞ்சிவிளை யாடிநிற்குங் கொம்பனையா
ரோர்கோடி''

எனக்கூறி அப்படியே படம்பிடித்துக் காட்டிவிடுகிறார் ஆசிரியர்.

இனி, மணமகனை நீராட்டி, வண்ணவண்ண ஆடை யலங்காரம் செய்து, வாசனைத் திரவியங்களைச் சொரிந்து ஊர்வலமாக அழைத்துச் செல்கிறார்கள் மணமகன் மிடுக்காக பவனி வருவதை கூறுமிடத்து ஆசிரியர் காட்சியை விவரிப்பதில் மட்டுமா, சொல்லும் சொல்லிலேயும் கூட கம்பீரமான மிடுக்கைக் கொண்டு வந்து விடுகிறார்.

''விடவரவினுடனெளிய மிகுவடவை கெடஇடறு
தடவிகட குகளுவமதத் தவளவெள்ளை யானை
யினான்
கொடியவிட வரவுபடக் குவடிடிய வடவை கெடத்
தொடுகடலி னகடுடையத் தோன்றுவெள்ளை
யானையினான்
திடதிடென நடவிகட செயவிசய
தடகரட மடையொழுகு தவளவெள்ளை யானை
யினான்
தடவிகட கரடகடத் தவனமது மொகுமொகெனத்
தடவிகட கரடகடத் தவள வெள்ளை யானை
யினான்''

எனக் கூறுவதைப் படிக்கும்போது படிப்போர்க்கே ஒரு முறுக்கான மிடுக்குணர்வு ஏற்பட்டு விடுகிறது.

பலரும் புடை சூழ பவனி வரும் மணமகனைப் பற்றிக் கூறும்போது அங்கு இசைத்து வரப்பட்ட இசைக் கருவிகளைப் பற்றிய பெரிய பட்டியலையே தந்து விடுகிறார் ஆசிரியர்.

''திமிலி தடாரி திருமன் கனகதப்புக்
குமுறும் பதலை குடமுழவு வீராணம்
பேரிகை பம்பை பெருமுரசு மல்லாரி
பூரிகை நாகசுரம் பொங்குகடல் போல்முழங்க
ஆனைமெற் பேரி அதிருமிடி பேசற்கரங்கக்
கூனல்முது கொட்டையின்மேற் கொண்டடமா
ரம்மதிர
ஏற்றுங் குதிரை யிடப்மானத் தான்கலிப்ப
வெற்றிநா கேசமென மேளமிக வார்ப்பரிப்பத்
தாரை நமரிகொம்பு சத்தமிடு மெக்காளம்
வீரகருணாவாங்கா வெண்சங்க முந்தொனிப்ப''

எனக் கூறுவதுடன் வீணை, தண்டை, கயிலாச வீணை, ருத்ரவீணை, உடுக்கை முதலான அத்தனை இசைக்கருவிகளை நம் மனக்கண்முன் கொண்டு வந்து காட்டுவதோடு அங்கு என்னென்ன இசைகள் எந்தெந்த ராகத்தில் இசைக்கப் பட்டன என்பதை,

''கண்டாரா கத்துடன் கல்யாணி காம்போதி
கொண்டல்சொரி மேகக் குறிஞ்சி சங்கராபரணம்
தோடி வராளி சுத்ததுன்னி யாசிகௌரி
பரடிசுதி கூடியிசைப் பாடகர்முன் பாடி

என அழகாகப் படம் பிடித்துக் காட்டி விடுகிறார்.

இதன் மூலம் அக்காலச் சூழலில் இத்தகைய திருமண ஊர்வலங்கள் எவ்வகைப் போக்கில் அமைந்திருந்தன என்பதை ஓரளவு நம்மால் ஊகித்துணர முடிகிறது.

மின்சாரமோ மண்ணெண்ணெய் விளக்குகளோ இல்லாத காதமாதலின் வெளிச்சம் தருவதற்கு தீவட்டிகள் தான் இம்மாதிரி ஊர்வலங்களில் பயன்படுத்தப்பட்டு வந்தன. இத்திருமண ஊர்வலத்தில் தீவட்டிகளில் தான் எத்தனை வகை,

''தங்கத்தீ வட்டி தயங்கு வெள்ளித் தீவட்டி
கங்குல் பகலாக்கும் மாறுகால் பந்தமுடன்
ஏணி விளக்கும் ரதவிளக்குந் தன்னுடனே
பாணி விளக்கும் பகல்விளக்கும் நின்றிலங்கச்
சூல விளக்குந் துலங்கைந்து கால்விளக்கும்
ஞானம் விளக்கும் பகலா மெனவிலக''

என்று கூறி விளக்குகிறார் நூலாசிரியர்.

மணமகன் வரும் தெருவெல்லம் தோரணம் காட்டி அழகு செய்யப்பட்டுள்ளது எழுவகைப் பருவமகளிரும் பவனி வரும் மணமகன் செய்தக்காதியை எதிரே கண்டு வியந்து போற்றிப் புகழுகின்றனர். இத்தகையபுகழுரைகள் இலக்கிய மெருகேறிய எழில் மிகு பாடல்களாக நயமுடன் எழுதப்பட்டுள்ளன. செய்தக்காதியை இராமனோடும், இந்திரனோம்ப அரிச்சந்திரனோடும் ஒப்பிட்டுப் போற்றுகின்றார்.

''பெருமானை காத்தினிய பொன்மானை ஓடியெய்து
திருமானை வைத்தபுயன் சீமான்''

என இராமனின் வாழ்வில் நிகழ்ந்த முக்கியநிகழ்ச்சியோடு இணைத்துப் பரராட்டிக் கூறுவது நயமாக உள்ளது.

மணமகனின் ஊர்வலம் இருபத்திமூன்று வகை வாண வேடிக்கைகளோடு நடைபெறுகிறது. வாணவெடிகளுக்கும் இத்தனை பெயர் உண்டா எனவியக்கத் தோன்றுகிறது

மணமகனைப் போன்றே மணமகளைப்பற்றிக் கூறும் போது மணப்பெண் அணிந்த ஆடைவகைகளும் அணிந்த

அணிகலன்களின் பெயர்களும் நீண் தொரு பாட்டிய லாகத் தரப்படுகின்றன. மணவினை இஸ்லாமிய நெறிப் படி,

"சொல்லரிதாங் கொத்துவா வோதிப்
பொருளிசைத்து
வல்ல மிசுறுமொகரா எழுதினரே
நிக்கா வெழுதி நிறைந்த களரியெல்லாம்
ஒக்கவே பாத்திகா ஓதிப் புகழ்ந்த பின்பு"

எனக் கூறுவதன் மூலம் தீனெறிப்படி குத்பா வோதி, மஹர் எழுதி, நிக்காஹ் நிகழ்த்தி. பாத்திஹா ஓதி மண வினை முடித்ததை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறார்.

மணமக்களைப் பாராட்டியுரைத்தல், மைத்துனர் களின் கேலிப்பேச்சு, மற்றும் வரிசை வழங்கு சடங்குடன் வாழ்த்துரைத்து முடிக்கிறார் ஆசிரியர்.

இஸ்லாமியத் திருமணமாயினும் பந்தக்கால் நடுதல், குரலையிடுதல் போன்ற அக்காலத் தமிழ்ச் சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள் இந்நூலுள் நீக்கமற நிறைந்துள்ளன. மணமகனைப் பாராட்டும்போதும் மணமகளைப் புகழும் போதும் இந்து சமயத்தைச் சார்ந்த இராமனோடும் அருந்ததியோடும் ஒப்பிட்டுப் பாராட்டவே செய்கிறார் ஆசிரியர்

இஸ்லாமிய நெறி முறைக்கிணங்க நிக்காஹ் நிகழ்ந்த தாகக் காட்டிய போதிலும,

"குணமாக வெல்லோருங் கூடிக் குரவையிட
மணவாளன் றன்கையால் மங்கலியங் கட்டினரே"

எனக்கூறும்போதுமணமகன்நேரடியாகமணப்பெண்ணின் கழுத்தில் தாலிகட்டியதாகக்கூறப்படுகின்றது இப்பழக்கம் முஸ்லிமல்லாதவர்களிடத்து மட்டும் காணப்படும் பழக்க

மாகும் ஒருவேளை அக்கால முஸ்லிம்கள் அவர்களைப் பின்பற்றி இப்பழக்கத்தைப் பேணி நடந்திருக்கலாம். பின்னர் அப்பழக்கம் அவர்களை விட்டு நீங்கியிருக்கலாம்.

இந்நூலாசிரியர் தமிழ் மக்களிடையே இருந்து வந்த பழக்கவழக்கங்களை நன்கறிந்தவராகவும் தமிழ் இலக்கியங்களிலும் இந்துப் புராணங்களிலும் நல்ல பயிற்சியுடையவராகவும் விளங்குகிறார். அதனால்தான் மணமகனையும் மணமகளையும் இராமன் போன்றோருடனும் அருந்ததி போன்றோருடனும் ஒப்பிட்டுப்பாட முடிகிறது.

அக்கால முஸ்லிம் ஆண் பெண்களின் ஆடை அணி மணிகளைப் பற்றிய நுணுக்கமான விவரங்களையும் நன்கறிந்நவராகக் காணப்படுகிறார். இன்னும் அக்காலத்தில் பழக்கத்தில் இருந்த இசைக் கருவிகளையும் இசை ராகங்களையும்கூட மிக நன்றாக அறித்தவர் என்பதை, இவைகளைப் பற்றிய பட்டியலை நுணுக்கமாகவும் சுவையாகவும் கூறுவதன் மூலம் அறிய முடிகிறது.

இறுதியாக மணமக்களை வாழ்த்தும்போது 'ஈசுபும் சுலைகாவும் அன்பாக வாழ்ந்ததுபோல், சுலைமான் நபியும் பல்கீசும் அழகாக வாழ்ந்ததுபோல், அண்ணல் நபிகளாரும் அன்னை கதீஜாவும் நலமுடன் வாழ்ந்ததுபோல் அலியாரும் பாத்திமாவும் வாகுடன் வாழ்ந்ததுபோல் வாழ்வீராக!' என வாழ்த்துவதன் மூலம் இஸ்லாமிய நூல்களில தனக்குள்ள மிகு பயிற்சியைப் புலப்படுத்துகிறார்.

அக்காலத் தமிழ்ப் பெருங்குடி மக்களின் வாழ்க்கைச் சூழலைத் தழுவியே முஸ்லிம் பெருமக்களின் வாழ்க்கைச் சூழல் அமைந்திருந்தது என்பதை இலைமறை காயாக விளக்குவதன்மூலலிம் இரு சமுதாயத்தினருக்கு இடையே இருந்த நெருக்கத்தையும் ஒருமைப்பாட்டுணர்வையும் நம்மால் நன்கு அறிய முடிகிறது.

தமிழ் முஸ்லிம்கள் இஸ்லாமய இலக்கியப் புலவர்களாக இருந்தபோதிலும் இலக்கியம் என்ற அளவில் பிற சமய இலக்கியங்களை வெறுத்தொதுக்காது அவற்றையெல்லாம் குறைவறக் கற்றறிந்துள்ளார்கள் என்பதை இந்து சமயக் கடவுளர்கள், வீரர்கள், சிறப்புக்குரிய பெண்பாலர்களைப பற்றியெல்லாம் ஆங்காங்கே தொட்டுக் காட்டிச் செல்வதன் மூலம் அறிந்துணர முடிகிறது. தமிழர்களின் பழக்கவழக்கங்கள், பண்பாட்டியல்புகள், மரபுச் செயல்களெல்லாம்கூட இத்திருமண வாழ்த்து நூலிலே சுட்டிக்காட்டப்படுகின்றன. இவையெல்லாம் இவ்விரு பெரும் சமயத்தாரிடையே நிலவிய இணக்கமான போக்கையும் ஒற்றுமைத் தன்மையையும் உணர்த்துவனவாக உள்ளன.

இந்நூலைப் பின்பற்றி பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த அல்லாப் பிச்சைப் புலவர் என்பார் 'கதீஜா நாயகி திருமண வாழ்த்து' என்ற நூலையும் 'பாத்திமா நாயகி திருமண வாழ்த்து' என்ற நூலையும் பாடியளித்துள்ளார். இந்நூல்கள் இரண்டும் முன்பெல்லாம் சாதாரணமாக முஸ்லிம்களின் வீட்டுத் திருமணங்களில் பெண்களால் இசையோடு பாடப்பட்டு வந்துளளன. இதுபோன்றே இலங்கையிலும் 'மண மங்கல மாலை' என்ற நூல் முஸ்லிம் புலவர் ஒருவரால் பாடப்பட்டு இஸ்லாமியர் இல்லங்களில் இசையோடு பாடப்பட்டு வந்ததாகத் தெரிகிறது.

'நொண்டி நாடக' வகை போன்றே இத்திருமண வாழ்த்து இலக்கிய வடிவத்தை அடியொற்றி முஸ்லிமல்லாத இந்து சமயப் புலவரான மாடசாமி ஆசாரியார் எனும் துறவியாரால் 'நூதன கல்யாணப் பாட்டு' என்ற நூல் வெளிவந்தது. திருமண வாழ்த்து முறையைப் பின்பற்றி முஸ்லிமல்லாதாரால் பாடப்பட்ட ஒரே நூல் இதுதான்.

## அரபுத் தமிழ்

தமிழக முஸ்லிம் மக்களாலும் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்களாலும் தமிழ் மொழியில் உருவாக்கப்பட்ட மொழி வடிவமே 'அரபுத் தமிழ்' என்பதாகும். அரபி மொழி எழுத்துருவில் (லிபி) தமிழை எழுதுவதே 'அரபுத்தமிழ்' ஆகும்.

உலக மொழிகளிலேயே மிக நீண்ட காலப் பழமை யுடைய மொழிகளாகத் தமிழும் அரபி மொழியும் வழங்கி வருகின்றன. இம்மொழிகளைப் போன்றே இரண்டு மொழிகளைப் பேசும் மக்கட் பகுதியினரும் நீண்ட காலத் தொடர்புடையவர்கள் என்பது வரலாற்று உண்மையாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே தமிழகமும் அரபகமும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தன. சீனம், கிரேக்கம், ரோம போன்ற பகுதிகளோடு வணிகத் தொடர்பு கொண்டிருந்தது போன்றே அரபு மொழி பேசும் பகுதியான 'மிஸ்ரு' என அழைக்கப்பட்ட எகிப் தியப் பகுதியோடும் தமிழ் மக்கள் வணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள். இதனை பாரதியார்

> ''சீனம் மிசிரம் யவனரகம்—இன்னும்
> தேசம்பலவும் புகழ்வீசக்—கலை
> ஞானம் படைத்தொழில் வாணிபமும்
> நன்று வளர்த்த தமிழ்நாடு''

எனப் பாடி மகிழ்கிறார். 'மிஸ்ரு' என்பது தமிழில் 'மிசிரம்' என மறுவி வந்துள்ளது.

அதே போன்று அரபு நாட்டு வணிகர்களும் மேலைக் கடல் வழியாகவும் கீழைக் கடல்வழியாகவும்தமிழகப்பகுதி

களில் தங்கி வணிகம் செய்ததோடு, இங்குள்ள மக்களோடு இரண்டறக் கலந்து வாழும் நிலையை அடைந்தவர் என்பது வரலாறு.

தமிழ் மக்களுடன் உதிரக் கலப்புடன் ஒன்றுபட்டு விட்ட அராபியர்கள் தமிழர்களை ஏற்றதுபோல் தமிழ் மொழியையும் ஏற்றார்கள். தமிழைக் கற்று அதனை அரபி வரிவடிவில் (லிபி எழுதவும் 'செய்தனர். செம்மையிலா நிலையில் அரபிகள் பேசிவந்த தமிழை வரிவடிவில் எழுத நேர்ந்த போதெல்லாம் தாங்கள் 'நன்கறிந்திருந்த தங்கள் தாய் மொழியாகிய அரபி மொழி வரிவடிவிலேயே தமிழை எழுதி வருவதை வழக்கமாகக் கொண்டனர்.

அண்ணல் நபிகள் நாயகம் காலத்துக்கும் பின்னர் தமிழகம் வந்த அராபியர்கள் இஸ்லாமியக் கருத்து'களை தமிழ் மக்களிடையே எடுத்துச் சொல்லும் கடப்பாடுடையவர்களானார்கள். அப்போது இஸ்லாமிய சிந்தனைகளை இங்குள்ள மக்களிடையே எடுத்துச் சொல்வதற்கு அரபி மொழி வரிவடிவிலமைந்த தமிழே அவர்கட்கும் பெருந்துணையாயமைந்தது

அரபுத் தமிழின் விரைவான வளர்ச்சிக்கு வேறுசில காரணங்களும் உண்டு. அரபி மொழியில் இருந்த இஸ்லாமியத் திருமறையான திருக்குர்ஆனை-திருமறை விளக்கங்களை வேற்று மொழியில் பெயர்க்கும்போது கருத்துப் பிழையோ, பொருட்பிழையோ ஏறபட்டுவிடும் என்ற அச்சம் ஆரம்பத்தில் சற்று அதிகமாக இருந்தது. தமிழ் எழுத்துக்களின் மூலம் திருமறை விளக்கங்களைத் தரும் போது மாறுபாடாகக் கருத்து விளக்கம் ஒலிக் குறைபாட்டினால் அமைந்து விடலாம் என்ற உணர்வின் அடிப்படையிலேயே, திருக்குர்ஆனை, அதன் விளக்கங்களை நேரடியாகத் தமிழ் எழுத்துக்களைக் கொண்டு தமிழில் தருவது தவிர்க்கப்பட வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டு வந்தது

ஏனெனில், அரபு மொழிச் சொற்களின் உச்சரிப்பை அப்படியே தமிழில் எழுத இயலவில்லை. அதோடு இஸ்லாமிய அடிப்படைக் கருததுக்களை உணர்த்தவல்ல அரபு கலைச் சொற்களை, பொருள் நுட்பம் சிறிதும் சிதையா வணணம் தமிழில் மொழியாக்கம் செய்யவும்இயலவில்லை எனவே, திருமறை தமிழ் மொழிபெயர்ப்பை தவிர்க்குமாறு மார்க்க அறிஞர்கள் வலியுறுத்தினார்கள்.

தொடக்க காலத்தில் அரபுத் தமிழ் செம்மையானதாக அமைந்திருக்கவில்லை. பேச்சுத் தமிழையே அரபி வரி வடிவில் எழுதி வாசித்துவந்ததால் குறைகள் ஏதும்பெரிதாகத் தெரியவில்லை நாளடைவில் சற்று இலக்கியத் தரமான சொறறொடர்களை அரபி வரிவடிவில் எழுதிப் படிக்கத் தொடங்கியபோதுதான் தமிழ்மொழியிலே உள்ள ங,ச,ஞ ட,ப,ள,ழ,ண ஆகிய 8 தமிழ் எழுத்துக்களுக்கேற்ற அரபி எழுத்துக்கள் அரபி மொழியில் இல்லாதது பெருங்குறையாகப்பட்டது. மேலும் எ,ஏ,ஒ,ஓ போன்ற ஒலிக் குறியீடுகள் அரபியில் இல்லாததும் குறையாகக் கருதப்பட்டது. எனவே, இந்த எழுத்துக் குறைகளை நீக்க, சரியான உச்சரிப்பைத் தரவல்ல அரபு எழுத்துக்களை உருவாக்கவேண்டிய கட்டாயச் சூழல் அரபுத் தமிழ் வளர்ச்சியிலே ஆர்வம் கொண்டோர்க்கு ஏற்பட்டது.

ஒரு கால கட்டத்தில் சமஸ்கிருத மொழி எழுத்துக்களின் உச்சரிப்பைத் துல்லியமாகத் தமிழில் சொல்ல தமிழில் எழுத்துக்கள் இல்லை என்ற குறையைப் போக்க ஷ ஜ,ஸ. ஹ, க்ஷ போன்ற கிரந்த எழுத்துக்கள் புதிதாகஉருவாக்கப்பட்டது போன்று, தமிழில் உள்ள மேற்கூறிய ங, ச, ஞ.ட ப, ள ழ, ண ஆகிய எட்டுத் தமிழ் எழுத்துக்களின்உச்சரிப்புக்கேற்ற புதிய வரி வடிவங்கள் அரபுமொழியில் உருவாக்கப்பட்டன. எ,ஏ,ஒ,ஓ எழுத்துக்களுக்கான ஒலிகளைப் பெற அரபி எழுத்துக்களில் மேலும் கீழும் கொம்புக் குறிகளைப் பயன்படுத்தி நிறைவு செய்யப்பட்டது இவ்வாறு

அரபி மொழி புதிய எழுத்தொலிகளைப் பெற்று வள மடையத் தமிழ் காரணமாயமைந்தது.

அதே போன்று தமிழ் மொழியில் உள்ள க, ச, ட, த, ப, ற என்ற ஆறு வல்லின எழுத்துக்களுக்கு மற்ற மொழி களில் இருப்பது போன்று மூன்று அல்லது நான்கு வகை யான ஒலி வேறுபாடுகளைக் குறிக்கத் தனித்தனி எழுத் துக்கள் தமிழில் இல்லை. பேச்சு வழககிலும எழுத்து வழக்கிலும் ஒலி வேறுபாடின்றி ஒரே வித ஒலியைக் குறிக் கும் வகையில் இந்த ஆறு வல்லின எழுத்துக்களையும் கையாள வேண்டியுள்ளது இதனால், சமயங்களில் கருத்து மாறுபாடு ஏற்பட வாய்ப்பேற்பட்டு விடுகிறது. ஆனால், அதே சமயத்தில் அரபி மொழியில் இந்த ஆறு வல்லின எழுத்துக்களுக்கும் ஒலி வேறுபாடுள்ள தனித்தனி ஒலி வடிவ எழுத்துக்களை அரபி எழுத்துக்களின் மேல் சில குறியீடுகளாக இடுவதன் மூலம் பெறும் வகையில் உரு வாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழில் இல்லாத ஒலிக் குறைவை நிறைவு செய்யும் வகையில் அரபுத் தமிழ் அமைந்துள்ளது என்பது இங்கு எண்ணத்தக்கதாகும்.

அரபுத் தமிழின் துரித வளர்ச்சிக்கு இஸ்லாமியத் தமிழ்ப் பெண்களும் முக்கியக் காரணமாவார்கள். தமிழ் எழுத்தறிவு அதிகம் பெறாது, மறை மொழி என்ற வகை யில் அரபி மொழி மட்டும் அறிந்திருந்த இஸ்லாமிய பெண்களும் தமிழ் மொழி எழுத்தறிவில்லா இஸ்லாமிய பாமரர்களும் தாங்கள் அறிந்திருந்த அரபி வரிவடிவம் வாயிலாகவே தமிழ் மொழியைக் கையாண்டு வநதனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

அரபுத் தமிழ் முனைப்பாக வளரத் தொடங்கியது சுமார் 350 ஆட்டுகட்கு முன்னர்தான் எனப் பலராலும் குறிக்கப்படுகிறது. ஆனால், இக்கூற்று முழுமையாக ஏற்கக் கூடியதாக இல்லை அதற்கும் நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே அரபுத் தமிழானது, தமிழ் முஸ்லிம்களிடை

யேயும் அரபகத்திலிருந்து தமிழகம் வந்து நிலை கொண்டு விட்ட அரபுகளிடையேயும் வெகுவாக பழக்கத்திலிருந்த தற்கான சான்றுகள் பரவலாகக் கிடைக்கவே செய்கிறது.

சுமார் நானூறு ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த ஹாபிழ் அமீர் அலி வலி என்பவர் முனைப்புடன் அரபுத் தமிழ் வளர்ச்சியில் கருத்தூன்றி அதன் வளர்ச்சிக்கு உழைத்து வந்தார் என்பதை புகழ்பெற்ற இஸ்லாமிய இலக்கியப் பதிப்பாசிரியரான கண்ணகுமது மகுதூம் முகம்மது புலவர் அவர்கள் 'தீன்நெறி விளக்கம்' என்ற நூலிலுள்ள ஒரு பாடலில்,

''வெல்லிய அரபுத் தமிழ் உண்டாக்கிய
மேன்மை ஹாபித் அமீர்வலி''

எனக் கூறுகிறார் ஹாபிழ் அமீர் வலி அரபுத் தமிழை உண்டாக்கினார் என்பதைவிட காலத்தின் இன்றியமை யாத் தேவையாக அரபக- தமிழக முஸ்லிம்களால் உரு வாக்கப்படட அரபுத் தமிழை முனைப்புடன் கட்டுக்கோப் பாக திருத்த்முடன் வளர்த்து வளமடையச் செய்த பெருமைக்குரியவர் என்று பாராட்டுவதே சரியாக இருக் கும்

சுமார் நானூறு ஆண்டுகட்கு முன்னரே அரபுத் தமி ழில் இஸ்லாமிய இலக்கியங்கள் உருவாக்கப்பட்டதற்கான சான்றுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடைத்த போதிலும் பதினேழாம் நூற்றாண்டின் மத்தியில் வாழ்ந்தவரான காயல் பட்டணம் ஷாம் ஷிகாபுத்தீன் வலி எனும் இறைநேசச் செல்வர் எழுதிய நூற்றுக்கணக் கான அரபுத் தமிழ் பாடங்களே இன்று நாம் அறியக் கிடைக்கின்றன.

இஸ்லாமிய ஞானம் நிரம்பப் பெற்ற ஷாமு ஷிஹாபுத் தீன் வலி அவர்கள் தொழுகைக்கான வழிமுறைகள் இஸ் லாமிய நெறி சம்பந்தப்பட்ட சட்டதிட்டங்கள், தீன்நெறி உணர்த்தும் ஒழுக்கக் கோட்பாடுகள் பெருமானாரின் பெரு வாழ்வைச் சுட்டும் நிகழ்ச்சிகளைப் பற்றிப் பெருமளவில்

அரபுத் தமிழில் பாடியிருப்பதோடு இஸ்லாமிய மக்களிடையே காணும் வரதட்சணைக் கொடுமை, கந்தூரியின் பெயரால் நடக்கும் பித்தலாட்டக் குறைகளைச் சுட்டிக்காட்டும் சீர்திருத்தப் போக்கிலான பாடல்களையும் பெருமளவில் அரபுத் தமிழில் எழுதிக் குவித்துள்ளார் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

தமிழ் நாட்டு முஸ்லிம்கள் மட்டுமல்லாது இலங்கை வாழ் தமிழ் முஸ்லிம்களும் அரபுத் தமிழ் வளர்ச்சியிலே பெரும் பங்கு கொண்டிருக்கிறார்கள்.

இஸ்லாமிய நெறியுணர்த்தும் இலக்கியப் படைப்புகள் முதல் சிறுவருக்கான சின்னஞ்சிறு உரைநடை நூல்கள்வரை அரபுத் தமிழில் ஆக்கப்படடுள்ளன. சமயம், வரலாறு, தத்துவம், மருத் துவம், கதை என தமிழிலும் அரபியிலும் எத்தனை வகையான துறைகள் உண்டோ அத்தனையிலும் அரபுத் தமிழ்ப் படைப்புகளைச் செய்யுள் உருவிலும் உரைநடையிலும் எழுதியுள்ளார்கள் தமிழ் முஸ்லிம்கள். இன்னும் சொல்லப் போனால் 'இல்முந்நிசா' எனும் காமச்சுவை நனி சொட்டச் சொட்டக் கூறும் காமக்கலை நூலும் அரபுத் தமிழிலெ வடித்துத் தரப் பட்டுள்ளது.

அரபுத் தமிழ் படைப்புகள் அனைத்துமே இஸ்லாமிய நெறி தொடர்புடையனவாக இருந்ததால் அவற்றில் அரபி, பெர்சியச் சொற்கள் மிகுதியும் இடம் பெற்றுள்ளன. இச்சொற்களை ஒலிச் சிதைவு இல்லாதபடி படிப்பதற்கு அரபித் தமிழே வாய்ப்பாக அமைந்தது.

ஆரம்ப காலத்தில் எழுதப்பட்ட திருமறை விரிவுரைகள் அனைத்தும் அரபுத் தமிழிலேயே எழுதப்பட்டுள்ளன. இஸ்லாமிய சட்டதிட்டங்களும் அரபுத் தமிழிலேயே உருவாக்கப்பட்டன.

அரபுத் தமிழில பாடல்சளை எழுதிக் குவித்தவர்களில் முதலிடம்பெறுபவர் தமிழிலும் அரபியிலும்பெரும்புலமை பெற்ற காயல்பட்டிணம் ஷாமு ஷிகாபுத்தீன் வலியுல்லா அவர்களே ஆவார். நூற்றுக்கணக்கான அரபுத் தமிழ் பாமாலைகளை இயற்றிருந்த போதிலும் அவற்றில் சுமார் இருபத்தைந்து அரபுத் தமிழ் நூல்கள் மட்டுமே அச்சு வாகனமேறியுள்ளன. அவற்றுள் ரசூல் மாலை, அதபு மாலை, பெரிய ஹதீது மாணிக்க மாலை, சின்ன ஹதீது மாணிக்க மாலை என்பன குறிப்பிடத்தக்க அரபுத் தமிழ் படைப்புகளாகும்.

அவரைத் தொடர்ந்து காயல்பட்டிணம் முஹம்மது லெப்பை ஆலிம் அவர்கள் 'ஆனந்தக்களிப்பு' எனும் நூலை அரபுத் தமிழில் யாத்துள்ளார்கள். அதே போன்று சின்ன உவைஸீனா ஆலிம் அவர்கள் 'ஹக்கீகத் மாலை' எனும் அரபுத் தமிழ் நூலை எழுதியுள்ளார்கள் கீழக்கரை செய்யது முஹமமது ஆலிம் அவர்களும் தைக்கா சாகிபு அவர்களும் இஸ்லாமியச் சட்டங்களை விரித்துரைக்கும் நூல்களை அரபுத் தமிழில் எழுதியளித்துள்ளார்கள். பெண்பாற் சூஃபிக் கவிஞர்களுள் ஒருவராகக் கூறப்படும் கீழ்க்கரை அல்ஆரிபு செய்யிது ஆசியா உம்மா அவர்கள் எழுதிய 'மெய்ஞ்ஞானத தீப இரத்தினம்'' எனும் அரபுத் தமிழ் நூல் மெய்ஞ்ஞானச் சிந்தனைக் களஞ்சியமாகும். இறைவன், நபிகள் நாயகம், அபூபக்கர் (ரலி) கல்வதது நாயகம் (வலி) அஜ்மீர் முயினுத்தீன் ஆண்டகை, ஹஸன், ஹுஸைன், பலலாஹ், முகையித்தீன் ஆண்டகை, சாகுல் ஹமீது ஆண்டகை, ஆரிபு நாயகம் மற்றும் மழை தாலாட்டு, அடைக்கலம், பிரார்த்தனை முதலாக எண் பத்தைந்து தலைப்புகளில் கண்ணி, விருத்தம், ஆனந்தக் களிப்பு, கும்மி, வெண்பா, பதிகம், மாலை ஆகிய பல வகைகளில அரபுத் தமிழில் பாடியளித்துள்ளார்.

ஆயிரம் ஆண்டுக்கால வரலாற்றையுடைய அரபுத்தமிழ் இலக்கியங்களில் பல இன்று உலகின் பல பகுதிகளிலுள்ள

நூலகங்களிலும் நூல் காப்பகங்களிலும் தொல் பொருளாய்வகங்களிலும் இருந்து வருவதாகக் கூறப்படுகின்றது. லண்டனிலுள்ள இந்திய அலுவலக நூலகத்தில் 1878-ல் எழுதப்பட்ட "சீறா நாடகம்" என்ற அரபுத் தமிழ் நூல் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

அரபுத் தமிழில் நூல்கள் மட்டுமல்லாது பத்திரிகைகளும் கூட வெளியிடப்பட்டுள்ளன தமிழகத்தைவிட அரபுத் தமிழ் செல்வாக்கு இலங்கைவாழ் தமிழ் முஸ்லிம் பெருமக்களிடையே மிகுதியாக இருந்துள்ளது. தமிழகம் போன்றே இலங்கையிலும் அரபுத் தமிழிலே வார, மாத ஏடுகள் நீண்டகாலம் நடத்தப்பட்டு வந்துள்ளதாகத் தெரிகிறது.

எட்டாம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை செழுமையாக வளர்ந்துவந்த அரபுத் தமிழ் இருபதாம் நூற்றாண்டின் இடைப் பகுதிக்குப் பின்னால் மக்களால் புறக்கணிக்கப்படும் நிலையை எய்தியது இதற்குப் பல காரணங்கள் உண்டு.

அரபுத் தமிழ் நூல்கள் கையினால் மட்டுமே எழுதப்படக் கூடியவையாக இருந்து வந்தன. ஆங்கிலேயர்கள் காலத்தில் ஏற்பட்ட அச்சு வாகனப் பெருக்கத்தின் காரணமாக அரபுத் தமிழில் எழுதுவது வெகுவாகக் குறைந்து விட்டது.

மேலும், அரபுத் தமிழ்நடை ஓரளவு பேச்சு வழக்குத் தமிழை அடியொற்றி எழுந்து வளர்ந்ததால் 'கொச்சைத் தமிழ்' தவிர்க்க முடியாததாக இருந்தது. ஆனால் விரைந்து எழுந்த தமிழ் உணர்வும் மொழித்திறமும் மற்றவர்களைப் போன்றே இஸ்லாமியர்களையும் ஆட்கொண்டது. ஆகவே, கொச்சைத் தமிழ் கலந்த அரபுத் தமிழ் அறவே புறக்கணிக்கப்பட்டது.

ஆனால் இலங்கையிலுள்ள தமிழ் முஸ்லிம்களிடையே அரபுத் தமிழ் செல்வாக்குக் கணிசமாக குறைந்துள்ள

போதிலும் அவர்கள் இன்னும் அரபுத் தமிழ் வடிவத்தை விரும்பவே செய்கிறார்கள். 'அரபுத் தமிழ் அழகுத் தமிழ்' எனக் கூறி அதன் வளர்ச்சிக்குத் துணை நிற்க விரும்புகிறார்கள்.

அரபுத் தமிழில் உருவாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான படைப்புகளில் ஒரு சில நூறு இலக்கியங்கள் கூட தமிழ் எழுத்தில் எழுத்து மாற்றம் செய்யப்படவில்லை எனவே, அரபுத் தமிழ் பழக்கம் அறவே மறைவதற்கு முன் அரபுத் தமிழிலுள்ள படைப்புகள் அனைத்தையும எழுத்து மாற்றம் செய்வது அவசிய, அவசரத் தேவையாகும். தமிழ் மொழிக்கும் அரபு மொழிக்கும் இணையற்ற பாலமாகத திகழ்ந்த அரபுத் தமிழ் காலப் போக்கில் தமிழ் வளர்ச்சிக்குக் கிடைத்த மற்றுமொரு உந்து சக்தி என்பதை மறக்கவோ மறுக்கவோ இயலாது

அரபுத் தமிழில் மிக அதிகமான அளவில் பயன்படுத்தப்பட்டு வந்த அசல, அமுல், நகல், தகராறு, கைது' கஜானா, ஆபத்து, வக்கீல், இனாம், வக்காலத்து, வசூல் பாக்கு, தபசில், பசலி, மகசூல், வாரிசு, காலி, நபர், மாமூல் முன்சீப், தாலுகா, ஜில்லா, ஹத்து, கிஸ்தி, கடுதாசி போன்ற அரபு, பெர்சியச் சொற்கள் தமிழ்ச் சொற்கள் போலவே அன்றாட வாழ்வில் பயன்பட்டுவருகின்றன

இவ்வாறு ஒலிக்குறைபாடின்றி தமிழைப் பயன்படுத்துவதற்கும் தமிழ் மொழி வளர்ச்சியோடு சொற்பெருக்கத்துக்குக் காரணமாக இருந்த அரபுத தமிழ் வடிவம் மற்ற இஸ்லாமிய வடிவங்கள் போன்றே தமிழ் மொழி இலக்கிய வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் பெருந்துணையாக இருந்து வந்துள்ளது எஃபது இலக்கிய வரலாறு தரும் அழுத்தமான உண்மையாகும்.

முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் இஸ்லாமிய சமய அடிப்படையில் அரபி, பெர்சிய மொழித் தொடர்பு காரணமாக அவ்வம்மொழிகளில் காணப்பட்ட மசலா, கிஸ்ஸா, நாமா,

முனாஜாத்து ஆகிய நான்கு இலக்கிய வகைகளை புது வகைத் தமிழ் இலக்கிய வடிவங்களாகத் தமிழில் கொண்டு வந்து சேர்த்தாலும் அவற்றின் செய்யுள் வடிவம் இயன்ற வரை தமிழ்இலக்கண அமைப்பை அடியொற்றியேஅமைக்கப்பட்டன என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

படைப்போர். நொண்டி நாடகம், திருமண வாழ்த்து அரபுத் தமிழ் ஆகிய நான்கு புதுவகை இலக்கிய வடிவங்களை தமிழுக்கென்றே தமிழ்ப் பெயர்களோடு தோற்றுவித்து தமிழ் இலக்கியப் பயிரைச் செழிக்கச் செய்துள்ளனர் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் என்பது தமிழ் இலக்கிய வரலாற்று உண்மையாகும்.

தமிழகத்தில் எழுந்த சமயங்களைச் சார்ந்தவர்களும் தமிழகத்துக்கு அப்பாலிருந்து வந்த சமயங்களைச் சேர்ந்தவர்களும் தமிழில் காலங்காலமாகவே இருந்து வரும் பழைய இலக்கிய அமைப்பு முறைகளை அப்படியே அடியொற்றி இலக்கியப் படைப்புகளை உருவாக்கித் தமிழ்த் தொண்டாற்றினார்கள். ஆனால் இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்த தமிழ் முஸ்லிம்கள் மட்டுமே பழைய இலக்கியப் அமைப்பு முறைகள் அனைத்தையும் கையாண்டு தமிழ் இலக்கிய படைப்புகளை நூற்றுக கணக்கில் எழுதிக் குவித்ததோடு அமையாது முனைந்து எட்டு புதிய இலக்கிய வடிவங்களைத் தோற்றுவித்து, தமிழ் இலக்கண முறைகள் வழுவாது, இலக்கியப் படைப்புகளை பெருமளவில் உருவாக்கியதன் மூலம் காலத்தால் அழிக்க முடியாத தமிழ்ப் பணியை ஆற்றிய பெருமையை வரலாற்று பூர்வமாக ஆக்கிக் கொண்டுள்ளார்கள்.

''இஸ்லாம் எங்கள் வழி இன்பத் தமிழ் எங்கள் மொழி'' என்று முழங்கும் தமிழ் முஸ்லிம்கள், தமிழ் வளர்ச்சியை தங்கள் வளர்ச்சியாக எண்ணி உழைப்பதைப் பெருமையாகக் கருதி தமிழ்ப்பணியை தளராது தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

## பயனபட்ட துணை நூல்கள்


1. இஸ்லாமும் இன்பத் தமிழும் — எம். எம். உவைஸ் 1976

2. 'சீதக்காதி வள்ளல்' — டாக்டர் நயினார் 1953

3. முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் — எம்.ஆர்.எம். அப்துற்-ரஹீம், 1980

4. இஸ்லாம் வளர்த்த தமிழ் — டாக்டர் ம. மு. உவைஸ் 1984

5. இஸ்லாமிய இலக்கிய சிந்தனை — அதிரை அஹ்மத், 1974

6. இஸ்லாமும் தமிழும் — பேரா. மு. அப்துல் கரீம், 1985

7. நாட்டுப்புறத் தமிழ் — திருமலர் எம். எம். மீரான் பிள்ளை, 19:5

8. இஸ்லாமிய இலக்கியக் கருவூலம் — ஆர். பி. எம். கனி 1963

# தமிழுக்கு இஸ்லாமியர் வழங்கிய புதிய தமிழ் இலக்கிய வடிவங்கள்

## மசலா

| | | |
|---|---|---|
| 1 | ஆயிர மசலா | — வண்ணப் பரிமளப் |
| | | — புலவர் |
| 2. | நூறு மசலா | — |
| 3. | வெள்ளாட்டி மசலா | — செய்கப்துல் காதிர் லெப்பை |

## கிஸ்ஸா

| | | |
|---|---|---|
| 1. | யூசுபு நபி கிஸ்ஸா | — மதாறு சாகிப் புலவா |
| 2 | சைத்தூன் கிஸ்ஸா | — அப்துல்காதிர்சாகிபு |
| 3. | அய்யூப் நாயனுடைய கிஸ்ஸா | — அப்துல் வஹ்ஹாப் |
| 4. | இஸ்வத்து நாச்சியார் கிஸ்ஸா | — மகுதூம் முகம்மது புலவர் |
| 5. | அபூஷஹ்மா கிஸ்ஸா | — அப்து ரசாக் |
| 6. | அலி (ரலி) கிஸ்ஸா | — காளி முகம்மது ஜான் லெப்பை |
| 7 | சைத்தூன் கிஸ்ஸா | — ஷேக் லெப்பை |
| 8 | தமீமுல் அன்சாரி கிஸ்ஸா | — அப்துல் காதர் சாகிபு |
| 9. | நமுறூது கிஸ்ஸா | — |
| 10. | சுல்தான் சிக்கந்தர் துல் கர்னைன் கிஸ்ஸா | — |
| 11. | முகம்மது அனிபு கிஸ்ஸா | — முகம்மது இபுறாகீம் |
| 12. | யூசுப் நபி கிஸ்ஸா | — மதார் சாகிப் |
| 13. | பீவி மரியமுடைய கிஸ்ஸா | — அப்துல் காதர் சாகிபு |
| 14. | சுல்தான் இபுறாஹிமுடைய கிஸ்ஸா | — ஷாகுல் ஹமீது |
| 15. | லூத்து கிஸ்ஸா | — |
| 16. | ஷம் ஊன் (ரலி) கிஸ்ஸா | — முகம்மது இபுறாகீம் |
| 17. | ,, | — முகம்மது இஸ்மாயீல் |
| 18. | ,, | — ஷாகுல் ஹமீது |

| | | |
|---|---|---|
| 19. | ஷம் ஊன் (ரலி) கிஸ்ஸா | — மொய்தீன் பிச்சை |
| 20. | விறகு வெட்டியார் கிஸ்ஸா | — அப்துல் ரசாக் |
| 21. | கபன் கள்ளன் கிஸ்ஸா | — அப்துல் ரசாக் |
| 22. | காலி கோரி கிஸ்ஸா | — ,, |
| 23. | குலேபகாவலி கிஸ்ஸா | — |
| 24. | காலியாருக்கும் கள்ளனுக்கும் நடந்த கிஸ்ஸா | — முகம்மது அப்துல்லா லெப்பை |

நாமா

| | | |
|---|---|---|
| 1. | நூறு நாமா | — செய்யிது அகமது மரைக்காயர் |
| 2. | இருஷாது நாமா | — ஷாமுனா லெப்பை |
| 3. | அலி நாமா | — செய்யிது முகம்மது அண்ணாவியார் |
| 4. | இபுலீசு நாமா | — செய்யது அபூபக்கர் புலவர் |
| 5. | நஸீகத்து நாமா | — அப்துல் காதர் சாகிபு |
| 6. | நூறு நாமா | — செய்யது அகமது மரைக்காயர் புலவர் |
| 7. | நூறு நாமா | — மௌலவி குலாம் முகம்மது சாகிபு |
| 8. | ஹக்காயத் நாமா | — அப்துல் காதிர் சாகிபு |
| 9. | சக்கறாத்து நாமா | — அப்துல் காதிர் சாகிபு |
| 10. | தஜ்ஜால் நாமா | — முகம்மது இபுறாகீம் சாகிபு |
| 11. | தொழுகை உறுதி நாமா | — சாமு நெய்னா லெப்பை |
| 12. | தொழுகை நாமா | — மாலிக் சாயபு புலவர் |
| 13. | இபுரீசு நாமா | — செய்யது ஆலிம் சாகிபு |
| 14. | கோஷா நாமா | — வாளை அப்துல் லஹ்ஹாப் |
| 15. | மிகுராஜு நாமா | — மதாறு சாகிபு புலவர் |

16. முனாஜாத்து நாமா — வாலை அப்துல் வஹ்ஹாப்

17. பாராஸ் நாமா —

முனாஜாத்து

1. அல் முனாஜாத்து — மு. செ. மு. முகம்மது அப்துல் காதர்
2. மெய்ஞ்ஞான அற்புத — செய்யது முகியத்தீன் புலவர்
3. அல்லாஹ் முனாஜாத்து — பல்லாக்கு வலியுல்லா
4. ஹக்குபேரில் முனாஜாத்து — சேகனாப் புலவர்
5. குத்பு நாயகர் புகழ் முனாஜாத்து — பீருக்காளை உபாத்தியாயர்
6 காரண முனாஜாத்து மாலை — செய்குபாவா சுலைமானுல் காதிரிய்யா
7. முனாஜாத்துப் பதிகம் — காசிம் புலவர்
8. முனாஜாத்துத் திரட்டு — ஷாகுல் ஹமீது காதிரி
9. ஞானப் புதையல் அரபி முனாஜாத்து — குணங்குடி மஸ்தான்
10. திருப்புகழ் முனாஜாத்துப் பா — ஹாஜா முகிய்யித்தீன் ஆலீம் சாகிபு
11. மீரான் சாகிபு முனாஜாத்து — ஆரிபு நாவலர்
12. முசீபத்து விலக்கல் முனாஜாத்து — அகமது மௌலானா
13. முனாஜாத்தெ குத்பியா — செய்யது அபுல் காசிம்
14. முனாஜாத்தெ மக்பூல் — செய்யது முகம்மது
15. ஹக்குத் தஆலாவின் பேரில் முனாஜாத்து — கொழும்பு அவுலியா மரைக்காயர்
16. தபுல்வபா என்னும் கார்மான முனாஜாத்தும் மற்ற முனாஜாத்துகளும் — செய்யது இமாம் சாகிபு
17. அன்பலல் முனாஜாத்து — செய்கு முகம்மது கல்லான்
18. ஆற்றங்கரை நாச்சியார் முனாஜாத்து — மு. செ. மு. முகம்மது அப்துல் காதர்

| | | |
|---|---|---|
| 19 | குணங்குடி மஸ்தான் சாகிபு | — முகம்மது லெப்பை |
| | வலியுல்லா ஞானப் புதையல் | — ஆலீம் சாகிபு |
| | அரபு முனாஜாத்து | |

## படைப்போர்

| | | |
|---|---|---|
| 1. | சக்கூன் படைப்போர் | — வரிசை முகியுத்தீன |
| 2. | செய்யிதத்துப் படைப்போர் | — குஞ்சுமூசுட் புலவர் |
| 3. | இரவு சுல்கூல் படைப்போர் | — ,, |
| 4. | காசிம் படைப்போர் | — அப்துல் காதிறு ராவுத்தர் |
| 5. | இபுலீசுப் படைப்போர் | — கொழும்பு ஆ.லெ அமீது |
| 6 | நபுஸீ படைப்போர் | — செய்யது முகம்மது |
| 7. | இபுனியன் படைப்போர் | — அசன் அலிப் புலவர் |
| 8, | உச்சி படைப்போர் | — ,, |
| 9. | தாகிப் படைப்போர் | — ,, |
| 10. | இந்திராயன் படைப்போர் | — ,, |
| 11. | வடோச்சி படைப்போர் | — , |
| 12 | சல்கா படைப்போர் | — ,, |
| 13. | ஹுசைன் படைப்போர் | — காளை அசனலிப் புலவர் |
| 14. | மலுக்கு முலுக்கின் | — கண்ணமுது மகுதூம் புலவர் |

## நொண்டி நாடகம்

செய்தக்காதி நொண்டி நாடகம்

## திருமண வாழ்த்து

| | | |
|---|---|---|
| 1. | செய்தக்காதி திருமண வாழ்த்து | — எட்டையபுரம் உமர்கத்தாப் புலவர் |
| 2. | கதீஜா நாயகி திருமண வாழ்த்து | — அல்லாப் பிச்சை |
| 3. | பாத்திமா நாயகி திருமண வாழ்த்து | — ,, |
| 4. | மணமங்கல மாலை | — — |



நூலாசிரியர்

*வளர்தமிழ்ச் செல்வர்,*

*கலைமாமணி*

**மணவை முஸ்தபா**

சென்னை அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்ற வளர்தமிழ்ச் செல்வர், கலைமாமணி மணவை முஸ்தபா, சர்வதேசத் தமிழ்த் திங்களிதழான 'யுனெஸ்கோ கூரியர்' ஆசிரியராவார்.

'காலம் தேடும் தமிழ்' 'இன்றையத் தென்னக இலக்கியப் போக்கு,' 'இளைஞர் இஸ்லாமியக கலைக்களஞ்சியம்' உட்பட இருபத்தியாறு தமிழ் நூல்களை எழுதியுள்ளார். ஆங்கிலத்திலிருந்து எட்டு நூல்களையும் மலையாளத்திலிருந்து ஏழு நூல்களையும் பெயர்த்துள்ளார். எட்டு தொகுப்பு நூல்களும் வெளிவந்துளளன. ஐந்து சிறுவர் இலக்கியங்களையும் படைத்துள்ளார். முப்பதுக்கு மேற்பட்ட வானொலி நாடகங்களையும், ஐந்து தொலைக்காட்சி நாடகங்களையும எழுதியுள்ளார். எட்டு ஆண்டுகள் திரைப்படத் தணிக்கைக் குழு உறுப்பினராகவும இருந்துள்ளார். சர்வதேச தமிழ் ஆராய்ச்சிப் பேரவையின் இந்தியக் கிளையின் இணைச் செயலாளர்.

இவரது கலை, இலக்கியப் பணியைப் பாராட்டி தமிழ் நாடு அரசின இயல், இசை, நாடக மன்றம் 1986-இல் கலைமாமணி விருதளித்துப் பாராட்டியது. இவரது அறிவியல் தமிழ்ப பணியைப் போற்றி தமிழ்நாடு அரசு 'திரு வி.க.' விருதை 1989இல் வழங்கியது. இவரது உலகளாவிய தமிழ்ப் பணியைப் பாராட்டி தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி அதிகாரிகள் மன்றம் 'தமிழ்த் தூதுவர்' பட்டம் தந்து பாராட்டியது. இவரது அயரா தமிழ்ப் பணியைப் பாராட்டி. இளையான்குடி டாக்டர் ஜாகீர் ஹுசைன் கல்லூரி அறிவியல் மன்றம் ''வளர்தமிழ்ச் செல்வர்'' விருதளித்துப் பாராட்டியது. சிந்தனையாளர் பேரவை அறிவியல் தமிழ்ச்சிற்பி பட்டம் வழங்கியது. இவர் மும்முறை உலகை வலம் வந்துள்ளார்